
# ஸ்ரீகாந்தம்

## மணிவிழா மலர்




யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

ஓய்வுநிலை அதிபர்

**பிரம்மஸ்ரீ. வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்**

14.09.2014

உ

# ஸ்ரீகாந்தம்

# மணிவிழா மலர்

யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
ஓய்வுநிலை அதிபர்


**பிரம்மஸ்ரீ. வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்**

**14-09-2014**

வெளியீடு
**மணிவிழா மலர்க்குழு**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஸ்ரீகாந்தன் மணிவிழா மலர் |
| வெளியீடு | : | மணிவிழா மலர் வெளியீட்டுக்குழு |
| முதற்பதிப்பு | : | ஆவணி 2014 |
| பதிப்புரிமை | : | மணிவிழா மலர் வெளியீடுக்குழு |
| பக்கங்கள் | : | 159 |
| வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும் | : | ANDRA DIGITAL PRINTERS |

# மணிவிழா நாயகனின் பெற்றோர்கள்



சமஸ்கிருத பண்டிதர்
சிவஸ்ரீ. சி.வரதராஜக்குருக்கள்

ஸ்ரீமதி. வ.ஞானாம்பிகை அம்மா

# மலரின் இதழ்கள்


| | | | |
|---|---|---|---|
| I. | விழாக்குழுத்தலைவரின் சிந்தனையிலிருந்து.... | திரு.கா.சந்திரபாலன். | 1 |
| II. | மலராசிரியரின் மனதில் உதித்தவை. | | |
| | தியாகம் திரியாகின்றது. | செல்வி.பூ. ஜெயமலர். | 2 |
| III. | குருமார்களின் செய்திகள். | | |
| 1. | வித்தியாவித்தகருக்கு... | சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள். | 5 |
| 2. | வாக்கை வாழ்வாக்கியவர். | வணபிதா.யோ.அ.ஜேசுதாஸ் | 6 |
| 3. | சிறந்த வழிகாட்டி. | பிரம்மஸ்ரீ. மு.பாலகுருசாமிசர்மா. | 7 |
| 4. | செஞ்சொற்செல்வரின் ஆசிகள். | கலாநிதி.ஆறுதிருமுருகன். | 8 |
| 5. | கல்லூரி வளர்ச்சியில் புதியபரிணாமம். | பிரம்மஸ்ரீ.பா.கோபாலகிருஷ்ணசர்மா. | 9 |
| IV. | வாழ்த்துச் செய்திகள். | | |
| 1. | கல்வி அமைச்சர். | கௌரவ.த.குருகுலராஜா. | 10 |
| 2. | ஆளுநரின் செயளாளர். | திரு.இ.இளங்கோவன். | 11 |
| 3. | கல்வி அமைச்சின் செயலாளர். | திரு.சி.சத்தியசீலன். | 12 |
| 4. | விருத்தியை நோக்கி விக்ரோறியா. | திரு.ஆ.இராஜேந்திரன். | 13 |
| 5. | வலயக்கல்விப்பணிப்பாளர். | திரு.செ.சந்திரராஜா. | 14 |
| 6. | வாழ்த்திடுவோம் ஆசானை. | திருமதி.ச.சிவகுமார். | 15 |
| 7. | ஓய்வுநிலை மாகாணக்கல்விப்பணிப்பானர். | திரு.ப.விக்கினேஸ்வரன். | 16 |
| 8. | ஸ்ரீகாந்தச் செம்மலே சீர் பெற்று நீர் வாழி. | திரு.வ.செல்வராசா. | 17 |
| 9. | ஒப்பற்ற செயலுக்கு என் பாராட்டும்.... | திரு.சு.கணபதிப்பிள்ளை. | 18 |
| 10. | பல்வளமும் பெற்று வாழ்க. | திரு.ச.கைலாசநாதன். | 19 |
| 11. | கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர். | திரு.க.சத்தியபாலன். | 20 |
| 12. | ஆளுமை மிக்க அதிபர். | திரு.பொ.ரவிச்சந்திரன். | 21 |
| 13. | 60ஆவது ஆண்டு சேவை நலன் பாராட்டு. | திருமதி.நா.ஐங்கரன். | 22 |
| 14. | பல்துறைப் புலமையும் ஆற்றலும். | திரு.அ.சோதிநாதன். | 24 |
| 15. | வரலாற்றுப் பதிவுகள். | திருமதி.இ.தவநாயகம். | 25 |
| 16. | உயர்வுக்கு வழிகாட்டியவர். | திரு.சி.கந்தசாமி. | 33 |
| 17. | நற்பண்பாளனே, நலமே வாழ்க. | செல்வி.அ.சா.மரியாம்பிள்ளை. | 34 |
| 18. | கோட்பாடுகளைச் செயற்பாடுகளாக்கியவர். | திரு.சு.கிருஷ்ணகுமார். | 35 |
| 19. | காலத்தினால் செய்த பெருந்தொண்டு. | பேராசிரியர்.திரு.நா.சண்முகலிங்கன். | 36 |
| 20. | ஆளுமை கொண்ட அதிபர். | பேராசிரியர்.திரு.க.தேவராசா. | 37 |
| 21. | சிறியன சிந்தியாத ஸ்ரீகாந்தன். | பேராசிரியர்.திரு.மா.சின்னத்தம்பி. | 39 |
| 22. | மேதைமையுடன் கூடிய... | கலாநிதி. க.நாகேஸ்வரன். | 44 |
| 23. | கல்லூரியின் மீது பற்றுறுதி கொண்டவர். | திரு.எஸ்.ரீ.பீரிஸ். | 50 |
| 24. | அதிபர் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டு. | திரு.ச.சிவநேஸ்வரன். | 52 |
| 25. | மனமுவந்த வாழ்த்துக்கள். | திரு.ம.ஸ்ரீமுருகவேள். | 53 |
| 26. | பாராட்டி வாழ்த்துவதில்.... | திரு.ந.சபாரட்ணசிங்கி. | 54 |
| 27. | ஓய்வுநிலை அதிபர் ஆகின்றார். | திரு.செ.பத்மநாதன். | 55 |
| 28. | விக்ரோறியா அன்னை மடியில் தவழ்ந்தவர். | திருமதி.அ.வேலுப்பிள்ளை. | 56 |
| 29. | தடம் புரளாத அதிபர். | திரு.வி.சண்முகநாதன். | 57 |
| 30. | அதிபர் வழி நடந்த பாதைத் தடங்களிற் சில... | Dr.ஆ.காந்தநேசன். | 61 |
| 31. | ஆளுமையும் ஆற்றலும் மிக்கவர். | திரு.கு.விமலன். | 62 |
| 32. | செயற்றிறனும் தியாகமும் நிறைந்தவர். | திரு.நா.கேதீஸ்வரன். | 64 |
| 33. | மணிவிழா நாயகன் வழிநடந்த பாதையிலே... | திருமதி.நே.தனபாலசிங்கம். | 65 |
| 34. | மணிவிழாக் காணும் எங்கள் அதிபர். | திருமதி.செ.செல்லையா. | 67 |

| | | |
|---|---|---|
| 35. என்றும் வாழ்க இனிது. | பண்டிதை.பொன்.பாக்கியம். | 68 |
| 36. மகத்தான சேவையாற்றிய மாணிக்கம். | திரு.மு.நடராஜா. | 70 |
| 37. உயர்ந்த மனிதன். | திரு.சி.சிவகணேசசுந்தரன். | 72 |
| 38. பசுந்தடங்கள். | திரு.செ.சிவகுமாரன். | 74 |
| 39. எல்லோருக்கும் கிடைக்காத அரிய... | திரு.நா.தனபாலசிங்கம். | 75 |
| 40. விஞ்ஞானக் கல்வியின் விருத்திக்கு... | பிரம்மஸ்ரீ.சி.விஜேந்திரசர்மா. | 77 |
| 41. பன்முக ஆளுமையாளன். | திரு.பா.பாஸ்கரன். | 78 |
| 42. தனிப்பெருந் தலைவன் | திரு. ச.க. குசலகுமாரன். | 80 |
| 43. மனமார வாழ்த்துகின்றேன். | திரு.அ.ஜோன்ஜிப்பிரிக்கோ. | 81 |
| 44. Our Principal is a gentleman. | Mrs.S.Thevarajah. | 82 |
| 45. என் பெருமதிப்புக்குரிய ஆசான். | திரு.சி.ஞானச்சந்திரமூர்த்தி. | 83 |
| 46. ஸ்ரீகாந்தன் ஒரு நல்லாசிரியன். | Dr.இ.சுரேந்திரகுமாரன். | 84 |
| 47. மலர்ந்து மணம் வீசும்... | Dr.செ.கண்ணதாசன். | 86 |
| 48. ஓய்வுபெறும் ஆசானுக்கு அகம் நிறைந்த... | எந்திரி.ந.சுதாகரன். | 91 |
| 49. வாழ்க வளமுடன். | திரு.இ.இளங்குமரன். | 93 |
| 50. மணிவிழாக் காணும் எங்கள் அதிபர். | திரு.வி.பாலச்சந்திரன். | 94 |
| 51. பேரன்பிற்கும் பெருமதிப்புக்குமுரியவர். | திருமதி.ப.தணிகாசலம். | 95 |
| 52. மனம் நிறைந்த மணிவிழா வாழ்த்துக்கள். | திரு.தா.கமலநாதன். | 96 |
| 53. காலங்களை மீட்டிப் பார்க்கின்றேன். | திரு.சி.ரவிசங்கர் . | 97 |
| 54. எங்கள் ஊர் தந்த அதிபர். | திரு.க.செந்தில்நாதன். | 98 |
| 55. எமது அன்புக்குரிய அதிபரைப் பற்றி... | திரு.மு.சுதர்சன். | 99 |
| 56. விக்ரோறியா அன்னையின் மணிமகுடம். | திரு.கு.வினோதன். | 101 |
| 57. செம்புலப் பெயல் நீராய்.... | திரு.இ.ஆனந்தநடராசா. | 102 |
| 58. விளையாட்டுத் துறை முதல்வரின்... | திரு.நா.திருக்குமாரன். | 104 |
| 59. உன்னதமான பணி. | திரு.ச.விநாயகரத்தினம். | 107 |
| 60. முகாமைத்துவத் தேர்ச்சியும் ஆளுமையும்... | திரு. பா. தனபாலன். | 108 |
| 61. இந்நாள் ஒரு பொன் நாள். | திருமதி.ஞா.மகேஸ்வரன். | 112 |
| 62. எங்கள் அதிபர் | திருமதி.வ.கனகேந்திரன். | 114 |
| 63. செயற்றிறன் வாய்ந்தவர் | திரு.ஆ.பிரபாகரன், திரு.வி.மதிதரன். | 115 |
| 64. பன்முக ஆளுமைப் பண்பு கொண்டவர். | திரு.கு.ஜேம்ஸ் பஸ்ரியன். | 117 |
| 65. வியத்தகு சிற்பரன். | திருமதி.ச.சிவகுமார். | 118 |
| 66. கல்லூரியின் உயர்வையே ... | திரு.து.இரவீந்திரன். | 122 |
| 67. கண்டித்து, கடிந்து, கட்டியணைத்த அதிபர். | திரு.வி.சூரியப்பிரகாஸ். | 124 |
| 68. அதிரடி ஆட்டநாயகன். | திரு.இ.சதீஸ்கரன். | 125 |
| 69. சூட்சுமத்தை சொல்லித் தாருங்கள். | திரு.த.நித்தியானந்தன். | 126 |
| 70. கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றியவர். | திருமதி.ப.முகுந்தன். | 127 |
| 71. கலைத்துறையின் கனவுகள் நனவான... | திருமதி.ஸ்ரீ.கண்ணதாசன். | 128 |
| 72. வரலாற்றின் பொற்காலம். | செல்வி.த.நிதுஜா. | 131 |
| 73. அதிபரின் காலத்தில் அரிதான... | செல்வி.தே.காயத்திரி. | 133 |
| 74. அன்பான அதிபரே, | செல்வி.சி.அனோஜிதா. | 136 |
| 75. விக்ரோறியாவின் காவியத் தலைவன். | செல்வன்.த.மோகனரூபன். | 137 |
| 76. கல்லூரியின் செம்மல். | செல்வி.ந.துஷாந்தி. | 138 |
| 77. எமது அன்பான அதிபர். | செல்வி.இ.கார்த்திகாயினி. | 141 |
| 78. சித்தம் அழகனார். | திரு.ந.குகபரன். | 143 |
| 79. திரும்பிப் பார்க்கையிலே... | பிரம்மஸ்ரீ. வ. ஸ்ரீகாந்தன். | 146 |



விழா நாயகருடன் பாரியார்

# விழாக்குழுத் தலைவரின் சிந்தனையிலிருந்து...



**திரு. கா. சந்திரபாலன்**
(மணிவிழாக் குழுத் தலைவர்)
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்.

ஒன்றரை நூற்றாண்டு காலமாக எமது பிரதேசத்தில் கல்வி ஒளிபரப்பிவரும் விக்ரோறியாக் கல்லூரி ஓர் ஆங்கில சைவப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. சைவப் பாரம்பரியத்தில் கல்வி வழங்கவேண்டும் என்ற பெரு நோக்கோடு நிறுவப்பட்ட இக்கல்லூரி இன்று தன் இலக்கை நிலைநாட்டி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

விலோபிசிமோல், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் போன்ற அறிஞர்கள் இக்கல்லூரியை வளப்படுத்தினார்கள். இக்கல்லூரியில் பெரும் கல்விமான்கள் அதிபர்களாக பெரும் பணியாற்றினார்கள். அவர்கள் வரிசையில் வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அதிபராவார். இக்கல்லூரியின் பழைய மாணவர், ஆசிரியர், இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் திரு.வ.ஸ்ரீகாந்தன் தம்பணியை மேன்மையுடன் ஆற்றக்கூடியதாக இருந்தது. இவரது காலத்தில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. பழைய கட்டிடங்கள் புதுப் பிக்கப்பட்டன. புதுப்பொலிவுடன் மிளிர அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள் அர்ப் பணிப்புடன் பணியாற்றியுள்ளார். கல்வித்துறையில் பாரிய வளர்ச்சி, இணைப் பாடவிதான செயற்பாடுகளின் சாதனை என்பன இவரது முயற்சிகளின் பெறுபேறாகும். இவரது காலத்தில் மாணவர்களின் கல்வி நாட்டம், ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன உயர்வாக இருந்தமையை அவதானிக்கலாம்.



பழைய மாணவர்கள், பாடசாலைச் சமூகம், ஆசிரியர்கள், கல்வித்திணைக்களம் ஆகிய சகல தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்று தமது இலக்கை நிறைவு செய்வதற்கு இவ்வதிபர் அவர்கள் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியதாகும். ஓய்வுபெற்ற அதிபர் தமது குடும்பத்தினருடன் இனிது வாழ வாழ்த்துகிறேன்.

# தியாகம் திரியாகிறது



**செல்வி. பூ. ஜெயமலர்**
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.,
சுழிபுரம்.

தீபம் ஒளிர்கின்றது. இதன் பிரகாசம் மட்டும் கண்ணுக்குத் தெரிகிறது. இருளை விலக்கி, விளக்கி வழிகாட்டுகின்றது. அதில் திரியின் தியாகத்தைப் புரிந்து கொள்பவர் எத்தனை பேர்? வாழ்வும் இதுபோன்றதே.

தன்னுடைய இன்பத்தை விரும்பாது தான் ஆற்றும் கருமம், அதனால் உண்டாகும் பயன், இவற்றையே விரும்பிச் செய்யும் ஒருவன் தன்னைச் சூழ்ந்திருக்கும் உறவுகளின் துன்பத்தைப் போக்கி அவர்களை நிலைபேறடையச் செய்யும் தூண் ஆகிறான் என்பதை,

**"இன்பம் விழையான் வினை விழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்"**

என்று ஆள்வினையுடைமை பற்றி வள்ளுவர் கூறினார். இது அரசனுக்கு மட்டுமல்ல, தலைமைத்துவம் சார்ந்த அனைவர்க்கும் பொருந்தும். அதனால் இக்குறளை இச்சந்தர்ப்பத்தில் எடுத்தாள்வது மிகப் பொருத்தமானது என நினைக்கின்றேன்.

ஒரு விடயத்தைப் பற்றி அறிவதற்கு மூன்று பிரமாணங்கள் உள்ளன. அவை பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம். அவ்வாறே ஒரு மனிதனைப் பற்றி அறிவதற்கும் மூன்று வழிகள் உள்ளன. ஒன்று, குறித்த நபர் தன்னைப் பற்றிக் கூறுவதைக் கொண்டு அறிவது. இரண்டாவது, நாம் அவருடன் பழகியபோது அவரது சிந்தனை, சொல், செயல் பற்றி அறிவது. மூன்றாவது அவரைப் பற்றிப் பிறர் கூறுவதைக் கொண்டு அறிவது. இம்மூன்று வழிகளிலும் கிடைக்கப்பெற்ற தகவல்களை வைத்துச் சீர்தூக்கி ஆராய்ந்து தீர்மானிப்பதே மிகப் பொருத்தமானதாகும். இம்மூன்று வழித்தேடல்களாலும் புலப்படாத பக்கங்கள் கூட இருக்கலாம்.

அதிபர் பிரம்மஸ்ரீ வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலரின் பத்திராதிபர் என்ற வகையில் சில வரிகள் எழுதவேண்டிய கடப்பாடு இருக்கின்றது. அதே நேரம் இந்நூலுக்கான ஆக்கங்கள் அனைத்தையும் படித்துச் செம்மைப்படுத்தும் பொறுப்பும் இருக்கின்றது. வந்த ஆக்கங்களைப் படித்தபோது மூன்றாம் நிலை வழி பல கிளைவிட்டுப் பயணப்பட்டதை உணரமுடிந்தது.

அதிபரவர்களின் ஆசான்கள், சகபாடிகள், மேலதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற பலரது நோக்கும் போக்கும் அவரின் பல்வேறு ஆளுமைகளைச்

சுட்டி நிற்கின்றன.

**"எய்தற்கரிய இயைந்தக்கால் அந்நிலையே**

**செய்தற்கரிய செயல்"**

என்ற காலமறிதல் பற்றி வள்ளுவர் கூறியதைக் கற்றாரோ இல்லையோ, அதன்படி வாழ்ந்தவர். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. நாமே காலத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை வள்ளுவரும் அறிந்தார். ஸ்ரீகாந்தனும் அறிந்தார். அதனாற்றான் மூன்றாண்டுகளில் விக்ரோறியா என்னும் புலத்தில் பல புதிய விளைச்சல்கள்; அற்புதமான அறுவடைகள்.

இவர் முன்னெடுத்த திட்டங்கள் பல. தூரநோக்கில் சிந்தித்துச் செயற்படுபவை. உடனடி விளைவை எதிர்பார்த்தவை என்று. இவற்றை எங்கு, எப்போது, ஏன், எப்படிச் செய்தார்? என்று பல வினாக்களை எழுப்பினால் புரியும். தான் அதிபராய் இருந்த அனைத்துப் பாடசாலைகளிலும், அப்பாடசாலைச் சமூகத்தைத் தனது சொந்தமாகக் கருதி அதனை உயர்நிலை அடையச் செய்தார். எப்படிச் சாத்தியமானது?

அதிபர் திரு. ஸ்ரீகாந்தனவர்கள் கல்லூரியிலும் மாணவர்களிலும் கொண்ட அன்பே யாவற்றுக்கும் அடிப்படை. அன்புடையோரே பிறரின் நலனுக்கான தேவையை அறிவர். இவர் மாணவர் நலனா, ஆசிரியர் நலனா, சமூக நலனா, பெற்றோரின் எதிர்பார்ப்பா யாவற்றையும் தக்கபடி அறிந்தார். அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகளை நன்கறிந்தார். அவற்றைச் செயற்படுத்தும்போது உண்டாகும் எதிர்ப்புக்கள், தடைகள், விமர்சனங்கள் எதையும் பொருட்படுத்தாது கலக்கமின்றித் துணிந்து நின்று செயற்படுத்தினார். இவை யாவற்றுக்கும் மேலாக விளங்கிய உயர் பண்பு "அவாவின்மை".

ஆம்; மேற்கூறப்பட்ட செயல்களைச் செய்யும்போது பெருமளவு நிதியைக் கையாளவேண்டிவரும். "பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்" என்பார்கள். மனித மனம் சும்மா இருக்குமா? பணத்தாசை புகுந்தால் இத்திட்டங்கள் நிறைவேறுமா? நிதி மோசடி நிகழ்ந்தால் அன்பு, அறிவு, தேற்றம் மூன்றும் இருந்து என்ன பயன்? இத்தகைய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும்போது எத்தனை "லகரங்கள் புரளும்? அத்தனையையும் கையாள்வது அதிபர் அல்லர் என்பதைக் கூட இருந்தவர் அனைவரும் அறிவர். மொத்தத்தில்

**"அன்பு அறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்**

**நன்குடையான் கட்டே தெளிவு"** (தெரிந்து வினையாடல்)

என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

"தியாகத்தினால் முத்தியடையலாம் எனக் கீதை உறுதியளிக்கிறது" என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கீதைக்குச் சாராம்சம் கூறியுள்ளார். அந்தத் தியாகத்தை நம் அதிபர் திரு.வ. ஸ்ரீகாந்தனிற் கண்டோம். அவர் தம் தேவைகளை, நேரத்தை, பணத்தை, விருப்பு வெறுப்புக்களை, சுயநலத்தை மாணவர்களின் உயர்வுக்காகவும் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் தியாகம் செய்தார். குன்றிலிட்ட தீபமாய் அவர் தியாகம் ஒளிர்கிறது.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்பதற்கிணங்க அவரது தகைமையை அவரது பிள்ளைகள் நிரூபித்திருக் கிறார்கள்.

அகவை அறுபதை 2014 மார்ச் மாதம் பூர்த்தியான நாளில் எடுக்கப்பட வேண்டிய மணிவிழாவும் இம்மலர் வெளியீடும் வருட ஆரம்பத்தில் நடைபெற்ற ஆசிரிய இடமாற்றங்களின் காரணமாக நிறைவேற்ற முடியாது போயிற்று. எனினும், அதிபர் மீதும் அவரின் அர்ப்பணிப்பான சேவை மீதும் கொண்ட மதிப்பின் காரணமாக முன்னெடுத்த இம்முயற்சி அதிபரவர்கள் விக்ரோறியாவில் கடமையேற்ற 14 செப்டெம்பர் ஆகிய இன்று எடுக்கப்படுவது பொருத்தமானதே.

இம்மலருக்கான ஆக்கங்களை மிகக்குறுகிய காலத்திலேயே கோரி யிருந்தோம். எமது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு ஆசியுரை, வாழ்த்துரை, பகிர்வுரை, நயப்புரை என ஆக்கங்களைத் தந்துதவிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் மலர்க்குழுவின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இம்மலர் வெறுமனே ஒரு தனிமனிதனைச் சார்ந்ததாக இல்லாது, இக்கல்லூரியினது ஆவணமாகவும் திகழ்கிறது. அதனால் காலத்தை வென்று நிலைக்கும். அதையும் தாண்டி அதிபரின் புகழ்நிலைக்க இறையாசியை வேண்டியமைகின்றேன்.

"The teaching gains in depth, truth and power"

*(Sri Aurobindo - Indian Philosopher)*

"கீதாசிரியனாவோம்".



# மணிவிழாக் குழு



**நிற்பவர்கள் இடமிருந்து வலமாக**

Dr. செ.கண்ணதாசன்
திரு. ந.சத்தியரூபன்
திரு. மா. வரதராஜா
திரு.கு.பா. விஜயகுமார் (பொருளாளர்)
திருமதி.ஜெ. சுதர்சன்
திரு. இ. சதீஸ்கரன்
திரு.கு.ஜேம்ஸ் பஸ்ரியன்
திரு. ப. ஹரிதாசன்

**இருப்பவர்கள் இடமிருந்து வலமாக**

திரு. செ. சிவகுமாரன் (உபதலைவர்)
திருமதி. ச. சிவகுமார் (அதிபர்)
செல்வி. பூ.ஜெயமலர் (பத்திராதிபர்)
திரு. கா. சந்திரபாலன் (தலைவர்)
திருமதி. இ. தவநாயகம் (செயலாளர்)
Dr. க. நாகேஸ்வரன்

# மலராசிரியர் குழு



திரு. து.இரவீந்திரன்




செல்வி. பூ. ஜெயமலர்



திரு. ந. குகபரன்

# வித்தியா வித்தகருக்கு இந்துமத குருமார்களின் ஆசிகள்



**சிவஸ்ரீ. சபா. வாசுதேவக் குருக்கள்**
தலைவர்,
சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.

தான் கற்றுணர்ந்து அதன்வழி உயர் ஆசானாகி கல்லூரிகளின் அதிபராகி தான் அமரும் இடம் எல்லாம் மிளிரச் செய்யும் கல்விச்சான்றோன் உயர்திரு. பிரம்மஸ்ரீ வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்கள். வித்தியா வித்தகராகத் திகழும் அதிபர் அவர்கள் ஆசாரம் அனுஷ்டானம் என்னும் ஒழுக்க நெறிமிக்க அந்தண குலத்தில் பிறந்ததனால் இயற்கையாகவே போற்றுதலுக்கும் வணக்கத்திற்குமுரியவராகத் திகழ்கின்றார். அத்துடன் அதிபர் பதவி இவரது பெருமையை இரட்டிப்பாக்கியது. சான்றோர் பெருமகனார் என்றால், தான் பெற்ற கல்வி, அறிவு, ஆற்றல், அனுபவத்தினை பிறர் பயன்கொள்ளும் வகையில் பகிர்ந்து கொள்பவராவார். இதற்கமைவாக அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அதிபர் அவர்கள் தனது சொந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்குமாக விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகி கல்லூரியின் ஊடாக பல சாதனையாளர்களை உருவாக்கியுள்ளார். கல்லூரிகளில் முன்னுதாரணப்படுத்தக்கூடிய வகையில் தனது கல்லூரியினை அடையாளப்படுத்தியுள்ளமை ஆசான் ஸ்ரீகாந்தன் அவர்களுடைய பெருமுயற்சியாகும். ஆளுமைமிக்க பிரஜைகளை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனையுடன் விக்ரோறியாக் கல்லூரி எமது பிரதேசத்தில் கல்விப்பணியாற்றி வருகின்றது. இவ் அதிபரும் இக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் நாம் பெருமையடைகின்றோம்.

அதிபர் அவர்கள் இன்று பதவியில் இருந்து ஓய்வுநிலை அடைந்தாலும், தனது பணிகளில் இருந்து ஓய்வு அடையவில்லை. அதிபர் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் சமூகம் நன்மையடையும் வகையில் பணியாற்ற எல்லாம்வல்ல இறைவன்அருள் துணை நிற்கவேண்டும் என பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்துமதகுருமார்களுக்கும் தன்னாலான பணிகளை ஆற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன். தனது தந்தையாரின் தொடர்புடைய ஆலயங்களூடாகத் தொடர்ந்தும் ஆன்மீகத் தொண்டுகளை ஆற்றவும் வேண்டுகின்றேன். தனது ஓய்வுக்காலத்தில் மனச்சோர்வுகளற்ற வகையில் மகிழ்வாகவும் சந்தோஷமாகவும் திடகாத்திரமாகவும் வாழ எல்லாம்வல்ல சிவகாமி பாகர் சிதம்பரேஸ்வரப் பெருமானின் அருளும் அனைத்து இந்துமதகுருமார்களது ஆசிகளும் கிடைக்க வாழ்த்தி அமைகின்றேன்.

# வாக்கை வாழ்வாக்கியவர்



**அருட்பணி யோ.அ. ஜேசுதாஸ்**
அதிபர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

ஊருக்கே உணவளிக்கும் உழவுத் தொழிலைச் சுயதொழிலாகக் கொண்டதும் பழம்பெரும் புகழ் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதுமான சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்களைப் பற்றிச் சொல்லப்புகின் அது "நிலவிற்குச் சேலை கட்டி அழகுபார்த்தல்" போல ஆகிவிடும். 37 வருட காலங்கள் அவர் ஆற்றிய ஆசிரியப்பணி அளப்பரியது. கல்வியுடன் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களை இரண்டறக் கலக்க வைப்பதில் இன்புறும் இவர், வவுனியா விபுலானந்தாக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி போன்ற புகழ்பூத்த பாடசாலைகளில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராகப் பணிபுரிந்து எல்லோரது மனங்களையும் கொள்ளை கொண்டதொரு செயல்வீரன் எனில் அது மிகையில்லை.

பிரபல கணக்கியல் ஆசானாய் 30 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றிய அதிபர் அவர்கள் இறைபக்தி கொண்டவர். தான் கூறமுனையும் கருத்துக்களைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் கூறும் நெஞ்சுரம் படைத்தவர். பணிபுரியும் பாடசாலையை மட்டுமல்லாமல் அதனுடன் தொடர்புடைய சமூகத்தையும் உயர்த்த வேண்டுமெனும் சிந்தனையுடையவர். கல்லூரியில் எப்போதும் ஆசிரியர் மாணவரிடையே முரண்பாடில்லாத முகாமைத்துவத்தை முன்னெடுத்தவர். வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான பொருளாதார ஆதரவை பழைய மாணவரூடாகப் பெற்றுக்கொடுத்தவர். நேர முகாமைத்துவமும் நேர்மைத்தன்மையும் இவரின் உயிர்நாடி. போட்டிகளுக்கும் வேறு செயற்பாடுகளுக்கும் மாணவர்கள் செல்லும்போது எப்போதும் அவர்கள் மத்தியில் அதிபரவர்களைக் காணலாம்.

மேலும் அவர் தனது கடமையிலிருந்து எப்பக்கத்திலும் தவறிவிடவில்லை என்பதற்கு அவரது குடும்பம் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. குடும்பத்திலும் பொறுப்புள்ளதோர் தந்தையாகச் செயற்பட்டு தனது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையும் ஒழுக்கத்தையும் ஊட்டி அவர்களை சிறந்த பிரஜைகளாக்கியுள்ளார். சீரிய குணங்கள் பலவற்றால் தன்னை அலங்கரித்துக்கொண்ட சீர்மையாளர் இவர். சீர்மேவு சிற்றூரில் பிறந்து பார்மேவு பணிகள் பல செய்து குன்றிலிட்ட தீபமாய் ஒளிர்ந்த தங்களை மணிவிழா நாளதனில் மனப்பூர்வமாய் வாழ்த்தி மகிழ்கின்றேன். தாங்கள் உடல் உள நலனோடு இன்னும் பலகாலம் வாழ்ந்து பயனுறு பணிகள் பல ஆற்றிட எல்லாம்வல்ல இறைவன் துணையை இனிதாய் வேண்டி நிற்கின்றேன்.

வாழ்க பல்லாண்டு. உங்கள் பணி தொடர்க நூறாண்டு.

# சிறந்த வழிகாட்டி




**பிரம்மஸ்ரீ. மு. பாலகுருசாமி சர்மா**
பிரதமகுரு,
பறாளாய் முருகன் தேவஸ்தானம்.

திரு. வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்கட்கு மணிவிழா மலர் வெளியிட மலர்க்குழு ஒன்று தயாராகி வருகிறது என்று கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். அவர் இக்கல்லூரியில் அதிபராகப் பதவியேற்று சிறந்த முறையில் நிர்வகித்து வந்தார். அவர் இக்கல்லூரியில் பணிபுரியும் சகல ஆசிரியர்களுடனும் கலந்து தனது கடமைகளைச் செய்தார். மாணவர்கள் தவறு செய்யும் நேரத்தில் கண்டிக்கவும் தயங்கமாட்டார்.

இக்கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் முதலியவற்றையும் ஊக்கப்படுத்தி அவர்களின் செயற்பாடுகளையும் நன்கு வளரச் செய்தார். அவரது பதவிக் காலத்தில் இக்கல்லூரி மிகவும் முன்னேற்றமடைந்தது. இதில் குறிப்பாக கல்விப் பெறுபேறு, மெய்வன்மைப் போட்டிகளைக் குறிப்பிடலாம். அவர் மேலும் தனது ஓய்வுக் காலத்தில் சிறந்த தேகாரோக்கியத்துடன், இக்கல்லூரியின் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழவேண்டுமென முருகனைப் பிரார்த்திக்கின்றேன். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆளுமைமிக்க அதிபராக விளங்கி சமீபத்தில் ஓய்வுபெற்ற வ.ஸ்ரீகாந்தன் அவர்களை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகிறேன். சிறந்த ஆசிரியராக விளங்கிய இவர், பல மாணவரது அன்பிற்குப் பாத்திரமானவராக விளங்கினார். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இவரிடம் கற்ற மாணவர்கள் இவரது கற்பித்தல் திறமையைப் புகழ்ந்து உரைத்ததை யான் அறிவேன். அதிபராகப் பணியாற்றிய காலத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் இவர் சாதித்த சாதனைகள் போற்றத்தக்கன.

புகழ்பூத்த விக்ரோறியாக் கல்லூரி அதிபர் ஆசனம் மிகவும் மகத்துவமானது. மகாமேதைகள் கொலுவிருந்த ஆசனம். இவ்வரலாற்று ஆசனத்துக்குப் பொருத்தமானவர் எனக்கருதி கல்லூரிச் சமூகம் அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்களை வலிந்து அழைத்துப் பெருமை பெற்றது. தான் கற்ற கல்லூரியில் சேவை செய்து மணிவிழாக் காணும் பேறு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இது ஸ்ரீகாந்தன் அவர்கட்கு கிடைத்த நல்வரம் எனலாம். அன்பும் பண்பும் அர்ப்பணிப்பும் மிக்க ஸ்ரீகாந்தன் அவர்கள் என்றும் நிறைவாக வாழ துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.



# கல்லூரி வளர்ச்சியில் புதிய பரிமாணம்




**பிரம்மஶ்ரீ. பா. கோபாலகிருஷ்ண சர்மா**
பழைய மாணவன்,
ஐக்கிய இராச்சியம்.

அன்பு, அறிவு, காரியசித்தி, விடாமுயற்சி இவற்றின் மறு உருவமாக ஜொலிக்கும் எமது அன்புச் சகோதரரும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முன்னைநாள் அதிபருமான பிரம்மஶ்ரீ. ஶ்ரீகாந்தன் அண்ணா, ஶ்ரீமதி பாமினி அக்கா தம்பதிகளுக்கு எமது மணிவிழா நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம் நலத்தில் அக்கறை கொண்ட அண்ணா என் இளமைக் காலத்தில் பல ஆலோசனைகளைத் தெரிவித்து உறுதுணையாக, நல்ல நண்பனாக, சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். 21-06-1989ஆம் வருடம் இடம்பெற்ற பொன்னாலை ஶ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மஹாகும்பாபிஷேக வைபவத்தின் போது எமக்கு இவர் பல விதத்திலும் உதவி புரிந்ததுடன் நல்லாலோசனைகளையும் வழங்கியிருந்தார். பலரிடமும் இவர் நட்புப் பாராட்டி வந்ததுடன் தேவையான போது உதவி புரியவும் தயங்கியதில்லை. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகக் கடமை புரிந்தபோது இவரது திறமை அனைவருக்கும் புலப்பட்டது.

குறுகிய காலத்தில் கல்லூரியினை யாழ். மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக கல்வி, ஒழுக்கம், விளையர்டடு போன்ற துறைகளில் பரிணமிக்கச் செய்தார். புலம்பெயர் நாடுகளில் பழைய மாணவர் சங்கம் அமைக்க ஊக்குவித்து அதன் மூலம் பாடசாலையினை வளர்த்தார். இவரது காலம் பொற்காலம் என்றால் அது மிகையல்ல. இப்படி இவர் பல சிறப்புக்களைப் பெற்றார் என்றால் அதற்கு இவருக்கு துணைவியாக வந்த பாமினி அக்கா தான் காரணம். இன்முகம் காட்டி அனைவரையும் உபசரித்து வீட்டில் உள்ள தேவைகளைத் தான் கவனித்து சமாளித்து இவருக்குத் துணையாக விளங்கியபடியால்தான் அண்ணன் இந்தளவுக்குப் பொதுச்சேவையில் ஈடுபட முடிந்தது. ஆகவே இவ்விருவரும் இணைந்து கொண்டாடும் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவெனும் மணிவிழா (60) சிறப்புற வாழ்த்துவதுடன், அதன்பின் வருகின்ற பீமரதசாந்தி (70), விஜயரத சாந்தி (75), சதாபிஷேகம் (80), கனகாபிஷேகம் (90), பூர்ணாபிஷேகம் (100) போன்றவற்றையும் கொண்டாடி வம்சவிருத்தி கண்டு சிறப்புடன் வாழ எல்லாம்வல்ல எம்குலம் காக்கும் வள்ளல் பறாளை ஶ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானின் திருவருள் பணிந்து வாழ்த்துகின்றோம்.

# வாழ்த்துச் செய்தி



**திரு. த. குருகுலராசா**
அமைச்சர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாண சபை.

ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் பல்வேறுவிதமான நிகழ்வுகளைச் சந்திக்கின்றோம். அவை இன்பம் துன்பம் என இரண்டும் கலந்ததாக இருக்கலாம். ஒருவரது சேவை, நடத்தை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒருவரை சமூகம் கணக்கிட்டு அவரையும் அவரது சேவையையும் பாராட்டிக் கௌரவிக்கின்றது. ஒருவரது ஷஷ்டியப்த பூர்த்தியில் அவரின் பணிகள், சாதனைகள், வாழ்க்கை என்பவற்றை உரிய காலத்திலேயே பாராட்டவும், ஏனையோருக்கு வழிகாட்டியாகவும் இப்படியான மணிவிழாக்கள் பயன்படுகின்றன. இத்தகைய மணிவிழாவினைக் காணும் நாயகன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அரச சேவையிலே பிரம்மஸ்ரீ. வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் மூன்று தசாப்தகாலங்களிற்கு மேலாகச் சேவையாற்றி பெருமைக்குரிய நாயகனாகத் திகழ்கின்றார். ஆசிரியராக, அதிபராக தமது கல்விச்சேவையை வழங்கிய காலத்தில் பொதுச்சேவையிலும், சமயப்பணியிலும் ஈடுபட்டதோடு நில்லாமல் தொடர்ந்தும் மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார். இறைபக்தியும் மனிதநேயமும் நிறைந்து விளங்கும் இவர் குடும்பத்துடன் நீடூழி வாழவும், தனது சேவைகளில் மேலும் சிறந்து விளங்கவும் இவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென இறைவனை வேண்டி மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றேன்.



# வாழ்த்துச் செய்தி



**திரு. இ. இளங்கோவன்**
ஆளுநரின் செயலாளர்,
வட மாகாணம்.

யாழ். வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் உயர்திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் மணிவிழாக் காண்கின்ற இவ்வேளையில் ஆளுநரின் செயலாளர் என்ற ரீதியில் வாழ்த்துச் செய்தி வழங்குவது மட்டுமல்லாது சுகதேகியாக பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கடந்த 37 வருடங்களாக கல்விச்சேவையில் பணிபுரிந்து ஆசிரியராகவும், ஆளுமைமிக்க அதிபராகவும், மாணவர்களின் கல்வித் தேடலுக்கு உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும், சாதனைகள் பலவற்றை அடைவதற்கு முன்னோடியாகவும் செயற்பட்டு 60ஆவது அகவையில் மணிவிழாக் காண உள்ள அதிபர் அவர்களின் பணி சிறப்பாக அமைந்திருந்ததனை நான் நன்கறிவேன். இவருடைய திறமையாலும், ஆற்றலாலும் புலம்பெயர் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும், கலை நிகழ்வுகளிலும் இப்பாடசாலை முன்னணியாகத் திகழ்கிறது என்றால் அதிபர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் கூட்டு ஒத்துழைப்பே இதற்குக் காரணம். அதிபர் இளைப்பாறிச் சென்றாலும் ஓய்வுக்காலத்தில் சமய சமூக கல்விப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு சமூகத்திற்குத் தனது அனுபவத்தினைத் தந்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.



# வாழ்த்துச் செய்தி



**திரு. சி. சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம், யாழ்ப்பாணம்.

யா/சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற திரு.வ. ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அரச சேவையில் 10-03-2014ம் திகதியிலிருந்து ஓய்வுபெற்று சேவைக்காலத்தை பல்வேறு படிநிலைகளில் அலங்கரித்து அர்ப்பணிப்புமிக்க சேவையினை வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கதாகும். ஒவ்வொரு மாணவரினதும் இயல்புகளையும் தேவைகளையும் அறிந்து அவர்களுக்கு ஏற்ற கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டுமென ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டுள்ளதுடன் தனது குறுகிய காலப் பகுதியில் இப்பாடசாலைக்கு நிறைந்த சேவையினை வழங்கி இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்தமையினைக் கல்விச்சமூகம் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூரும் என்பது பேருண்மையாகும்.

கடமையுணர்வு, சமூக அக்கறை, பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், அதிகாரிகளுக்கு மதிப்பளித்து அவர்களின் ஒத்துழைப்பினைப் பெறுதல், பாடசாலையின் முன்னேற்றத்திற்குக் காரணமாகவிருப்பவர்களைக் கௌரவித்து ஊக்குவிப்பினை வழங்குதல் போன்ற பல செயற்பாடுகளில் முன்னுதாரணமாகவிருந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நற்பண்புகளும் நல்லொழுக்கமும் நேர்மனப்பாங்கும் சமூக விழுமியங்களை மதித்து நடக்கும் மாணவ சமுதாயத்தை உருவாக்கிய இவரது கல்விப்பணியை வாழ்த்துவதுடன் அவர் ஓய்வுக்காலத்தில் இன்னும் பல சமூகப்பணிகளை மேற்கொண்டு நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



# விருத்தியை நோக்கி விக்ரோறியா



**திரு. ஆ. ராஜேந்திரன்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வட மாகாணம்.

அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களுடன் எனது பதவிக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதனால் இவரை நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. அதிபர் அவர்கள் தனக்கென கொள்கைகளை வகுத்துக் கொண்டவர். அக்கொள்கை வழி கருமமாற்றியவர்; அக்கொள்கைகளில் இறுதிவரை உறுதியாக நின்றவர். இப்படித்தான் வாழவேண்டும் என வாழ்ந்து காட்டியவர்.

இவருக்கு இக்கல்லூரியின் அதிபர் பதவி வழங்கப்பட்டபோது, அதனை ஏற்பதில் அவர் தயக்கம் காட்டியதாக அறிந்தேன். அவர் கடைப்பிடித்த கொள்கைகள் காரணமாக அவர் தயக்கம் காட்டியிருக்கலாம். ஆனால், பதவியேற்றதன் பின்னர் மிகச் சிறப்பாகத் துலங்கினார். தனது செயற்பாடுகள் காரணமாக பாடசாலைச்சமூகத்தின், மாணவர்களின், ஆசிரியர்களின், கல்விமான்களின் உயர்வான கணிப்பைப் பெற்றார். அதனை ஓய்வு காலம் வரை தக்கவைத்தார். யா/விக்ரோறியாக் கல்லூரியின் பெருமை, பாரம்பரியம், சிறப்புக்கள் என்பவற்றிற்கு எவ்வித குந்தகமுமின்றி இறுதிவரை உழைத்தார்.

இக்கல்லூரியின் மாணவர் அனுமதிகள் தொடர்பில் சில பிரச்சினைகள் எழுவதுண்டு. அதிபர் அவர்கள் இக்கல்லூரியின் அளவுசார் விருத்தியை மட்டுமல்ல, பண்புசார் விருத்தியையும் கருத்திற்கொண்டார். அதனால், மாணவர் அனுமதிகள் தொடர்பில் சில பிரச்சினைகளை எதிர்கொண்டார். ஆனால், அவற்றையும் வெற்றிகரமாகக் கையாண்டார். மாணவர் அனுமதிகளினால் பாடசாலையின் கல்வித்தரம் வீழ்ச்சியுறாமற் பார்த்துக் கொண்டார்.

ஒரு தடவை அதிபர் அவர்கள் தொடர்பாக அநாமதேயக் கடிதம் ஒன்று, பாடசாலைச் சமூகத்தின் பெயரில் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அக்கடிதம் தொடர்பாக, நான் அதிபர் அவர்களிடம் கூறியபோது, அக்கடிதத்தைக் காட்டும் வண்ணம் கேட்டிருந்தார். நான் அவர் மீது கொண்டிருந்த மதிப்பு, அன்பு காரணமாக அக்கடிதத்தை இன்றுவரை அவரிடம் காட்டவில்லை. ஒரு அநாமதேயக்கடிதம் காரணமாக அவரது மனம் புண்படுவதை நான் விரும்பவில்லை. அக்கடிதத்திற்கும் அவருக்கும் தொடர்பிருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. எல்லாவகையிலும் யா/விக்ரோறியாக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் நின்றுழைத்த அதிபர் அவர்களின் பெருமை, இக்கல்லூரிபோல் நீடித்து நிலைத்திருக்குமென நம்பலாம்.

# வாழ்த்துச் செய்தி



**செல்வரட்ணம் சந்திரராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

யா/விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களுக்கான மணிவிழா மலரினை வெளியிடுகின்ற மலர் வெளியீட்டுக் குழுவினருக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, திரு.வ. ஸ்ரீகாந்தன் அவர்கள் பாடசாலைக்கு ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படும் இம்மலர் சிறப்பாக அமைவதற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வலிகாம வலயத்தில் சிறந்த தரமுடைய பாடசாலையாக யா/விக்ரோறியாக் கல்லூரி வளர்வதற்குப் பெரும்பங்காற்றியவர். இனிமையாகப் பழகும் இயல்பும், ஆளுமை மிகுந்த இவரது செயற்பாடுகளும் மாணவர்களது மட்டுமன்றி அவருடன் பழகும் அனைவரது மனங்களிலும் இவரைப் பெருமைமிகு மனிதராக நிலைநிறுத்தியுள்ளது.

சிறந்த ஆளுமையுடையவராகவும், சமூக சேவையாளராகவும், பலருக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து ஓய்வுபெறும் இவர் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களுடனும், மகிழ்வுடனும் வாழ இறைவனை வேண்டுவதுடன், மேலும் இவரது கல்விப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.



# வாழ்த்திடுவோம் ஆசானை!



திருமதி. ச. சிவகுமார்
அதிபர்
யா/விக்ரோறியாக் கல்லூரி.

விக்ரோறியாவின் மாணவனாய், ஆசிரியராய், அதிபராய்ப் பணிபுரிந்து கல்லூரியின் கட்டமைப்பின் அத்திவாரமாய் பல மாற்றங்கள் செய்து கல்லூரிக்கெனத் தனித்துவம் அமைத்துப் பல சாதனைகள் செய்து முத்திரை பதித்த ஆசானின் மணிவிழா மலர் வெளியீட்டில் வாழ்த்துக் கூறுவதில் பெருமையடைகின்றேன். எனது ஆசானாகவும், நட்புக்குரிய அதிபராகவும் தனக்குப் பின் தன் இடத்தைத் தந்த என் குருவைப் பணிந்து வாழ்த்துகின்றேன்.



# வாழ்த்துச் செய்தி



**திரு. ப. விக்னேஸ்வரன்**
ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரம்மஸ்ரீ.வ. ஸ்ரீகாந்தன் அவர்களின் சேவைகளைக் கௌரவித்து வெளிவரும் மணிவிழா மலரில் வாழ்த்துச்செய்தி வரைவதில் பெருமகிழ் வடைகிறேன். இவர் அடக்கமான சுபாவம் உடையவர். தன்னை முன்னிலைப் படுத்தவோ அல்லது பதவிகளை நாடியோ ஓடியவரல்லர். ஆசிரியப்பணியை உயர்வாகக் கருதி மாணவர்களை அன்பால் அரவணைத்துச் சீரிய கல்விப்பணியை நிறைவாகச் செய்வதில் மகிழ்வடைந்து கொண்டிருந்தார்.

இவருடைய அதிபர் சேவைத் தகுதியையும், திறமையையும் கருத்திற் கொண்டு முதலில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு நியமனம் வழங்கப்பட்டது. இப்பதவியை மிகுந்த வினைத்திறனுடன் ஆற்றிக் கொண்டிருந்தபோது பல நல்ல பெறுபேறுகளைக் கல்லூரி தனதாக்கிக் கொண்டது. முழுநேர ஊழியனாக சமூகத்துடன் இணைந்து பல செயற்பாடுகள் இவரால் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் இவரது திறமையைக் கருத்திற்கொண்டும், விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற அடிப்படையிலும், இப்பிரதேசத்திலுள்ள கௌரவமான அந்தணப்பெருமகன் என்ற அடிப்படையிலும், விக்ரோறியாச் சமூகத்தின் ஏகோபித்த வேண்டுகோளுக்கமைய இங்கு அதிபராக நியமிக்கப் பட்டார். இங்கும் முழுநேர ஊழியனாக அர்ப்பணிப்புடன் சேவைபுரிந்து அனைவரது நன்மதிப்புக்கும் பாத்திரமானவராகத் திகழ்ந்தார். இசுறு செயற்றிட்டத்தின் ஊடாக இக்கல்லூரியில் பல மனித வள மேம்பாடும் பௌதீகவள விருத்திகளும் இவரது தலைமையில் நடந்தேறின.

பல அதிபர், ஆசிரியர் பயிற்சிகளுக்குரிய வளவாளராக மாகாண ரீதியில் பயிற்றுவிக்கப்பட்டு செயற்பட்டுள்ளார். விடயங்களை ஆணித்தரமாக முன்வைக்கும் வல்லமை இவருக்கேயுரிய தனித்திறமை யாகும்.



இவர் ஆசிரியராக, அதிபராக ஆற்றிய மகத்தான பணிகள் பாராட்டுக்குரியவை. ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் சுகதேகியாக, சந்தோஷமாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.



மணிவிழா நாயகனின் ஷஷ்டியப்த பூர்த்தி
வைபவத்தின் போது (08.03.2014)

# ஸ்ரீகாந்தச் செம்மலே சீர்பெற்று நீ வாழி!



**திரு. வ. செல்வராசா**
ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வட மாகாணம்.

*காரைநகர் யாழ்ற்றனிலே ஆசானாய்க் கால்பதித்து*
*கரையிலாக் கல்வியினைக் கனிவுடனே கற்பித்து*
*கண்ணுடைய கற்றோரைக் கரையின்றிப் படைத்த*
*மன்னவனே ஸ்ரீ காந்தா வாழி! வாழி!*


*வணிகத்திற் பலாலியிலே பயிற்சி பெற்று*
*வரவு செலவுத் தத்துவத்தை வழுவின்றிப் போதித்த*
*வல்லவனாய், வழிகாட்டி வாழவைத்த*
*வாண்மைமிகு ஆசானே வாழி! வாழி!*

*ஆசானாய்ப் பணியாற்றி அரியபணி செய்தமையால்*
*ஆசானுக் காசானாய்ப் பணியேற்றம் பெற்று*
*மூவாண்டு காலம் விக்ரோறியாவை ஆட்சி செய்து*
*அரியபணி செய்த தவமகனே நீ வாழி!*

சுழிபுரம் விக்ரோறியாவின் அதிபராகப் பணியாற்றி மணிவிழாக் காணும் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் சாதனைகளைப் பதிக்கும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். திரு.ஸ்ரீகாந்தன் அவர்கள் தனது 23ஆவது வயதில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியை ஆரம்பித்தார். குறுகிய காலத்திலேயே அவர் ஆசிரியர் கலாசாலையில் இணைந்து வணிகத்துறையிலே பயிற்சி பெற்றார். பயிற்சியை நிறைவு செய்தபின் மீண்டும் பல பாடசாலைகளிலே அவர் வர்த்தக ஆசிரியராகப் பணி செய்தார். வரவு, செலவுத் தத்துவத்தை வழுவின்றி அவர் பாடசாலைகளில் போதித்துச் சாதனை செய்தார்.

01-06-1991இல் அவர் இலங்கை அதிபர் சேவையில் இணைந்தார். இதனூடு அவர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும், தொடர்ந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் அதிபராகப் பணி செய்தார். சேவையையே தனது இலட்சியமாகக் கொண்ட ஸ்ரீகாந்தன் விக்ரோறியாக் கல்லூரியைப் பல்வேறு துறைகளிலும் எழுச்சிப் பாதையில் இட்டுச் சென்றார். இக்கல்லூரிச் சமூகத்தினர் நன்றி மறவாது அவரது சேவையைச் சிலாகிப்பது போற்றுதற்குரியது. அவரது ஓய்வுக்காலம் சீர்பெற்றுச் சிறக்க வாழ்த்துகிறேன்.

# ஒப்பற்ற செயலுக்கு என் பாராட்டும் வாழ்த்தும்



**கலாபூஷணம், சங்கீதபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை**
பிரதிக் கல்விப்பணிப்பாளர் (ஓய்வுநிலை)
விக்ரோறியன்.
பறாளாய் வீதி, சுழிபுரம்.

இலங்கைத் திருநாட்டின் சிரசென மிளிரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளது சீர்மிகு சுழிபுரம் விக்ரோறியா மகாராணியின் திருப்பெயரைக் கொண்டுள்ளது யா/விக்ரோறியாக் கல்லூரி.

கனகரத்தின முதலியார், செம்மல் செல்லப்பா, சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் சிந்தனையில் தோன்றிய இக் கல்லூரி புகழ்பூத்த அதிபர்கள், ஆசிரியர்களினால் வளம்பெருக்க, பல கற்றோர்களைத் தந்துள்ளது.


இக்கல்லூரியில் ஆரம்பக்கல்வி தொடக்கம் இடைநிலைக் கல்வி வரை கற்று ஆசிரியராகி, அதிபராகி இளைப்பாறிய பெரியார் பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்தன் ஐயா ஆவார். சுழிபுரம் கிராமத்தில் பிரபல அந்தண சிவாச்சாரியார்களான சபாபதிக்குருக்கள் வரதராஜக்குருக்கள் பரம்பரையில் தோன்றியவர் ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள்.

இவர் தான் கடமையாற்றிய சில ஆண்டுகளில் பாடசாலைப் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சபை போன்றவற்றைப் பலமாக இணைத்துப் பல சாதனைகளைப் படைத்துள்ளார். இத்தகைய சாதனையாளருக்கு மணிவிழாச் செய்து கௌரவிப்பது போற்றுதற்குரியது.

சிறுவயது முதல் இக்கல்லூரிச் செயற்பாட்டை நன்கு கற்றதன் மூலமும், கல்வித்துறை ஆலோசகராகக் கடமையாற்றியதாலும் விழா நாயகனை விதந்துரைக்கும் வாய்ப்பினை இம்மலர்க்குழு எனக்கு வழங்கியுள்ளது. இதற்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அதிபரவர்கள் இளைப்பாறிச் சென்றாலும் தனது அறிவு, ஆற்றல், அனுபவங்களோடு கூடிய ஆலோசனைகளை வழங்கி மேன்மைப்படுத்த இறையாசியை வேண்டியமைகின்றேன். அத்தோடு தற்போது சேவையில் உள்ள புதிய அதிபரும் உத்தமர்களை உருவாக்கி உயர்வடைய வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.



# பல்வளமும் பெற்று வாழ்க!



**திரு. ச. கைலாசநாதன்**
விக்ரோறியன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், (முறைசாராக் கல்விப் பிரிவு),
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.


சுழிபுரம் குடியிருப்பிலே பிராமண குலதிலகமாக வந்துதித்தவர் எங்கள் அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வி கற்று ஆசிரியராகக் கடமையாற்றி அதிபர் கதிரையையும் அலங்கரித்தவர். இப் பாடசாலை, மாணவர் கல்வி அடைவு மட்டத்திலும், பௌதிக வள விருத்தியிலும் உயர்ச்சியைக் காட்டியது.

பாடசாலையின் பழைய மாணவனாக (விக்ரோறியன்) இருந்த காரணத்தால், பாடசாலையில் பயின்ற பல பழைய மாணவர்களை பாடசாலை நிகழ்வுகளில் அழைத்து கௌரவித்தமை எல்லோராலும் பாராட்டப்பட்டது. மணிவிழாக் காணும் அதிபர் பல்வளமும் பெற்று நீடூழி வாழ கல்லூரியில் உறையும் சிவகாமி சமேத சிதம்பர நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வளமுடன்



# கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்



**திரு. க.சத்தியபாலன்**
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
மாகாணக் கல்வித்திணைக்களம்,
வடமாகாணம்.

யா/சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியின் முன்னைநாள் அதிபர் மதிப்பிற்குரிய பிரம்மஸ்ரீ வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகிறேன்.

வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் பிரபல்யமிக்க அதிபர்கள் வரிசையில் திரு.வ. ஸ்ரீகாந்தன் அவர்களையும் குறிப்பிட்டுக்கொள்ளமுடியும். இவர் ஒரு அதிபர் என்பதற்கான முழுத் தகுதியையும் கொண்டுள்ளார் என்பதனை இவருடன் பழகிய காலங்களிலிருந்து என்னால் உணரமுடிந்தது. தலைவராக, முகாமையாளராக, வழிகாட்டியாக, அன்பாளராக, பண்பாளராக, பக்குவமுடையவராக இவர் கடமையாற்றிய பாடசாலைகளில் ஆற்றிய பணிகளிலிருந்து நாம் கண்டுகொள்ள முடியும்.

அண்மைக்காலமாக கல்வியில் மாத்திரமல்லாது விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளிலும் யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பெயர் மக்கள் மத்தியில் பிரபல்யமாவதற்கு இவரின் தன்னிகரற்ற ஆற்றல் கொண்ட நிர்வாகமே காரணமாகவிருந்தது என்பதனை இவ்விடத்தில் குறிப்பிட்டுக்கொள்ளமுடியும். இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் மென்பந்து துடுப்பாட்ட அணி தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் மாகாணச் சம்பியனாகவும், 2012ம் ஆண்டு தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்று பாடசாலைக்கும், வட மாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். என்னுடன் பழகிய காலப்பகுதியில் எனது வேலைத்திட்டங்களுக்கு சில சந்தர்ப்பங்களில் ஆலோசனைகளையும் வழங்கி எனது பணிக்காக உதவியுள்ளார்.

எனவே கல்வித்துறையில் தனது பணியைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்று இன்று மணிவிழாக் காணும் நாயகனை வாழ்த்துவதுடன் அவருடைய குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக நீண்டகாலம் வாழ்வதற்கு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.



# ஆளுமை மிக்க அதிபர்



"விக்ரோறியன்"
**திரு. பொ. ரவிச்சந்திரன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் ( நிர்வாகம் ),
வலிகாமம் கல்வி வலயம்.

மதிப்பிற்குரிய என் ஆசான் உயர்திரு. வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் இன்று மணிவிழாக் காண்பது குறித்து வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். சேவைக் காலத்தின் போது சமூக வளர்ச்சிக்குக் காரணமான கல்விச் சேவையை வாஞ்சையுடன் ஏற்று மாணவர்கள் ஏற்றம் பெற நல்லாசிரியராக, நல்ல அதிபராகக் கடமையாற்றியவர். இவர் அனைவரினதும் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய ஒருவராகத் திகழ்ந்தார். இவரது ஆளுமை மிகு செயற்பாடுகள் மாணவர்களினதும் ஆசியர்களினதும் மனங்களில் இன்றுவரை பெருமை மிகு மனிதராக இவரை நிலைநிறுத்தியுள்ளது என்பது யாவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். எமது நல்லாசிரியரது நல்ல அதிபரது சேவையைப் பாராட்டுவதுடன், ஓய்வுக்காலம் சிறப்படைந்து வாழ வாழ்த்துகின்றேன்.



# 60ஆவது ஆண்டு சேவைநலன் பாராட்டு



**திருமதி. நா. ஐங்கரன்**
தவிசாளர்,
வலி மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

எமது பிரதேசத்தில் அமைந்துள்ள பெருமைமிகு பாடசாலைகளில் விக்ரோறியாக் கல்லூரியும் ஒன்றாகும். இவ்வாறான மதிப்புக்கும் புகழுக்குமுரிய பாடசாலையின் அதிபராய் பணிபல செய்து மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளை மிளிர்வடையச் செய்து பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்தவர் அதிபர் ஸ்ரீகாந்தன் என்பதனை மறந்துவிட முடியாது. ஒரு பாடசாலையின் சமூக வகிபங்கு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இன்று இவ் விக்ரோறியாக் கல்லூரியின் சமூக வகிபங்கு என்பது ஓர் உயரிய நிலையை அடைந்துள்ளதைப் பலரும் அறிவர். அந்த வகையில் இவ் வளர்ச்சிப்பாடியில் உயர்த்தும் ஒப்பற்ற செயல் இன்று மணிவிழா பாராட்டுப்பெறும் அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்களுடைய காலப்பகுதியில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடக்கூடிய ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தெற்கு பாடசாலைகளுடன் பல விடயங்களிலும் சவால்களை எதிர்கொள்வதென்பது தவிர்க்கமுடியாத ஓர் விடயமாக அமைந்துவிட்டது. இந்த நிலையில் கூட எமது பாடசாலைகள் ஒப்பளவில் பல வளங்கள் குறைந்து காணப்பட்ட நிலையிலும் சளைத்தவர்கள் நாம் அல்லர் என்பதனை இத்தீவின் வரலாற்றில் பதிவு செய்துள்ளன. இந்த வகையில் விக்ரோறியாக் கல்லூரியும் பல சாதனைகளைப் படைத்து வரலாற்றில் தடம் பதித்துள்ளமைக்கு இப்பாடசலையின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் அதிபர் அவர்களின் பணிக்கு முழுமூச்சுடன் ஆதரவு வழங்கினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ் அதிபருடைய காலப்பகுதியானது இப்பாடசாலையின் பௌதீக வளப்பண்பிலும் கணிசமான அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். இப் பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலருடனும் தொடர்புகொண்டு பௌதீக வளத்தேவை தொடர்பில் உரிய கோரிக்கைகளை முன்வைத்து அதன் வாயிலாக பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அதிபர் மேற்கொண்ட பணிகள் என்றும் மறக்கமுடியாத ஒன்றாகவே அமைந்துள்ளது.

இன்று மணிவிழாக்காணும் இவ் அதிபரின் சேவைகளை அவர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராய் இருந்த காலம் முதலாக நன்கு அறிவேன். எவ்வாறு இப் பாடசாலையில் தனது பணிகளை முன்னெடுத்துச் சென்றாரோ அவ்வாறே சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் தனது பணிகளை

முன்னெடுத்து பலரது பாராட்டையும் கௌரவத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

இதற்கும் மேலாக பல்துறை ஆற்றலையும் கொண்டுள்ள அதிபராக தனது கடமைக்காலத்தில் பணியாற்றிய அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள் சிறந்த தலைமைத்துவம், வழிநடாத்திச் செல்லும் பண்பு, எழுத்தாற்றல், சமூகநோக்கம் கொண்ட சேவை மனப்பான்மை, துணிவுடமை, எதிர்காலம் நோக்கிய கூரிய சிந்தனை, ஆற்றல் போன்ற பல உயர் பண்புகளைக் கொண்டவர் ஆவர்.

மாணவர் சமுதாயத்தின் மேம்பாட்டுக்காக அரும்பணியாற்றிய அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் எமது தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்கு இன்றுபோல் என்றும் பணியாற்ற உளமார வாழ்த்தி சகல சௌபாக்கியங்களையும் பெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# பல்துறைப் புலமையும் ஆற்றலும்



திரு.அ. சோதிநாதன்
பிரதேச செயலர்,
வலி மேற்கு.

வலி மேற்கு பிரதேசத்தில் சங்கானைக் கல்விக் கோட்டத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி சிறப்புப் பெறுகிறது. இப்பாடசாலையில் காலத்துக்குக் காலம் பல அதிபர்கள் சேவையாற்றிச் சென்றுள்ளனர். அவர்கள் வரிசையில் அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களும் குறிப்பிடத்தக்கவர். அவர் 2014-03-10ஆந் திகதி தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவரின் சேவையைப் பாராட்டி வெளியிடுகின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்துறைப் புலமையும் ஆற்றலும் ஆளுமையும் மிக்க திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் சிறந்த தலைமைத்துவத்துடன் கூடிய சமூகப் பொறுப்புடையவர். இதனால் தன்னாலான அர்ப்பணிப்புள்ள சேவையைப் பாடசாலைச் சமூகத்தி னூடாக எமக்களித்தவர். காலத்தின் தேவையறிந்து அவராற்றிய அர்ப்பணிப்பான சேவைகளின் விளைவைப் பாடசாலைச் சமூகத்தில் அவதானிக்க முடிகிறது. மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்பதுடன், ஏனைய பல்வகைச் செயற்பாடுகளிலும் அவர்களை ஈடுபடுத்தித் திறமைகளை வெளிக்கொண்டு வந்தவர். மாணவர்களை அன்பாகவும், கண்டிப்பாகவும் அணுகும் பக்குவம் மிக்க அவர், பிள்ளைகள் பண்புசார் அறிவாளிகளாக வளரவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவில்லாதார்" என்ற குறளை மனதில் கொண்ட இவர் சமூக எதிர்ப்புணர்வற்ற ஆரோக்கியமான மனிதர்களை உருவாக்குவதில் பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டவர்.

மணிவிழா நாயகன் பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றாலும் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற மாட்டார் என நான் கருதுகிறேன். ஒருவர் வாழும் போதே அவரின் திறமைகளைப் பாராட்ட வேண்டும். அவ்வகையில் உயர்ந்த ஆற்றலும் மனித நேயமும் மிக்க பண்பாளனுக்கு மணிவிழா மலர் வெளியிடப்படுவதையிட்டு மிகுந்த மனநிறைவடைகின்றேன். அவரின் சேவைகள் எமது சமூகத்திற்கு இன்னும் நீண்ட காலம் தொடரவேண்டும். இதற்கு இறைவனின் திருவருள் நிறைவாகக் கிடைக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# வரலாற்றுப் பதிவுகள்

(கல்லூரி வளர்ச்சி, பௌதிக வளர்ச்சி, அதற்கு உதவி புரிந்தோர்)



**திருமதி. இந்திரா தவநாயகம்**
பகுதித்தலைவர்,
யா/விக்ரோறியாக்கல்லூரி.
பழைய மாணவி,
மணிவிழா குழுச் செயலாளர்.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் சங்கானைக் கோட்டத்தில் இகுறு பாடசாலையாக 138 ஆண்டுகள் வரலாற்றுப் பெருமைமிக்க கல்லூரியாக விக்ரோறியாக் கல்லூரி விளங்குகின்றது.

விக்ரோறியாக் கல்லூரியில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க அதிபர்கள் சேவையாற்றிச் சென்றுள்ளனர். அந்த வகையில் எமது முன்னாள் அதிபர் பிரம்மஸ்ரீ. வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள் இக்கல்லூரியில் கல்வி கற்று ஆசிரியராகப் பணிபுரிந்து, அதிபராகக் கடமையேற்று அறுபதாவது அகவை கண்டு மணிவிழா நாயகனாக மிளிரும் இந்நாள் அவரது வாழ்விலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாளாகும்.

அதிபர் அவர்கள் இக்கல்லூரியில் கற்பிக்கும் காலத்தில் சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றிக் கணக்கியல் பாடத்தைச் சிறந்த முறையில் கற்பித்து மாணவர் மனதில் இடம்பிடித்தவர். யான் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் காலத்தில் வர்த்தக பாடத்தை ஒரு பாடமாகக் கற்றேன். அப்பாடத்திற்கு கணக்கியலும் ஒரு பிரிவாக அமைந்திருந்தது. அவ்வேளையில் அதிபர் அவர்களிடம் கணக்கியல் பாடத்தைக் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பாடத்தைச் சிறந்த முறையில் நுட்பத்துடன் கற்பித்தார். இன்றும் எம் அதிபரிடம் கற்ற உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்கள் அவரது கற்பித்தலின் திறனை மெச்சுகின்றனர்.

அதிபர் அவர்கள் இக்கல்லூரியில் இரு தடவைகள் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். 14-09-2010 அன்று இக்கல்லூரிக்கு அதிபராக வருகை தந்த அவர் 3 1/2 வருடங்கள் சேவையாற்றிய போதும், 30 வருடங்கள் செய்யவேண்டிய வேலையைச் செய்து முடித்துள்ளார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் வாக்கிற்கிணங்கத் தனது பணியைச் செவ்வனே ஆற்றியவர். இவரின் அரிய முயற்சியினால் இக்கல்லூரியின் நாமம் தேசிய மட்டம்வரை பேசப்பட்டு வருகின்றது. கல்லூரிக்காக, மாணவர்களுக்காக எதைச் செய்யவேண்டுமோ, அதனை உரிய நேரத்தில் செய்யவேண்டும் என்ற ஆர்வத்துடன் இரவு பகல் பாராது முற்று முழுதாகத் தன்னை அர்ப்பணித்ததுடன், மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாபெரும் உந்துசக்தியாகத் திகழ்ந்த அதிபர் அவர்களது பணியை இக்கல்லூரிச் சமூகம் என்றுமே மறக்கமுடியாது. தனது ஆற்றலாலும்

திறமையாலும் கல்லூரி வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டு விளங்கியமை போற்றுதற்குரியதாகும்.

தன்னலமே கண்ணாயிருக்கும் இந்நாளில் அதிபர் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையின் பேறாக செயற்றிறன் மிக்க அதிபர் என எல்லோராலும் பேசப்படுகின்றார். ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகளுடன் ஒருங்கிணைந்து விக்ரோறியா அன்னையை மகிழ்விக்கின்ற ஆற்றல் கொண்ட அதிபர் அவர்கள் எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் திறன் கொண்டவர். அநேக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழிசமைத்துக் கொடுத்துள்ளார்.

கல்லூரியின் அழகு, கட்டடங்களின் தூய்மை பேணல், பௌதிக வளங்களின் விருத்தி, மாணவர்களின் ஒழுக்கம், மாணவர்களின் வெற்றிகள், கல்லூரியின் பரிசளிப்பு விழா, இல்ல மெய்வன்மைப்போட்டி, இவற்றைப் புகழ்ந்து பேசாதோர் எவருமில்லை.இவ்வாறான புகழாரங்கள் எம் கல்லூரி அன்னைக்குக் கிடைப்பதற்கு பிரதான மைல்கல்லாக அமைந்தவர் எம் அதிபர் அவர்களே. கல்லூரியின் பிரதான நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்களை (Victorians) அழைப்பதன் மூலம் எம் மாணவர்களுக்குத் தாமும் இவ்வாறான ஒரு பெரிய நிலைக்கு வர வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கும் என்ற நோக்குடன் செயற்பட்டார்.

சிறந்த தலைமைத்துவம், நேர முகாமைத்துவம், செயற்றிட்டங்களை முன்திட்டமிட்டு உரிய காலப்பகுதியில் நிறைவேற்றல், பொறுப்புணர்வு, விடாமுயற்சி போன்ற இன்னோரன்ன பண்புகளைக் கொண்ட அதிபர் அவர்கள் ஆசிரியர்களாகிய நாம் எம் பணியை சிறப்பாக ஆற்றுவதற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். மாணவர்களதும், கல்லூரியினதும் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிய அதிபர் அவர்கள் ஒரு ஆசிரியர் தன்னை எவ்வாறு தான் மேற்கொண்ட பணிக்கு அர்ப்பணித்து கடமையாற்ற வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிய அர்ப்பணிப்பாளர். இவ்விசேட திறமையுள்ள அதிபரை வலிகாமம் கல்வி வலயம் இனங்கண்டு 2012ஆம் ஆண்டு "விசேட திறனுள்ள அதிபர் சான்று" (Specially Skilled Principal) வழங்கி கௌரவித்துள்ளமை எம் கல்லூரி அன்னைக்குக் கிடைத்த நற்பேறாகும்.

135ஆவது ஆண்டு நிறைவு மலரினை வெளியிட்டு மீண்டும் வரலாற்றினை மீட்டுக்கொண்ட பெருமையும் இவரையே சாரும். அம்மலர் எமது முன்னாள் அதிபர் திருமதி. அ.வேலுப்பிள்ளை அவர்களின் சிறப்பான சேவையையும் வெளிப்படுத்தி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 135ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் T.Shirt மாணவர், ஆசிரியர் பயன்பாட்டுக்கு விடப்பட்டது. எமது கல்லூரியின் வளர்ச்சிப்படிகள் அனைத்திலும் தனது உழைப்பைப் பதித்துள்ளார். லண்டன், கனடா, அவுஸ்திரேலியா பழைய மாணவர்கள், பெற்றோர்கள், எம்மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எல்லோர் மனதிலும் அழியா இடம்பிடித்துள்ளார்.

400 மீற்றர் விளையாட்டு மைதானத் திறப்புவிழா அன்று குறித்த இந்த 400 மீற்றர் ஓடு பாதையில் ஓடி ஓட்டத்தை நிறைவு செய்து பரிசிலைப் பெற்ற நிகழ்வு அவரது ஓய்வு வயது அறுபது அல்ல என்பதை எமக்கு எடுத்துக்காட்டியது.

அதிபர் அவர்கள் தம் சேவையைக் கல்லூரிக்குச் சிறப்பாக ஆற்றுவதற்குத் துணையாக அமைந்த துணைவியாரையும் மகிழ்வோடு வரவேற்கும் பண்பு கொண்ட பிள்ளைச் செல்வங்களையும் நாம் என்றுமே மறந்துவிட முடியாது.

வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் வரை பங்குபற்றிய போட்டிகளின்போது தானும் அப்போட்டிகள் நடைபெறும் இடங்களுக்குச் சமூகம் தந்து மாணவர்களை ஊக்குவிப்பதுடன், கல்லூரி திரும்பும் வேளையில் அவரது இல்லத்திற்கு கூட்டிச்சென்று எந்நேரமாயிருந்தாலும் சரி அதாவது இரவு நேரமாயிருந்தாலும் கூட தேநீர், சிற்றுண்டி தந்து உபசரிப்பது அவரது குடும்பம் ஒரு மகிழ்வான குடும்பம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. மகிழ்விப்போர் மகிழ்விக்கப்படுவர். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற முதுமொழிக்கேற்ப அதிபர் அவர்களது இரு பிள்ளைகள் பட்டதாரி ஆசிரியர்களாகவும், இரு பிள்ளைகள் வங்கி நிர்வாகத்திலும் கடமை யாற்றுகின்றனர். இரு பிள்ளைகள் பேராதனைப் பல்கலைக்கழகததில் (புதல்வன் பொறியியல் பீடத்தில் இலத்திரனியல் துறையில் மூன்றாம் வருட மாணவனாகவும், புதல்வி கலைப்பீடத்தில் பொருளியல் துறையில் 2ஆம் வருட மாணவியாகவும்) கல்வி பயில்கின்றனர்.

ஓய்வுநிலை என்பது வயது, கணிப்பு, நியமங்களின் வழியானது. அதிபரின் சேவையை நாமும் எம் கல்லூரியும் இழப்பது மனதிற்கு மகிழ்ச்சியைத் தரவில்லையாயினும், காலத்தின் நியதியை எவராலும் மாற்றமுடியாது என்பதை ஜீரணித்துத்தான் ஆக வேண்டும். அதிபர் அவர்கள் ஓய்வுபெற்றபின்பும் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மாலான பணியை நல்குவார் என்பதில் ஐயமில்லை. அவரது கால வரலாற்றுப்பதிவுகள்.....

**கல்வி வளர்ச்சி**

க.பொ.த. (சா/த)
2010 33% சித்தி
2011 42% சித்தி
2012 53% சித்தி
2013 53% சித்தி

**சிறந்த பெறுபேறு**

2010 8AB இருவர்
2011 8AB ஒருவர், 8AC ஒருவர்
2012 9A இருவர், 8AB ஒருவர், 8AC ஒருவர்
2013 9A ஒருவர் (ஆங்கிலமொழி மூலம்), 8AB ஒருவர், 8 AC ஒருவர், 8A S இருவர்.

1995ஆம் ஆண்டுக்குப் பின் 2012ஆம் ஆண்டில் 9A சித்தி (இருவர்) பெறப்பட்டது.

**க.பொ.த. (உயர்தரம்)**

*2010 66% சித்தி*
*2011 51% சித்தி*
*2012 60% சித்தி*
*2013 75% சித்தி*

**சிறந்த பெறுபேறு**

*2010* விஞ்ஞானம் - 2BC (இருவர்)
*2010* கணிதம் - 2CS
*2010* கலை 3A
*2010* வணிகம் - 2AB இருவர்

| | | |
|---|---|---|
| *2011* | விஞ்ஞானம் | -2BC (இருவர்) |
| | கணிதம் | -2AB |
| | கலை | -A2B |
| | வணிகம் | -2AB |

| | | |
|---|---|---|
| *2012 -* | விஞ்ஞானம் | -2BC (இருவர்) |
| | கணிதம் | -2AB |
| | கலை | -B2C |
| | வணிகம் | -3A (நால்வர்)<br>2AB (மூவர்) |

| | | |
|---|---|---|
| *2013 -* | விஞ்ஞானம் | -ABC |
| | கணிதம் | -2AB |
| | கலை | -A2b |
| | வணிகம் | -3B |

**ஏனைய துறைகள்**

*2010*

- தமிழ்த்துறை தனிநடனம் - தேசியமட்டம் - 1ஆம் இடம்.
- தமிழ்த்துறை விசேடகூத்து மாகாணமட்டம் - 1ஆம் இடம்.
- English day competition Dictation Provincial level 2nd place.
- மெய்வன்மைப் போட்டிகள்
  மாகாணமட்டம் - 7 முதலாமிடம்
  3 இரண்டாமிடம்
  1 மூன்றாமிடம்
- பெருவிளையாட்டுக்கள்
  மாகாணமட்டம் - பெண்கள் துடுப்பாட்டம் - 1ஆம் இடம்
  எல்லை 1ஆம் இடம்
  ஆண்கள் 15 வயது கரப்பந்து 3ஆம் இடம்

*2012*

- தமிழ்த்துறை நாட்டியநாடகம் - மாகாணமட்டம் - 2ஆம் இடம்
  விசேட கூத்து மாகாணமட்டம் - 1ஆம் இடம்

- Englsih Day Competition

  Copy writing Provincial 3rd place

  Dictation Provincial 2nd place

- மெய்வன்மைப் போட்டிகள்

  மாகாணமட்டம்- 3 முதலாமிடம்

  4 இரண்டாமிடம்

  4 மூன்றாமிடம்

- பெருவிளையாட்டுக்கள்

  மாகாணமட்டம் - பெண்கள் துடுப்பாட்டம் - 1ஆம் இடம்

  எல்லே - 1ஆம் இடம்

  ஆண்கள் - கரப்பந்து 15 வயது 2ஆம் இடம்

பெண்கள் துடுப்பாட்ட அணி தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்று வரலாற்றுச் சாதனை.

Hand Ball 15 வயது தேசியமட்டம் - 1ஆம் இடம்.

சமஸ்தலங்கா போட்டிகளில் தேசியமட்டம் - தாளநடனம் - 1ஆம் இடம்

ஜதீஸ்வரம் - தனிநடனம் - 2ஆம் இடம்

*2013*

- தமிழ்த்துறை கட்டுரை, இலக்கியம் நயத்தல் - பிரிவு 5 தேசியமட்டம் - 2ஆம் இடம்.

நாட்டிய நாடகம் - மாகாணமட்டம் - 2ஆம் இடம்.

- மெய்வன்மைப் போட்டிகள்

  மாகாணமட்டம் - 7 முதலாமிடம்

  2 இரண்டாமிடம்

  1 மூன்றாமிடம்

( 5 புதிய சாதனைகள் மாகாணமட்டத்தில் நிலைநாட்டப்பட்டன)

- வரலாற்றில் முதல் தடவையாக மெய்வன்மைப் போட்டிகளில் ஈட்டி எறிதலில் தேசியமட்டத்தில் 2ஆம் இடம் பெறப்பட்டது.

- பெரு விளையாட்டுக்கள்

  மாகாணமட்டம் - பெண்கள் - துடுப்பாட்டம் - 1ஆம் இடம்

  எல்லை 2ஆம் இடம்

  ஆண்கள் - கரப்பந்து 17வயது 3ஆம் இடம்

  பெண்கள் - வலைப்பந்து 19வயது 3ஆம் இடம்.

- Royal Society of Chemistry நிறுவனம் நடாத்திய English Medium கட்டுரைப்போட்டியில் தேசிய ரீதியில் 2ஆம் இடம் பெறப்பட்டது.

- கணிதநாடகப் போட்டி மாகாணமட்டம் - 3ஆம் இடம்.

**பௌதிக வளர்ச்சியும், உதவி புரிந்தோரும்...**

1. சகல ஆண் மாணவர்களுக்கும் கழுத்துப்பட்டி அறிமுகம்.
2. கல்லூரியின் தனித்துவமான காலுறைகள்.
3. சிவபாதசுந்தரனார் கேட்போர்கூடம் - கனடா பழைய மாணவர் சங்கம்.
4. ஆசிரியர்கள் வாகனத்தரிப்பிடம் - திரு.அ.நித்தியானந்த மனுநீதி, அவுஸ்ரேலியா.
5. அலுவலக ஒழுங்கமைப்பு -Dr. ஆ. காந்தநேசன்.
6. உள்ளக வீதிகளின் திருத்தம் - திரு.இ.விஜயநாதன், கனடா.
7. பாலர் மண்டபம், நிக்கொட் கட்டட சீமெந்து வீதி - திரு.சி. ரவிசங்கர், U.K.
8. புல்லுவெட்டும் இயந்திரம் - திரு.மு.சுதர்சன், கனடா.
9. குளிர் சாதனப்பெட்டி, Water filter - திரு. N.T.V. இராசலிங்கம் - அவுஸ்திரேலியா.
10. சிவபாதசுந்தரனார் கேட்போர் கூட கருத்தரங்கு மேசைகள் Plastic-08 - திரு.கு.வினோதன் -U.K.
11. தபேலா இசைக்கருவி - திரு.பா.மோகனகுமார் -U.K.
12. சிரேஷ்ட மாணவ முதல்வர்களுக்கான மேலங்கி - செல்வன் ஸ்ரீ. சுபாங்கன்.
13. தொலைநகல் (fax) இயந்திரம் - திரு.கி.சொற்பனலிங்கம், கனடா.
14. விளையாட்டு உபகரணங்கள் - திரு. ஈ. சரவணபவன், பாராளுமன்ற உறுப்பினர்.
15. உதைபந்தாட்ட வீரர்களுக்கான கோலவுடை - 2000ஆம் ஆண்டு விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்.
16. எல்லை, கரப்பந்தாட்ட வீரர்களுக்கான கோலவுடை - திரு.தி.சுகிர்தன்.
17. பாடசாலை மணி - செல்வி. பா. சந்திரவதனி.
18. மேலைத்தேய இசைக்கருவிகள் - பழைய மாணவர் சங்கம்.
19. உயரம் பாய்தல் உபகரணங்கள் - வடமாகாண கல்வித் திணைக்களம்.
20. கல்லூரிப் பெயர் வளைவு - திரு.சி. ஞானச்சந்திரமூர்த்தி ஆசிரியர்.
21. மாணவர்களுக்கான காலணி, துவிச்சக்கரவண்டிகள், கற்றல் உபகரணங்கள் - திரு.க. தவத்துரை குடும்பம், திரு.N.T.V. இராசலிங்கம், World Vision, Safe the Children.
22. மெய்வன்மைப் போட்டிக்கான சுற்றுக்கிண்ணங்கள் - Dr.செ.கண்ணதாசன், திருமதி. லலிதா தர்மதேவன், திருமதி. இந்திரா தவநாயகம், திருமதி. ஞானாம்பிகை மகேஸ்வரன், திரு.சி. நந்தகுமார்.
23. மெய்வன்மைப் போட்டி, வெற்றிக்கிண்ணங்கள் - ஆசிரியர் நலன்புரிக் கழகம், திரு. றொபேட் தவச்செல்வம், திருமதி. பிருந்தா இந்திரகுமார், Citizen Development Bank, செல்வி. சு. துஷ்யந்தினி.
24. மரதன் ஓட்ட வெற்றியாளர்களுக்கான பணப்பரிசில் (வருடாவருடம்), விளையாட்டு பயிற்சியாளர்களுக்கான ஊட்டச்சத்துணவு - திரு.இ. ஸ்ரீரங்கன்.
25. அலுமாரிகள் - 6 - திரு.பா.பிரபாகரன், UK.
26. நூலக அலுமாரிகள் - 6 - திருமதி. தேன்மொழி சாம்பசிவம் - UK.
27. அலுவலக கட்டட, கேட்போர் கூட கண்ணாடி யன்னல்கள் -திரு.வே.ஆனந்தராசா, திரு.சி.கண்ணதாசன், திரு.த.முகுந்தன், பிரம்மஸ்ரீ. பாலகுருசாமிசர்மா புதல்வர்கள்
28. பெரிய குத்துவிளக்கு - திரு.வி. சத்தியநாதன்

29. நூலக அலுமாரிகள் - 3 - மக்கள் வங்கி, சங்கானை.
30. Photo Copier புகைப்படப்பிரதி இயந்திரம் - திருமதி. செ.சிவஞானம், அமெரிக்கா)
31. உயர்நிலை சித்திபெற்ற க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வருடாவருடம் மடிக்கணனிகள் - திரு.வி.உமாபதி, அவுஸ்ரேலியா மெல்போன் OSA, திருமதி. ரோகினி சிவகுமாரன்
32. Photo copier வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், திரு.க.குசலகுமாரன் முயற்சியால்.
33. ஆங்கில வள அறைக்கான உபகரணங்கள் 3,00,000/- பெறுமதியானவை - வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்.
34. ஆசிரியர் மலசலகூடம் நவீன மயப்படுத்தியமை, பெரிய உலகப்படம் புவியியல் அறையில் காட்சிப்படுத்தப்பட்டது - திரு.சி. ரவிசங்கர் - UK.
35. பிரதான மண்டபத்தில் அதிபர்களின் படங்கள் ஒழுங்குபடுத்தியமை - உயர்தர மாணவமன்றம் - 2011.
36. நூலகத்திற்கான ஒரு தொகுதி நூல்கள் - World Vision, Asia Foundation, திருமதி அருள்நிதி தயாபரன், திரு.சி. செந்தில்குமாரன் UK.
37. விரிவுரை மண்டப கதிரைகள் - 15 - திரு.அ. விநாயகமூர்த்தி பாராளுமன்ற உறுப்பினர்.
38. வலைப்பந்தாட்ட அணிக்கான கோலவுடை - திருமதி. பானுப்பிரியா பஜிந்தன்
39. Casio Keyboard - செல்வி. தட்சாயினி ரகுபதி.
40. Asaipillai Teacher Memorial ICT lab - அவுஸ்லேியா மெல்போன் - OSA 12 கணனிகள் Printer, 2 AC, அலுமாரி உட்பட.
41. றிஜ்வே பிரதான மண்டப மின்பிறப்பாக்கி - திருமதி. தேன்மொழி சாம்பசிவம் - UK.
42. தேநீர்ச்சாலைக் கட்டடம் - ஸ்தாபகர் வழித்தோன்றல்கள் செல்லப்பா குடும்பம், Dr. தா. சிவஞானம் UK, திரு.சி. ரவிசங்கர் UK, திரு. தா. கமலநாதன் UK, UK OSA.
43. றிஜ்வே பிரதான மண்டபம் - தளவோடு பதிப்பு, மின்னிணைப்பு, மேடை புனரமைப்பு - UK OSA.
44. சிவபாதசுந்தரனார் கேட்போர் கூடம் - தளவிரிப்பு - திரு.சி. கலைச்செல்வன் - கனடா.
45. "இசுறு" திட்டத்தின்கீழ்
    - அழகியல் கூட கட்டடமும் அதனுடன் சேர்ந்த மாடி மண்டபமும் (125 x 30)
    - செல்லப்பா கட்டடம், விவசாயகூடம், கட்புல செவிப்புல கூடம், வகுப்பறைகள் - 4)
    - பிரதான நுழைவாசல், பாதுகாவலாளி அறை
    - ஆசிரியர், ஆண்கள், பெண்கள், மாற்று ஆற்றலுள்ளோர் மலசலகூடம்.
    - உயர்தர, இடைநிலை விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள்
    - 18 கணனிகள், கணனிக்கூட உபகரணங்கள்
    - பெண்கள் மலசலகூட புனரமைப்பு
    - மகிந்தோதய ஆய்வுகூடத்திற்கான கட்டட ஆரம்பவேலைகள்
46. றிஜ்வே மண்டப ஒலியமைப்பு Dr. ஞா.காந்திஜி.
47. அமரர் விசு. க.விமலன் ஞாபகார்த்தமாக இலங்கை வங்கி வைப்பு வருடாவருடம் 5 மாணவர்கள்.
48. தேவையான உபகரணங்களுடன் கணித வள நிலையம் - வடமாகாண கல்வித்திணைக்களம்.


49. தோற்பந்து துடுப்பாட்டப் பயிற்சித்தளம் (Net Court) - இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்க அனுசரணையில்.


50. 400 மீற்றர் ஓடுபாதை கொண்ட மைதானம் - உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர் சங்கங்கள்.

மணிவிழா வெளியீட்டு மலரில் எம் அதிபர் பற்றியும், அவரது சேவைக்காலத்தில் ஆற்றிய கல்வி வளர்ச்சி, ஏனைய துறை வளர்ச்சி, பௌதிக வளர்ச்சியும், அதற்கு உதவி புரிந்தோர் பற்றியும் எழுதக்கிடைத்த சந்தர்ப்பத்திற்கு ஆண்டவனுக்கு நன்றிகூறி அதிபரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் நலமாகவும் அமையவும் அவரது குடும்பம் சந்தோசமாக வாழவும் ஆண்டவனைப் பிரார்த்தித்து "நீதியையும் தயையையும் பின்பற்றுகின்றவன் ஜீவனையும் நீதியையும் கண்டடைவான்" என்ற வேதாகம வாக்கியத்துடன் நிறைவு செய்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.







# உயர்வுக்கு வழிகாட்டியவர்



**திரு.சி. கந்தசாமி**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.

நல்லாசானாகவும், நல்லதிபராகவும் இருந்து நற்பணி புரிந்து ஓய்வுபெற்ற திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இவர் வர்த்தகத்துறை சார்ந்த மாணவர்களுக்கு வர்த்தகப் பாடத்தைக் கற்பிப்பதில் வல்லவராகவும், நல்லவராகவும் விளங்கினார். பாடத்தினைக் கற்பிப்பது மட்டுமன்றி மாணவர்களது உயர்வுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். பல மாணவர்கள் இவரின் வழிகாட்டலினால் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றனர்.

இவரது அதிபர் சேவையை புகழ் பூத்த யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும், யா/விக்ரோறியாக் கல்லூரியிலும் காணமுடியும். நான் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் இவர் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவர். அப்போது கல்லூரியின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி சண்டிலிப்பாய் கோட்டத்தின் வளர்ச்சிக்கும் பல வழிகளில் உதவி புரிந்தவர். அக் காலத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பல துறைகளிலும் வளர்ச்சியடைய வழி காட்டியவராவார்.

யா/சண்டிலிப்பாய் இந்துவில் பெற்ற அனுபவத்தினைக் கொண்டு யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைப் பல வழிகளிலும் உயர்நிலை பெற உழைத்தவர். இவரது காலத்தில் யா/விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டுத் துறையில் உயர்நிலை பெற்று தேசியமட்டத்தில் சாதனை படைக்க வழிசமைத்தவராவார்.

இவர் தனது சேவைக்காலத்தில் கடமை நேரத்திற்கு மேலாக முழு நேரச் சேவையாளனாகப் பணி புரிந்தவர். தனிப்பட இவரிடத்தில் பல நற்குணங்கள் உள்ளன. இதனால் இவருக்கு எல்லோரிடத்திலும் நல்ல மதிப்புண்டு. இவ்வாறான உயர்ந்த பண்பாளனது ஓய்வுக்காலம் சிறக்க இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

# நற்பண்பாளனே! நலமே வாழ்க!



**செல்வி. ஏ.எஸ். மரியாம்பிள்ளை**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சங்கானை.

அகவை அறுபதில் அகம் நிறைந்து வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். யா/விக்ரோறியாக் கல்லூரி சங்கானைக் கோட்டத்திற்கும் வலிகாமம் வலயத்திற்கும் கல்விப் பெறுபேறுகள் மூலமும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் மூலமும் பெருமை தேடித்தருகின்ற ஒரு பாடசாலை. இந்நிலைக்கு உருவாக்கியதில் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் அர்ப்பணிப்பு அளப்பரியது. இவர் மாணவர்களைக் கல்வியில் மட்டுமல்லாது ஒழுக்கத்திலும் உயர்த்துவதில் தலைசிறந்தவர். சமூகத்தின் பங்களிப்பைத் தாராளமாகப் பெற்று பாடசாலையை உயிர்த்துடிப்புடன் வளர்த்த செயல்வீரன். தனது ஊட்டற் பாடசாலைகளையும் தன் பாடசாலையாகக் கருதி அவற்றுக்கும் வளங்களைத் தேடிக்கொடுக்க மனமுவந்து பங்காற்றியவர்.

கோட்ட அதிபர் சங்கத்தின் தலைவராகவும் ஆங்கிலமொழிப் போட்டிக்குழுவின் செயலாளராகவும் பொறுப்பேற்றுப் பணிசெய்து அதிபர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் திகழ்ந்து ஏனைய அதிபர்கள் பார்த்துப் பின்பற்றக்கூடிய வகையில் சிறந்த மனிதப் பண்புகளைக் கொண்ட நல்ல மனிதன். என்னுடைய கோட்டச் செயற்பாடுகளை நான் செவ்வனே ஆற்ற எனக்கு நலல ஆலோசகராகத் திகழ்ந்த ஒரு மூத்த அதிபர். இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# கோட்பாடுகளைச் செயற்பாடுகளாக்கியவர்



**திரு. சு. கிருஷ்ணகுமார்**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி.

பிரம்மஸ்ரீ. வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்களது அகவை அறுபதின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் பெருமையடைகின்றேன். இவ்வுலகில் மானிடப் பிறவியாக அவதரிப்பது அரிது. அதிலும் அறுபதை எய்துவது என்பதும் சகல துறைகளிலும் மற்றையவர்களுக்குப் பயனுள்ள வகையில் மேலோங்கிய செயற்கரிய செயற்பாடுகளை ஆற்றுவது என்பதும் மிகவும் அரிது. இவ்வகையில் இவ்வாறான அம்சங்களை ஒருங்கே கொண்டவர் அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன் என்றால் மிகையாகாது.

கோட்பாடுகளைச் செயற்பாடுகளாக்கி வினைத்திறனும், விளைதிறனும் கொண்ட பெறுபேறுகளைத் தான் பதவி வகித்த கல்லூரிகளின் வளர்ச்சிக்குப் பெற்றுக்கொடுத்த பல்பரிமாண அனுபவம் வாய்ந்த சாதனையாளர். எக்காரியத்தையும் தனித்து நின்று சிறப்புறச் செயற்படுத்தும் மனவலிமையும் முன்மாதிரியாகப் பல செயற்பாடுகளைச் சீர்தூக்கி கல்லூரிச் சமூகத்தினரை அக்கல்லூரிகளின் வளர்ச்சியில் பங்காளராக்கிய பெருமைக்குரியவர்.

இவரது வெளிப்படையான பேச்சு, சகலரது இன்பதுன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் மனிதாபிமானம், கல்விக் கொள்கைகள், உளவியற் கொள்கைகளை நடைமுறையில் பரீட்சித்துப் பார்த்து மாணவர், ஆசிரியர், பெற்றோர் எனப் பலரையும் தம் வசம் ஈர்த்த பண்பாளர். இவ்வாறான ஒருவருக்கு மணிவிழா எடுத்துப் பெருமைப்படுத்தி ஒரு மலரையும் வெளியிட்டு அவரது தன்னிகரில்லாச் சேவைக்குப் பாரிய உயர்வான முக்கியத்துவம் அளித்திருப்பது எம்எல்லோரையும்பரவசப்படுத்தியுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராக அரும்பணியாற்றிய காலப் பகுதியில் கல்விக்கும் இணைப்பாடவிதானத்துக்கும் சம வாய்ப்பளித்து எதிர்கால உலகில் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய சிறந்த மாணவர் பரம்பரையை உருவாக்கலாம் என்ற தொலைநோக்கைக் கல்லூரிக்கு அளித்துச் சென்றுள்ளார். அவரது அலுவலகத்தில் அவரது ஒழுங்கமைப்பு தொடக்கம் நிர்வாக அமைப்பு வரையான அவரது செயற்பாடுகள் பலரையும் ஈர்த்துள்ளதனை இக்கல்லூரியின் ஆசிரியர்கள் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான இவரது செயற்திறன்கள் இக்கல்லூரியினைப் பொறுப்பேற்கின்றவர்களுக்கு ஒரு முன் அனுபவமாக அமையும்.

எனவே மணிவிழா நாயகரை அவரது குடும்பத்தவரோடு சகல நலன்களும் பெற்று வாழ வாழ்த்துவதோடு, அவரது சேவையைப் பதிவு செய்து மலரினை வெளியிடும் மணிவிழா குழுவினரின் நல்லெண்ணத்தையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

# காலத்தினால் செய்த பெருந்தொண்டு



**சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கன்,**
முன்னாள் துணைவேந்தர்,
தலைவர், சமூகவியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஒரு சமூகத்தின் அழியாப்பெருஞ் சொத்தாக கல்வி விளங்குகின்றது. அதனைக் காத்தும் வளர்த்தும் நிற்கின்ற கல்வியாளர்கள் போற்றுதற்குரியவர்கள்.

இந்த வகையில் எங்கள் புலத்து வளமான கல்விப் பாரம்பரியம் ஆழவேர் விடவும், செழுமை பெறவும் உழைத்த அதிபர் பரம்பரையினர் வரிசையில் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

நகர்ப்புற பாடசாலைகளின் கவர்ச்சியிடை, கவனம் பெறாது நலிந்த கிராமிய பாடசாலைகளின் வளங்களைப் பெருக்கியும், கல்வித்தரத்தினை மேம்படுத்தியும அவராற்றிய பணி காலத்தினால் செய்த பெருந்தொண்டாக பெருமை பெறும்.

தெளிந்த சிந்தை, அனைவரிடத்தும் அன்பு பூணும் மனச்செம்மை, அயரா உழைப்பு என்பன அவர் வாழ்வின் வெற்றியின் அடிப்படை என்பேன்.

பணியில் ஓய்வு என்பது வயதினால் வருவது; எனினும் அவரது பெறுமதியான பணிகளுக்கான தேவை சமூகத்தில் நீளவே உள்ளது.

அவரது எதிர்காலப் பணிகளினால் சமுதாயம் மேம்படவும், சமூகப்பயனான அவரது வாழ்வினைக் கௌரவிக்கும் மணிவிழா சிறப்பு அமையவும், அவர் குடும்ப வாழ்வில் நல்லனவெல்லாம் வசமாகவும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.



# ஆளுமை கொண்ட அதிபர்



**பேராசிரியர் க.தேவராஜா**
தலைவர்,
வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராக இருந்து மணிவிழாக்காணும் என் அன்புக்குப் பாத்திரமான உயர்திரு.வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும் உயர்திரு. ஸ்ரீகாந்தன் அவர்கள் தன்னடக்கமும், மனிதநேயமும், அர்ப்பணிப்பும் கொண்ட அதிபர் என்பதில் ஐயமில்லை. ஆசிரியத் தொழிலை மிகவும் நேசித்த ஸ்ரீகாந்தன் அவர்கள் கற்பித்தல் மூலம் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொண்டவர். அது மட்டுமன்றித் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட எந்தவொரு கருமத்தையும் நேர்த்தியாகவும், மகிழ்ச்சியுடனும் நிறைவேற்றும் சுபாவம் கொண்டவர். இதன் காரணமாகவே மாணவர்களாலும், ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும் அவர் விரும்பப்பட்டது மட்டுமன்றி, கல்வித் திணைக்கள அதிகாரிகளாலும் மதிக்கப்பட்டவராகக் காணப்படுகின்றார்.

உயர்திரு. ஸ்ரீகாந்தன் அவர்கள் என்னிடம் கல்விகற்ற மாணவன் என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவனாக வணிகக் கற்கையைக் கற்றார். பட்டப்படிப்பில் அவர் பாடத்தை விளங்கிக் கொள்வதில் எத்தகைய நாட்டத்தைக் காட்டினாரோ அதேபோல் அப்பாடத்தைக் கற்பிப்பதிலும் ஆளுமைமிக்க ஆசிரியராகத் திகழ்ந்தார். அவர் பாடசாலையில் மட்டுமல்லாது தனியார் கல்வி நிலையங்களிலும் கல்வி கற்பித்த காரணத்தால் பெரும் எண்ணிக்கையான மாணவர்களுக்குக் கற்பிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். கணக்கியலைக் கற்பிப்பதில் தனக்கெனத் தனியான இடத்தைப் பெற்றிருந்தார். இதன் காரணமாகவே அவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் அவர் கற்பிக்கும் கல்வி நிலையத்தையும், பாடசாலையையும் நாடி வந்ததுடன் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றையும் பெற்று பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பினையும் பெற்றனர்.

உயர்திரு. ஸ்ரீகாந்தன் அவர்கள் ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் தலைவர் என்பதைத் தனது அதிபர் பதவிக் காலத்தில் நிரூபித்தவர். பாடசாலை சம்பந்தமான எந்தவொரு செயற்பாட்டையும் பாடசாலைச் சமூகத்துடன் கலந்துரையாடியே தீர்மானிப்பவர். இதன் காரணமாகவே ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என்ற பல்வேறு தரப்பினரும் அவருடன் இணைந்து பணியாற்ற விரும்பினர். அவர் அதிபராகப் பணியாற்றிய


யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகிய இரு பழம்பெரும் கல்லூரிகளும் இவரது பதவிக்காலத்தை தமது பொற்காலமெனக் கொள்ளும் நிலையைத் தோற்றுவித்தவர் இவரேயாவார்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலால்"

என்ற பொய்யாமொழிப்புலவரின் கூற்றுக்கிணங்க வாழ்ந்தவர் உயர்திரு. ஸ்ரீகாந்தன் என்பதால் அந்தணர் குலத்திற்கும் பெருமை சேர்த்த அதிபர் இவரெனக் குறிப்பிடுதல் வேண்டும். அவர் பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணிவருகின்ற காரணத்தினால் அவர் இளைப்பாறிய பின்னரும் சமூகத்தில் உற்சாகம் மிக்க சமூக சேவையாளராகப் பணியாற்றக் கிடைத்துள்ளது எனக் கூறவேண்டும். நேர்க்கணியச் சிந்தனையுள்ள அவர் என்றும் சாதனையாளராக இனம் காணப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன். அவரது பணியின் மேன்மையானது "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அவரது பிள்ளைகள், மருமக்கள் எல்லோரும் நல்ல நிலையில் இருப்பதால் நிரூபிக்கப்படுகின்றது. உயர்திரு. ஸ்ரீகாந்தன் அவர்கள் தொடர்ந்தும் வாழ்வில் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்ந்து சமூகப் பணியாற்ற எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.



# சிறியன சிந்தியாத ஸ்ரீகாந்தன்



**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**
ஓய்வுநிலைப் பேராசிரியர்,
கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"உயர்வான சுயமதிப்புக் கொண்டவர்கள் எப்போதும் பிறரைப்பற்றியே சிந்திப்பர். பிறர் முன்னேற்றம் பற்றிய எண்ணங்களிலும் நடவடிக்கைகளிலுமே ஈடுபடுவர். அவர்கள் பிறரிடம்;

"நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று கேட்பதில்லை, பதிலாக;

"உங்களுக்கு என்னால் என்ன செய்யமுடியும்"
என்றே கேட்பார்கள்.

– ஜிம் ஹார்ட்னஸ் மற்றும் நீல் எஸ்கெலின் (2011)

மேற்படி கூற்று எனது அன்புக்குரிய தூய்மைமிகு திரு. ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு அப்படியே பொருந்துகிறது. அவர் உயர்வான சுயமதிப்புக்கொண்ட உன்னதமான கல்வித்துறையின் ஆசான், வழிகாட்டி, நிர்வாகி மற்றும் தலைவர்.

அவரைப்பற்றிய நினைவேட்டின் சில பக்கங்களை இப்போது திரும்பிப் பார்க்கிறேன். இந்த உணர்வு நிலை சார்ந்த எனது முயற்சி எனக்குள் ஒரு தூய்மையைப் பரவச் செய்கிறது; மகிழ்ச்சியைப் பிரசவிக்கின்றது. நான்கு தசாப்தங்களாக ஆசிரியர் - பாடசாலை சார்ந்த கல்வியில் அத்தகைய ஞானப் பெருஞ்சாலையில் நான் பயணித்திருக்கிறேன்; இப்போதும் பயணித்துக் கொண்டிருக்கிறேன். இதில் சந்தித்த பல மனிதர்கள் நினைவில் நிற்பதில்லை; அவர்களால் நிற்கமுடியவில்லை. ஆனால் சிலர் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறார்கள். அத்தகைய மனிதர்களில் ஸ்ரீகாந்தன் முதன்மையானவர்; தனித்துவம் கொண்டவர்.

அவரை நான் அவதானித்திருக்கிறேன்; இனிமையாக அவருடன் பழகியிருக்கிறேன்; பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடியிருக்கிறேன்; உணர்வுபூர்வமான அவரது குடும்ப நிகழ்வுகளில் பங்குபற்றியிருக்கிறேன். இந்த ஊடாட்டங்கள் படிப்படியாக உருவாக்கிய மனச்சிற்பம் பற்றிய சில அம்சங்களை வெளிப்படுத்த முயல்கிறேன்.

**புனிதமான பொருளியல் மாணவனாக :–**

1973 /74 காலப்பகுதியில் நான் ஒரு பொருளியல் ஆசிரியன்; யாழ்ப்பாணக் கல்லூரியில் பொருளாதார பாடம் போதிக்கும் விரிவுரையாளன்; தனியார் வகுப்புக்களையும் நடாத்தியவன். அத்தகைய வகுப்பு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்தியபோது பல மாணவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து வந்தனர்.

அவர்கள் உற்சாகமானவர்கள்; வெளிப்படையானவர்கள்; அவர்களில் மிகவும் அழகானவராக, நேர்த்தியான உடை அணிந்தவராக, மென்மையான உணர்வுகளின் சொந்தக்காரனாக ஸ்ரீகாந்தனும் என்னிடம் கல்வி கற்றார். மிகவும் வசீகரமான புன்னகை அவருடைய தனிச்சொத்து. அதுபோல் மிகவும் அழகான, கட்டமைப்புக்கொண்ட கையெழுத்தும் அவரது வெற்றிக்கவசம்.

"மற்றவர்கள் வாசிப்பதற்காக எழுதுகிறேன்"

என்பதை உணர்ந்து கொண்டு எழுதுபவராக அவர் விளங்கினார். அவரது தம்பியார் சிவகுமாரன் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஆற்றல்மிகு நிதியாளர்) அவர்களும் இதேபோன்ற எழுத்தோவியத்தின் பிரம்மாக்களில் ஒருவராக விளங்குகிறார்.

"கையெழுத்துக்களின் சீர்மைகள் தான் தலையெழுத்துக்களை நிர்ணயிக்கின்றன" என்ற நினைப்பை ஏற்படுத்தும் வலிமை ஸ்ரீகாந்தனின் எழுத்துக்கு உண்டு. பல மனித உறவுக்குரிய உன்னதமான பண்புக் கோலங்கள் அவரிடம் தெரிந்தன. அப்போது எனக்கும் இருபத்தியாறு வயதுதான். வெளிப்படையாக நட்புடன் பழகும் மாணவர் கதம்பத்தில் மல்லிகையாக மணம் பரப்பியவர் ஸ்ரீகாந்தன். இன்று வரை அந்த நேசமும், உண்மையும் அப்படியே எவ்வித மாற்றமுமில்லாமல் உயிர்ப்புடன் உள்ளன. இவை அவரது ஆளுமையும் ஆற்றலும் என்று என்னை நம்பச் செய்கின்றன.

**சமநிலைகொண்ட சகபாடியாக :-**

ஆண்டுகள் வளர்ந்தன; எங்கள் வயதும் வளர்ச்சியும் ஆர்வத்துடனும் ஆற்றலுடனும் வளர்ந்தன. நானும் ஸ்ரீகாந்தனும் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணியாற்ற வாய்ப்புக்கிட்டியது. பௌதிகவியலில் புகழ்பெற்ற சௌந்தரராஜனும், தமிழ்ப்பாடத்தில் தனித்துவம் கொண்ட ராஜேந்திரனும் (CT), அளவையியலில் எல்லைகள் பல தொட்ட கேசவனும் இறைபக்தியின் இருப்பிடமான இந்திரராசாவும், கணக்கியலில் புலமை கொண்ட இந்த ஸ்ரீகாந்தனும் பொருளியல் சின்னத்தம்பியும் ஓர் அணியாக இரசாயனவியல் ஆய்வுகூடத்தில் கலந்துரையாடுவோம்; அறிவையும் உணர்வையும் சமமாகப் பகிர்ந்து கொள்வோம்; இடைவேளை நேரங்களில் நாங்கள் நட்பு நதியின் பல சுனைகளாக இணைந்திருந்தோம். எங்களிடம் தொழில் பற்றிய தெளிவும், விசுவாசமும் இருந்தன. உயர்ச்சி பற்றிய தன்னம்பிக்கையுமிருந்தது.

சகபாடியாக எல்லா உணர்வுகளையும் உதவிகளையும், வகுப்பறை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டோம். அப்போது கூட எனக்கும் ஸ்ரீகாந்தனுக்குமிடையில் "மாணவர் - ஆசிரியர்" என்ற பழைய உணர்வுகள் தம் நயப்பை இழந்ததில்லை. புளியங்காய் பழமாகிறபோது இடைவெளிகளின் தூய்மையைப் பேணிக்கொண்டே தனது ஓட்டுடன் எவ்வாறு இசைந்து வாழ்கிறதோ அதுபோல பல தடவை ஸ்ரீகாந்தன் தனது மாணவப் பக்குவத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார். இப்போதும் உள்ளும் தோறும் உவகை தரும் அனுபவம் அது.

நல்ல அதிபராக அத்தகைய சிற்பமாக அவர் மாற்றம் பெறுவதற்குரிய செயல்முறையாக அனுபவச் சிற்பி அவரிடம் இருந்த வேண்டாத கற்களை மெல்ல

மெல்ல உடைத்து அப்புறப்படுத்தி வந்ததை நான் கண்டிருக்கிறேன். தஞ்சைப் பெருங்கோவிலின் சிகரத்து பெருங்கல்லைப் போல அதே விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராக நிர்வாக உயர் அலுவலராக, முகாமைநிலைத் தலைவராக அவர் உயர்ந்தார். இந்த நிகழ்வு அவரது தனிமனித ஒழுக்கம், தொழில் ஒழுக்கம், சமூக ஒழுக்கம், குடும்ப ஒழுக்கம் என்ற பல மூலங்களின் தொகுப்புத்தான் என்பதை நான் உணர்கிறேன். இது பற்றிப் பல தடவை நான் எனக்குள் சிந்தித்திருக்கிறேன். அவர் பற்றிய இத்தகைய சிந்தனைகள் என் பெறுமதியை உயர்த்துவதையும் நான் உணர்ந்துள்ளேன்.

அதிபர் என்ற தொழில் வாகனம் - அதன் சாரதியாக :-

"நீரின்றி உலகில்லை
நினைப்பின்றி உயர்வில்லை
உயர்வின்றி வாழ்வில்லை,
வாழ்வின்றி வரலாறேயில்லை"

என்பது என் ஆழமான கருத்து. ஸ்ரீகாந்தன் உயர்வான எண்ணங்களின் சுரங்கமாக வளர்ச்சி பெற்றார். பண்பட்ட செயல்களின் காதலரானார். அவரது பணிநிலைசார்ந்த நடத்தைக் கோலங்களும் உன்னதம் பெற்றன. அவர் சமூகத்தை நேசித்தார். சமூகம் அவரை நேசித்தது. தன் பணியைத் தன் தலையிலும் மேலானதாகக் கொண்டார்.

விரும்பி வரவழைக்கப்பட்ட அதிபராக தான் கற்ற தான் கற்பித்த பாடசாலையின் வாயிற் கதவுகளை அகலத்திறந்தபடி உள்ளே நுழைந்தார். நாம் அழகான ஒரு வாகனத்தின் சொந்தக்காரனாக இருப்பதில் பெருமையில்லை; புகழில்லை. ஆனால், அதில் எதை ஏற்றிச்செல்கிறோம் என்பதில் தான் எல்லாமிருக்கிறது.

தெய்வப் பூமாலைகளை ஏற்றினால் பூ வாகனம்; மயிலிறகுகளை ஏற்றினால் மயில் வாகனம். இப்படியாக, நாம் எதை வாழ்வில் ஏற்றிச் செல்கிறோம் என்பதுதானே முக்கியம். தம் வாழ்க்கை வாகனங்களில் சிலர் தெளிவின்றி குப்பைகளையல்லவா ஏற்றிக் கொண்டிருக்கிறனர்!

வள்ளுவன் சொல்வான் மயிலிறகைக்கூட ஓர் அளவுக்குமேல் ஏற்றினால் வண்டியின் அச்சு உடைந்துபோகும் என்று.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெறின்"

அதிபரான ஸ்ரீகாந்தன் தனது பதவிநிலையின் எல்லைகளையும், வலுவையும் நன்கு உணர்ந்து செயற்பட்டார். தன் பதவியை "பிறருக்கு நன்மைகள் செய்தல்" என்ற பல்வகை மலர்களை ஏற்றிச் செல்லும் வாகனமாகப் பயன்படுத்தினார். அவரது வாழ்க்கைத்தொழில் (Career) புகழ்பெற்றது; கல்லூரியும் மேன்மை பெற்றது.

திரு.ஸ்ரீகாந்தனின் பணிநிலை பற்றி கல்லூரி ஆசிரியர் திருமதி. ஸ்ரீதேவி கண்ணதாசன் இவ்வாறு கூறுகிறார். "எம் கல்லூரியுடன் ஒட்டியுறவாடிய ஊரறிந்த பெருமகனார். என்ன அற்புதம்! சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் அருள்

கல்லூரிக்கு எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்தது எங்கள் அதிபர் திரு. வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் வருகை. கல்லூரியின் அபரிமிதமான வளர்ச்சிக்கு இவரது ஒத்துழைப்பு உத்வேகம் கொடுக்கிறது".

*- 135ஆவது ஆண்டு நிறைவு சிறப்புமலர் (2011 : 47)*

விக்ரோறியாக் கல்லூரியில் எனது மாணவியாக எனது விருப்பத்துக்குரிய மாணவர்களில் ஒருவராக விளங்கியவரும்; தற்போதைய இப்பாடசாலையின் பகுதித் தலைவருமான திருமதி. இந்திரா தவநாயகம் அவர்கள் அதிபர் திரு.வ. ஸ்ரீகாந்தனின் பணிநிலையின் சிறப்புப்பற்றிக் கூறும் கூற்றுக்கள் மனங்கொள்ளத்தக்கன.

"இவருடைய வருகையினால் கல்லூரி அன்னை நாளுக்கு நாள் புதுப்பொலிவுடன் விளங்குகிறாள்" *(பக்கம் -114)*

"பாடசாலைச் சமூகத்தினரை உதவும் கரங்களாக்கி அவர்களின் ஆதரவுடனும், சுறுசுறுப்புடனும், சிக்கனத்துடனும், புத்திசாலித்தனமாகவும், கடமையுணர்வுடனும், எடுத்த கருமத்தை உரிய காலத்தில் நிறைவேற்றி வைக்கும் நோக்குடன் பாடசாலை வளர்ச்சிப் பாதையில் இரவு பகல் பாராது தன்னை முற்று முழுதாக அர்ப்பணிக்கும் கரும வீரன் ஆவார்" *(பக்கம் 115)*

"சமூக நலனில் மிகுந்த ஆர்வம் கொண்டு தன் வீடு மறந்து கல்விக்கூடத்தில் தன் வாழ்விற் கூடுதலான நேரத்தை அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டிருக்கும் எமது அதிபரின் சேவை போற்றுதற்குரியது". *(பக்கம் 116)*

*- 135ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர்*
*(2011: பக்கங்கள் 114 116)*

பாடசாலையில் ஸ்ரீகாந்தனின் மாணவியாகவும், கல்லூரி ஆசிரியராகவும், ஆற்றல்மிக்க கல்லூரி செயலணியின் உற்சாகமிக்க பங்காளராகவும் செயற்பட்டுவரும், எனது பழைய மாணவி இந்திராவின் கூற்றுக்கு சாட்சியங்கள் தேவையில்லை. தேரின் ஒரு சில்லு தேர் பற்றிச் சிலாகிப்பதை யாரால் மறுக்க இயலும்!

**ஆரோக்கிய சிந்தனைக்கு பன்னீர் தெளித்தார்**

நல்ல மனிதர் பற்றிய எண்ணங்களும், உணர்வுகளும் என்னைத் தினமும் ஆரோக்கியம் மிக்கவனாக மாற்றுகின்றன.

நல்ல நூல்களும், நல்ல இசையும் வெற்றி பற்றிய நினைப்பும் என் உள ஆரோக்கியத்தை தினமும் வலிமைப்படுத்துகின்றன. வட அமெரிக்காவிலுள்ள கரோலினா பல்கலைக்கழக உளவியல் சிகிச்சை ஆலோசகரான ஜிம் ஹார்ட்னஸ் (Jim Hartness, 2011:81) வெற்றிபெற விரும்புகின்ற மனிதர்களின் உள ஆரோக்கியம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் *(2011:81)*

"உங்கள் வாழ்வில் சக்திமிக்க மனிதர்கள் யார் என்று எண்ணுங்கள். பிறகு அவர்கள் பற்றி நினைத்துப் பார்க்கையில், அவர்கள் ஆற்றியுள்ள பங்கை நியாயமாக மதிப்பீடு செய்யுங்கள். உங்கள் பட்டியலில் உள்ள ஐந்து பேரில் நான்கு பேர் நேர்முறையானவர்களாக, உற்சாகம் மிக்கவர்களாக, ஊக்கப்படுத்து பவர்களாக இருந்தால் நீங்கள் மிகவும் அதிஷ்டக்காரர்"

விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் மனதில் விக்ரோறியாக் கல்லூரி தொடர்பாக எண்ணிப்பார்க்கக்கூடிய ஐந்து பேரில் நிச்சயமாக அதிபர் திரு. ஸ்ரீகாந்தனும் முதல் நிலை மனிதராக இருப்பார்.

திரு.ஸ்ரீகாந்தனின் மனித உறவுகளைப் பேணி வளர்க்கும் நாட்டம், கல்லூரிக்கு அவர் வழங்கிய நல்லாதரவு மற்றும் அதன் வளர்ச்சி பற்றி அவர் கொண்டிருந்த அதீத நேர்முறைச் சிந்தனை மற்றும் நம்பிக்கை மூலம் கல்லூரி வளர்ச்சியைப் பெரிதும் ஊக்குவித்துள்ளார் என்பது பெருமைதரும் உண்மையாகும்.

நாம் நல்லவற்றை நேர்முறையில் எண்ணும் போதெல்லாம் அதனுடன் தொடர்புடையவர்கள் எம்மை நோக்கி நெருங்கி வருவார்கள்; நன்மைகளைப் பிரசவிக்கும் நிலைமைகளும் எம்மை நெருங்கிவரும். இந்த வகையான ஸ்ரீகாந்தனின் நேர்முறைச் சிந்தனைகள் தான் அவரது அதிபர் பதவிக்காலத்தில், பரீட்சை அடைவுகளிலும், விளையாட்டுச் சாதனைகளிலும் ஒழுக்க நியமங்களிலும், ஆற்றுகைத் திறன்களிலும் கல்லூரி உயர்நிலை பெற உதவின.

**வாழ்த்தும்போது வளர்கிறோம்**

அதிபர் வ.ஸ்ரீகாந்தனின் பதவிக் காலத்தை அடுத்துவரும் கல்லூரிச் சமூகமும், மாணவ தலைமுறையும் மறக்கமுடியாது; மறக்க விரும்பாது இத்தகைய சமூக அங்கீகாரத்தை கல்லூரி வரலாற்றில் அவர் பெற்றுள்ளார் என்பது அவர் மீதான எனது மதிப்பையும், பெருமிதத்தையும் பன்மடங்காக உயர்த்தியுள்ளன.

வாழ்வின் மிகவும் மதிப்பு வாய்ந்த உடைமைகளான ஆரோக்கியம், அன்பு, குதூகலம், எளிமை, நிதானம் என்ற இவற்றின் சொந்தக்காரனாக ஸ்ரீகாந்தன் தமது ஓய்வுநிலை வாழ்வை வாழவேண்டும் என்று வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

சொற்களைவிட, செயலும், கோபத்தைவிட புன்னகையும் வெற்றிக் கோட்டையின் பிரதான வாயில்கள் என்று உணர்ந்து வாழ்ந்த ஸ்ரீகாந்தன் பெருமையுடன் பல ஆண்டுகள் வாழவேண்டும்; நிச்சயம் அவ்வாறான வாழ்வு அவரை வரவேற்றுக் கொண்டுதானிருக்கிறது.

அவர் பற்றிய சிந்தனைகளில் மலர்ந்து நிற்கும் எனது வாழ்வின் மணித்துளிகளில் ஸ்ரீகாந்தனின் செயல்களும், உணர்வுகளும் பன்னீர் தெளித்தன; என்னை குதூகலப்படுத்தின; என் உள ஆரோக்கியத்தைப் பெருக்கின. அதற்காக எனது நன்றிகள்.

"அதிபர் பதவிக் காலத்தில் நீங்கள் அதிகம் கதைப்பதில்லை ஆனால்
உங்கள் மூன்றாம் பிறைச் சிரிப்பு எப்போதும் மறப்பதற்கில்லை".

# மேதைமையுடன் கூடிய நுண்ணுணர்வுகளின் திரட்சியே அதிபர் ஸ்ரீகாந்தன்



**கலாநிதி. க. நாகேஸ்வரன்**
முதுநிலை விரிவுரையாளர்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.
பரம்பரை அறங்காவலர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், நயினாதீவு.

"அந்தணர் என்போர் அறவோர்" என்கிறது குறள். வேதியர் கற்றாங்கு எரியோம்பி யாகம் வளர்த்து அக்னிகாரியம் செய்யும் பாங்கினர். வேதஒலியின் அதிர்வு (Vibration) ஓமப்புகை என்பன உடல், உள, சுவாச, சூழல் வளர்ச்சிக்கு மிகவும வேண்டியனவாகும். கிரியாநெறியும், மந்திர உச்சாடனமும் மனித குல திருப்திக்கான (Satisfaction) நடைமுறை விதிமுறைகள் அறத்தை நிர்ணயஞ் செய்து தமக்கும் பிறருக்கும் வாழ்க்கையிலே சுகமும் சுபீட்சமும் கிடைக்க உயர் குறிக்கோளுடன் கருமமாற்றுபவர்கள் பிராமணோத்தமர்கள். வைதிகம் பெருமதிப்பும், கௌரவமும், மெய்மையுங் கொண்டது; பொய், புழுகு அற்றது. சமயமறுப்பு வாதத்தைவிட சமய நம்பிக்கை, தெய்வ இருப்புக்கொள்கை மேலானது; நலம் பயப்பது. ஏதிலிகளுக்கு உதவும் - அபயமளிக்கும் ஒரே பொருள் சிவபெருமானே என்பது சேக்கிழாரருளிய திருத்தொண்டர் புராணம் கூறும் பேருண்மை. "இறையருளே இயக்குவி" என்ற திருவருள் முதன்மை பெரியபுராணத்தின் அடிப்படை. அத்திருவருளே உலகையும் உயிர்களையும், உணர்வுகளையும் இயக்குகிறது. அத்தகு பெரு நம்பிக்கையும், வைராக்யமுங் கொண்ட குடும்பசீலம் அதிபர் ஸ்ரீகாந்தனது பிறப்பின் தவப்பயன். இப்பண்பு வீட்டுக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும், தெய்வ நலனுக்கும் வளம் சேர்க்கிறது; வாழ்வளிக்கிறது.

"ஆதியில் பரமசிவனால் படைப்புற்ற மூலப்பாஷைகள் வடமொழி என்று சொல்லப்படும் சமஸ்கிருதமும் தமிழுமேயாம்" என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமனே புராணக் கற்பனையன்று. தக்க சரித்திர ஆதாரங்களையுடையது. "வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்று தான் பாரதி சக்தியிடம் வரம் கேட்கிறான். பாரதி இவ்வாறு கவிதையில் தொடக்கிவைத்த சமூகச் சார்புதான் நவீன மரபாகும். அதுதான் அதிபர் ஸ்ரீகாந்தனுள் இன்று வரை தொடர்கின்றது; இனியும் தொடரக்கூடியது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் கலை நிகழ்வுகளான நாட்டிய நாடகமும், நடனங்களும், இசையும் அழகும், மதுரமும் நிறைந்தவை என்பதனை நிலைநிறுத்தியவர் அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள். இத்துறையில் பெரும் ஈர்ப்புங் கவனமும் பெற்றது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. நடன மாணவிகளின் கலைத் திறன் அபாரமானது. இது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மங்காப்புகழ்.

அதிபர் ஸ்ரீகாந்தனின் புலமைநெறியால் திடமான கொள்கைகள், கருத்துக்கள் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியினரிடையே சுவறியது; கடைப்பிடிக்கப்பட்டது. வடமொழிப் பாண்டித்யம், பயிற்சி, புலமை, தெளிவு அதிபர் ஸ்ரீகாந்தனுக்குள் படிந்து கிடந்தமையாலேயே இவை சாத்தியமாயிற்று.

வடமொழி நூல்கள் என்ற அடிப்படையிலே பிரமசூத்திரம், தேவிபாகவதம், ஸௌந்தர்யலஹரி, சிவானந்தலஹரி, பகவத்கீதை பிரபல்யம் பெற்றவை. மகாபாரதமும் இராமாயணமும் புகழ்மிக்கன. இவற்றைக் கற்றோர், காதலித்தோர், கேட்டோர் அறிவு அகன்று விசாலிக்கும்;

ஸ்ரீகாந்தன் ஐயாவை முதன் முதலிலே ஒரு கலா ரசிகனாகவும், தமிழ்ப்பேச்சை இரசிக்கும் ஒருவராகவும், நாவன்மையாளரை நயந்தும், வியந்தும் பார்த்தும், கேட்டும், ரசித்தும் பாராட்டும் பண்பினராகவுமே ஏறக்குறைய 35, 40 ஆண்டுகளுக்கு முன்னர் யான் யாழ். நல்லூரிலுள்ள கம்பன் கழகத்தில் கண்டேன். அதன்பின் பல கோயில்களிலேயும் அவரை அர்ச்சகராகக் கண்டு ஆசிகள் பெற்றுள்ளேன். இக்கட்டுரை எழுதும்போதுதான் அவரது தந்தையார் சமஸ்கிருத பண்டிதர் சிவசுப்பிரமணியக்குருக்கள் வரதராஜசர்மா (பிரதமகுரு, பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்) என்றும் அறிந்து கொண்டேன். எனவே அதி விளக்கந் தேவையில்லை. இக்கட்டுரையின் பீடிகை மிகப் பொருத்தமானதென்பதை உணர்கிறேன். ஆதிபரின் தாயார் ஸ்ரீமதி ஞானாம்பிகை அம்மா எனின், அதிபரின் ஞான ஊற்றை என்னென்பது! வருணிக்கமுடியாதது.

இரும்புக் "காந்தம்" உலோகங்களைக் கவர்ந்திழுப்பது. அதிபர் ஸ்ரீகாந்தன் மானுடக் காந்தம். எவரையும் வசப்படுத்துவது கவர்ந்திழுக்கும் ஈர்ப்புள்ளதாகவும், கப்பலிலே திசையை அறிவிக்கும் கருவியிலே உள்ள முனை, அதாவது வழிகாட்டி; திசைகாட்டுவது. நமது ஸ்ரீகாந்தன் அவர்களுக்கும் காந்தத்திற்கும நெருங்கிய தொடர்புண்டு. ஸ்ரீகாந்தன் அமைதி, சாந்தம், பொறுமை, சகிப்புணர்வு, நிறைவு, எளிமை, புன்சிரிப்பு, தூய்மை, வாய்மை, மனிதாபிமானம், மாண்பு, நேர்மை, ஆளுமை, திறன், பாண்டித்யம், நட்பு அனைத்தும் குடிகொண்ட மென்னெஞ்ச முடையவர். சாதுக்குணமிக்கவர்; குலவித்தையாலும் குலாசாரத்தினாலும் பல உயர் தகைமைகளை அடைந்தார்.

இளமைக்கால ஆரம்பக்கல்வியைச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி யிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பெற்றபின் வெளிவாரி வணிகமாணிப் பட்டப்படிப்பை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலே தொடர்ந்தார். மிகப்பெரிய குடும்பத்தில் பிறந்த இவர் கடும் பிரயாசையுடனும் முயற்சியுடனும் கல்விப்பயிரைப் பெற்றார். மிக்க பொறுப்புடனும், பொறுமையுடனும் உயர் கல்வியை ஈட்டினார். 1977இல் முதல் ஆசிரிய நியமனம் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலே கிடைத்தது. அதன்பின் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலே கடமையாற்றினார். 01-07-1979 முதல் 31-12-1981 வரை வர்த்தகத் துறையிலே விசேட ஆசிரியர் பயிற்சி பெற்றார். 01-01-1982 முதல் 26-05-1982 வரை உடப்பு தமிழ் மகாவித்தியாலயத்தில் பணிபுரிந்தார். மீண்டும். 27-05-1982முதல் 31-12-1987

வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலே கடமையாற்றினார். 01-01-1988 முதல் 31-12-1995 வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே ஆசிரியப் பணி புரிந்தார். 01-06-1991இல் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையிலே சித்தி யடைந்தார். 07-06-1993இல் பிரிவுத் தலைவராக, மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே இருந்தார். 01-01-1996 முதல் தற்காலிக இணைப்புப் பெற்று வவுனியா கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் ஆசிரியரானார். 25-06-1997 முதல் 30-05-2003 வரை உப அதிபர் பதவியில் வவுனியா விபுலானந்தக் கல்லூரியில் பணிபுரிந்தார். 01-06-2003 முதல் 09-08-2005 வரை உப அதிபராக மானிப்பாய் இந்துக் கல்லூரி யிலே கடமையாற்றினார். 10-08-2005 முதல் 13-09-2010 வரை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராயிருந்தார். 14-09-2010 முதல் 11-03-2014 வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலே மதிப்பார்ந்த அதிபராயிருந்து பணியோய்வு பெற்றார்.

ஆசிரியவாண்மையில் வர்த்தகத்துறையில் விசேட பயிற்சி பெற்றவர். பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா சிறப்பு (2002) பட்டதாரி. 01-06-2004இல் இவர் அதிபர் சேவை தரம் 1இல் நியமனம் பெற்றார். கல்வித்துறை, கல்வி நிர்வாகம் என்னும் துறைகளில் 37 ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அதிபர் ஸ்ரீகாந்தன் 11-03-2014இல் பணியோய்வு பெற்றார்.

அதிபர் ஸ்ரீகாந்தனின் மாமனார் கல்வியும், நிர்வாக ஆளுமையுங் கொண்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் சிவஸ்ரீ கா.வைத்தியநாத ஐயர் (SLPS I, SLEAS III) ஆவார். மயிலணி சுன்னாகத்தைச் சேர்ந்த இவரது திருமகளான பாமினியை 15-03-1981இல் பதிவுத் திருமணஞ் செய்து கொண்டார்.

அதிபர் ஸ்ரீகாந்தனின் மூத்தமகள் இசைக்கலைமாணி திருமதி. சிந்துஜா ரிஷிகேசன், தற்போது மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே ஆசிரியப் பணி புரிகிறார். விஞ்ஞானக் கற்பித்தலிலே டிப்ளோமாப் பட்டம் பெற்று (Science English medium) யாழ் இந்து மகளிர் கல்லூரியிலே ஆசிரியராயுள்ளார் இவரது இரண்டாவது மகளான திருமதி. கௌசல்யா திவாகரன் இவர் கலைப்பட்டதாரியுமாவார். மூன்றாவது மகளார் வங்கி அலுவலரான செல்வி ரம்யா. இவர் வங்கியியலும் நிதியியலும் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர். நான்காவது மகன் செல்வன் சுபாங்கன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியற் பீடத்தில் மூன்றாம் வருடத்தில் மின்னியல் இலத்திரனியல் படிக்கிறார். ஐந்தாவது மகளான செல்வி அம்பிகா பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பீடத்தில் பொருளியல் சிறப்பு இரண்டாமாண்டு மாணவியாகப் படித்து வருகிறார். ஆறாவது மகள் திவ்யாவும் வங்கி அலுவலராக உள்ளார்.

அதிபர் ஸ்ரீகாந்தனின் மருமக்கள் இருவர். ஒருவர் யாழ். மாவட்டச் செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளர் திரு. ஸ்ரீ. ரிஷிகேசன். மற்றவர் யாழ். My Cola நிறுவன விநியோக முகாமையாளர் திரு. கு. திவாகரன்.

அதிபர் ஸ்ரீகாந்தனுடன் பிறந்தோர் ஒன்பது பேர். சுழிபுரம் பத்ரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் முன்னாள் பிரதமகுரு அமரர் சிவஸ்ரீ. வ. இராதாகிருஷ்ணக்

குருக்கள், வ. விஜயரங்கன் (டென்மார்க்), வ. சிவகுமாரன் (உதவி நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம்), வ. ஞானேஸ்வரன் (அமெரிக்கா), வ. ஞானசேகரன் (ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம், கொட்டாஞ்சேனை), வ. ஜெகதானந்தன் (ஓய்வுநிலை அலுவலர், விவசாயக் காப்புறுதிச்சபை), வ. இராஜேஸ்வரக் குருக்கள் (பிரதமகுரு, பிரப்பங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், அரியாலை), திருமதி. பிருந்தா சோமாஸ்கந்தக்குருக்கள் (சுழிபுரம்), திருமதி. சாருமதி காயத்திரிதாசன் (வத்தளை) ஆகியோராவர்.

அதிபர் ஸ்ரீகாந்தனது தளம்பாத பேரறிவு அவரது வெற்றிகள் யாவற்றிற்கும் வழிவகுத்தது. யாழ் மாவட்டத்தில், வடமாகாணத்தில் மிகவும் புகழ்பெற்ற கல்லூரிகளுள் ஒன்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

நவீன ஆங்கில மரபும், ஆழமான தமிழ்மரபும், ஊறிய சைவமரபும் இணைந்த நிலையிலே முப்பரிமாணங் கொண்டது விக்ரோறியாக் கல்லூரி. அதிபர் வாண்மை எப்பொழுதும் கல்லூரியிலே பிரதானமான அம்சமாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார், பழைய மாணவர், நலன்விரும்பிகள், பொதுமக்கள் என்ற அனைத்துக் குழுக்களையும் சகித்தும், மதித்தும், கண்ணியப்படுத்தியும், வழிநடத்தியும், வழிகாட்டியும் நடக்கவேண்டிய கடப்பாடு அதிபருக்கு உண்டு. அனைத்தையும் விட முக்கியமாக மாணவர்களது தேர்ச்சிமட்டம் என்பது கல்லூரியின் பெயரையும் புகழையும் உயர்த்துவது. அந்த வகையிலே இன்றும், இனியும் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, பரீட்சைப் பெறுபேறு என்னுந் துறைகளிலே முன்னணி வகிப்பதற்கு வழிகாட்டி நெறிப்படுத்திய பெருமை அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்களையே சாரும். எல்லாக் கல்லூரிகளிலும் இத்துறைகள் இயல்வனவாயுள்ள போதிலும் ஆசிரியர்களதும், திறன்மிக்க மாணவர்களினதும், அதிபரதும் ஒத்துழைப்பும் உதவியும் ஒன்றுபட்டாலேயொழிய சமூகத்திலே கல்லூரிகளிடையே போட்டிகளில் வெற்றி பெறுவதென்பது கனவிலும் முடியாத காரியமாகும். கற்பித்தலும், பயிற்சியும், முயற்சியும் வெற்றியின் முதற்படிகள். நேரகாலம் பார்க்காது, வீட்டுக் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது தியாக சிந்தையுடன், சாதனை நிகழ்த்தும் குறிக்கோளுடன் உழைக்கும் கடின உழைப்புத்திறன் கொண்ட நல்லாசிரியர்களைக் கண்டுபிடித்து மாணாக்கருக்கு நல்ல பயிற்சிகளை வழங்கவேண்டும். இப்பயிற்சிக்குரிய ஏற்பாடுகளை அதிபர்தான் செய்து கொடுக்கவேண்டும். ஆசிரியர்களும் உதவ வேண்டும். அந்தவகையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் தரம், பெறுபேறுகள் அதிபர் ஸ்ரீகாந்தன் காலத்தில் பெரிதும் உயர்ந்தன.

தொழிலிலே, உத்தியோகத்திலே "கடமையுணர்வு" வீட்டுக்குதவாது. நேரம் பிந்தாமை என்பது நிர்வாகிகளின் கடும் பிடிவாதம். உழைப்புத் திறனை முன்மாதிரியாகக் காட்டுவது என்பதும் பலராலும் முடியாதது. இவற்றிலே தனக்கென ஓர் நியமத்தை – இலட்சியத்தைக் கொண்டிருப்பவர் அதிபர் ஸ்ரீகாந்தன் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர். வீட்டிலிருக்கும் நேரத்தைவிட அதிகநேரம் கல்லூரிக்கென ஒதுக்கித் தொழிற்படும் அதிபராகவே யான் அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்களை மதிப்பிடுவேன். எப்போதுமே நல்ல அதிபர் மாணவர்களது கல்வி, அறிவு மேம்பாட்டையே விரும்புவர். சந்தர்ப்பமும், வாய்ப்பும் ஏற்படும்

போதெல்லாம் பிற அறிவு ஜீவிகளது உதவிகளையும், ஆதரவையும் பெற்று மாணவர்களது தேர்ச்சி மட்டத்தை அதிகரிக்கவும், வளர்க்கவும் விசேட வகுப்புக்களை ஏற்பாடு செய்து உதவுவர். அந்த முறையில் அதிபர் ஸ்ரீகாந்தன் போற்றத்தக்கவர். அவரது விசாலமான மனப்பாங்கால் 2013ஆம் ஆண்டு எம்மைக் கொண்டு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலே A/L தமிழ்ப்பாடம் பயிலும் ஒருசில மாணவர்களுக்குத் தமிழ் வகுப்பு எடுப்பித்து அவர்களைப் பல்கலைக்கழக நுழைவுபெற வைத்தவர் அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள். என்மீது அவர் கொண்ட மதிப்பினாலும், அன்பினாலும், ஆசையினாலும் எனது தமிழ் வகுப்பை ஏற்பாடு செய்தவேளை சற்றுப் பின்னடித்தார். காரணம் அவர் என்மீது வைத்திருந்த புலமை மதிப்பு மரியாதை. "Sir, மாணவர் தொகை குறைவாகவுள்ளது" என்றார். "பரவாயில்லை Sir, இரண்டு மூன்று பேர் பல்கலைக்கழகத்துக்குப் போனால் நல்லது தானே என்றேன். சரி என்றார்.

கல்லூரி மாணவர்கள் கல்வி கற்றுப் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல மிகவும் ஆர்வத்துடன் இருக்கவேண்டும் என்பதில் அதீத ஆர்வமிக்கவர் அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள். ஒரு சந்தர்ப்பத்திலே சப்ரகமுவ பல்கலைக்கழத்தில் இடங்கிடைத்த மாணவர்களிருவரை என்னிடத்தில் அனுப்பி அறிமுகப்படுத்தி அவர்கட்கு உதவுமாறும் கேட்டுக் கொண்டார். என் வரையறைக்குள் என்னால் முடிந்தவற்றைச் செய்தேன். பெரு மன நிறைவு.

படிப்பால் நடத்தை மாற்றம் ஏற்படக்கூடும். ஆனால் படிப்பால் பண்பு வளர்ந்துவிட்டதாக வரலாறு இல்லை. குணவியல்புகளிலும், பழக்கத்தாலும், ஒழுக்கத்தாலும், வழிகாட்டுதலாலும், முன்மாதிரி நடத்தைகளாலுமே பண்பு நன்மாணாக்கரிலே குடிகொள்ளும். அதிபர் ஸ்ரீகாந்தனின் கண்காணிப்பில் சுழிபுரம் விக்ரோறியாவில் படித்துப் பல்கலைக்கழகத்திற்கு நுழைந்த மாணவர்களின் உயர் தனிப் பண்புகள் இன்றும் இனியும் சிலாகித்துக் கூறப்படவேண்டியதொன்றாகும்.

பொதுவாகவே, கற்பித்த ஆசிரியரைக் கூட அலட்சியம், அகௌரவம் செய்யும் புத்திஜீவிகள் வாழும் நிலைமையில் மாணாக்கர், பல்கலைக்கழகப் பட்டதாரிகள் படிப்பித்த ஆசிரியரைக் கண்ணியப்படுத்தி, மதித்து நடக்கும் மாண்புறு பட்டதாரிகளையும் சுழிபுரத்திலே காணுகிறோம்.

2013இல் இடம்பெற்ற எமது மணிவிழா நிகழ்வுகளிலே பலரும் இதனைச் சிலாகித்துக் கொண்டனர். என்னிடம் பலரும் கேட்ட வினா, உமக்கும் அதிபர் ஸ்ரீகாந்தனுக்கும் மணிவிழா அமைப்பாளர் சத்தியரூபனுக்கும் என்ன தொடர்பு என்று. நான் பதிலுக்குச் சொன்னேன் "அது பூர்வபுண்ணியத் தொடர்புதான்" என்று. எனது மணிவிழா நல்லூரிலே நடந்தபோது அதிபர் ஸ்ரீகாந்தன் தலைவர். எனது நன் மாணவனும், பட்டதாரி ஆசிரியருமான நடராசா சத்தியரூபன் மணிவிழா அமைப்பாளர். இத் தொடர்பு குறித்து இன்றும் பலருக்குப் புரியாத புதிர் உள்ளது. சுழிபுரம் என்றதும் என் நெஞ்சில் இவ்விருவரது உறவுக்கும் முன்னர் எனது பேராசானும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே உயர் தமிழைப்

போதித்தவருமான பொருணூல் விற்பன்னர் வித்துவான் நா.சிவபாதசுந்தரம் (தொல்புரம்) அவர்களும் பண்டிதை பொன்.பாக்கியம் அவர்களும், கலைஞர் ந.சிவசண்முகமூர்த்தியும், சங்கீதபூஷணம் பேராசான் கணபதிப்பிள்ளையும், அதிபர் கைலாயநாதனையும், அ.அமிர்தலிங்கத்தையும் இன்னுஞ்சில பண்டிதர்களையும் யானறிவேன். பண்டிதை பொன். பாக்கியம் அவர்களது அறிமுகக் கடிதத்துடன் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு வந்தவர் நடராசா சத்தியரூபன். இவர் எனது நன் மாணவன். பல்கலைக்கழகத்திலே படிக்கும்பொழுதே பலாங்கொடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலிலே எனது தலைமையில் பட்டிமண்டபத்திலே பேசினார். நல்ல குணநலங்கொண்டவர். ஆசிரியர்க்கு மதிப்புத் தரும் ஒரு புனிதன். இம் மாணவனே எனது மணிவிழாவுக்கு அதிபர் ஸ்ரீகாந்தனைத் தலைவராக்கினார். அது யான் பெற்ற பெரும் பேறு!

புயல்வேகச் செயல் வீரரான அதிபர் ஸ்ரீகாந்தன் சத்தியரூபனுக்குக் கூறியது, "தம்பி! கலாநிதி நாகேஸ்வரனை உமக்கு மூன்றாண்டுகள் மட்டுமே தெரியும். எனக்கு அவரை 30 ஆண்டுகளுக்கு மேல் தெரியும். இப்போது என்ன சொல்கிறீர்" என்றாராம். "Sir, நீங்களே மணிவிழாவுக்குத் தலைமை தாங்கி நடத்தவேண்டும்" என்று பணிந்து நின்றார் சத்தியரூபன். என்ன ஆச்சரியம் அதிபர் ஸ்ரீகாந்தன் மணிவிழாவுக்கான திகதியையும் தீர்மானித்துவிட்டார். நல்லை ஆதீனத்திலே கூட்டம் நடந்தது. சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவ மாணவியர் உதவி புரிந்தனர். அதிபர் மணிவிழாவை நடத்தி "மகாவித்துவான்" என்ற சிறப்புப் பட்டத்தையும் மணி முடியையும் கௌரவ இலட்சுமணன் இளங்கோவுடன் இணைந்து, சத்தியரூபன் கைபிடிக்க முடிசூட்டியவருக்கு இன்று முடிசூட்டுவிழா. அதிபர் செய்த நற்பணிகள் சமூகத்தால் பெருமதிப்புப் பெறுகின்றன; பாராட்டப்படுகின்றன.

அதிபர் ஸ்ரீகாந்தனுக்கு மணிவிழா நல்ல பணிகளுக்கு உதவும் ஸ்ரீமதிக்கும் மணிவிழாத் தான். ஈருடல் ஓருயிர். தம்பதியர் பல்லாண்டு காலம் குடும்ப சுகத்துடன் நீடு வாழ எம் குலதெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவடிகளைப் பிரார்த்தித்து வாழ்த்துக் கூறிப் பணிகிறோம். வாழி! வாழி! வாழி!



# கல்லூரியின் மீது பற்றுறுதி கொண்டவர்



**திரு. எஸ். ரீ. பீரிஸ்,**
செயற்றிட்ட முகாமையாளர் - வட மாகாணம்,
அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டம் (EKSP),
கல்வி அமைச்சு.

வலிகாமம் கல்வி வலய சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் முன்னாள் அதிபர் பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்தன் அவர்கள் 11-03-2014ம் திகதி தொடக்கம் ஓய்வு பெற்றுள்ளார். அவரது சேவைகளைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

அதிபர் வ. ஸ்ரீகாந்தன் அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிகளில் கற்றுத் தேர்ந்து 1977ம் ஆண்டு தொடக்கம் 1995ம் ஆண்டு வரை யாழ். மாவட்ட முன்னணிப் பாடசாலைகளில் ஆசிரியப்பணியைப் பூர்த்தி செய்து 1991ம் ஆண்டு இலங்கை அதிபர் சேவைக்குத் தரம் உயர்த்தப்பட்டு யா/மானிப்பாய் இந்துக்கல்லூரியின் உப அதிபராகவும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் பதவிகளை அலங்கரித்து 14-09-2010 தொடக்கம் 11-03-2014 வரை யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் அதிபராக இருந்த போது 2010ம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியிலிருந்து அவருடன் கடமை நிமித்தமாக எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது.

1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாகிய தீவடங்கிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 இசுறு பாடசாலைகளில் வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 17 பாடசாலைகளில், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் ஒன்று. இசுறு பாடசாலைக்குரிய சகல உட்கட்டுமான நிர்மாணப்பணிகள், பௌதீக வளங்கள் மற்றும் ஏனைய வள விருத்திக்கான செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் முன்னிலையாகத் திகழ்ந்தது. இதன் நிறைவை அடைவதில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கள் கல்லூரியின் பால் அவர் கொண்ட பற்றுறுதிைப் பறைசாற்றுவன.

இதனாலேயே இசுறு பாடசாலைகள் அபிவிருத்திக்குரிய அனைத்துச் செயற்பாடுகளும் பூரணமாக்கப்பட்டு வட மாகாணத்தில் முதன் முறையாக இக்கல்லூரி சகல வசதிகளும் அமையப்பெற்ற ஓர் இடைநிலைப் பாடசாலையாகக் கல்வி அமைச்சர் கௌரவ. பந்துல குணவர்த்தன அவர்களால் 15-07-2012 அன்று திறந்து வைக்கப்பட்டமை அவரது பணிக்காலத்தில் கல்லூரிக்குக் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பாகும்.

இருறு பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் அமுலாக்கத்தில் அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் வகிபாகம் ஏனைய அதிபர்களுக்கு ஓர் முன்னுதாரணமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இக்காலப் பகுதியில் அவருடன் நெருங்கிச் செயலாற்றியுள்ளேன். இதன்போது அவர் கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பாகத் தணியாத தாகம் கொண்டிருந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். கல்லூரியின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி அவற்றை அடைவதற்கான அமுலாக்க ஆலோசனைகளையும் வழங்கி எம்மோடு அடிக்கடி தொடர்புகொண்டு அவற்றை நிறைவேற்றுவதில் பக்கபலமாக செயற்பட்டமை அவரது விளைதிறனுக்கும் நேர்தகவான அணுகுமுறைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

கடந்த கால கசப்பான யுத்த விளைவுகளில் இருந்து மீண்டு இக்கல்லூரி தற்போது தலைநிமிர்ந்து நிற்பதற்கு அவரது பணி கல்லூரியினால் மறக்க முடியாதது. இவ் வேளையில் அவரது சேவைகளைப் பாராட்டுவதுடன் ஓய்வு நிலையிலும் இக் கல்லூரியின் அபிவிருத்திக்கான அவரது பங்களிப்புக்கள் தொடரவேண்டும் என ஆசித்து அவருக்கு நீண்ட ஆயுளும் பூரண உடல் உள ஆரோக்கியமும் கிடைக்கவேண்டுமென்றும் எல்லாம் வல்லோனை வேண்டி அவரை வாழ்த்துகின்றேன்.



# அதிபர் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டு



**திரு. ச. சிவநேஸ்வரன்**
அதிபர்,
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை).
தலைவர்,
வடமாகாண அதிபர்கள் சங்கம்.

யாழ்ப்பாண கல்விப்புலத்தில் புகழ்பூத்த அதிபராக மிளிர்ந்து ஓய்வுபெற்ற அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தனது சேவைக்காலத்தில் சிறந்த கணக்கியல் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராகத் தனது சேவையை நிறைவு செய்திருக்கின்றார்.

தனது சேவைக்காலத்தில் 21 ஆண்டுகள் அதிபர் சேவையில் இருந்தபோதும் 2005ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையேற்று அவர் ஆற்றிய சேவை காரணமாகவே அவரது ஆற்றலும் திறமையும் வெளிப்பட்டது. இலைமறை காயாக மறைந்திருந்த இவரின் ஆற்றல் 1993ஆம் ஆண்டிலிருந்து 2005ஆம் ஆண்டு வரை இக் கல்விப்புலத்திற்கு முழுமையாகக் கிடைக்காதது ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

தனது அதிபர் பதவியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அவர் காட்டிய திறமைகளும் கல்வித்துறை மீதான ஈடுபாடும் விக்ரோறியாக் கல்லூரிச் சமூகத்தை ஈர்த்ததுடன் அவரது சேவையைப் பெறுவதில் வெற்றியும் கண்டனர்.

விக்ரோறியாக் கல்லூரியில் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் சேவை அளப்பரியது. கல்வி, விளையாட்டு, பௌதிகவள விருத்தி, சிறந்த சுற்றுச்சூழல் என மிகக் குறுகிய காலத்தில் ஏற்படுத்திய சாதனைகள் அளப்பரியன. தனது நேரம் முழுவதையும் கல்லூரியிலே நின்று சேவையாற்றியதன் மூலம் இவ்வெற்றிகளை அவர் கண்டார்.

விக்ரோறியாக் கல்லூரியின் எதிர்காலத் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியுள்ளார் என்பதில் ஐயமில்லை. இளைப்பாறிய அதிபர் திருமதி. அ.வேலுப்பிள்ளை அவர்கள் ஆரம்பித்து வைத்த பௌதிக வள விருத்தியை முழுமைபெற வைத்ததுடன் பாடசாலையில் கல்விச்சூழலை ஏற்படுத்தி எதிர்கால கல்விக்கு அர்ப்பணித்துள்ளார். கல்லூரி அதிபர் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய திரு.வ. ஸ்ரீகாந்தன் அவர்கள் வட மாகாண அதிபர்கள் சங்க உபதலைவராக விளங்கி சக அதிபர்களுக்குப் பக்கபலமாக நின்று பல சேவைகளை ஆற்றியுள்ளார். திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் ஓய்வு கல்விப்புலத்தில் ஈடுசெய்யமுடியாதது. எனினும் தனது காலத்தில் அதி உச்ச சேவையை வழங்கி ஓய்வு பெற்றுள்ள நண்பர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு கல்விப்புலம் சார்ந்த எனது நன்றிகளும், வாழ்த்துக்களும்.

## "இசுறு" கட்டடங்களின் திறப்பு விழா








# Asaippillai Memorial IT Lab







# மனமுவந்த வாழ்த்துக்கள்



**திரு. மகேஸ்வரன் ஸ்ரீமுருகவேள்**
(M.A., Dip in Computing)
கிராம அலுவலர்

சுழிபுரம் வாழ் மக்களின் கண்களாகப் போற்றப்படும் அன்னை விக்ரோறியாக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் உயர்திரு. வரதராஜக் குருக்கள் - ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலரில் வாழ்த்துவதையிட்டு அகம் மிக மகிழ்கின்றேன்.

சமய குருவாகவும் வித்தியாகுருவாகவும் இரட்டைக் குருப்பதவிகட்கும் அணி சேர்க்கும் அதிபர் அவர்கள் பதவிக்கும் குலத்திற்கும் ஏற்றாற்போல மிகுந்த பண்பாளன். இதனால் இவருடன் பழகிய அனைவரின் மனதிலும் நீங்காத இடம்பெற்றுள்ளார். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அவர் ஆற்றிய பணி காலத்தால் அழியாதது. இம்மண்ணின் மைந்தரான அதிபர் அவர்களையும் அவர் தம் தந்தையார், குடும்பத்தினர்களையும் இப்பிரதேச மக்கள் நன்கறிவர். அதேபோல் அதிபர் அவர்களும் சேவைக்காலத்தில் பாடசாலை மாணாக்கர்களையும் அவர்தம் பெற்றோரையும் நன்கறிந்திருந்தார். அதனால் மாணவரின் பின்புலமறிந்து பெற்றோருடன் தொடர்பாடல் ஏற்படுத்திக் கல்வியூட்டலில் தனி விசேடம் காண்பித்தார்.


அதிபர் அவர்களின் வழிகாட்டல், அவரது அறிவுரைகள், கடினமான இலக்கையும் எளிதாக எட்டலாமெனக் கூறும் அவரின் மனப்பாங்கு, மாணவரின் மனதில் தற்துணிவு, உற்சாகம் என்பவற்றை அளித்தது. இதனால் பலனடைந்தோர் பலர். பாதை தவறிய இளம் பிஞ்சு மாணவனை வழியில் கண்டாலும் அவனது நடவடிக்கையைக் கவனித்து கண்டித்து வழிப்படுத்தும் அர்ப்பணிப்பான சேவை அவரை உயர்ந்த இடத்திற்கு இட்டுச் சென்றது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" எனும் முதுமொழிக்கிணங்க வித்தியா குருவாயும்,

"முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்" எனும் மணிவாசகர் கூற்றுக்கிணங்க மதகுருவாயும் விளங்கியவர்.

இலக்கணமாகி இறையிடத்தில் வைத்துப் போற்றப்படும் அதிபர் அவர்கள் ஓய்வு பெற்றாலும் அவர்தம் ஆலோசனையும், சேவையும் எமது பிரதேசத்திற்கு அளப்பரிய தேவையாகும். அதிபர் அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் நீடூழி காலம் வளமெலாம்பெற்று வாழபறாளையம்பதியுறை வேலனை வேண்டி நிற்கின்றேன்.

வாழி நீடூழி.



# பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம்

**திரு.ந. சபாரத்தினசிங்கி,**
தலைவர்,
அதிபர் சங்கம்,
சங்கானைக்கல்விக் கோட்டம்.
அதிபர்,
யா/ வட்டு மத்திய கல்லூரி.

வலி-மேற்கு பிரதேசத்தில் புகழ்பூத்த கல்லூரியாக விளங்கும் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர் உயர்திரு. ஸ்ரீகாந்தன். ஐயா அவர்களுக்கு சங்கானைக் கல்விக் கோட்டத்தின் அதிபர் சங்கம் சார்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறோம்.

விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் சங்கானைக் கல்விக்கோட்ட அதிபர் சங்கத் தலைவராகவும், ஆங்கிலதின போட்டிக்குழு செயலாளராகவும் இருந்து சிறப்பாகச் செயற்பட்டதுடன், அதிபர் சங்கத்தின் ஆளுமைமிக்க தலைவராகவும் திகழ்ந்தார். தான் கொண்ட கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைப்பதில் வல்லவர். மற்றவர்களுடன் பழகுவதில் சிறப்பானவர்.

அதிபர்களின் பிரச்சினைகளை பல தரப்பினருடன் கலந்தாலோசித்து ஆக்கபூர்வமான முடிவுகள் எடுப்பதில் வல்லவர். தனது அரச பணியின் இறுதிக் காலத்தில் தான் கற்ற கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று மாறுபட்ட சிந்தனையின் ஊடாக விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்றவற்றை நடாத்திப் பாடசாலையின் புகழை உயர்வடையச் செய்தவர். தனது பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை 400 மீற்றர் ஓட்டப்பாதையாக மாற்றி அமைப்பதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு நிறைவேற்றியவர். தனது கல்லூரியைச் சகல துறைகளிலும் மேன் மேலும் வளர்ச்சியடையச் செய்வதில் வெற்றி கண்டவர். தற்போது கல்லூரியை வளங்கொண்ட பாடசாலையாக மாற்றியுள்ளார்.

தனது தனிப்பட்ட ஆளுமை காரணமாகக் கல்லூரியின் விளையாட்டுத் துறையை தேசியத்தில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடிக்க வைத்தவர் ஆவார். கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் விடுமுறை அற்ற அதிபராக எந்த நேரத்திலும் கல்லூரியை வலம்வந்தபடியே இருப்பார். இதனால் தான் கல்லூரியின் நாமம் சிறப்பான இடத்தை அடைந்தது. தான் ஓய்வு பெற்றாலும் கல்லூரி பலதுறைகளிலும் வளர்ச்சி அடையும் என்ற எதிர்பார்ப்புடன் ஓய்வுபெற்றுள்ளார். அவர் ஆற்றிய பணிகளை எல்லாம் பாடசாலைச் சமூகம் நன்றாக அறிந்துள்ளது. ஐயா அவர்கள் ஏனைய அதிபர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். எனவே, அவருடைய ஓய்வுக்காலம் மிகச் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. அவர் நீண்ட ஆயுளுடன் வாழ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

# ஓய்வுநிலை அதிபராகிறார்...



**திரு.செ.பத்மநாதன்**
ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர்.

*சிறப்பான அதிபர் சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வுநிலை பெறுகிறார். ஓய்வுபெறும் எல்லோரும் தங்கள் ஓய்வுநிலையை அனுபவிக்கத் தங்களுக்குள் ஒரு திட்டம் போடுதல் அவசியமாகும்.* (You must prepare yourself for retirement) *அந்தத் திட்டத்திலே என்ன சேர்க்க வேண்டும்? எங்கள் கல்லூரி பெரியார் சிவபாதசுந்தரனார் வாழ்ந்த பூமி, அவர் சைவத்திற்காக அரும்பாடு பட்டார், அதில் வெற்றியும் கண்டார்.*

*தற்சமயம் நாட்டில் மலிந்துள்ள ஒழுங்கீனம் தவறான நெறிமுறைகள், கலாசார சீர்கேடுகள் ஆகியவற்றின் நடுவே மதத்தை முழுவதுமாக ஒதுக்கிவிட்டு வாழ நினைப்பது என்பது அழிவை நோக்கி வேகமாகச் செல்வதற்கு ஒப்பாகும்.*

**உடல் எடுத்த உயிர்கள் பஞ்சேந்திரியங்களாகிய**
**படுகுழியில் விழுந்து வழியறியாமல் வருந்துகின்றன.**
**வழியைக் காட்டுபவரே குரு.**
**குருவைப் பார்ப்பதும்**
**குருவின் பெயரைச் சொல்லுவதும்,**
**குருவின் சொற்களைக் கேட்பதுவும்**
**அவர் உரைகளைச் சிந்திப்பதுமே உயர்ந்த நெறி**
**அந்த நெறியில் ஒழுகுபவர்கள் சிவயோகியாவார்.**

**– திருமந்திரம்**

*ஆகவே எங்கள் அதிபர் அவர்களும் சிவபாதசுந்தரனார் போல் இடைவிடாது செயற்பட்டு, கடின உழைப்பு மூலம் எங்கள் சமுதாயத்தை மேல்நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.*

*இதற்கு உகந்த உடல் நலத்தையும் குன்றாத பொருள் வளத்தையும், சிறந்த சிந்தனை வளத்தையும், ஆள் வளத்தையும் கொடுத்து உதவவேண்டுமென சிவகாமி சமேத நடேசப் பெருமானை வாழ்த்தி வணங்குகிறேன்.*

# விக்ரோறியா அன்னையின் மடியில் தவழ்ந்தவர்



**திருமதி. அ. வேலுப்பிள்ளை**
ஓய்வுநிலை அதிபர்,
யா/ விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அரும்பணியாற்றிய அதிபர் வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக மணிவிழா மலரொன்று வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

விக்ரோறியா அன்னையின் மடியில் தவழ்ந்து, அர்ப்பணிப்புள்ள ஆசிரியராகி அயராது உழைத்து, அரும்பெரும் அனுபவத்தோடு கல்லூரியின் ஆளுமைமிக்க அதிபராகத் திகழ்ந்தவர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள்.

தனது கல்லூரித்தாயை உயர்வான இடத்தில் வைத்துப் பார்க்க விரும்பி "மெய்வருத்தம் பாரார், கண்துஞ்சார், பசி நோக்கார் கருமமே கண்ணாயினார்" எனும் பொன்மொழிக்கிணங்க சேவையாற்றியவர். பண்பாளராகத் திகழ்ந்தார். இலட்சிய வேட்கை கொண்ட அதிபராக தான் எதிர்கொண்ட சவால்களை எல்லாம் சாதனைகளாக்கி வெற்றி கண்டார்.


கல்லூரி எனக்கென்ன செய்தது என்று கேட்காது, எனது கல்லூரிக்கு நான் என்ன செய்தேன்? என்ற வினாவிற்கு இது போன்ற முயற்சிகளே பதிலிறுக்கும் என்பது வரலாற்று உண்மை.

அதிபர் அவர்களின் சேவையைப் பாராட்டுமுகமாக வெளிவரும் இம்மலர் கல்லூரியின் வரலாற்று ஆவணமாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை.




இவர் தனது ஓய்வுக்காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடன் தன் குடும்பத்தினரோடு நீடூழி வாழ சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டுவதோடு, இம்மலர் வெளியீட்டிற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த மலர் வெளியீட்டுக் குழுவினரையும் பாராட்டி, மலர் வெளியீடு சிறப்புற அமைய மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

# தடம்புரளாத அதிபர்



**திரு.வி. சண்முகநாதன்**
ஓய்வுநிலைப் பிரதி அதிபர்,
யா/ விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

*"மனித வாழ்க்கை முழுவதையும் புனிதமாக்குவது கல்வியும் மதச் சடங்குகளுமே"*

கல்வி - மொழியாற்றலை, மனிதப் பண்பை, நினைவாற்றலை, ஆளுமையை, நல்லொழுக்கத்தை, வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க ஒருவனுக்கு உதவும் கருவியாகும். இக்கல்வியை எல்லோரும் நிறைவாகப் பெறவேண்டும் என ஆவல் கொண்டிருந்தவரே அதிபர் திரு.வ. ஸ்ரீகாந்தன் அவர்கள்.

நான் கல்கமுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து இடமாற்றம் பெற்று 01-05-1986இல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் எனது ஆசிரியப் பணியைப் பொறுப்பேற்றுக் கொண்டேன். அப்போது அதிபர் திரு.க. அருணாசலம் அவர்கள் பாடசாலையைச் சிறப்பாக வழிநடாத்திக் கொண்டிருந்தார். பெரிய பாடசாலை, அதிக எண்ணிக்கையான மாணவர்கள், நிறைவான ஆசிரிய குழாத்தைக் கொண்டிருந்தது. இவ்வாசிரிய குழாமானது எல்லாத் துறைகளிலும் ஆற்றலுடைய ஆசிரியர்களைக் கொண்டிருந்தது. எல்லோரும் கல்வித் தரங்களில் உயர்வாக இருந்தனர். இவ்வாசிரிய குழாத்தில் ஒருவராக திரு.வ.ஸ்ரீகாந்தனும் இருந்தார். கணக்கியல் ஆசிரியராக அத்துறையில் சிறப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். அன்றைய ஆசிரிய குழாத்தை நினைக்கும்போது இன்றும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதில் திறமை, ஒற்றுமை, துணிவு காணப்பட்டது.

பாடசாலையின் இடைவேளையின்போது ஆசிரிய ஓய்வறையில் (Staff Room) எல்லோரும் கூடுவார்கள். அங்கே சகலவிதமான அறிவுசார் விடயங்களும் பரிமாறப்படும். ஆசிரிய ஓய்வறை மிகவும் கலகலப்பாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கும். ஆசிரியர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் மிகவும் ஆழமாகவும், ஆர்வமாகவும் கருத்துக்களைக் கொடுப்பவராகவும் மற்றவர்களிடமிருந்து சிறப்பான கருத்துக்களை உள்வாங்குபவராகவும் இருப்பார். இவர் கற்பித்தல், நிர்வாகம், மாணவர் ஒழுக்கம், பொது விடயம் எதுவாயினும் தன் மனம் திறந்து தெளிவான கருத்துக்களை முன்வைக்கும் இயல்புடையவராக இருந்தார். சிறப்பம்சம் யாதெனில் அதிபர் திரு.க.அருணாசலம் அவர்களும் ஆசிரியர்களுடன் கலந்து நல்ல அறிவுசார்ந்த கருத்துக்களைக் கொடுத்துச் சிறப்பிப்பார். அவர் அடிக்கடி கூறிக்கொள்ளும் வார்த்தை ஆசிரியர்களை மகிழ்விப்பதற்காக "நாம் எல்லோரும் அதிபர்கள்தான்" என்பது. பொதுவாக

பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களின் ஓய்வறையில் ஆசிரியர்களுடன் கலந்து கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளும் தன்மை குறைவாகவே காணப்படும். ஆனால் அதிபர் திரு.அருணாசலம் இதற்கு விதிவிலக்கானவர். அவர் நல்லவர், மிகவும் வல்லவர்.

திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டதுடன், மற்ற ஆசிரியர்களுடன் நட்பு ரீதியாகப் பழகும் இயல்புடையவராகவும் இருந்தார். தன்னிடம் ஒப்படைக்கும் எந்த விடயத்தையும் சிறப்பாகச் செய்து கொடுக்க வேண்டுமென்ற அவா நிறைந்தவராக இருந்தார். தன்னிடம் கற்கும் வர்த்தக மாணவர்களை மட்டுமன்றி எல்லா மாணவர்களையும் நல்ல முறையில் வழிநடத்தினார். இவ்வாறாக விக்ரோறியாக் கல்லூரியின் ஆசிரிய குழாத்தின் சிறந்த பிரதிநிதியாக இருந்தவர். சொந்த விருப்பின் நிமித்தம் 31-12-1987இல் இடமாற்றம் பெற்றுச் சென்றமை பெரும் இழப்பாகவே சகல ஆசிரியர்களும் உணர்ந்தார்கள். அவ்வாறே மாணவர்களும் உணர்ந்தார்கள்.

இடமாற்றம் பெற்றுக்கொண்டதன் பின் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும், பிரதி அதிபராகவும், அதிபராகவும் சிறப்புறச் செயற்பட்டமையை அறியமுடிந்தது. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்று பாடசாலைச் சமூகம் போற்றும் வகையில் சிறப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவேளையில் எமது கல்லூரியின் அதிபர் திருமதி. அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை அவர்கள் சொந்த விருப்பின் பெயரில் அவரின் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்பாகவே இளைப்பாறும் பொருட்டு வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.ப. விக்னேஸ்வரனிடம் கடிதம் கொடுத்து இளைப்பாறுவதற்கான அனுமதியையும் பெற்றிருந்தார். திருமதி. அ.வேலுப்பிள்ளை இறுக்கமான காலகட்டத்தில் கடினமான பணியை ஏற்று உயர்வாகவும், சிறப்பாகவும் நடாத்திக் கொண்டிருந்தார். அவர் இளைப்பாறுவதற்கான கடிதம் கொடுத்ததிலிருந்து விக்ரோறியாக் கல்லூரியின் அடுத்த அதிபர் யாரென்பது பற்றி பாடசாலைச் சமூகத்தில் பலமான பேச்சு அடிபட்டது. அதன்பின்பு பலருடைய பெயர்கள் பேசப்பட்டன. பேசப்பட்ட நபர்கள் ஆங்காங்கே உரிய பொறுப்புக்களில் இருந்தமையால் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்க முன்வரவில்லை. இச்சந்தர்ப்பத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பொறுப்பாகவிருந்த திரு.வ.ஸ்ரீகாந்தனின் பெயர் பலமாகப் பேசப்பட்டது. விக்ரோறியாக் கல்லூரிச் சமூகம் இவரை அதிபராகக் கொண்டுவருவதற்குப் பெரிதும் முயன்றது. ஏனெனில் ஊரவர், பாடசாலையின் பழைய மாணவன், பழைய ஆசிரியர் சிறந்த நிர்வாகி என்பதனால் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் இம்முயற்சியில் இறங்கிச் செயற்பட்டது.

அதிபர் திருமதி. அ.வேலுப்பிள்ளை அவர்களும் தனது ஓய்வுநாள் நெருங்க, நெருங்க பொறுப்பேற்கப்போகும் புதிய அதிபரிடம் தனது பாடசாலைப் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்காகக் காத்திருந்தார். அவர் ஓய்வுபெறும் இறுதிநாள் வரை அதிபர் பொறுப்பை ஏற்க யாரும் வரவில்லை. திரு.வ.ஸ்ரீகாந்தன்

எப்படியாவது வருவாரெனத்தான் அதிபரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வலிகாம கல்வி வலயம் இதற்கான ஒழுங்குகளைச் செய்யுமென நம்பினார். நம்பிக்கை பொய்த்தது. கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரனின் அறிவுறுத்தலின்படி பிரதி அதிபராக இருந்த என்னிடம் பாடசாலையின் பொறுப்புக்களை **01-08-2010**இல் ஒப்படைத்து ஓய்வு பெற்றுக்கொண்டார். கல்விப் பணிப்பாளரின் கடிதப்படி நான் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டேன். எனது ஓய்வு நாளும் ஓரிரு மாதங்களில் வரவிருப்பதால், எப்படியாவது திரு.வ.ஸ்ரீகாந்தன் வருவார் என்ற எண்ணத்தில் அதிபர் பொறுப்பினை ஏற்றிருந்தேன். திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களை விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்க வைப்பதில் பல வழிகளிலும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிச் சமூகம் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் தங்கள் பாடசாலையிலிருந்து மாற்றலாகிச் செல்வதை இம்மியளவும் விரும்பவில்லை. இருந்தும் பல வழிகளில் முயற்சிகள் பலமாக முன்னெடுக்கப்பட்டன. இத்தருணத்தில் விக்ரோறியாக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு.க.அருணாசலம் அவர்களும் அவுஸ்திரேலியாவிலிருந்து கொண்டு பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது மட்டுமன்றி, நேரடியாகவே திரு.வ.ஸ்ரீகாந்தனுடன் உரிமையுடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பினை ஏற்படுத்தி விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்கும்படி அன்புடன் வற்புறுத்தியிருந்தார். அப்போது பாடசாலையின் பொறுப்பிலிருந்த என்னுடனும் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு திரு.வ.ஸ்ரீகாந்தன் வருவாரெனக் கூறியிருந்தார். நானும் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தேன். எனது ஓய்வுநாளும் நெருங்க நான் கல்வி வலயம் சென்று கல்விப்பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரனிடம் எனது நிலைபற்றிக் கூறியபோது, அவர் பாடசாலையின் பகுதித் தலைவர்களை அழைத்து அவர்களின் ஆலோசனையின்படி சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கலாமெனக்கூறி அவரின் பெயரைத் தரும்படி கேட்டிருந்தார். அதன்படி பகுதித்தலைவர்களின் கூட்டத்தில் திரு.இ.கைலைவாசனிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பதாக முடிவு காணப்பட்டது. அவ்வேளையில் கல்விப் பணிப்பாளர் பதவியுயர்வு பெற்றுச் சென்றதனால் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கடிதப்படி திரு.இ.கைலைவாசனிடம் பாடசாலையின் பொறுப்புக்களை ஒப்படைத்து **05-09-2010**இல் ஓய்வு பெற்றுக்கொண்டேன்.

திறமை, ஆற்றல், வெளிப்படைத்தன்மை, மிகுந்த ஆளுமை, பாடசாலையின் நோக்கத்தை முன்னெடுக்கும் திறன், தொழில்வாண்மைத் தகைமை, தலைமைத்துவம், எதையும் திட்டமிடும் ஆற்றல், இணைபாடவிதானச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தன்மை, பௌதீகவள முகாமைத்துவம், நிர்வாக முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், சமூகத் தொடர்பாடல், சேமநலன் பற்றிய அறிவுடைமை, ஒழுக்காற்றுத்திறன், ஆசிரியர் மாணவர்களுக்கான ஆலோசனை, தன் மனதுக்குச் சரியெனப்படும் கருத்துக்களை எடுத்துரைக்கும் திறன் போன்ற சிறப்புக்களே சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இவரின் இடமாற்றத்தை விரும்பாமைக்கான காரணங்களாகும்.

விக்ரோறியாக் கல்லூரிச் சமூகம் மேற்கண்ட அவரின் ஆற்றல்களை தமது சமூகத்திற்குப் பெற்றுக்கொடுக்க பெரு முயற்சி செய்து வெற்றி கண்டது. நான் இளைப்பாறிய ஓரிரு நாட்களில் பாடசாலைக்கு வருகை தந்து 14-09-2010இல் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் கல்லூரியின் பொறுப்பை திரு.இ.கைலைவாசனிடமிருநது பெற்றுக் கொண்டார். இவரின் வருகையால் பாடசாலைச் சமூகம் மகிழ்ச்சியடைந்தது.

**எங்கு கல்வி கட்டில்லாது ஓங்குமோ**
**அறிவாம் ஆறு எங்கு அழிவதில்லையோ**
**எங்கு மக்கள் தலைநிமிர்ந்து நிற்பரோ**
**எங்கே குறுகிய தன்மையின் சின்னமாக**
**உலகம் புலர்வதில்லையோ**
**எங்கே தளர்விலா முயற்சி எங்கும் – ததும்பி**
**ஏகமாய் பொங்குமோ நிறைவினை**
**நோக்கி கரங்களை நீட்டுமோ**
**அங்குதான் சுதந்திர அமரநாட்டு**
**ஒளியில் தாய்நாடு கண்மலரும்.**

**(ரவீந்திரநாத் தாகூர்)**

திரு.வ.ஸ்ரீகாந்தனின் தலைமைத்துவ காலமான 14-09-2010 தொடக்கம் 10-03-2014 வரைக்கும் விக்ரோறியாக் கல்லூரி பல வழிகளிலும் பெருமை பெற்றுக்கொண்டது. வழுவாது, சோராது, துவளாது, சலியாது, தடம்புரளாது பாடசாலையை வழிநடத்திச் சென்று ஓய்வுபெற்றுக் கொண்டார். அவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எல்லாம்வல்ல இறைவனின் அருள்கிடைக்கும்.

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப்படும்"**


இது வள்ளுவர் வாய்மொழி. வள்ளுவர் கூறியவை அன்றும் இன்றும், என்றும் பொய்யாமொழி. எச்சம் என்பது காரியம், அதை உண்டுபண்ணியகர்த்தா காரணம். பேராசிரியர் மு.வரதராசன் கருத்துப்படி தக்கவர், தகாதவர் என்பது அவருக்குப்பின் எஞ்சி நிற்கும் புகழாலும், பழியாலும் அறியப்படும் என்றார்.



## புனரமைக்கப்பட்ட றிஜ்வே மண்டபம்
## மாணவர்பாவனைக்கு கையளிக்கப்பட்டபோது...







# 400 மீற்றர் ஓடுபாதை மைதான திறப்பு விழா பதிவுகள்







# அதிபர் வழிநடந்த பாதைத் தடங்களிற் சில



**விக்ரோறியன்,**
**வைத்தியகலாநிதி ஆ. காந்தநேசன்**

அகவை அறுபதை எட்டியிருக்கும் எமது விக்ரோறியாவின் ஓய்வுநிலை அதிபர் திரு.வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்கள் இக் கல்லூரிக்கு ஆற்றியிருக்கும் பணிகள் அளப்பரியன. அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள் சுறுசுறுப்பானவர். கூர்மையான அவதானம் உள்ளவர்.

**"நோய் நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்**
**வாய் நாடி வாய்ப்பச் செயல்"** என்னும் வள்ளுவர் வாக்கிற் கிணங்க கல்லூரியின் கல்விநிலை பற்றி அலசி ஆராய்ந்து சரியானபடி பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கேற்றபடி தனது முடிவுகளை முன்வைத்தார்; நடைமுறைப் படுத்தினார். இவை பெரும்பாலானோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தரம் 6இல் அனுமதி பெறவரும் மாணவர்களைத் தகுதியானவர்களாக ஆக்குமாறு ஊட்டற்பாடசாலைகளுக்கு ஆரம்பத்திலேயே எமது அதிபரால் அறிவுறுத்தப்பட்டது. இவரது தீர்க்கதரிசனம் எமது கல்லூரிக்கு மட்டுமல்ல, இக்கிராமத்துப் பிள்ளைகளுக்கும் நன்மையாக அமைந்தது. அனைத்து ஊட்டற் பாடசாலைகளும் உஷார் அடைந்தன. இன்னும் அடையவேண்டியுமுள்ளன. இனிவரும் அதிபர்களும் இந்நிலையைப் பேணுவதன் மூலம் கல்லூரியை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்ல முடியும். இதற்கு வித்திட்ட பெருமை திரு.வ.ஸ்ரீகாந்தன் ஐயாவையே சாரும். இது கல்லூரி வரலாற்றில் பொறிக்கப்படவேண்டிய விடயம் ஆகும்.

இவரது காலத்திலேயே உள்ளக வீதிகள் செப்பனிடப்பட்டன. மைதான விஸ்தரிப்பு நிறைவுற்று சர்வதேச தரத்திலான 400m ஓடுபாதை அமைக்கப்பட்டது. தரமான சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டது. பிரதான மண்டபம் மாணவர் அமரக்கூடியதாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. மிகக் குறுகிய காலத்தில் தான் சாதிக்க நினைத்த அனைத்துச் செயல்களையும் திட்டமிட்டபடி நிறைவேற்றிக் கல்லூரியை வானுயர உயர்த்தி வளத்தையும் பெருமையையும் சேர்த்திருக்கிறார்.

இவ்வருடம் பாடசாலையில் அனுமதிபெற அலைமோதிய மாணவர் குழாம் இதற்குச் சாட்சியாக உள்ளது. ஒரு கல்லூரியின் வளர்ச்சியை அங்கு அனுமதி பெற விழையும் மாணவர் எண்ணிக்கை சுட்டி நிற்பது அனைவரும் அறிந்த விடயம். அந்த வகையில் கடந்த மூன்று வருடமும் கல்லூரி வளர்ச்சிக்காக இரவு பகலாகச் சேவையாற்றிய எமது அதிபர் பாராட்டுக்குரியவர். கல்லூரி வரலாற்றில் என்றென்றும் மறக்கமுடியாதவர். அவர் தமது ஓய்வுக்காலத்தை நீண்ட ஆயுளோடு தனது குடும்பத்தினருடன் மகிழ்வோடு வாழ இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

# ஆளுமையும் ஆற்றலும் மிக்கவர்



**திரு.கு.விமலன்**
அதிபர்,
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மனமகிழ்வடைகின்றேன்.

இவர் 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதை என் அகக் கண்ணில் நினைத்துப் பார்க்கின்றேன். எமது பாடசாலை மிகக் குறுகிய காலத்தில் கல்விப் புலத்தில் பெரிய பாடசாலைகளுக்கு ஈடாக வளர்ந்துகொண்டிருந்த காலகட்டம் அது. அதன் தொடர்ச்சியான வளர்ச்சியில் இவரும் பெரும் பங்காற்றினார். இவர் சண்டிலிப்பாய் கிராமத்தைச் சேர்ந்தவராகையால் இச்சமூகத்தை நன்கறிந்து சமூகத்துடன் நெருக்கமான உறவினைக் கொண்டு பாடசாலையை வளர்த்தெடுத்தார்.

அதிபர் ஒருவரிடம் என்னென்ன திறமைகள், நுட்பங்கள் இருக்க வேண்டுமோ அவற்றை இவரிடத்தில் கண்டுகொண்டேன். தான் ஆசிரியர் களிடத்தில் முன்மாதிரியாகச் செயற்பட்டு அவர்களையும் முன்மாதிரியாகச் செயற்பட வைத்தார். இவருக்கு எப்போதும் கல்லூரி பற்றிய சிந்தனையாகவே இருக்கும். 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் சீரற்ற சூழ்நிலை காரணமாக வடக்கில் "ஊரடங்கு" அடிக்கடி அமுலாக்கப்பட்டிருந்தது. ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரத்தில் ஒரு முறையாவது கல்லூரிக்கு வந்து விடுவார். தன் வீட்டுத் தேவைகளைக் கூட நிறைவேற்றுவாரோ தெரியாது, கல்லூரியே வீடெனக் கருதியவர்.

"துணிந்து நில் எதையும் வெல்" என்ற பொன்மொழிக்கிணங்கத் தனது அதிபர் சேவைக்காலத்தைத் துணிச்சலோடு அலங்கரித்தவர். ஒரு விடயத்தைச் சரி எனத் தெரிந்து கொண்டால் அதனைச் செயற்படுத்துவதில் பின்நிற்கமாட்டார். அடுத்தவர்களின் உதவி கிடைக்காவிட்டாலும், தானே தனித்து அதனைச் செயற்படுத்தி முடிப்பவர். உயர் அதிகாரிகள் என்றாலும் அவர்கள் ஏதேனும் தவறு செய்தால் அதனைப் பயமின்றி நேரடியாகச் சுட்டிக்காட்டுவார். இதனால் பிரச்சினைகளை எதிர்கொண்ட சந்தர்ப்பத்திலும் அவர் பின்வாங்கியதில்லை. அவர் எப்போதும் சொல்லிக்கொள்வது "நாம் எமக்கென்று எதுவும் கேட்கவு மில்லை, செய்யவுமில்லை, எல்லாம் பிள்ளைகளுக்காகவும் பாடசாலைக்காகவும் தானே செய்கிறோம். ஆதலால் நாம் யாருக்கும் பயப்படத்தேவையில்லை" என்று. இது அவரிடத்தில் நான் அடிக்கோடிட்டுக் கற்றுக்கொண்ட சிறப்பான விடயமாகும்.

அவரது இன்னுமொர் ஆளுமை, "அழகியல் பார்வை". எங்கள் கல்லூரியின் கவின்நிலையை வளர்த்தெடுப்பதில் முன்னின்று பாடுபட்டவர். பாடசாலை நல்ல சூழலுடன் இருந்தால்தான் அங்கு கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் புத்துணர்ச்சியுடன் செயற்படுவார்கள் என்ற உளவியலில் உறுதியாக இருந்தார்.

கடமையில் கருத்துடனும் கண்ணியத்துடனும் செயற்படுவதால் எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல், பெரியோரை மதிக்கும் பண்பு, அனைவரையும் அரவணைக்கும் அன்பு, தானிருக்கும் இடம் எப்போதும் அழகாக இருக்கவேண்டும் என்ற அழகியல் உணர்வு, எல்லோருக்கும் உதவும் மனப்பாங்கு, நேர முகாமைத்துவம் போன்ற பண்புகளை இவரிடத்தில் நான் கண்டு கொண்டேன்.

தன்னுடைய மாணவர்கள் இலங்கையில் எப்பகுதியில் போட்டிகளில் பங்கு பற்றினாலும் அவர்களுடன் தானும் சென்று களத்தில் நின்று அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கம் கொடுத்து வெற்றிகளைப் பெறவைத்தார். இதனால் ஏற்படும் மகிழ்வு நிலையை எப்போதும் பேணி வந்தார்.

எமது கல்லூரியின் சிறப்பார்ந்த கட்டொழுங்கு, பண்பாடு, பரீட்சைப் பெறுபேறுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகள், பாடசாலை விழாக்கள், வகுப்பறைச் சுத்தம், மாணவர் நலனோம்பல் போன்றவற்றையெல்லாம் திட்டமிட்டுச் சிறப்பாகச் செயற்படுத்தி பாடசாலையை முன்னேற்றினார்.

கல்லூரியை, கல்லூரி சார்ந்த சமூகத்தைத் தன் சளைக்காத உழைப்பால் உயர்த்தி வைத்த உங்கள் உயர் சேவைக்கு ஒய்வில்லை. மனிதகுல வரலாறு உங்கள் நற்பணிகளை எப்போதும் நன்றியோடு போற்றிக் கொண்டேயிருக்கும். உங்கள் வாழ்வின் எல்லாக் காலமும் கல்வி அழகால் நிறைந்த வசந்த காலமாக மிளிர வாழ்த்துகின்றேன்.



# செயற்றிறனும் தியாகமும் நிறைந்தவர்



**திரு. நா.கேதீஸ்வரன்**
அதிபர்,
யா/அருணோதயாக் கல்லூரி.

அகவை அறுபதில் மணிவிழாவினைக் கொண்டாடும் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் அக மகிழ்வடைகின்றேன். இவர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் நானும் உபஅதிபராகப் பணியாற்றினேன். அக்காலத்தில் இவருடன் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிச் சமூகத்திற்கு இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

காலத்தின் தேவை அறிந்து தன் பிறப்பின் நோக்கம் தெரிந்து தனது கடமையை உணர்ந்து "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் செயற்கரிய செய்பவர் எவரோ அவரையே இவ்வுலகு போற்றும்" அவரே வரலாற்றில் என்றும் நிலைத்து வாழ்வர். இவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாகத் திகழ்பவர் திரு.வ. ஸ்ரீகாந்தன் அவர்கள். இவர் கோபக்கனல் கொண்ட அதிகாரம் மிக்க ஒருவராக அன்றி அன்பு வழியில் அனைவரையும் வழி நடாத்திச் சென்ற ஒரு சிறந்த முகாமையாளன். ஏற்றமிகு பண்புகளும் தோற்றச்சிறப்பும் கடமையுணர்வும் கண்ணியமும் மிக்கவர். இவர் ஒரு பிரபல கணக்கியல் ஆசிரியராகவும் விளங்கியவர்.

ஒரு கல்லூரியின் உயர்வும் தாழ்வும் அதிபரது ஆளுமையுடன் கூடிய நிர்வாகச் செயற்திறனிலும் தியாகத்திலுமே முழுமையாகத் தங்கியுள்ளது எனலாம். கல்வி என்பது மனிதனை முழுமைப் படுத்தும் தூய நெறியாகும். சிறந்த கல்விப் பெறுபேறுகள், உயர் பல்கலைக் கழக அனுமதி மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் எனப் பல வழிகளிலும் கல்லூரியை உயர்த்திய அதிபரின் ஆளுமை நிறைந்த உன்னத பணியையும் அர்ப்பணிப்பையும் தியாக மனத்தையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் திரு.ச. சிவநேஸ்வரன் அவர்களையடுத்து திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் அக்கல்லூரியை தொடர்ந்து உயர்த்திச் சென்று அதன் வளர்ச்சிக்காக முழுமூச்சாக நின்று அயராது உழைத்ததுடன் கல்லூரியின் கவின் நிலையிலும் கூடிய பங்கெடுத்தவர்.

இவருடைய ஆளுமையை இனங்கண்ட கல்விச்சமூகம் இவரை விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபராக்கியது. இவர் தனது காலத்தில் விக்ரோறியாக் கல்லூரியை சகல துறைகளிலும் வளர்ச்சியடையச் செய்ததோடு இக்கல்லூரியின் பெயரைத் தேசிய மட்டம் வரை பொறிக்கச் செய்தவர்.

இத்தகைய சேவையாளன் தன் சேவையிலிருந்து ஓய்வு பெற்று மணிவிழாக் காண்பது பெருமைக்குரியதாகும். இவரது ஓய்வுக்காலம் வளமானதாக அமைய இறையருளை வேண்டி என்றென்றும் அவர் சீரும் சிறப்புமாக வாழ எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# மணிவிழா நாயகன் வழிநடந்த பாதையிலே...



**திருமதி. தனபாலசிங்கம் நேசராணி**
விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்.

விக்ரோறியா வாசலிலே மருதமரம்
வானுயர்ந்த வாகை மரம்
கையினிலே மூங்கில் தடி
காண்பவரின் துடுக்கடக்கி
ஆதரித்து ஆற்றுவதற்கு
அவருமொரு ஆலமரம்.

கல்லூரி ஆரம்ப நேரம்
ஆசிரிய ஓய்வறையில்
மெலிதுயர்ந்த தோற்றம்
மெல்லிய காலடிச்சத்தம்
திடுமென முன்னின்றால்
திகைத்திடும் எம்மவர் கூட்டம்

பாட முதல் மணி ஒலிப்பதற்குள்
பாயும் நதியாக வரும் அதிபரை
பார்த்திருந்து பதறுவர்
பள்ளி வராத மாணாக்கர்
பாடசாலை வருகைக்குழுவிற்கு
பத்துமாத வேலை முடியும்.

அன்னவர் வேகத்திற்கு ஈடுநிற்க முடியாமல்
ஓடிப் பின் செல்வர்
ஒரு செய்தி கூறுவதற்கு
ஆயினும் முடியாமல்
அலுத்துக் கொள்வர் பலரிங்கே.

கல்லூரியின் கவின்நிலையைக்
கருத்துடனே பேணி வந்தார்
"கட்டர்" தனைக் கொண்டு
கச்சிதமாய் மரம் வளர்த்தார்
கத்தரிக் கன்றென்ன கமுகமரமென்ன
இத்தலம் செழிக்கவென்றே இனிதாய் நாட்டிடுவார்.

ஓடிக் கல்லூரி வளாகத்தில்
உலவிவரும் வேளையிலே கஞ்சல்

நாடிப் பொறுக்கிடுவார்
நல்ல கருத்தூன்றிடுவார்
பார்த்திருந்த மாணவரும்
பாங்குடனே பின்தொடர்வர்

எந்தப் போட்டி எங்கு நடப்பினும்
அந்தப் போட்டி முடிவுறும் வரை
பசி நோக்காது கண் துஞ்சாது
மாணவர் கூடவே நின்று
ஆங்கொரு வெற்றி கண்டு
அதிலொரு அமைதி காண்பார்.

ஈண்டிங்கே இப்படியொரு
தலைவன் இருப்பின்
வேண்டாமே பல செல்வம்
இது போதும் எமக்கென்று
மாண்புறுவர் மாணவர்
மானிலத்தில் வீறுடனே.

ஆசிரியர் கூட்டத்தில்
இடி இடிக்கும் அனல் பறக்கும்
ஆனாலும் அடுத்தவரின்
தலையீடு ஏதுமின்றி
ஆசிரியர் குழாமிற்கு
பாதுகாப்புக் கவசமிவர்

சிவகாமி சமேத நடராஜப் பெருமானை
சிரமேற் கொண்டன்னார் சிந்தையிலே வைத்ததனால்
பொங்கல் பூஜைகளும் புதுவருடப் பிறப்புமிங்கே
என்றும் கலகலக்கும்
இனிய கைவிசேடத்துடன்
இனிப்பான பட்சணம் வரும்.

இரவு பகல் பாராமல்
இவர் செய்த சேவையினால்
இறும்பூதி எழுந்து நிற்பாள்
இனியவளாம் அன்னையவள்
இளநகையை உதிர்க்கின்றாள்
இவர் போல யாரென்று

மனை மங்கலம் சிறக்க
மக்களும் சிறந்து நிற்க
மனையாளும் மனம் மகிழ
மங்கலம் பொங்கிடவே
மாண்பு மிகு அதிபர் தனை
வாழ்த்துகின்றோம் நீடூழி வாழ்கவென.

# மணிவிழாக்காணும் எங்கள் அதிபர்



**திருமதி. செல்வராணி செல்லையா**
அதிபர்
யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலை.

"அரிது அரிது மானிடப் பிறவியாகப் பிறப்பது அரிது" அதனிலும் அரிது மானிடப் பிறவியாகப் பிறந்தவர்கள் மானிடப் பண்புகளுடன் வாழ்வதாகும். இன்று மணிவிழாக்காணும் எங்கள் பெருமைக்குரிய ஸ்ரீகாந்தன் அவர்கள் சுழிபுரத்தில் குடியிருப்புப் பகுதியில் அந்தணர் குலத்திலே தோன்றி, விக்ரோறியா அன்னையின் மடியிலேயே மாணவனாகத் தவழ்ந்து கல்வி கற்று சிறந்த சான்றோனாக வாழ்ந்து கல்வி உலகிலேயே தனது சேவையை ஆற்றி தான் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியராகவும் பணியாற்றியவர். பின்னர் வேறு பாடசாலைகளில் ஆசிரியர், அதிபராகவும் பணியாற்றி தனது ஓய்வுக் காலத்திற்கு அண்மையில் விக்ரோறியாக் கல்லூரியிலேயே அதிபராகப் பணி செய்த பெருமை அவருக்கே உரியது. பெற்ற தாயையும், பிறந்த நாட்டையும் நேசிப்பவனே சான்றோன் ஆவான். தான் கல்வி பயின்று உயர்வடைந்த விக்ரோறியா அன்னையை நேசித்து உயர் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஐயா அவர்கள்.

ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள் கல்வி கற்கும் சம காலத்தில் நானும் அங்கு கற்றமையால் அவருடைய பண்புகளையும் எடுத்துக்கூறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. நாங்கள் ஒன்றாகக் கற்கும் காலத்தில் எல்லோருடனும் மலர்ந்த முகத்துடனும், பண்பாகவும், அன்பாகவும் பழகும் பண்பு கொண்டவர். கல்வி கற்கும் காலத்திலேயே தலைமை தாங்கும் ஆளுமைப்பண்பு நிறைந்தவராகவே திகழ்ந்தார். தனது சேவையின் பிற்பகுதியிலே கல்விமானாக, சிறந்த ஆசானாக, சேவையாளனாக, சிறந்த நிர்வாகியாக அதிபர் பதவி என்ற பெரிய பொறுப்பினைத் தாங்கி வெற்றிநடையுடன் தனது சேவையை ஆற்றிய பணி அளப்பரியது. உயர் பதவியில் இருக்கும்போதுகூட கல்வி பயிலும் காலத்தில் இருந்த அதே பண்புகள் மாற்றமின்றிக் காணப்பட்டது. விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராக சீரிய சேவையை ஆற்றிக்கொண்டிருக்கும்போதும் அன்று அவரிடம் கண்ட அன்பான பேச்சு, மலர்ந்த முகத்துடன் வரவேற்கும் பண்பு காணப்பட்டது. அதிகாரம், அகங்காரம் என்ற பண்புகளுக்கு எள்ளளவும் இடங்கொடாது, விளைந்த நெற்கதிர் எவ்வாறு தலைவணங்கி நிற்கின்றதோ அவ்வாறே உயர் பண்புகளையும், நிறைந்த பொறுப்புக்களையும் தன்னகத்தே சுமந்துகொண்டு எல்லோருடனும் பேதமின்றி புரிந்துணர்வுடன் பழகிச் செயலாற்றிய செயல் வீரர். ஐயா அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். அத்துடன் அவர் தனது மனைவி மக்களுடன் நீடிய ஆயுளைப் பெற்று பல்லாண்டு வாழ எல்லாம்வல்ல பறாளையம்பதி விநாயகரும், சிவசுப்பிரமணியரும் அருள்புரிய வேண்டி விடைபெறுகின்றேன்.

# என்றும் வாழ்க இனிது



**பண்டிதை திருமதி. பொன். பாக்கியம்.**
ஓய்வுநிலை ஆசிரியை,
யா/விக்ரோறியாக் கல்லூரி.

எல்லாச் சிறப்புக்களும் உடையது ஈழவளநாடு. அந்நாட்டின் வடபாலுள்ளது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்கேயுள்ள பகுதி வலிகாமம் மேற்காகும். வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள தனிச்சிறப்புமிக்க கிராமம் தான் சுழிபுரமாகும். சோழர்கள் ஆட்சி செய்த சோழியபுரம் காலப்போக்கிற் சுழிபுரமாயிற்று. மக்கள் குடியிருப்பு, வளம் நிறைந்த வயற்பகுதி, காட்டுப்பிரதேசம், ஸ்ரீராமர் திருவடி பதித்த தீர்த்தக் கரையை உடைய கடற்பகுதி என்பன இக்கிராமத்தை அலங்கரிக்கின்றன.

நான்கு எல்லைகளிலும் அமைந்திருக்கின்ற கோவில்கள், கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் பாடசாலைகள், மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தபாற்கந்தோர், வியாபார நிலையங்கள் யாவையுமே நிறைவாக உள்ள இக்கிராமம் தமிழ் சைவப் பாரம்பரியத்தைப் பேணிக்காத்த ஒரு சிறப்புமிக்க கிராமமாகும். அக்காரணத்தினால் இந்தியாவிலிருந்து பிராமணோத்தமர்களை வரவழைத்து அவர்களுக்கென்றே ஊரின் மத்தியில் "குடியிருப்பு" என ஒரு தனி இடத்தை அமைத்துக் கொடுத்துப் பக்தியும், புனிதமும் பேணி வாழ்ந்தனர் நமது கிராமத்தவர். அத்தகைய பிராமணோத்தமர்களில் ஒருவர் தான் குடியிருப்பில் வாழ்ந்த சிவசுப்பிரமணியக் குருக்களாவார். இவருடைய பிள்ளைகளுள் சமஸ்கிருத பண்டிதர் வரதராஜசர்மாவும் ஒருவராவார். இவர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் பிரதமகுருவுமாவார். இவரது இல்லறத் துணைவியாகச் ஸ்ரீமதி ஞானாம்பிகை அம்மா அவர்கள் வந்து அமைந்தார்கள். அவர்கள் குடும்பம்; மக்கட் சிறப்பும், மக்களாற் சிறப்பும் பெற்ற குடும்பமாகும்.

அத்தகைய சிறப்புமிக்க மக்களுள் ஒருவர்தான், சுழிபுரத்துக்கு ஒளியூட்டும் ஞானக்கண்ணாகிய விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற பிரம்மஸ்ரீ. வ.ஸ்ரீகாந்தன் ஆவார். அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்களுக்கும் விக்ரோறியாக் கல்லூரிக்கும் நான்கு நிலைகளில் தொடர்புகள் உள்ளன. ஒன்று அவர் சுழிபுரம் மண்ணின் மைந்தன், இரண்டு பாடசாலையின் பழைய மாணவன், மூன்று பாடசாலையின் முன்னாள் ஆசிரியர், நான்கு இப்பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர்.

விக்ரோறியாக் கல்லூரியின் தோற்றத்துக்கும், அதன் வளர்ச்சிக்கும் பாடுபட்டுழைத்த அனைவருக்கும் நாம் நன்றியும் வணக்கமும் கூறவேண்டும். இன்று ஓய்வு பெற்றிருக்கும் அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள் காலத்தில் அன்னை பல

வளங்களாலும் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றாள். அவரோடு கற்றவர்கள், அவரிடம் கற்றவர்கள், எங்கள் கிராமத்தவர்கள், நலன்விரும்பிகள் யாவரும் நிதியை அள்ளி வழங்கினார்கள். ஸ்ரீகாந்தன் ஐயாவின் புகழ் உயர்ந்தது.


ஐயா அவர்கள் ஆசிரியராகக் கற்பிக்கும் பொழுது நானும் விக்ரோறியாவிற் கற்பித்தேன். அதனால் அவரை நன்கறியும் வாய்ப்புக் கிடைத்தது. பெரியோரை மதித்தல், மாணவரது ஒழுக்கம் பேணல், சக ஆசிரியருடன் நட்பினைப் பேணல், சமய ஒழுங்குகளுக்கு உதவிபுரிதல் என்பவை அவரிடம் காணப்பட்ட பண்புகளாகும்.

அதிபராகக் கடமை புரிந்த காலத்தில் நேரம் பார்க்காது, அயராது உழைத்தார். ஒவ்வொருவரதும் தரமறிந்து உதவிபுரிந்தார்.

இத்தகு பெருமைக்குரிய மணிவிழாக் காணும் ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள், தமது மனைவி பிள்ளைகளுடன் எல்லாச் சிறப்புக்களும், புகழும் பெற்றுப் பல்லாண்டு வாழ பறாளை விநாயகர், சிவசுப்பிரமணியர், விசவத்தனை முருகப்பெருமான், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆகிய தெய்வங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.



# மகத்தான சேவையாற்றிய மாணிக்கம்



**திரு. மு. நடராஜா**
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி),
வலிகாமம் கல்வி வலயம்.

*பிரம்மஸ்ரீ. வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தை அளித்த உணர்வுமிக்க மணிவிழாக் குழுவினருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.*

**"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்"**

*என்ற வள்ளுவர் வாக்கினைத் தாரக மந்திரமாகக் கொண்டு மாணவச் செல்வங்களின் வாழ்க்கையிலே எடுத்தியம்பி வழிகாட்டிய மாமனிதராவார். சிந்தித்து செயற்பட்டால் நீ சந்தித்த சோதனைகளைச் சாதனையாக்கலாம் என ஊக்குவிப்பார்.*

*சேவை ஒன்றே மாணவர்க்குஎன தேடி வாழ்ந்தவர்*
*செய்யும் தொழில் தெய்வமாகப் போற்றி வாழ்ந்தவர்*
*கால்வலியோ மெய்வலியோ சோர்ந்து போகமாட்டார்*
*தன் கடமைகளைச் செய்வதிலே வீறு கொண்டு நிற்பார்*
*பள்ளிவரும் பிஞ்சுகளைப் பரிவுடனே அணைத்து*
*பார்புகழ் செய்வதிலே பணிபலவும் புரிந்தார்*
*ஏணிப்படி ஏற்றி ஏற்ற கல்வி புகட்டி*
*உயர்வான கல்விக்கு வழிகளையும் அமைத்தார்*
*இணைப்பாடவிதானத்தில் தோல்விகள் வந்தாலும்*
*தோல்வியே வாழ்க்கையாக அமையக்கூடாது எனவும்*
*உனக்குள் திறமைகள் உண்டு அதைநீ உருவாக்கிக்கொள்*
*சாதிக்க பிறந்தவன் என்பதை மறந்துவிடாதே என ஊக்குவித்தவர்*
*கற்றல் கற்பித்தல் பணிகளையே கருத்திற்கொண்டு நிற்பார்*
*கருணையோடு மாணவரை களத்தில் நிற்கச் செய்வார்*
*வீண்பேச்சு விதண்ட வாதத்திற்கு இடமளிக்கமாட்டார்*
*விருப்போடு கற்பித்தலை முன்னெடுக்கச் செய்வார்*
*கற்றலுடன் இணைப்பாடவிதானத்தையும் கருத்திற்கொண்டு*
*களத்தினிலும் வெற்றிதனைச் சுவீகரித்துச் செல்வார்*
*மாகாண போட்டிகளுக்கு மோட்டார் சைக்கிளில் வவுனியா சென்று*
*வெற்றிமேல் வெற்றிக்கு ஊக்குவிப்புக் கொடுப்பார்*

கருணையோடு மாணவரை அனுசரித்துக் கொண்டு
வீறுநடை போடவும் வழிவகுத்து நிற்பார்
எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் கண்டு அவ்வழி சென்றவர்
அத்தகு உயர்வான அதிபராக விளங்கிட தடம்பதித்து
சண்டிலிப்பாய் இந்துவில் சாதனை பல புரிந்தவர்
கடமையே கண்ணாகக் கொண்டு சேவை செய்வதுடன்
மாகாணம், தேசிய போட்டிகள் யாவற்றிற்கும்
களம் பதித்து நின்று மாணவரின் வெற்றிக்காய்
அயராது பணியாற்றி வெற்றிகண்ட மாணிக்கமாய் விளங்கினார்
மகத்தான சேவை கண்டு பதவி உயர்வு பெற்று
விக்ரோறியா அன்னை அழைத்தபோதும்
சண்டிலிப்பாய் அன்னையைத் தவிக்கவிடாது
தகுந்த அதிபரை நியமித்த பின்பே அழைப்பேற்றார்
மாமனிதரின் சேவையாலே விக்ரோறியா அன்னையும்
புதுப்பொலிவு பெற்று பௌதிகவளத்துடன்
கல்வியிலும் இணைப்பாடவிதானத்திலும்
வெற்றிமேல் வெற்றியாகப் பெற்று பெருமிதமடைந்தார்
முயற்சி செய்து தோற்றவர்களும் இல்லை
முயற்சி செய்யாது வென்றவர்களும் இல்லை என்பதை
துடுப்பாட்டம், எல்லே, கரப்பந்தாட்டம், கலை என்பவற்றிலும்
மாகாணம், தேசியமட்டம் வரை வெற்றியடையச் செய்தவர்
அசையாத ஆசிரியரையும் அசையச் செய்து
அரும்பணி ஆற்றிடவும் அன்புடனே வழிவகுத்தார்
ஆசிரியர் கூட்டுறவே கல்வியின் வளர்ச்சிக்கு
உரம் ஊட்டும் என்பதை உணர்த்தியவர்
அத்தகு சிறப்பான அதிபராக விளங்கிய எங்கள் அதிபர்
ஸ்ரீகாந்தன் அவர்கள் பன்முக ஆற்றலுடன்
மேலும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ
எல்லாம்வல்ல பரமேஸ்வரி அம்பாள் அருள் வேண்டுகின்றேன்
உங்கள் வாழ்வில் நீங்கள் செய்த பணி மலையின் விளக்கென
அணையாது மாணவசமூகம் காப்பாற்றுவார்கள் என்பது
"வெள்ளிடை மலையாகும்"
மனைவி மக்களுடன் நீண்டகாலம் வாழ்ந்து சமூக சேவையாற்ற
வாழ்த்துகின்றேன்.

# உயர்ந்த மனிதன்



**திரு. சி. சிவகணேசசுந்தரன், SLPS - 1**
ஓய்வுநிலை அதிபர்,
சுழிபுரம்.

கண்ணியம் பொருந்திய அதிபர் ஸ்ரீகாந்தனுக்கு மணிவிழா, மலர் வெளியீடு என்பன அவரையும் அவரது ஆற்றல், சேவை என்பவற்றை அறிந்தவரின் ஆர்வம், கடமை என்பவற்றின் விளைவாகும்.

அன்பர் ஸ்ரீகாந்தனின் குடும்பப்பின்னணி அவரின் தந்தை, பேரன் என்பவர்களை அறிந்தவர்களுக்கு அவரது ஆற்றல், சேவை முதலிய சிறப்புக்கள் வியப்பை ஏற்படுத்தமாட்டாது. மேலும் ஒரு படி சிறப்பைக் கொடுக்கும். இவரது தந்தையார் மதிப்பிற்குரிய வரதராஜக்குருக்கள் அவர்களும் பேரனார் மதிப்பிற்குரிய சபாபதிக்குருக்கள் அவர்களும் மணிவிழா கொண்டாடி கௌரவிக்கத்தக்க வகையிலேயே வாழ்ந்தவர்கள். கல்விச்சிறப்பும், கர்வமின்மையும் பொறுமையும் ஒருங்கே அமைந்து நிறைகுடம் போல் தளம்பாமல் அனைத்து விடயங்களிலும் வெற்றிகொண்டவர் இவரது தந்தையார்.

இவரது பேரன் திரு.சபாபதிக்குருக்கள் அவர்கள் அக்கால குருக்கள் சமுதாயத்தில் மதிப்பும் புனிதமும் மிக்கவராகப் பிரகாசித்தவர் ஆவர். அவரது கிரியை முறைகளினால் கிராமம் வளம் பெறும் என்று கூறுவார்கள். இவ்வாறான வழித்தோன்றலில் வந்தவர்தான் அன்பர் ஸ்ரீகாந்தன். இப்பெரியவர்களது அரிய பண்புகளைக் கொண்டிருந்ததோடு தமது மூதாதையர்களுக்கும், குடும்பத்தினருக்கும் பெருமை சேர்க்கும் வண்ணம் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டவர். மேற்படிப்பையும் புறந்தள்ளி குடும்பப் பொறுப்பினை ஏற்றவர்.

படிக்கும் காலத்தில் கல்வியில் நாட்டம் கொண்டவராகவும் ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் இருந்தார். ஆசிரியர் கலாசாலையில் பலநூறு பேரில் பெயர் சொல்லுமளவிற்கு அதிபர், விரிவுரையாளர்கள், நண்பர்கள் அனைவரிடமும் செயற்றிறன் உள்ளவராக விளங்கினார். அனைவரும் அவருடைய நண்பர்களாகவே இருந்தனர். கற்பிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவராக நல்ல ஆசானாக விளங்கினார். மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, பல நன் மாணாக்கர்களையும் உருவாக்கினார். அவர்களில் பலர் பெரிய பதவிகளில் உள்ளவர்களாகவும் இப்போதும் இவரை ஆசானாக மதித்து நடப்பவர்களாவும் காணப்படுகின்றனர். இது இவர் சிறந்த ஆசிரியராக விளங்கியதை எடுத்துக் காட்டுகிறது. பின்னர் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து நல்ல அதிபரானார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் சிறப்புத்திறன் (Special skilled Principla) என்ற கௌரவம் இவருக்கு 2012ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இவர் சேவை புரிந்த பிரதேசங்களில் இப்பொழுதும் இவருக்கு மிகுந்த மதிப்பும் கௌரவமும் அப்பிரதேச மக்களால் கொடுப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. கல்வித் திணைக்களத்தில் இவரை நல்ல அதிபராக, நல்ல நிர்வாகியாக, நல்ல சேவையாளராகக் கருதினார்கள். மேலதிகாரி என்று பயப்படாமல் துணிவாகத் தனது நிறுவனத்திற்குத் தேவையான உதவிகள், உரிமைகள் அனைத்தையும் வாதாடிப் பெற்றுக்கொள்வார். அதேவேளை அவர்களிடத்தில் தனக்கு உள்ள மரியாதையையும் தக்கவைத்துக் கொள்வார். அதேபோல்தான் எல்லோரிடமும் நல்ல முறையில் பழகிக்கொண்டு தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றுவதில் கவனமாக இருப்பார். அவர் விக்ரோறியாக் கல்லூரியில் ஆற்றியபணி மகத்தானது. போர்ச்சூழலில் பாதிக்கப்பட்டு மெதுவாக மீண்டுவரத் தொடங்கிய பாடசாலையை மிக விரைவாகத் தன்னிடமுள்ள அத்தனை பலங்களையும் பகல் இரவு பாராது முழுநேரமும் பயன்படுத்தி அனைவரது பாராட்டுதலைப் பெறும் வகையில் கட்டியெழுப்பினார். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற குறளுக்கு விளக்கம் கொடுக்கும் வகையில் நிர்வாகத்தை மேற்கொண்டு தனது இலக்கை அடைந்தார். யாழ். குடாநாட்டில் விக்ரோறியாக் கல்லூரியின் குரலை ஓங்கச் செய்தார்.

முக்கிய நிகழ்வுகளில் நகரப் பாடசாலைகளின் ஆட்சியை உடைத்து இப்பாடசாலையின் பெருமையை நிலைநாட்டினார். அனைவரையும் கவரக்கூடிய நிலையில் கற்கும் கற்பிக்கும் கவின்நிலையை பாடசாலையில் உருவாக்கினார். அனைத்து மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் நேரடி உறவினை ஏற்படுத்தி அவர்களை வழிநடத்தினார். பாடசாலைகளுக்குள்ளும் வெளியிலும் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான பாதுகாப்பை எந்நேரமும் உறுதிப்படுத்தினார். புதிய புதிய விடயங்களை அறியும் ஆர்வத்தைக் கொண்டிருந்தார். வெளி மாவட்டங்களிலும் தனது தொடர்பினை வளர்த்து நல்ல விடயங்களை இங்கே புகுத்தினார். சுற்றறிக்கைகள் சம்பந்தமான சகல அறிவினையும் பெற்றிருந்தார். எந்த நேரத்திலும் எங்கிருந்து கொண்டும் பாடசாலையையும் தனது குடும்பப் பொறுப்புக்களையும் தனக்கு சமுதாயம் தந்த பொறுப்பையும் செவ்வனே நிறைவேற்றி வந்தார். இதனால் இவரது குடும்பமும் சிறந்த கல்விக் குடும்பமாக விளங்குகிறது.

பாடசாலைக் காலத்திலிருந்து இன்றுவரை இவருடன் சேர்ந்து பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவருடைய சிறப்புக்களை சம்பவ ரீதியாக நிறையக் குறிப்பிடலாம். இத்தகைய ஆற்றல்மிக்க நல்ல சேவையாளனுக்கு மணிவிழா எடுத்து மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானது. நல்ல சேவையாளனுக்கு மணிவிழா எடுக்க முயற்சி செய்த அன்பர்களுக்கு என் நன்றிகள். மணிவிழா நாயகன் மேலும் நல்ல ஆரோக்கியத்துடன் குடும்பத்தவருடன் இனிதே வாழ இறைவனை வேண்டி நிறைவு செய்கிறேன்.

# பசுந்தடங்கள்



"விக்ரோறியன்"
**திரு. செ. சிவகுமாரன்**
பிரதி அதிபர்,
யா/ விக்ரோறியாக் கல்லூரி.

*இன்று மணிவிழாக் காணும் பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் ஒரு சாதனையாளராக, நிர்வாகத்திறன் மிக்க செயல் வீரராக, அர்ப்பணிப்புள்ள அதிபராகப் பார்க்கப்படுகிறார். நாம் கல்வி கற்ற காலம் எம் நெஞ்சை விட்டு அகலாது பசுமை நினைவாக அமைந்துள்ளது. சிறிய வகுப்புக்களில் வகுப்பு முதல்வராக இருந்தும், 1970, 1971 காலப்பகுதியில் விக்ரோறியாக் கல்லூரியில் வணிக மாணவ மன்றத்தின் தலைவராக இருந்து "வணிக தீபம்" எனும் சஞ்சிகையைக் கையெழுத்துப் பிரதியாக முதன் முதல் வெளியீடு செய்ததையும் இன்று நினைவுகூர முடிகிறது. வணிகமன்றத்தின் காப்பாளராக இருந்து ஆசிரியர் சிவசுப்பிரமணியசர்மா அவர்களின் அன்பிற்கும மதிப்பிற்குமுரிய மாணவனாகத் திகழ்ந்துள்ளார். அவர்களின் வழிகாட்டலில் மிளிர்ந்த தலைமை தாங்கும் ஆற்றல் இன்றும்வற்றாத நதியாக ஊற்றெடுத்துள்ளது.*

*மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் காலத்திலும் உயர்தர மாணவ மன்றத்திலும் வணிக மாணவர் மன்றத்திலும் செயலாளராக, தலைவராக இருந்து திறம்பட வழிநடத்தியதை அவர்களுக்கு அடுத்த பிரிவில் கல்வி கற்ற காலத்தில் நான் பார்த்து வியந்ததுண்டு.*

*வளரும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கேற்ப ஸ்ரீகாந்தன் சேர் அவர்களின் ஆற்றல், திறன் எல்லாம் சிறுவயதில் இனங்காணப்பட்டது என்றால் மிகையாகாது. க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும்போது கணக்கியலில் ஒரு புலி என்றுதான் கூறவேண்டும். பரீட்சை மீதி, ஐந்தொகை சமப்படாதபோது சக மாணவர்கள் அனைவரும் அவரிடம் சென்று தான் சரிபார்த்துக் கொள்வார்கள். அவரது அச்சுப்போன்ற எழுத்தும், அதிசிறந்த ஞாபக சக்தியும் அர்ப்பணிப்புள்ள தன்மையும் அயரா உழைப்பும் அவரது உயர்வுக்கு வழிவகுத்தது எனலாம்.*

*ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலும் கணக்கியலைக் கற்பிப்பதில் ஒரு விற்பன்னராகத் திகழ்ந்தவர். மாணவர்களுக்கு கல்வியுடன் ஒழுக்கத்தினையும் போதிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தவர். பிரதி அதிபராக, அதிபராகக கடமையாற்றும் காலத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அவர் "நண்பனாய், மந்திரியாய், நல்லதிபராய், பண்பிலே அரவணைக்கும அன்னையாய்" தமது கடமைகளை மிகச் சிறப்பாக ஆற்றி புகழ்பூத்த அதிபராக ஓய்வுபெற்றுள்ளார்.*

*விக்ரோறியாக் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்கும் காலத்தில் முன் பின்னாகத் தொடர்ந்த எமது உறவு சேவைக்காலத்தின் இறுதிப் பகுதியிலும் இதே கல்லூரியில் ஒன்றாகச் சேவையாற்றக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய பேறாகக் கருதுகிறேன். ஸ்ரீகாந்தன் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாக அமைய சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வணங்கி அமைகிறேன்.*

# எல்லோருக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பைப் பெற்றவர்



**திரு.நா.தனபாலசிங்கம்,**
அதிபர்,
தாவடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

யா/விக்ரோறியாக் கல்லூரியில் கடமையாற்றிய பல அதிபர்கள் பல்வேறு துறைகளில் கல்லூரியின் உயர்வுக்கு வழிகாட்டியாக இருந்தனர். ஆனாலும் கல்லூரியின் வரலாற்றிலும், சமூகத்தின் மனதிலும் குறிப்பிட்ட சில அதிபர்களது சேவைக் காலத்தையே கல்லூரியின் வளர்ச்சிக் காலமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவ்வகையில் நோக்கும் போது எம் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் அவர்களது சேவைக் காலம் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலமாக அமைந்துள்ளது. கல்லூரியின் செயற்பாடுகள், இணைப்பாடவிதானங்கள், கல்வி அடைவுகள், கல்லூரியின் கட்டமைப்பு, பௌதிக வளங்கள் யாவும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளமையை ஆவணங்கள், வெளியீடுகள் ஊடாக கண்ணாடிபோல் பிரதிபலிப்பதை யாவரும் பார்க்க, கேட்க, உணரக்கூடியதாக அமைந்துள்ளது. கல்விப்புலம் சார்ந்தோராலும், பாடசாலை சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இப்பெருமைக்குரிய அதிபரது சேவையைப் பாராட்டி அவர்களுக்கு மணிவிழாமலர் வெளியிடும் விக்ரோறியாச் சமூகத்தை மனமார வாழ்த்துகிறேன்.

கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு முதலில் வாழ்த்துத் தெரிவித்த பெருமையை நினைத்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எமக்கு வழிகாட்டிய எமது அதிபர் பற்றி ஒரு சில கருத்துக்கள் உங்களோடு பகிர்வதற்கு சந்தர்ப்பம் தந்த மலர்க்குழுவுக்கு எனது நன்றிகள்.

எல்லோர்க்கும் கிடைக்காத அரியவாய்ப்பை பெற்ற எம் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் தான் பிறந்து வளர்ந்த ஊரிலுள்ள கல்லூரியில் கல்வி கற்று அங்கு ஆசிரியராகக் கடமையாற்றி பின்பு வேறு பாடசாலைகளில் கடமையாற்றி அதிபராகப் பதவி உயர்வு பெற்று யா/சண்டிலிப்பாய் இந்துவில் கடமையாற்றிய இவர் இயல்பாகவே சேவை மனப்பாங்கு நிறைந்தவராக இருந்தமையும், ஊரவராக, பழைய மாணவனாக, முன்னாள் ஆசிரியராக, அதிபராக கல்லூரித் தாயை நேசிக்கும் பேற்றைப் பெற்றமையால் தன் உடல் உளம் சேவை அனைத்தையும் விக்ரோறியாக் கல்லூரிக்கே அர்ப்பணித்தார். பெரும் வெற்றியும் கண்டு மனநிறைவோடு சேவை நிறைவையும் பெறுகின்றார். எல்லோர்க்கும் கிடைக்காத வாய்ப்பை இறைவன் எம் அதிபருக்குக் கொடுத்துள்ளார்.

புன்சிரிப்பும், மலர்ந்த தாமரை போன்றமுகமும், நிமிர்ந்தநடையும், கனிவான பேச்சும், நிறைந்த அனுபவமும், கல்விப்புலம் சார்ந்த கல்லூரி நிர்வாகம் சார்ந்த ஆழ்ந்த அனுபவமும், ஆளுமைப் பண்புகளும், நினைத்ததை செயல் வடிவம் கொடுக்கும் திறனும், ஆற்றலும் இவரது வெற்றிக்கும், கல்லூரியின் உயர்வுக்கும் உதவின. எதை எப்படி எவ்வாறு எவர் மூலம் செய்யலாம் என்று திட்டமிட்டுச் சிந்தித்துச் செயற்பட்டமையால் கல்லூரி வளர்ச்சியில் ஒருசில இடர்கள் ஏற்பட்டபோதும் அவற்றைத் தகர்த்து பெரும் வெற்றிகண்டார்.


கல்லூரியின் வளர்ச்சியில் கல்வி, இணைப்பாடவிதானம் என்பவற்றின் செயற்பாடுகளை குறுகியகாலம், நீண்டகாலம் என்ற திட்டமிட்டு முன்னெடுத்தார். கல்லூரியின் உயர்வுகளில் மிகக் குறுகிய காலத்தில் பெரும் மாற்றத்தை வெளிக்காட்டினார். இதன் காரணமாக கல்லூரி பழைய மாணவர்கள் ஊர் மக்கள் கல்லூரியின் உயர்வுக்குப் பக்கபலமாக உழைக்கத் தொடங்கினர். கல்வித் திணைக்கள அதிகாரிகள், சகோதர அதிபர்கள், வெளிநாட்டு பழைய மாணவர் சங்கம், ஊர் பிரமுகர்களது நன்மதிப்புக்குரியவராகத் திகழ்ந்தமையும், விக்ரோறியாக் கல்லூரிச் சமூகம் விரும்பி ஏற்ற அதிபராக இருந்தமையும் இவரது வெற்றிக்கு உதவின. அதிபரது சேவைக்காலம் விக்ரோறியாக் கல்லூரியின் வரலாற்றில் பசுமை நிறைந்த பொற்காலமாக அமைந்துள்ளதை வரலாறுகள் கூறும்.

கல்லூரியின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் தேசிய மட்டத்தில் கால்பதிக்கவும், கல்வி அடைவுமட்ட உயர்வுக்கும் திட்டமிட்டு செயற்பாடுகளை முன்னெடுத்தார். இவரது காலத்தில் பல்வேறு சாதனைகள், வியத்தகு பல மாற்றங்களை கல்லூரி கண்டது. குறிப்பாக 400m மைதானம், இசுறு மாடிக் கட்டிடங்கள், பிரதான மண்டபப் புனரமைப்பு, சிற்றுண்டிச்சாலை, உள்ளகவீதிகள், கேட்போர் கூடம், கணனி ஆய்வுக்கூடம், பாடசாலைக் கவின் நிலை, புதிய நுழைவாயில், பாடசாலைக் கட்டமைப்புகள், ஊட்டப் பாடசாலைகளில் அபிவிருத்தி, சமூக செயற்றிட்டங்கள், நிர்வாகக் கட்டமைப்பு, மாணவர் ஒழுக்கம் என பல்வேறு வகைகளில் கல்லூரியை உயர்த்தியவர்.

எம் அதிபரின் ஓய்வு கல்லூரிக்கும், வலிகாமம் கல்வி வலயத்திற்கும் பெரும் இழப்பாகும். அவர் விட்டபணியை புதிய அதிபர் தொடர வேண்டுவதுடன் பெருமைக்கும் மதிப்புக்குமுரிய எம் அதிபரை மனதார வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய பறாளாய் முருகனையும் விநாயகப் பெருமானையும் வேண்டுகின்றேன்.

நன்றி

# விஞ்ஞானக் கல்வியின் விருத்திக்கு ஊக்கமளித்தவர்



**பிரம்மஸ்ரீ.சி.விஜயேந்திரசர்மா,**
உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்),
வலிகாமம் கல்வி வலயம்.

வலிகாமம் கல்வி வலயத்தின் புகழ்பூத்த கல்லூரிகளுள் ஒன்றான விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற மதிப்புக்குரிய அதிபர் திரு.ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலரூடாக, அவருடனான நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுழிபுரம் பிரதேசத்தில் விக்ரோறியாக் கல்லூரியூடாக விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாகச் செயற்பட்டவர். விஞ்ஞான ஆசிரியர் களைத் தட்டிக்கொடுத்து, நெருக்கமான, அண்மித்த மேற்பார்வைகள் மூலம் ஊக்கப்படுத்தும் இயல்புடையவர். விஞ்ஞானம் தொடர்பான போட்டிகள், களச் சுற்றுலாக்கள் என்பவற்றிற்கு முழு ஆதரவும், ஆலோசனைகளும் வழங்கி மாணவர் நலனில் அக்கறையுடன் செயற்படும் அதிபராவார். இனிய சொற்களினால் ஆசிரியர்களுக்கு உறுதிப்பாடாக அறிவுறுத்தல்கள் வழங்கி செயற்படும் பண்பாளர் என்பதை நேரில் கண்டுள்ளேன்.

அதிபரின் தீர்க்கமான முடிவுகளாலேயே ஊட்டற் பாடசாலைகளின் மாணவர் சித்தி வீதம் அதிகரித்து வருகின்றமை சுழிபுரம் பிரதேசத்தின் கல்விக்குப் பலம் சேர்க்கும் என்பது திண்ணம்.

பறவைகள் அவதானிப்புக் கழகம் அமைத்தலிலும், சிங்கராஜ வனக் கல்விச் சுற்றுலாவிற்கும் ஆதரவும் ஊக்கமும் வழங்கி செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஒரு சந்தர்ப்பத்தில் தொலைபேசியூடாக அவசரமாகத் தொடர்புகொண்டு ஆங்கில மொழி மூல செயலமர்வுக்கு விஞ்ஞான ஆசிரியர் ஒருவரை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொண்டேன். அன்று வெள்ளிக்கிழமை, நேரம் பி.ப. 2.40மணி. பாடசாலை முடிந்து ஆசிரியர்கள் வீடு சென்றுள்ள போதும், மறுப்பேதுமின்றி செயற்பட்டு ஆசிரியரை தேசிய கல்வி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்து உதவியமை மறக்கமுடியாதது.

மாணவர்களின் விஞ்ஞானபாட சித்தி வீதத்தை அதிகரித்தலில் ஆசிரியர்கட்கு பல வகையிலும் உதவி செய்ததை அவதானித்துள்ளேன். ஓய்வுபெற்றுச் சென்றுள்ள போதும் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் "உயிரியல் பாட ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப மாட்டீர்களா?" என்று கேட்பது அவரின் பாடசாலை மாணவர்களின் கல்வி பற்றிய அக்கறையைக் காட்டுகின்றது.

விக்ரோறியாக் கல்லூரியின் வளர்ச்சியை மேலும் அதிகரித்துச் செல்லும் நடவடிக்கையே அவரின் சேவைக்கு நாம் கொடுக்கும் மிக உயர்ந்த கௌரவம் ஆகும். ஓய்வுக்காலத்தில் மன மகிழ்வுடன் வாழ இறையருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

# பன்முக ஆளுமையாளன்



"விக்ரோறியன்"
**திரு. பா. பாஸ்கரன்**
ஆசிரிய ஆலோசகர்
தீவகக் கல்வி வலயம்.


கணக்கியல் பாடத்தைக் கனிவுடன் கற்பித்த எனது ஆசான் மணிவிழாக் காணும் இந்நாளில் எமக்குக் கற்பித்த காலங்களை மீள நினைவூட்டுவதில் மகிழ்வடைகின்றேன். ஆசிரியரிடம் இடைநிலை வகுப்புக்களில் சமூகக்கல்வி, வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தைக் கற்பதற்கு ஆவலாய் இருந்தபோது மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றமை பேரிழப்பாக இருந்தது. எனினும் அவரிடம் கற்கவேண்டும் என்ற ஆவலால் தனியார் கல்வி நிலையத்தில் கற்கும் வாய்ப்பைப் பெற்றேன். கணக்கியலின் நுட்பங்கள், கோட்பாடுகள் என்பனவற்றை இலகுவான மொழிநடையில் கற்பிப்பது அவரின் தனிச்சிறப்பு. அத்துடன், கம்பனி, பங்குடமை முடிவுக்கணக்குகள் என்றால் அவற்றைப் படிமுறை ரீதியாக கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவரே. வகுப்பறையில் ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக இனம் கண்டு தனியாள் வேறுபாட்டிற்கேற்ப அவரது கற்பித்தல் நுட்பங்கள் அமையும். அத்துடன் வகுப்பறை முகாமைத்துவம், ஆசிரியர் மாணவர் தொடர்பு எனத் தனக்குத் தனியான கற்பித்தல் பாணியை உருவாக்கியவர்.

ஆசானின் கல்வி வரலாற்றில் பல கல்விமான்களை உருவாக்கியதை நாம் என்றும் மறவோம். 1995 மீள்குடியேற்றத்தின் பின்னர் எமது பிரதேசங்கள் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்தது. எமது கல்லூரியிலும் அதன் தாக்கத்தை உணரக்கூடியதாக இருந்தது. இக்காலங்களில் கடமையாற்றிய திரு.சந்திரபாலன், திருமதி. அ.வேலுப்பிள்ளை அதிபர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கான அடித்தளங்களை ஏற்படுத்தியிருந்தனர். திருமதி. அ.வேலுப்பிள்ளை அதிபரின் ஓய்வினைத் தொடர்ந்து அதிபராகப் பொறுப்பேற்க எவரும் முன்வராதபோது துணிவுடன் பாடசாலையைப் பொறுப்பேற்ற பெருந்தகையாளன். இவர் பொறுப்பேற்ற அந்த நாளிலிருந்து கல்லூரியானது தனது பெயரைத் தேசியமட்டம் வரை பதிவு செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. கற்றல், கற்பித்தல், இணைப்பாடவிதானம் ஆகியவற்றுடன் தற்போது கல்லூரியானது நிறைவான பௌதிக வளங்களைக் கொண்டு ஓர் பல்கலைக்கழகம் போல் காட்சியளிக்கின்றது. இதற்கு இவரது முகாமைத்துவ நுட்பங்களும் அணுகு முறைகளுமே காரணமாகும். அதுமட்டுமல்லாது பாடசாலை, சமூகம் என்பவற்றிற்கிடையே சிறந்ததோர் இடைத் தொடர்பை ஏற்படுத்துவதில் பெரு வெற்றி கண்டவர். ஆசானின் முகாமைத்துவக் காலங்களில் கல்லூரித்

தாயானவள் பூரித்துப் போயிருந்தாள். ஏனெனில் அவள் ஈன்றெடுத்த மணிமுத்துக்களில் அவரும் ஒருவர் என்பதனால்.

இத்தகைய பண்பாளனது அணுகுமுறைகள் நுட்பங்களையே எனது வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளில் நான் பயன்படுத்துவதுண்டு. ஆசான் அதிபராகக் கடமையாற்றும் காலங்களில் அவருடன் ஓர் ஆசிரியராகக் கடமையாற்ற சந்தர்ப்பம் கிடைக்காமையால் நான் மனம் வருந்திய சந்தர்ப்பமும் உண்டு. எனது கல்விப் பணிக்கு இந்நாளிலும் அவரது ஆசீர்வாதத்தை வேண்டி இத்தகைய சிறந்த பண்பாளர், பன்முக ஆளுமையாளர் எனது ஆசான் இந்நாள்போல் எந்நாளும் கல்விப்பணியாற்றி கல்லூரியின் வாழ்நாள் அதிபராகச் செயற்பட எல்லாம்வல்ல சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானை வேண்டிப் பணிகின்றேன்.

**"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"**



கல்லூரியின் றிச்வே மண்டபத்தில் வீற்றிருந்து அருள் சுரக்கும்

**சிவகாமி சமேத நடேசப் பெருமான்**

# தனிப்பெருந் தலைவன்



"விக்ரோறியன்"
**திரு.ச.க. குசலகுமாரன்,**
பணிப்பாளர்,
பொதுத் திறைசேரி,
நிதி திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு.

மணிவிழாக் காணும் மாண்புறும் நல்லாசான் திருவாளர் வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் தனிப்பெரும் தலைமைத்துவப் பண்பையும் அவர் மாணவ சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள சேவைகளையும் மனதாரப் பாராட்டி வாழ்த்து கின்றேன்.

திருவாளர் ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள் மாணவனாய் இருந்த காலத்தில் என்னை விட மூத்தவராக மேல் வகுப்பில் கல்வி கற்றவர். நான் மாணவனாய் கல்லூரியில் இருந்த காலத்திலேயே விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராய் தன் பணியை ஆரம்பித்தார்.


மாணவ முதல்வனாய் கல்லூரியில் இருந்த காலத்தில் தனக்கெனத் தனியான ஒரு பாணியில் தலைமைத்துவத்தை வளர்த்துக் கொண்டிருந்த ஐயா அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்று உறுதியான வளர்ச்சியை உருவாக்கினார்.

அவர் தலைமையேற்றதும் கல்லூரி ஓர் திடீர் வளர்ச்சி கண்டது. மாணவர்களின் ஒழுக்கம் முன்னிலைப்படுத்தப்பட்டது. கல்வியிலும் ஏனைய இணைப்பாடவிதானங்களிலும் சிறந்த பெறுபேறுகள் எட்டப்பட்டன.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை கல்லூரிக்குள் வளர்த்தெடுப்பதில் அக்கறையோடு செயற்பட்டு கல்லூரியின் பெயரையும் புகழையும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசென்றார்.

ஆசிரியராக, தான் படித்த கல்லூரியில் கல்விச் சேவையை ஆரம்பித்த ஐயா அவர்கள் அதே கல்லூரியின் அதிபராக ஓய்வுபெற்றுள்ளார். அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும், அவரின் அனுபவமிக்க கல்விச் சேவையை எதிர்கால மாணவ சமூகமும் வேண்டி நிற்கின்றது. அவரின் கல்விப் பணி தொடரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.


# மனமார வாழ்த்துகின்றேன்



**அருள்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்,
மானிப்பாய்.

மணிவிழா நாயகன் அதிபர் உயர்திரு. வ.ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணிப் பெரு மகிழ்வடைகின்றேன். காரணம் 2005ஆம் ஆண்டு அவர் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகப் பொறுப்பேற்ற போது நான் அக்கல்லூரியிலே ஒரு மாணவனாகக் கல்வி பயின்றவன் என்ற வகையில் எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். அவர் மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டி யாய், கல்வி வளர்ச்சியிலே அக்கறை கொண்டவராய் விளங்கினார். கல்லூரியிலே கல்வி பயின்ற ஒவ்வொரு பிள்ளை மீதும் அதீத அக்கறை காட்டி நற்பிரசைகளாக உருவாக்குவதில் அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். முக்கியமாக ஒழுக்க விடயத்தில் கண்டிப்பானவராக எம்மை வழிநடாத்தியவர்.

தனிப்பட்ட ரீதியில் நான் கிழக்கு பல்கலைக்கழக மாணவனாகவும், மானிப்பாய் பகுதி பிரதேச சபை உறுப்பினவராகவும் உருவாக அதிபர் உயர்திரு. ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களின் வழிகாட்டலே பெரும் பங்கு வகித்ததை இச் சந்தர்ப்பத்தில் மனநிறைவுடன் நினைவுகூர்கின்றேன். இத்தகு பெரு மகனாரை வாழ்த்த வயதில்லை. ஆனாலும் மணிவிழா நாயகன் அதிபர் உயர்திரு. வ.ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள் மென்மேலும் கல்விச்சேவை ஆற்றிடவேண்டுமென இறையருள் வேண்டி வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றேன்.



# Our Principal is a gentleman



**Mrs. S. Thevarasa**
*Retired English Teacher,*
*( Victorian )*

I take this as a great privilege to register my thoughts about a true gentleman, Mr. V. Srikanthan a person of nobility and sterling qualities....

I am in great vanity to had been under his administration. He came to 'Mother Victoria in 2010 and eversince his endeavour enhanced the school in every aspect. Nobody can deny it... In every hook and corner, 'Mother Victoria' has become popular due to the perseverance of our former principal Mr. V. Srikanthan.

The school premises has clearly been given a dignified look. His artistic mind is the root cause for the change. Wherever he was transferred, he created a surrounding with lovely colourful flower plants, perfuming the atmosphere!....

I admire the qualities he possesses. He is a born gentleman, who never hurts others by his thoughts, words or acts. He is very kind and polite, He devotes himself in helping others and finds pleasure in it. He is honest and truthful. He never goes after fame of power. He has a high sense of self respect and HUNOUR. He never scares to speak out his mind. Anybody who inherits superior human qualities is considered a gentleman our principal emeritus Mr. V. Srikanthan will be in that elite club forever!....

He never fails to motivate both students and teachers' in any field. I had an experience when I was in-charge of the English Union. During the competitions, he observed our activities keenly and encouraged us towards our goals. His utmost desire was that 'Mother Victoria' should be triumphant in all the events and bring laurels to the school.


His enthusiasm over his school made him to be constantly in touch with the old students of overseas and developed the school in a tremendous way!...

The traditional main hall was tiled and renovated with the help of the O.B.A of U.K. A canteen with commendable facilities was built. The passages that take us to the different blocks of the school were mended and tarred. The playground was enlarged and boundary walls were constructed. There is ample evidence for his achievements. His selfless service during his reign at 'Mother Victoria' was immeasurable and remarkable.

I earnestly say that Mr. V. Srikanthan is a person with super human qualities that would be remembered forever with affection by all the 'Victorians'

He is a gentleman par excellence.

# என் பெருமதிப்பிற்குரிய ஆசான்



**திரு.சி. ஞானச்சந்திரமூர்த்தி**
ஓய்வுநிலை ஆசிரியர்.

ஆசான் ஸ்ரீகாந்தன் என் மனங்கவர்ந்த ஒரு பிராமணோத்மன். அவர் பிராமணோத்மனாக இருந்தாலும் என்னுடன் மிக நெருக்கமாகப் பழகி என்னால் மிகவும் நேசிக்கப்படும் விலைமதிப்பற்ற ஆசானாக விளங்கினார்.

இவரது தந்தை வரதராஜக் குருக்களை நன்கு அறிவேன். வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற ஆடிப்பூரத் திருவிழாவின்போது குருக்கள் ஐயாவுக்கு நன்றிகூறும்போது, "அவர் அதிகமாக - இலகுவில் சிரிக்கமாட்டார்" என்று சொன்னேன். அதற்குப் பதிலளிப்பது போல் அவர், "யாரும் சிரித்தால் நான் சிரிப்பேன்" என்றார். உடனே எனக்கு ஒரு சினிமாப்பாடல் ஞாபகத்துக்கு வந்தது.

"நீ சிரித்தால் நான் சிரிப்பேன் சிங்காரக் கண்ணே
நீ அழுதால் நான் அழுவேன் மங்காத பொன்னே"

இவ்வாறு ஸ்ரீகாந்தன் ஐயாவின் குடும்பம் என் மனதைக் கவர்ந்தது.

ஸ்ரீகாந்தன் ஐயா விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றதையிட்டு நான் பெருமகிழ்ச்சி எய்தினேன். அவருடன் பழகுவது ஒரு குழந்தையுடன் பழகுவது போலிருக்கும். பழகுவதற்கு மிகவும் எளியவர். எதையும் மனந்திறந்து பேசுவார். அவரது காலத்தில் கல்லூரி விழாவுக்குத் தப்பித் தவறிப் போகாதுவிட்டால், தான் வீடு திரும்பும்போது எனது வீட்டுக்கு வந்து தவறைச் சுட்டிக்காட்டுவார்.

ஸ்ரீகாந்தன் ஐயாவைப் போலவே நான் மிகவும் நெருங்கிப் பழகிய இன்னொருவர் என்னுடன் கற்ற என் பெருமதிப்புக்குரியவரும் விக்ரோறியாக் கல்லூரியை அலங்கரித்தவருமான கர்ணலிங்கசர்மா. இவ்விருவரிடத்தும் இருந்த பாராட்டத்தக்க குணாம்சங்களாலேயே இவர்களைப் பிராமணோத்தமர் என அழைக்கின்றேன். இருவரும் விக்ரோறியாவுக்குக் கிடைத்தற்கரிய விலைமதிப்பற்ற பொக்கிசங்கள்.

அதிபர் ஸ்ரீகாந்தனுடைய நிர்வாகத்திறமை பற்றிக் கூறவேண்டியதில்லை. மாணவர்களின் ஒழுங்கான நடத்தை, அதிபர் கல்லூரியில் இருக்கிறார் என்பதைத் தெரிவிக்கும். ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பை நான் கண்கூடாகக் கண்டிருக்கின்றேன். இதனாற்றான் பரீட்சைப் பெறுபேறுகளாயினும், விளையாட்டுக்களாயினும் உயர்வை நோக்கிப் பயணிக்க முடிந்தது.

ஸ்ரீகாந்தன் ஐயா தனது வீட்டையும், தனது கல்லூரியையும் இருவேறு ஸ்தாபனங்களாகக் கருதவில்லை. ஒன்றாகவே கருதினார். கல்லூரியின் உயர்ச்சிக்காகத் திரிகரண சுத்தியுடன் உழைத்த உத்தமர், ஓய்வு பெற்று மணிவிழா காண்கின்றார். அவரின் உண்மையான உழைப்புக்கு இறைவன் நற்பரிசுகளை வழங்குவான். குன்றாத இளமையும் நிறைந்த ஆயுளும் பெற்றுச் சிரஞ்சீவியாக வாழ வழக்கம்பரைத்தாய் அருள்புரிய அம்பிகையை வேண்டுதல் செய்கிறேன்.

# ஸ்ரீகாந்தன் ஒரு நல்லாசிரியர்



**வைத்திய கலாநிதி இ. சுரேந்திரகுமாரன்**
MBBS, M.Sc (Com.Med.), MD (Com.Med.), P.G.D.C,
சமூக வைத்திய நிபுணர், சிரேஸ்ட விரிவுரையாளர்,
தலைவர், குடும்ப வைத்தியத்துறை,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"A good teacher can inspire hope, ignite the imagination and in still a love of learning"

எனக்கு கல்வி புகட்டிய ஆசிரியரின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதக்கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஸ்ரீகாந்தன் ஆசிரியர் அவர்களை நான் சிறுவனாக இருக்கும்போதே தெரியும். அவருடைய தோற்றம், நடை, உடை என்பன அவர் ஒரு கண்ணிய மானவர் என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தும். அவரின் கண்டிப்புத் தன்மை பற்றி பலர் கூறியதைக் கேள்விப்பட்டுள்ளேன்.

நான் எட்டாம் வகுப்பில் கல்வி கற்கச் சென்றபோது எமக்கு வர்த்தக பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக ஸ்ரீகாந்தன் அவர்கள் அறிமுகமானார். அவர் அப்பாடத்தை மிகவும் விளங்கக்கூடிய இலகுவான முறையில் கற்பிப்பதில் வல்லவர். இவருடைய நேர்த்தியான கற்பித்தல் எனக்கு வர்த்தக பாடத்தில் ஒரு விருப்பத்தை ஏற்படுத்தியது. துரதிஷ்டவசமாக சில மாதங்கள் கற்பித்தபின், அவர் மாற்றலாகி வேறுபாடசாலைக்குச் சென்றுவிட்டார். இது மனவருத்தத்தை ஏற்படுத்தியது.

நீண்டகால இடைவெளியின் பின்னர் நான் ஒரு மருத்துவ மாணவராக மருத்துவ முகாம் ஒன்றை ஒழுங்குபடுத்துவது சம்பந்தமாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அப்பாடசாலை மிகச்சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டுவருவதைக் கண்ணுற்று யார் இப்பாடசாலையின் அதிபர் என அங்கு நின்றவர்களை வினாவினேன். ஸ்ரீகாந்தன் அவர்கள் தான் இப்பாடசாலையின் அதிபர் என்று அவர்கள் கூறினார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் இன்று அதிபரைச் சந்திக்கமுடியுமா என நான் கேட்டேன். அதிபர் அலுவலகத்தில்தான் இருக்கிறார் என்று சொன்னார்கள். நான் உடனடியாக அவருடன் மகிழ்வுடன் கலந்துரையாடி மருத்துவமுகாம் ஒன்றினை நடாத்தினேன்.

எமது கல்லூரியில் நீண்டகாலம் கடமையாற்றிய அதிபர் திருமதி. அ.வேலுப்பிள்ளை அவர்கள்; அவரும் என்னுடைய ஆசிரியர் - ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளதாகவும் ஸ்ரீகாந்தன் அவர்கள் அதிபராக வரவுள்ளதாகவும், ஆனால் அவரை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து விடுவிப்பதில் சிரமமுள்ள

தாகவும் கேள்வியுற்றேன். சில நிர்வாக ஒழுங்குகளின் பின்னர் எமது கல்லூரிக்கு இவர் அதிபராக நியமிக்கப்பட்டார். இது எமது கல்லூரிக்கு ஒரு மைற்கல் போன்ற நிகழ்வாகும்.

ஸ்ரீகாந்தன் அவர்கள் இரவு பகலாகச் செயற்பட்டு கல்லூரியின் வளர்ச்சியில் பெரியளவில் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். பௌதிக வளங்களைப் பல்வேறு தரப்பினர் மூலமாக உதவி பெற்று செய்து முடிப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அவரது இப்பணியானது கல்லூரியின் தோற்றத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இவருடைய பணி கல்வி மற்றும் ஏனைய துறைகளை முன்னேற்றுவதிலும் இத்துறைகளில் ஓங்குவதற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கங்கள் என்பவற்றுடன் இணைந்து பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டார். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று அவர் ஒரு நல்லாசிரியன், நல்ல அதிபர், சிறந்த நிர்வாகி ஆவார். மாணவர்களை மதிப்பவராகவும், வகுப்பறையை மகிழ்ச்சிகரமாக வைத்திருப்பவராகவும், எல்லோராலும் அணுகக்கூடியவராகவும், எல்லோரையும் பராமரிப்பவராகவும், மாணவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்பவராகவும், சிறந்த தலைவராகவும், எல்லா வகையிலும் மாணவனை கல்விசார் வல்லுநராகவும் மாற்றக்கூடிய பண்புகள் நிறைந்தவராக ஸ்ரீகாந்தன் அவர்கள் விளங்குகின்றார்.

அவர் எமது கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றமை கல்லூரிக்குப் பேரிழப்பாகும். ஆனால், காலம், வயது, ஓய்வு என்பன காலச்சக்கரத்தின் ஓட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவை. நாமும் அதனை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அவருடைய ஓய்வுகாலம் மிகவும் சந்தோசமாகவும், ஆரோக்கியமாகவும் அமையவேண்டுமென வாழ்த்துகின்றேன். அவர் சமூகப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வார் என்பது யாவரும் அறிந்ததே. அவர் நீண்ட காலம் எம்முடன் வாழவேண்டுமென வாழ்த்தி எனக்கு இவ்வரிய சந்தர்ப்பத்தை வழங்கிய விழாக் குழுவினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# மலர்ந்து மணம் வீசும் தலைமைத்துவப் பண்புகள்



Dr. **செல்வம் கண்ணதாசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்.
செயலாளர், பாடசாலை அபிவிருத்திக்குழு,
மணிவிழாக்குழு இணைப்பாளர்.

இன்று மணிவிழாக்காணும் நாயகன் பிரம்மஸ்ரீ வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள், கடந்த மூன்று வருடங்களாக எமது கல்லூரி அன்னையின் தரத்தை அனைத்துத் தளங்களிலும், அதிபர் என்ற பதவிக்கு அப்பால் தன்னையே முற்றுமுழுதாக அர்ப்பணித்து அபரிமிதமாக முன்னோக்கிப் பாயச்செய்தவர் என்றால் அது மிகையாகாது.

எனது அறிவுக்கு எட்டிய வரையில், கல்லூரியின் பொற்காலமான அந்த மூன்று வருடங்களும் அவருடன் ஏதோ ஒருவகையில் சேர்ந்து பணியாற்ற எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினூடாக அவரை நல்லதோர் வினைத்திறன் மிக்க தலைமைத்துவம் கொண்டவராகப் பார்க்கிறேன்.

தலைமைத்துவம் என்பது "முதலிலே தன்னை அறிந்து கொண்டு, ஒரு இலட்சியத்தை உருவாக்கி, அதனை தனது குழுவினருக்கு நன்கு விளங்கவைத்து, நம்பிக்கையை உருவாக்கி, வினைத்திறன் மிக்க அயராத முயற்சியின் மூலம், அந்த இலட்சியத்தை அடைய அனைவரையும் அழைத்துச் செல்லுதல்" ஆகும்.

ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள் தன்னை நன்கு அறிந்து வைத்திருப்பதைப் பல சந்தர்ப்பங்களில் அறிந்திருக்கிறேன். தனது பலங்கள் (தன்னால் அதியுச்சமாகச் செய்யக்கூடியவை) தனது பலவீனங்கள் (தன்னால் முடியாதவை) போன்றவற்றைப் பல சந்தர்ப்பங்களில் என்னுடன் உரையாடியுள்ளார்.

மேலும், "நவீன உலகியல் மாற்றத்திற்கேற்ப, தரமானதும் கலாசார விழுமியங்களைப் பேணுவதுமான மாணவ சமுதாயத்தை உருவாக்குதல்" என்ற எமது கல்லூரியின் இலட்சியத்தையே தனது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டவர்.

அனைத்து முன்னாள் அதிபர்களின் செயற்பாடுகளையும் பாடமாகக் கொண்டு, ஒழுக்கம், கல்வி, விளையாட்டுத்துறை, கலை, பாடசாலையின் உட்கட்டுமானம் போன்ற அனைத்துத் துறைகளிலும் பாடசாலையை ஒருபடி மேலே உயர்த்துவதை இலட்சியமாகக் கொண்டு உழைத்தவர்.

"ஒழுக்கமே ஒரு மனிதனை உருவாக்குகிறது" என்ற கல்லூரியின் மகுட வாசகத்திற்கேற்ப, இவரது காலத்தில் எமது கல்லூரி ஒழுக்கத்தில் சிறந்து விளங்கியமைக்கு, வேறு பாடசாலைகளிலிருந்து பல மாணவர்கள் எமது

கல்லூரிக்கு வந்து சேர்ந்தமை மற்றும் எம்மால் கண்டும் கேட்டதுமான மாணவ ஒழுக்கங்களுமே சான்றெனலாம்.

கல்லூரியின் கல்வித்தரத்தை உயர்த்த ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்போடு பாடுபட்டதன் விளைவாக அனைத்து பரீட்சைகளிலும் சித்தி வீதம் உயர்ந்து செல்வதும், பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதும் விளம்பிநிற்கின்றன.

இருந்தபோதும் இம்முன்னேற்றம் மிக உச்சமாக விளங்க வேண்டுமெனில் ஆறாந்தரத்தில் அனுமதிபெறுபவர்களின் தரம் ஓரளவாவது எழுத வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக பயங்கர எதிர்ப்புக்களின் மத்தியில் அவர் மேற்கொண்ட பெருமுயற்சி வரலாற்றுத் திருப்புமுனை.

மூன்று வருடங்களிற்கு முன்பே ஊட்டற்பாடசாலைகளுக்கு மிகக்குறைந்த *(50/200)* புள்ளிகளைப் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றாலே எமது கல்லூரியில் அனுமதி என்று அறிவித்திருந்ததோடு ஐக்கியராச்சிய பழையமாணவர் ஒன்றியத்தின் நிதியுதவியுடன் அவ்வூட்டற் பாடசாலைகளில் மேலதிக வகுப்புகள் வைத்தல், கற்றல் உபகரண அன்பளிப்புகள் ஊக்குவிப்பு பரிசுகள் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டார்.

அந்தந்தப் பாடசாலை ஆசிரியர்களுடன் உரையாடியதிலிருந்து, அவர்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவதை அறியக் கூடியதாக உள்ளது. மேலும், "எமது பிள்ளைக்கு எப்படியாவது விக்ரோறியாக்கல்லூரியில் அனுமதி பெற்றுவிடவேண்டும்" என்ற நோக்கில் பெற்றோரும் பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை காட்டுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இம்முயற்சியில் இவர் எதிர்நோக்கிய சவால்கள் சொல்லிலடங்கா. மற்றவர்களிடம் எவ்வளவு கெட்டபெயர் கேட்டபோதும் தனது இலட்சியத்தில் வழுவாது நின்ற தலைமைத்துவப் பண்பை இங்கு கண்டேன். இவர் விதைத்த விதைகளின் அறுவடைக்கு இன்னும் சிறிதுகாலம் பொறுத்திருக்கத்தான் வேண்டும். இவ்வாறு அனுமதிபெற்ற மாணவர்களின் பெறுபேறுகள் இன்னும் 3-4 வருடங்களிலிருந்து தெரியத் தொடங்கும்.

வியைாட்டுத்துறையில் எமது கல்லூரி கொடிகட்டிப்பறப்பது யாவரும் அறிந்ததே. முன்னாள் ஓய்வுநிலை அதிபர் திருமதி அ வேலுப்பிள்ளை காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு விக்ரோறியன் திரு.ந.சிவரூபன் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டுவரும் பெண்கள் துடுப்பாட்ட அணி தேசியரீதியில் எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருகிறது.

மேலும் திரு.திருக்குமரன் ஆசிரியரின் பயிற்றுவிப்பில் ஆண்கள் கரப்பந்தாட்ட அணியும் விக்ரோறியன் திரு.கஜேந்திரன் பயிற்றுவிப்பில் வலைப்பந்தாட்ட அணியும் சாதனைகள் படைத்துவருகிறது. இவ்வாறே, அனைத்து விளையாட்டுத்துறைகளிலும் எமது மாணவர்கள் பிரகாசித்து வருகின்றனர்.

**கலை நிகழ்வுகளிலும் நாம் சளைத்தவர்கள் அல்லர்.**

தமிழ், நடன, இசை ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் தமிழ்த்தினப் போட்டிகளில் மாகாண மற்றும் தேசிய ரீதியில் எமது மாணவர்கள் சாதனை படைத்துவருவது வெள்ளிடைமலை. கவிதை, கட்டுரை, தனிநடனம், குழுநடனம், நாட்டிய நாடகம் மற்றும் நாட்டுக்கூத்து என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்படி விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், தமிழ் மற்றும் அழகியல் ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் எமது இலட்சியத்தைக் கலந்துரையாடி, அவர்களை ஊக்கப்படுத்தி, அந்தந்த நிகழ்ச்சிகள் நடைபெறும்போது களத்திலேநின்று வழிப்படுத்தி, பிரச்சினைகளைத் தான் எதிர்கொண்டு, வெற்றிகளை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உரித்தாக்கிய தலைமைத்துவத்தைக் கண்டேன்.

இவரது காலத்திலே பாடசாலை புதுப்பொலிவுபெற்றது. அவற்றுள், அரசினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரு கட்டடங்கள், பழையமாணவர்களினதும் பழையமாணவர் சங்கங்களினதும் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட உள்ளக வீதி, பிரதான மண்டப புனர்நிர்மாணம், நவீன சிற்றுண்டிச்சாலை கணினி ஆய்வுகூடம் மற்றும் 400 மீற்றர் ஓடுபாதை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பழையமாணவர் சங்கங்களுடன் பேணிய நல்லுறவு மற்றும் வெளிப்படைத்தன்மையும் நம்பகத்தன்மையும் இவற்றைச் சாத்தியமாக்கியது.

ஓய்வுநிலையதிபர் திரு. கா. சந்திரபாலன் காலத்தில் உருவாக்கிய மரங்கள் சோலைகளாக விளங்க, மேலும் பூமரங்களை உருவாக்கி கல்லூரிக்கு ஒரு ரம்யமான சூழலை உருவாக்கியவர்.

இவ்வாறு கிடைக்கக்கூடிய அனைத்துவளங்களையும் அதிஉச்சமாகப் பயன்படுத்தி பாடசாலை உட்கட்டுமானத்தை உன்னத நிலைக்கு உயர்த்திய உயரிய தலைமைத்துவப்பண்பைக் கண்டேன்.

அதுமட்டுமல்லாது, பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளும் இவரால் உந்தப்பட்ட (motivated) ஆசிரியர்களும் மாணவர்களும் தாங்களாகவே முன்னின்று சிறப்பாகச் செய்து முடித்தமை இவரது சிறந்த தலைமைத்துவத்தின் இன்னொரு வடிவம் எனலாம்.

இவ்வாறு, கல்லூரியை உன்னத நிலைக்கு உயர்த்தும் இலட்சியத்தை உருவாக்கி, அதனை தனது குழுவினராகிய ஆசிரியர் மாணவர்கள் பழையமாணவர் சங்கங்கள் மற்றும் நலன் விரும்பிகளிற்கு நன்கு விளங்கவைத்து, நம்பிக்கையை உருவாக்கி, வினைத்திறன் மிக்க அயராத முயற்சியின் மூலம், இலட்சியத்தை அடைய அனைவரையும் அழைத்துச் சென்று தலைமைத்து வத்திற்கு இலக்கணமாக தனது சேவைக்காலத்தில் விளங்கியவர்.

இந்த சந்தர்ப்பத்திலே தலைமைத்துவம் பற்றி சற்று நோக்குவது பொருத்தமானதாகும்.

ஒரு நிறுவனத்தின் தலைவர் பொதுவாக பின்வரும் இருவகைளில் ஒன்றில் அடங்குவர் -

1. நிறுவனத்தின் இலக்கை அடையப் பாடுபடுபவர்
2. நிறுவனத்தின் ஊழியர்களை மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துபவர்

இங்கு பெரும்பாலானோர் இரண்டாவது வகையினரே. தமது சுக வலயத்தை (comfort zone) விட்டு வெளியே வர விரும்புவதில்லை. இவ்வலயத்தினுள் தொழிற்படும் போது புது முயற்சிகள் எடுப்பதில்லை. இதனால், பிரச்சினைகள் குறைவு் எல்லோரிடமும் நல்லபெயர் இருக்கும். ஆனால், முன்னேற்றம் இல்லை.

முதலாவது வகையினர் மிகச் சிலரே. சுக வலயத்தை (comfort zone) விட்டு வெளியே வருபவர்கள். இலக்கை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். புதிதாகச் சிந்திப்பவர்கள் செயற்படுபவர்கள். இதனால், மற்றையோரது விமர்சனங்களுக்கு உட்படுவர். ஒரு சிலரிடம் கெட்டபெயர் வாங்குவார்கள். ஆனால், நிறுவனம் வெற்றிப்பாதையில் நடைபோடும்.
இதனையே
"காய்க்கிற மரத்திற்கே கல்லெறிவிழும்" என்பர்.

இவ்வாறானவர்கள் ஏன் விமர்சிக்கப்படுகிறார்கள் என்று உளவியல் ரீதியில் உற்று நோக்குவோம்.


அடிப்படையில் எம்முடன் ஏதோ ஒருவிதத்தில் தொடர்புகொண்டவர்கள் தங்களைப் போன்றே எல்லோரும் இருக்கவேண்டும் என்று விரும்புவர். ஒருபடி மேலே சிந்திப்பதோ செயற்படுவதோ குறித்த அந்நபரை அவர்கள் இழப்பதாகக் கருதுகின்றனர். அதனைத் தாங்கமுடியாதே விமர்சிக்கின்றனர்.

மேலும், எல்லோரது அடிமனதிலும் ஒழிந்திருப்பது, தங்களது தனித்துவத்தை, திறமையை எல்லோரும் அறியவேண்டும்' தங்களுக்குச் சிறிய பாராட்டாவது கிடைக்க வேண்டும்' தாங்கள் மதிக்கப்படவேண்டும் என்பதே. இந்த எண்ணமே மனிதனை இயக்குவது.

இந்த எண்ணத்தின் அளவு ஆளுக்காள் மாறுபடும். வேறுவழிகளில் இது கிடைக்கப் பெறாதவர்கள்' சிறுவயதில் அடக்கப்பட்டதால் இதனை அடைந்தே தீரவேண்டும் என்ற வெறி ஆழ்மனதில் பதிந்தவர்கள் இதனை அதிகம் எதிர்பார்ப்பர். மற்றவர்கள் நல்லவகையிற் செயற்பட்டு பெயர் புகழ் அடைகின்றபோது, தங்களுக்குக் கிடைக்காதது மற்றவரிற்குக் கிடைப்பதை பொறுக்க முடியாது ஏதோஒருவகையில் குறைசொல்லி அவரது புகழிற்குக் களங்கத்தை ஏற்படுத்தித் தம்மளவில் திருப்திப்பட்டுக்கொண்டு, தம்மைத்தாமே ஏமாற்றுவார்கள்.

இன்னொரு வகையினர், இத்தகைய தலைவர்களுடன் இணைந்து கடினமாக உழைக்கவோ பங்களிக்கவோ விரும்பாதவர்கள், விமர்சிக்கக்கூடும். எனவே, பெரும்பாலான தலைமைத்துவத்திலுள்ளவர்கள் இத்தகைய விமர்சனங்களிற்குப் பயந்து புது முன்னேற்றகரமான முயற்சிகளில் இறங்குவதில்லை. அனைவருக்கும் நல்லவர் என்றோ கெட்டவர் என்றோ பெயருமில்லை. ஆனால், முன்னேற்றமுமில்லை.

எமது விழா நாயகன் எந்த வகையினர் என்பது சொல்லாமலே விளங்கும். மேலும், ஒருமனிதன் பூரண மனிதனாக வாழ்ந்தான் என்பதை அவனது வாழ்க்கைச் சக்கரத்திலுள்ள பகுதிகளின் முன்னேற்றத்தால் அறியலாம்.




**வாழ்க்கை முன்னேற்றச் சக்கரம்**

அந்தவகையிலே, பாடசாலையின் முன்னேற்றத்திற்காக மணிவிழா நாயகன் தனது வாழ்க்கையின் பல பகுதிகளைத் தியாகம் செய்திருப்பது கண் கூடு.

எல்லாவற்றிற்கும் மேலாக, அனைத்து செயற்பாடுகளிலும் இவருக்கு உறுதுணையாக இருக்கும் இவரது மனைவி பிள்ளைகளின் அன்பையும் தியாகத்தையும் இந்தச்சந்தரப்பத்திலே நன்றியுணர்வுடன் பார்க்கிறேன்.

எனவே, ஓய்வுகாலத்தில் இனியாவது குடும்பம், உறவுகள் மற்றும் ஆன்மீகம் என்பவற்றில் அக்கறை செலுத்தப்போவதாக அடிக்கடி கூறுவார். ஆனாலும், பாடசாலையையும் எமது சமூகத்தையும் மறந்துவிடலாகாது என அனைவர் சார்பாகவும் விண்ணப்பிக்கின்றேன்.

அவரது ஓய்வுகாலம் சிறக்க, காத்தற்கடவுளாம் பொன்னாலைக் கண்ணபிரான் கழலடி இறைஞ்சி நிற்கின்றேன்.

# மணிவிழா ஆசானுக்கு அகம் நிறைந்த வாழ்த்துக்கள்



**எந்திரி ந. சுதாகரன்**
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
கிளிநொச்சி பிராந்தியம்.

மணிவிழா காண்கின்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் பிரம்மஸ்ரீ. வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்கள், எமது கல்லூரியின் அதிபர் என்கின்ற தற்போதைய உறவிற்கு முன்பாகவே அவர் எனது அன்புக்குரிய ஆசான் என்பதைக் கூறிக்கொள்வதில் நான் புளகாங்கிதமடைகின்றேன். நான் இக்கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில், சமூகக் கல்வி ஆசிரியராக எம்மோடு உறவுப் பாலத்தை ஏற்படுத்தி, நேர்த்தியான கற்பித்தல் திறமையினால் எமக்குப் பாடங்களைப் புகட்டியமை இன்றும் பசுமரத்து ஆணிபோல் எமக்குள் இருப்பதை எம்மால் மீட்டிப்பார்க்க முடிகிறது. நேர்த்தியான கற்பித்தல் மட்டுமன்றி தூரநோக்கு சிந்தனைகளும், அதன்பால் இவரால் எமக்கு வழங்கப்படுகின்ற சாத்தியப்பாடான அறிவுரைகளும் எமக்கு கற்றல் செயற்பாடுகள் மீது அதிக ஈர்ப்பை ஏற்படுத்திய தென்பது என்னால் உணர்வுபூர்வமாகச் சொல்லக்கூடிய ஓர் உண்மையாகும்.

இவருடைய ஒவ்வொரு செயற்பாட்டிலும் வெளிப்படுகின்ற கம்பீரம், தெளிவார்ந்த சிந்தனைப் போக்கு, நேர முகாமைத்துவம், தூய்மை மற்றும் சிறப்பு மிகு ஆளுமைத்திறன் ஆகிய பண்புகள் எமது கல்லூரிக் காலத்தில் எமக்குள் ஒருவித ஈர்ப்பினையும், உள மாற்றத்தினையும் ஏற்படுத்தியது. இதுவே நாமும் இப் பண்புகளை உடையவர்களாக மாறவேண்டும் என்ற விருப்பத்தினையும் ஊக்கத்தினையும் எம் மனதில் ஊன்றச் செய்தது. மேலும் சொல்லப்போனால் எமது ஆசானை உதாரணமாக மனதில் நிறுத்தி, அவரை முன்மாதிரியாகக் கொண்டு அவரிடமிருந்து கற்றுக்கொண்ட பண்புகளை இன்று நாம் பின்பற்றுகின்றோம், தொடர்ந்தும் பின்பற்றுவோம் என்று கூறிக்கொள்வதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன்.

அண்மையிலே எமது கல்லூரியின் நிறுவுனர் தின விழாவிலே உரை நிகழ்த்துவதற்காக நான் அழைக்கப்பட்டிருந்தேன். உண்மையிலே எனது அன்புக்குரிய ஆசான் அதிபராகவிருக்கின்ற காலப்பகுதியில் இச்சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததை ஓர் வரப்பிரசாதமாகவே நான் எண்ணுகின்றேன். அந்த விழாவின்போது அதிபர் அவர்களின் நேர்த்தியான செயற்பாட்டினையும், ஒழுங்கமைப்பினையும் கண்கூடாகக் கண்டபோது, அவரின் ஆளுமைத் திறனானது மீண்டும் எனக்குள் ஓர் உத்வேகத்தையும் அவர் மீதான மதிப்பையும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது. அந்தளவிற்கு விழா சிறப்புற அமைந்தது. மேலும் கிராம மட்டத்தில் இருந்த கல்லூரியினை மாவட்ட, மாகாண,

தேசியமட்டத்தில் மிளிரச் செய்வதற்கு இவரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மிகவும் அர்ப்பணிப்புக்கள் நிறைந்ததாகவும் மெச்சக்கூடியதாகவும் உள்ளது.

இத்தகைய ஓர் அர்ப்பணிப்பு மிகுந்த அதிபரின் சேவை எமது கல்லூரிச் சமூகத்திற்கு தொடர்ந்தும் அவசியமாகவே உள்ளது. ஓய்வுபெற்றுச் சென்றாலும் கூட கல்லூரிசார் முன்னேற்றப் பணிகளில் தொடர்ந்தும் இவர் இணைந்திருக்க வேண்டுமென்பது எனது முழுமனதின் அவா ஆகும். அதிபர் அவர்கள் மணிவிழாக் காணும் இவ்வேளையிலே, ஓய்வுகாலம் சிறப்பாக அமையவேண்டுமெனவும், நீடூழி காலம் வாழவேண்டுமெனவும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பூரிப்படைகின்றேன்.




# வாழ்க வளமுடன்



**இ. இளங்குமரன்**
தலைவர்,
விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
மெல்பேர்ன், அவுஸ்ரேலியா.

வாழ்க்கையில் மறக்க முடியாத பல விடயங்கள் இருக்கின்றன. அதில் எங்கள் பாடசாலை அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்கள் ஆற்றிய சேவையும் சுழிபுரம் மக்களுக்கு செய்த சேவைகளும் என்றென்றும் மறக்கமுடியாத தொன்றாகும். எத்தனையோ அதிபர்கள், ஆசிரியர்கள் எங்கள் பாடசாலையில் சேவை செய்துள்ளார்கள். இருந்தாலும் குறுகிய காலத்தில் எமது பாடசாலையை மிகவும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஸ்ரீகாந்தன் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டமை நினைத்துப் பார்க்க வேண்டிய விடயமாகும். வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களின் பெரும் உதவியால் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை விளையாட்டிலும் கல்வியிலும் மேம்பாடடையச் செய்தவர்.

அவுஸ்ரேலியா மற்றும் ஏனைய நாடுகளில் வாழ்கின்ற பழைய மாணவர்கள் எல்லோரும் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகின்றோம்.



# மணிவிழாக் காணும் எங்கள் அதிபர்



**திரு.வி.பாலச்சந்திரன்**
தலைவர்,
யா/விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
கனடா.

முதல்வர் திரு.வ. ஸ்ரீகாந்தன் அவர்கள் தனது அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் நிலையில் அவரை வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன். நாம் விரும்பாவிடினும் அவரது ஓய்வு என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கட்டாயமான ஒன்று. அவர் பழைய மாணவன் மட்டுமல்ல ஆசிரியருமாவார். அவருடன் ஒன்றாகக் கல்வி கற்றவன் என்ற வகையில் அவரை நன்றாக அறிவேன்.

அவரின் வருகையால் முதலில் புலம்பெயர் நாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்கள் ஒன்றாக இணைந்து மிகவும் ஆர்வத்துடன் செயற்பட ஆரம்பித்தன. இவருக்கு முன்னிருந்த அதிபரின் பணியைத் தொடர்ந்தார். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு அவர் அயராது உழைத்து மாணவர்களின் பெறுபேறுகளைக் கூட்டியதுடன் விளையாட்டுத் துறையில் பிரத்தியேகமான கவனம் செலுத்தி துடுப்பாட்டம், பெண்களின் துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம் என்பவற்றிலும் பல பரிசில்களை வென்றெடுக்க வைத்தார். மிக முக்கியமாக விளையாட்டு மைதான விஸ்தரிப்பில் கனடா பழைய மாணவர் சங்கத்தினருக்கு பெரும் ஊக்கம் கொடுத்து எந்நேரமும் அவரது தொலைபேசியை அழைத்தாலும் உடன் கதைக்கக் கூடியவராக இருந்தார்.

இவரது சேவையைப் பாராட்டி மணிவிழா மலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறோம்.



# பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரியவர்



**திருமதி. பகவதி தணிகாசலம்**
தலைவர்,
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,
பழைய மாணவர் ஒன்றியம்,
இலண்டன்.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் அல்ல உயிர்க்கு".**

*சோழர் படை வந்து தங்கி தமிழ் வளர்த்த சோழியபுரத்தில் வேட்டி கட்டிய தமிழனுக்காய் வெள்ளைக்காரன் கட்டி வைத்த பள்ளி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. இலங்கை வரலாற்றிலேயே எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஒரே ஒரு தமிழனைத் தந்த கல்லூரி எங்கள் கல்லூரி. அதுமட்டுமன்றி, மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்ட வல்லுநர்கள் போன்று பல்கலை வித்தவர்களைத் தந்தது எங்கள் விக்ரோறியாக் கல்லூரி.*


*அக்கல்லூரியின் அதியுயர் பதவியான அதிபர் பதவியினை எத்தனையோ அறிஞர்கள் அலங்கரித்துச் சென்றுள்ளனர். அந்த வரிசையிலே எங்கள் அனைவரதும் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமரிய ஆசான் திருவாளர் வரதராஜக் குருக்கள் சிறீகாந்தன் அவர்களும் அதிபராக இருந்து அளப்பரிய பல சேவைகளை எங்கள் கல்லூரிக்காகச் செய்து தந்துள்ளார்.*

*தான் மாணவனாக இருந்து தன் ஆரம்பக் கல்வியைக் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றி மாணாக்கரதும், பெற்றோரதும் பெருமதிப்பைப் பெற்று அக்கல்லூரியிலேயே அதிபராகவும் பொறுப்பேற்பது என்பது அசாத்தியமானது, ஆச்சரியமானது. ஐயா அவர்கள் அதிபராக இருந்த காலம் கல்லூரியின் "பொற்காலம்" எனச் சொன்னால் அது மிகையாகாது.*

*ஐயா திரு. ஸ்ரீகாந்தன் அவர்கள் அதிபராக இருந்த காலத்திலே விக்ரோறியாக் கல்லூரி ஈட்டிய வெற்றிகளும், படைத்த சாதனைகளும் பெருமைக்குரியவை, பாராட்டுக்குரியவை. கல்வியா, கலையா, விளையாட்டா எத்துறையாயினும் அனைத்துத் துறைகளிலும் அபார திறமையை வெளிப்படுத்தினார்கள். ஈழவள நாட்டிலே உள்ள முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றாக எங்கள் கல்லூரியின் பெயரும் வரக்கூடியவாறு சகல வழிகளிலும் கல்லூரியை முன்னேற்ற இரவு பகல் பாராது கடினமாக உழைத்த அதிபர் அவர்கள் பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். அவரது இல்வாழ்க்கை வளமுடனும் நலமுடனும் அமைந்து அவர் நல் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ அவர் ஆராதித்த பொன்னாலை வரதராஜப் பெருமாளின் பாதம்பணிந்து வாழ்த்தி வணங்குகின்றோம்.*

*நன்றி!*


# மனம் நிறைந்த மணிவிழா வாழ்த்துக்கள்



**திரு. தாமோதரம்பிள்ளை கமலநாதன்**
காரியதரிசி,
பழைய மாணவர் ஒன்றியம்,
ஐக்கிய இராச்சியம்.

*எமது சுழிபுரம் கிராமத்தில் பிறந்து விக்ரோறியாக் கல்லூரியிலே கல்வி கற்று அங்கேயே ஆசிரியராகக் கடமையாற்றி பின்னர் அதே கல்லூரியில் 2010 - 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றி மணிவிழாக் காணும் பெரும் மதிப்புக்கும் அன்புக்குமுரிய அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் எமது கல்லூரியின் அபிவிருத்திக்காகவும் மாணவர்களின் கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளின் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு மாணவர்கள் பல மட்டங்களிலும் பல்வேறு சாதனைகளை நிலை நாட்டுவதற்கு காரண கர்த்தாவாகத் திகழ்ந்தவர்.*

*கடந்த சில வருடங்களில் எமது U.K. பழைய மாணவர் ஒன்றியம் பல முக்கிய வேலைத் திட்டங்களைச் செயலாற்றியுள்ளது. பிரதானமாக றிச்வே மண்டபப்புனரமைப்பு, புதிய சிற்றுண்டிச் சாலை அமைத்தமை என்பவற்றைக் குறிப்பிடலாம். மதிப்புக்குரிய திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் எமது கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றிய காலப்பகுதி வரலாற்றுப் பெருமைமிக்க பொற்காலமாக எமது U.K. பழைய மாணவர் ஒன்றியத்தினால் மதிக்கப்படுகின்றது. மதிப்புக்குரிய அதிபரின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைவதுடன் அவர் தனது குடும்பத்தாருடன் நீடூழி காலம் வாழ விக்ரோறியன்களாகிய நாம் யாவரும் விக்ரோறியா அன்னையை வேண்டி நிற்கின்றோம்.*





# காலங்களை மீட்டிப் பார்க்கின்றேன்



**திரு. சி. இரவிசங்கர்**
ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஒன்றிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர்

மணிவிழாக்காணும் எமது மதிப்பார்ந்த அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்களது மணிவிழா மலரில் எனது ஆழ்மன எண்ணங்களையும் பதிவு செய்துகொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். எமது ஊரவரான இவர், எல்லோராலும் மதிக்கத்தக்க குடும்பத்தில் பிறந்தவர். மாணவனாக விக்ரோறியா அன்னையின் மடியில் தவழ்ந்து விளையாடியவர். பின்னர் ஆசிரியராகத் தனது அன்னைக்குப் பணிசெய்தவர். ஸ்ரீகாந்தன் ஆசிரியரிடம் கல்வி பயின்ற காலங்களை மீட்டிப் பார்க்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கடந்த மூன்று வருடங்களில் தனது அன்னை ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் வகையில் பாடசாலையை மிக உன்னத நிலைக்கு இட்டுச் சென்றவர். ஒழுக்கம், கல்வி, விளையாட்டு, கலை, உட்கட்டுமான அபிவிருத்தி எனச் சகல துறைகளிலும் கல்லூரி உச்சத்தைத் தொடக் காரணமானார். அவரது காலத்தினைப் பாடசாலையின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. அவரது காலத்தில் பின்வரும் பணிகளில் பங்காற்ற எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு இறைவனுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆசிரியர் மலசலகூடம் புனரமைப்பு, பிரார்த்தனை மண்டபம் மெருகூட்டல் மற்றும் புதிய சிற்றுண்டிச்சாலை அமைத்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களில் அவருடன் சேர்ந்து பணியாற்றக் கிடைத்தது எனது பாக்கியமே. எல்லாவற்றுக்கும் மேலாக, எமது ஊட்டற் பாடசாலைகளிலிருந்து எமது மாணவர்களின் தரத்தை உயர்த்தவேண்டும் என்ற நோக்கைக் கொண்டு உழைத்தவர். அந்த இலக்கினை அடைவதற்காக, ஐக்கியசங்க சைவவித்தியாசாலை, காட்டுப்புலம் அரசினர் பாடசாலை, மற்றும் திருவடிநிலை அரசினர் பாடசாலை போன்றவற்றில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவரின் கல்வி ஊக்கத்திற்காக எமது பழைய மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அதிலே வெற்றியும் கண்டவர்.

அதுமட்டுமல்லாது உலகெங்கும் பரந்துவாழும் எமது விக்ரோறிய அன்னையின் தவப்புதல்வர்கள் எமது பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளையும் முன்னேற்றங்களையும் எமது www.jvcosa.uk இணையத்தளத்தினூடாக அறிந்து கொள்வதற்காக அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு நல்கியதோடு எமையெல்லாம் ஊக்கப்படுத்தியவர்.

வெளிநாடுகளிலுள்ள அனைத்து பழைய மாணவர் சங்கங்களுடனும் நல்லுறவைப் பேணியதோடு அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மணிவிழா நாயகனது ஓய்வுகாலம் ஆரோக்கியத்துடனும் மனநிம்மதியுடனும் அமைவதோடு எமது கல்லூரி வளர்ச்சிக்கு அவர் தொடர்ந்தும் உதவ எல்லாம்வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

# எங்கள் ஊர் தந்த அதிபர்



**திரு. க. செந்தில்நாதன்**
அவுஸ்ரேலியா.

பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்கள் விக்ரோறியா அன்னைக்கு அரும்பணியாற்றித் தனது அறுபதாவது ஆண்டில் ஓய்வுபெற்றதை முன்னிட்டு, அவரது சேவைகளைப் பதிவு செய்யும் முகமாக வெளியிடப்படும் மணிவிழா மலரில் எனது வாழ்த்துச் செய்தியினையும் பதிவு செய்யச் சந்தர்ப்பம் கிட்டியமைக்கு இறையருளுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சுழிபுரம் குடியிருப்புப் பகுதியில், எல்லோராலும் மதிக்கப்பட்ட வரதராஜக் குருக்கள் பரம்பரையில் தோன்றி, எமது கல்லூரியின் மாணவனாய், ஆசிரியராய், அர்ப்பணிப்பும் ஆளுமையும் ஆற்றலும் மிக்க அதிபராய் விளங்கி, மணிவிழாக் காணும் நாயகன் கல்லூரியின் வரலாற்றில் தனது பெயரைப் பொன்னெழுத்துக்களால் பொறித்துக் கொண்டவர்.

கல்லூரியின் பெறுபேறுகள், விளையாட்டுத்துறை, நடன மற்றும் கலைத்துறை, ஆங்கிலத்துறை உள்ளக அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பக் கல்வி எனப் பல்வேறு பரிமாணங்களில் கல்லூரி பிரகாசிக்க அயராது உழைத்தவர்.

அவரது மூன்றுவருட அதிபர் சேவைக்காலத்தில், அவுஸ்ரேலியா பழைய மாணவர் சங்கம் சார்பாகப் பணியாற்றக்கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பேறாகவே கருதுகிறேன். அவற்றுள் குறிப்பிடக்கூடியன கணனி தொழில்நுட்ப கூடம் அமைத்தமை, வருடாவருடம் பல்கலைக்கழகம் செல்லும் வறிய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்குதல் மற்றும் அதிசிறந்த பெறுபேறு பெறும் இரு மாணவர்களுக்கு மடிக்கணனி வழங்குதல் என்பனவாகும்.

ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களது ஓய்வுக்காலம் ஆரோக்கியத்துடனும் மன நிம்மதியுடனும் அமையப் பிரார்த்திப்பதோடு, எமது கல்லூரிக்கு அவர் தொடர்ந்தும் உதவ எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி!

# எமது அன்புக்குரிய அதிபரைப்பற்றி...



**சுதர்சன் முத்துக்குமாரசுவாமி**
(CPA, CGA)
கனடா.

எமது கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும் முன்னாள் கணக்கியல் ஆசிரியருமான பிரம்மஸ்ரீ வ. ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலரில் வாழ்த்துச் செய்தியினைப் பதிவு செய்வதற்கு எனக்குமோர் சந்தர்ப்பம் கிட்டியதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

மணிவிழா நாயகன், ஆசிரியராகவும் அதிபராகவும் எமது கல்லூரி வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றி, கல்லூரியின் வரலாற்றுப் புத்தகத்திலே தனது பெயரினைப் பொன்னெழுத்துக்களால் பொறித்துக் கொண்டவர்.

**ஆசிரியராக...**

இவர் எமது கல்லூரியில் கணக்கியல் கற்பித்த அந்தநாள் ஞாபகங்களை மீட்டிப்பார்க்கிறேன். இவரது கற்பித்தற் திறமையாலும் சிறந்த ஆளுமையாலும் கவரப்பட்டு எமது அயற்கிராமங்களிலிருந்து மட்டுமல்லாது, நகரங்களிலிருந்தும் பல மாணவர்கள் எமது பாடசாலையில் புதிதாக வந்து இணைந்து கொண்டதோடு மட்டுல்லாது மாணவர்கள் மிகச் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுக்கொள்ளக் காரணமாக விளங்கியவர். இன்று என்னால் ஒரு கணக்கியலாளனாக விளங்கக் கூடியதாக இருப்பதற்குரிய அத்திபாரம் இட்டவர்கள் இவரும் திரு.சி.க. இந்திரராஜா அவர்களும் என்றால் அது மிகையாகாது.

**அதிபராக....**

மணிவிழா நாயகன் எமது கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தினைக் கல்லூரியின் பொற்காலம் எனலாம். கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருமதி. அ. வேலுப்பிள்ளை அம்மா அவர்களின் காலத்தினைத் தொடர்ந்து, அவரின் ஆளுமைக்கும் செயற்றிறனுக்கும் ஈடான ஒருவரைக் கல்லூரிக்கு அதிபராக்க வேண்டும் என்ற வரலாற்றுக் கடமையில், சுழிபுரம்மற்றும்வுனைய வெளிநாட்டுப்பழைய மாணவர்களுடன் நாமும் எம்மாலான முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில், பெருமதிப்பிற்குரிய கல்லூரியின் முன்னாள் ஓய்வுநிலை அதிபர் திரு.க. அருணாசலம் ஐயா அவர்களதும் ஓய்வுநிலைப்பிரதி அதிபர் திரு.க. இந்திரராஜா அவர்களது பெருமுயற்சியாலும், இன்னும் பல நலன்விரும்பிகளது முயற்சியாலும் உயர்திரு.வ.ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களைச் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து அழைத்து வந்தோம். இம்முயற்சியில் சண்டிலிப்பாய் மக்கள், கல்லூரியின் நலன்விரும்பிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மாபெரும் அன்புப்போராட்டத்தைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

இவர் தமது சேவைக்காலத்தில், நாம் எதிர்பார்த்ததிற்கு மேலாக எமது கல்லூரி அன்னைக்குப் பன்மடங்கு சேவை புரிந்துள்ளார். இவரது காலத்தில் எமது கல்லூரி மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதோடு, விளையாட்டுக்களிலும் தமிழ்த்தினப் போட்டிகளிலும் மாகாண மற்றும் தேசிய ரீதியில் கல்லூரியின் முத்திரையைப் பதித்தமையைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

மேலும், வெளிநாட்டுப் பழைய மாணவர் சங்கங்களுடன் நல்லுறவைப் பேணியதோடு தேவைகளை உடனுக்குடன் அறியத்தந்து எமது கல்லூரிக்கு எம்மாலான பணியினை மேற்கொள்ள உறுதுணை புரிந்துள்ளார்.

**சிறந்த குடிமகனாக...**

பிரம்மஸ்ரீ வ. ஸ்ரீகாந்தன் அவர்களின் குடும்பம் எமது ஊரவரால் நன்கு அறியப்பட்டு மதிக்கப்பட்டு வருகிறது. இவர் எமது கல்லூரியின் மாணவனாக, ஆசிரியராக, சிறந்த அதிபராக, சமூக சேவையாளராக பிறந்த ஊருக்குத் தனது நன்றிக்கடனைச் செலுத்தியுள்ளார். மணிவிழா நாயகன் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பழைய மாணவர்களாலும் நலன்விரும்பிகளாலும் ஊரவராலும் எந்தளவிற்கு மதிக்கப்படுகிறார் என்பதற்கு அவரது பிரிவுபசார நிகழ்வே சான்று.

இவர் தனது ஓய்வுக் காலத்தினை, உடல், உள ஆரோக்கியத்துடனும் மன நிம்மதியுடனும் கழிப்பதோடு மட்டுமன்றி, எமது கல்லூரி வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் உதவ, எல்லாம்வல்ல பறாளாய் விநாயகப்பெருமான், சிவசுப்பிரமணியர் மற்றும் கம்பனை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி!



# விக்ரோறியா அன்னையின் மணிமகுடம்



**திரு.கு. வினோதன்**
(பழைய மாணவன்)
ஐக்கிய இராச்சியம்.

"The strong towerds decay. But a great man name shall never pass a way"

*வலிமை மிகுந்த கோபுரங்கள் கூட சிதைவடைந்து போகின்றன. ஆனால் நற்செயல்கள் செய்த பெரியார்களின் பெயர்கள் என்றும் அழிவதில்லை.*

*விக்ரோறியா அன்னையின் மாணவனாக, ஆசிரியராக இறுதியில் அதிபராக சேவையாற்றி ஓய்வுபெற்ற திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் தமது கடமையினை அர்ப்பணிப்புடனும் சுழிபுரம் கிராமத்தின் முன்னேற்றம் கருதி சேவை மனப்பாங்குடனும் திறம்பட ஆற்றிய விக்ரோறியன்களில் ஒருவர் என்பதில் ஐயமில்லை.*


*இவருடைய காலம் பொற்காலம். ஆசிரியராகவும் அதிபராகவும் இவர் செய்த பணிகளைக் கல்லூரியின் ஒவ்வொரு படிக்கட்டுகளும் கதைகளாகக் கூறும். அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் கல்லூரியின் வளர்ச்சி அதி உன்னதமானது. அதற்கு "றிஜ்வே" பிரதான மண்டபமும் சாட்சியாயுள்ளது. சிறப்பான முகாமைத்துவம் மூலம் விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளில் கல்லூரி தேசிய மட்டம் வரை உயர்ந்து செல்வதற்கு அதிபர் பாடுபட்டார்.*

*எனது உயர்தர மாணவப் பருவத்தில் அதிபரிடம் கணக்கியல் பாடத்தைப் படித்தவர்களில் நானும் ஒருவன் என்பதைப் பெருமையாகக் கொள்கின்றேன். 1992-1995 காலப்பகுதியில் போர் காரணமாக மிக நெருக்கடி மிகுந்த சூழலில் நாங்கள் குப்பி விளக்கில் கல்வி கற்றவர்கள். அப்பொழுது பெற்றோல்மாக்ஸ் கொளுத்தி கல்வி கற்பித்தவர் எங்கள் அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள். அவர் அன்று ஏற்றிய ஒளி விளக்கு இன்றுவரை உலகத்தின் பல பகுதிகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. ஆசானின் நற்சேவைக்கு நாங்கள் அனைவரும் தலைவணங்கி வாழ்த்துகின்றோம்.*

*எமது விக்ரோறியா அன்னைக்கு திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் தலைசிறந்த மணிமகுடம். தனது பதவிக்காலத்தில் கல்லூரியின் உயர்வினை உலகின் நாற்றிசையும் பறைசாற்றிய செயல்வீரன்.*

வாழ்க வளமுடன், வாழ்க நலமுடன், வாழ்க பல்லாண்டு.

# செம்புலப் பெயல் நீராய்...



**திரு.இ. ஆனந்தநடராசா,**
முன்னாள் பிரதி அதிபர்,
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

மணிவிழாக் காணும் என் அன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய அதிபர் திருமிகு ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு அகவை வாழ்த்துக் கூறுவதில் ஆனந்தமடைகின்றேன். இவர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகப் பொறுப்பேற்ற 2005ஆம் ஆண்டு முதல் இன்று வரை என் இனிய நண்பராக தொடர் உறவைப் பேணி வருபவர். எங்கள் கல்லூரி மட்டங்களிலும் சிறந்த நிர்வாகி என்று பலராலும் பாராட்டப் பெற்றவர். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இவரது நிர்வாகத்தின் கீழ், பிரதி அதிபராக நான் பெற்ற அனுபவங்கள் ஆயிரம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சாதனைகள் பல பெற முன்னின்று உழைத்த உத்தமர். இவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற போதும் எமது கல்லூரியின் வளர்ச்சியில் இன்றுவரை அதீத அக்கறை கொண்டு செயற்படுபவர். விக்ரோறியாக் கல்லூரியிலும் இவர் சாதனைகள் பல நிகழ்த்தி வெற்றி முத்திரை பதித்துக் கொண்டவர்.

இவரோடு நான் கடமையாற்றிய காலத்தில்; நான் கண்ட உண்மை, இவரது நேர்மையான செயற்பாடுகள் தாம். எந்தத் தீர்மானம் எடுப்பதாயினும் என்னுடன் கலந்தாலோசித்தே செய்வார். ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் உச்ச அக்கறையுடன் செயற்பட்டு அம்மாணவர்களின் வளர்ச்சியில் மகிழ்ச்சியும் கண்டு புளகாங்கிதம் கொள்பவர்.

"நாம் இருவரும் ஒரே வருடத்தில் ஓய்வு பெறுவோம், அது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் தான் நிகழவேண்டும்" என்று நான் அடிக்கடி அவரிடம் என் விருப்பைத் தெரிவித்துக் கொள்வேன். ஆனால் எங்களின் எண்ணம் நிறைவேறாது இவர் விக்ரோறியாக் கல்லூரிக்கு விடைபெற்றுச் சென்றுவிட்டார். இருப்பினும் இந்த விடைபெறுதல் என்பது தொழில் நியமம் சார்ந்ததே தவிர, நட்பின் நகர்வு சார்ந்ததல்ல. எமது நட்பானது கெழுதகைமை நட்பானமையால் இன்று வரை செம்புலப்பெயல் நீராய் பிரிக்க முடியாமல் இருக்கிறது.

எங்கள் தொடர்பு கல்லூரி மூலமாக கல்விசார் நட்பாக ஆரம்பித்தாலும் கூட அது பரந்து விரிந்து இன்று எமது குடும்ப நட்பாகத் தொடர்ந்து வருகிறது. இந்த நட்பு வேரின் விசாலமும் விலாசமும் எப்போதும் ஆழமானது, அழகானது. இது எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல.

இவர், சொல்லிலும் செயலிலும் நல்லதையே செய்தார், நல்லதையே அடைந்து வருகின்றார். இவரது புத்திரச் செல்வங்கள் இன்று கல்வியிலும் தொழிலிலும் மேன்மையடைந்து வருவது இதற்குச் சான்றாகும். தனது பிள்ளைகளாலும் தான் கற்பித்து வழிநடாத்திய மாணவச் செல்வங்களாலும் இவர் இன்றடைந்த பெருமை இவரது பொற்பணிக்குக் கிடைத்த வெகுமதி.


**"தம் பொருள் என்பர் தம்மக்கள் அவர் பொருள்**
**தத்தம் வினையால் வரும்"**

என்ற வள்ளுவம் இதற்கு சாலப் பொருந்தும்.

ஒரு கிராமம், ஒரு நகரம், ஒரு தேசம் வளர உழைத்த உத்தமசீலனின் பணி ஓய்வு ஒரு போதும் ஓய்வாகிவிடாது. அவர் கட்டிவளர்த்த மாணவரின் மகிழ்வு வட்டம் எப்போதும் இவரைப் பணி செய்யத்தூண்டிக் கொண்டேயிருக்கும். உங்கள் ஓய்வுகாலம் மேலும் சேவையில் சிறக்க, உடல் உள நலனில் இருக்க வாழ்த்துகின்றேன்.



# விளையாட்டுத்துறை முதல்வரின் பார்வையிலே...



**நா. திருக்குமாரன்**
(முன்னாள் விளையாட்டுத்துறை முதல்வரும்
பிரிவுத் தலைவரும்)

ஒரு கல்லூரி 136 வருடங்கள் கடந்தும் இன்றும் கல்விப் பணியுடன் சமய, கலாசார விழுமியங்களுடன், நற்பண்புகளையும் மாணவர்களுக்கு ஊட்டித் "தேசியம்" என்ற நீரோட்டத்தில் ஒரு தலைசிறந்த கல்லூரியாக விளங்குகின்றது என்றால் அது இமாலய சாதனையே. இந்த நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்ட இக் கல்லூரி பல தலைசிறந்த கல்விமான்கள், நீதிபதிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள், ஏன் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் தலைவர்களையும் உருவாக்கிய பெருமையுடன் இன்றும் சீர்மிகுந்து, சிறப்புற்று உயர்ந்து நிற்கின்றது என்றால் அதற்குக் காரணம் அக்கல்லூரியைத் தலைமைப் பொறுப்பேற்று நிர்வகித்த அதிபர்களே எனக் கூறின் அது மிகையாகாது.

இக் கல்லூரியில் சில காலங்கள் ஆசிரியராகக் கடமையாற்றி மூன்று வருடங்கள் அதிபராகச் சேவையாற்றும் வாய்ப்புப் பெற்றவர் என்ற வகையில் எமது அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களின் அளப்பரிய சேவை பற்றி சில விடயங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்வடைகின்றேன்.

பன்னிரெண்டு வருடங்கள் முதல் பெண் அதிபராகப் பணியாற்றிய திருமதி. அ.வேலுப்பிள்ளை அவர்கள் தமது அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்ற பின்னர் உயர்ந்து நிற்கும் எம் கல்லூரியை மேலும் உயர்வடையச் செய்வதற்கு யார் அதிபராக வருவார் என நாம் எதிர்பார்த்திருந்த சமயம் விக்ரோறியா அன்னையின் புதல்வனாய்ப் பரிணமித்து, கசடறக் கல்வி புகட்டும் ஆசானாய்த் திகழ்ந்த சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் அதிபர் பதவியேற்று நம் தேடுதலுக்கு ஆறுதல் அளித்தார்.

**"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள்பவர்க்கு"**

என்ற வள்ளுவன் வாக்கை நிரூபித்த பெருமை அதிபரையே சாரும். யா/விக்ரோறியாக் கல்லூரியில் பதவியேற்று மூன்று வருடங்களில் அப்பப்பா எத்தனை மாற்றங்கள்?

அவர் துணிந்து மேற்கொண்ட தீர்க்கதரிசனமான நடவடிக்கைகள், ஆளுமை, நற்பண்பு, அறிவாற்றல், செயற்றிறமை, நேர முகாமைத்துவம், தனது

சேவையினைத் தெய்வீகமாக எண்ணும் பண்பு, தொடங்கிய நற்பணி தொய்வின்றித் தொடரவேண்டும் என்பதில் கொண்ட ஆர்வம், காரியத்தின் உறுதி, எண்ணியதைத் திண்ணமுற நிறைவேற்றும் திறமை எனப் பலதரப்பட்ட சிறப்பம்சங்களே காரணம் எனலாம்.

தனியே மாணவர் நலனில் மட்டும் அக்கறை கொள்ளாது ஆசிரியர்கள், அலுவலர்கள் யாவரது நலனிலும் அக்கறை கொண்டவர். ஆசிரியர்களிடையே புரிந்துணர்வு, கூட்டு மனப்பான்மை, நல்லுறவு என்பன மேலும் வலுப்பெறவும் அவரது முன்மாதிரியான செயற்பாடுகள் வழிகாட்டியாய் அமைந்தன.

கல்லூரிச் சமூகத்தின் சுகதுக்கங்களில் அதிபராய் மட்டுமன்றி நண்பனாய், சகோதரனாய், தந்தையாய் நடந்து கொள்ளும் பண்பு அவருக்கே உரித்தானது. அதிபர் அவர்களது சேவைக்காலத்தில் கல்லூரி பல வழிகளிலும் முன்னேற்றமடைந்தது. அவற்றுக்குச் சான்றாக புதிய கட்டடங்கள், கல்லூரி வளாகம் புதிய பூஞ்சோலையாக மாற்றப்பட்டமை, 135வது ஆண்டு விழா கொண்டாட்டம் என பல விடயங்களைக் குறிப்பிட முடியும்.

அதிபர் அவர்களது காலத்தில் எமது கல்லூரி விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை நிலைநாட்டியமைக்கு அவரது ஊக்குவிப்பே காரணமாய் அமைந்துள்ளன. அந்த வகையில் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு முன்னோடியாக மரதன் ஓட்ட நிகழ்வு அறிமுகம் செய்யப்பட்டது. 2011இல் எல்லேயில் ஆண்கள் வலயமட்டத்தில் 1ம் இடமும், பெண்கள் மாகாண சம்பியனாகியமையும் குறிப்பிடலாம்.

பெண்கள் துடுப்பாட்டம் தொடர் வெற்றிகளுடன் மாகாணச் சம்பியனாகி தேசியத்திலும் 2ம் இடத்தைப் பெற்றமை. மெய்வன்மைப் போட்டியில் மாகாண மட்டத்தில் புதிய சாதனைகளும் வர்ணச் சாதனையும் பெறப்பட்டமை.

15 வயது ஆண்கள் பிரிவில் கைப்பந்துப் போட்டியில் தேசியத்தில் 1ம் இடம் பெற்றமை. வலைப்பந்து அணி தேசியம் வரை சென்றது, ஈட்டி எறிதலில் தேசிய மட்டத்தில் செல்வி. பா. ரஜிதா இரண்டாம் இடம் பெற்றது போன்ற பல விடயங்களைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு எமது அதிபரின் சேவைக்காலத்தில் விளையாட்டுத்துறை பல சாதனைகளைப் பெற்றமைக்கு எம் அதிபரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. போட்டிக்குச் செல்லும்போது மாணவர்களையும், பொறுப்பாசிரியரையும் வாழ்த்தி வழியனுப்புவதும், கூடியவரை போட்டி நடைபெறும் மைதானங்களுக்கு நேரில் சென்று மாணவரை உற்சாகப்படுத்துவதும், திரும்பி வரும்போது வரவேற்பதும், உபசரிப்பதும் என அவரின் செயற்பாடுகள் இச் சாதனைகளுக்கு உந்துசக்தியாய் அமைந்தன எனலாம்.


இவர் தமது அதிபர் சேவைக்காலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பிரதேச மக்கள் எனப் பல தரப்பினரும்

இணைந்த ஒரு பலமான பாடசாலைச் சமூகத்தினைக் கட்டியெழுப்பிய பெருமைக்குரியவர்.

சிறந்த ஆளுமைத்திறன் பெற்றவர், அஞ்சாதவர், கண்டிப்பும் கண்ணியமும், மாணவர் கல்வியில் அளவில்லா அக்கறையும் கொண்டவர். அவர்களது அறிவாற்றலை வளர்க்க அரும் பாடுபட்டுழைத்தவர். அவரது தன்னலமற்ற சேவையினால் மாணவர்கள் பல துறையிலும் வளர்ந்தார்கள். பெற்றோர் மகிழ்ந்தார்கள், ஆசிரியர்களும் பண்பட்டு உயர்ந்தார்கள்.

கலைத்திட்ட அமுலாக்கம், பௌதிகவள அபிவிருத்திச் செயற்பாடுகளில் உயர் முகாமைத்துவ வினைத்திறனை வெளிப்படுத்தி சமூகம்சார் பயனுறுதிகளை உச்சப்படுத்தும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் தனது அதிபர் கடப்பாட்டினைச் செவ்வனே நிறைவேற்றியவர்.

இத்தகைய பெருந்தகைக்கு விழா எடுப்பது அவரது சேவையில் இருந்த ஒவ்வொருவரும் பெருமைப்படக்கூடிய நிகழ்வாகும். அர்ப்பணிப்பான பணியினால் அனைவரது உள்ளத்திலும் உயர்ந்த இடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் அதிபரின் சேவை பற்றிக் கருத்துக்களைப் பகிர சந்தர்ப்பம் அளித்த மலர்க்குழுவினருக்கு நன்றிகள்.



# உன்னதமான பணி



**ச. விநாயகரத்தினம்**
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்,
யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம்.

ஒரு சமூகத்தை அறிவூட்டிப் பகுத்தறிவு நிறைந்த ஒரு சமுதாயமாக மாற்றியமைப்பதில் ஆசிரியரின் பங்களிப்பு மிக உன்னதமானது. ஒரு கிராமத்தின் குறிகாட்டியாக விளங்கும் பாடசாலைகள் உயிர்த் துடிப்புள்ள நிறுவனமாக இருப்பதால் அக்கிராமத்து மக்களால் நேசிக்கப்படுபவையாக அவை விளங்குகின்றன என்று கூறுதல் மிகையாகாது. அந்தவகையில் உயிர்த்துடிப்புள்ள நிறுவனமாக விளங்கும் யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் பணி உன்னதமானது.

1977.02.01இல் ஆசிரியர் நியமனம் பெற்ற இவர் சிறந்ததொரு கணக்கியல் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரிடம் கற்ற மாணவர்கள் பலரும் உயர்ந்த பதவிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றமை இவரின் பெருமையை விளக்கி நிற்கின்றதாகும். 1991.06.01இல் அதிபர் சேவையில் உள்வாங்கப்பட்ட இவர் உடனடியாக அப் பதவியினை ஏற்று நிர்வாகத்துறையில் கால் பதிக்காமல் ஆசிரியப் பணியினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு பின்பு 2005.08.17இல் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றவர். ஏறக்குறைய ஐந்து வருடங்கள் அங்கு நிர்வாகப் பணியினைச் சிறப்பாக மேற்கொண்டு அப் பாடசாலையின் வளர்ச்சிக்குச் சிறந்த அர்ப்பணிப்பான சேவையினை வழங்கியமையைக் காணலாம்.

2010.09.14இல் யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று ஓய்வுபெறும் வரை அப் பாடசாலையின் பல்துறை சார்ந்த வளர்ச்சிக்குத் தன்னுடைய நிர்வாகத் தன்மையை லாவகமாகச் செயற்படுத்தி வெற்றிகண்டவர். கடமையின் போது பயனையோ, தற்புகழையோ, பெருமையையோ சிறிதளவும் கருதாது செய்ந்நன்றி மறவாத் தன்மையுடன் தமது பணியினைச் செம்மையாக வழிநடத்தியவர். மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மேம்பாடடைய உதவிய உத்தமர் ஆவார்.

அரச அலுவலர்களுக்கு ஓய்வு என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். நிறையச் சேவை செய்தவர்களுக்கு ஓய்வு அவசியம். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் இவரின் குடும்பத்தினர் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கவும் இறைவன் துணைபுரிய வேண்டும் எனப் பிரார்த்தித்து எனது வாழ்த்துச் செய்தியைக் கூறுவதில் பேருவகை அடைகின்றேன்.

# முகாமைத்துவத் தேர்ச்சியும் ஆளுமையும் மிக்க ஆசான்



"விக்ரோறியன்"
**திரு.பா. தனபாலன்,**
இணைப்பாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

பாரம்பரியமாக கல்விக்கு சரஸ்வதி என்ற தெய்வ உருவம் கொடுத்து, கல்வியைத் தெய்வமாகப் போற்றும் மரபு ஈழத் தமிழர் மரபு. இதே மரபின் எழுச்சி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் செயன்முறையாக இருந்துவருகின்றது. திரு.ஸ்ரீகாந்தன் சேர் அவர்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் போது நாம் படித்த காலம்: இலட்சிய ஆசிரியராக, உயர் பண்பாளராக, நல்ல மனிதராக, வழிகாட்டியாக, சேவையாளராக தன்னையே அர்ப்பணித்து மாணவர்களாகிய எமக்குக் கல்வி புகட்டிய பேராசான் அவர். மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு செயலாற்றியவர். கால மாற்றம், நாட்டில் ஏற்பட்ட யுத்தம், இடப் பெயர்வுகள் ஊடாக இம் மண்ணிலேயே வாழ்ந்து சிறந்த அதிபராக ஓய்வுபெற்றிருக்கின்றார் திரு.வ.ஸ்ரீகாந்தன் சேர் அவர்கள். அவர்களுடைய கல்விப் பணி போற்றுதற்குரியது.

கல்வியே எம் சமூகத்தின் பெரும் சொத்து. கல்வியினாலேயே எங்களின் சமூக அசைவும் மேம்பாடும் உறுதிபெறுகின்றன. கல்வி ஒவ்வொருவருக்கும் ஓர் உரிமையாகவும் அது எல்லாவிதமான சுதந்திரங்களுக்கும் புரட்சிகரமான அரசியல் மேம்பாடுகள் அனைத்துக்குமான அடிப்படையாகும் என்ற வகையில் மாணவர் கல்வி மீது மிகவும் அக்கறை கொண்ட முகாமைத்துவத் தேர்ச்சி மிக்க, ஆளுமையுடைய அதிபராக திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் திகழ்ந்துள்ளார். அதிலும் ஓய்வு பெறும் காலம் வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தன்னையே அர்ப்பணித்து மிகப் பல சாதனைகளை ஈட்டிக்காட்டினார். ஒரு முன்மாதிரித் தேர்ச்சி மிக்க முகாமையாளராகச் செயலாற்றினார்.


**கல்வி முகாமைத்துவத் தேர்ச்சிகள் :**

இன்றைய பாடசாலைகள் சமூகத்தின் மாதிரிகள், சமூகம் சிறப்படைய பாடசாலைகளை முறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டும். பாடசாலையின் முதற்தர முகாமையாளர் பாடசாலை அதிபரே ஆவார். இன்றைய பாடசாலை அதிபர் தம் பாடசாலைகளை முகாமை செய்ய பல சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். ஒரு அபிவிருத்தி சார் சமூகத் தலைவராக செயற்படவேண்டிய அதிபர் தனது பாடசாலையைச் செயற்பட வைக்கப் பலரிடம் கூனிக்குறுகி நடக்க வேண்டியுள்ளது.

பாடசாலை மேற்பார்வைக்குச் செல்லும் பெரும்பாலான கல்விப் பணிப்பாளர்கள், காலனித்துவம் மறைந்தும் காலனித்துவ மேற்பார்வை பரிசோதனை மனப்பாங்குகளை இன்றும் மறக்காமலுள்ளனர். இன்றைய பெரும்பாலான ஆசிரியர்கள், அதிபரையோ, கல்விப் பணிப்பாளர்களையோ தமது முகாமையாளர்கள் என்று கருதாமல் தம்மை அச்சுறுத்துபவர்கள் என்று எண்ணித் தூர விலகுகின்றனர். அவர்கள் மீதான வெறுப்புணர்வு ஆசிரியத்துவம், பாடசாலை மீதான வெறுப்புணர்வாகவும், கல்வியுலகத்தின் மீதான மனக் கசப்பாகவும் நிலைபெற்று வளர்கின்றது.

மேற்பார்வைக் குழு வருகின்றது என்ற சொல் ஆசிரியர்களுக்கு பகைமை உணர்வையும், பயத்தையும் ஏற்படுத்துகின்றது. ஆசிரியர்களுக்கு அறைகூவல் விடுத்து மட்டம் தட்டி கையாலாகாதவர்கள் என்ற சான்றிதழை வழங்கும் ஒரு செயற்பாடாக குழு முறை மேற்பார்வை உள்ளதாக ஆசிரியர்கள் பலர் ஐயுறுகின்றனர். இந் நிலையை மாற்றி ஆசிரியர்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றைத் தீர்த்து அவர்களுக்கு முழுமையாக உதவி, இடர்களைக் களைந்தெறிந்து ஊக்கமளிக்கும் நவீன மேற்பார்வை கல்வி முகாமைத்துவத் தேர்ச்சிப் பிரயோகங்கள் இன்று வந்துவிட்டன. இதற்கு நவீன முகாமைத்துவ கண்காணிப்பு முறைகளைப் பயன்படுத்தி கல்விச் செயற்கிரமங்களை வினைத்திறனாக்கலாம்.

**கல்வி அபிவிருத்தி முகாமைத்துவத்தில் கண்காணித்தலின் மாதிரி :**





உள்ளீடுகள் - செயன்முறை – வெளியீடுகள் என்பவற்றை நெறிப்படுத்தல் ⟶ வினைத்திறன் (Efficiency)
வெளீடுகள் + விளைவுகள் + தாக்கங்கள் என்பவற்றை மதிப்பிடல் ⟶ விளைத்திற்ன (Effective)

பாடசாலைத் திட்டங்களை அமுலாக்குகின்ற போது பலவகையான தடைகளும், சவால்களும் ஏற்படுகின்றன. இவற்றைத் தீர்க்க அதிபர்கள் முகாமைத்துவம் தொடர்பான சவால்களை எதிர்கொள்ளும் தேர்ச்சிகளைப் பிரயோகிப்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் ஊகங்களை விட சான்றாதாரங்களில் நம்பிக்கை கொண்டு சவால்களை வெற்றிகரமாகக் கையாளக்கூடிய கல்வித்திட்டமிடல் அமுலாக்கல் தொடர்பான ஒரு வலுவான ஆய்வு ஆதாரத்திட்டத்தை (Solid Research Support System) வைத்திருக்க வேண்டும்.

இதற்கான தமது நிபுணத்துவ - வாண்மைத்துவ தேர்ச்சிகளை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு தர மேம்பாட்டு முகாமை வழிகாட்டுகின்றது.

**தர மேம்பாட்டு முகாமைத்துவம் :**



ஒவ்வொரு நிறுவன முகாமையாளர்களும், பாடசாலை அதிபர்களும் தனது பலங்களை அதிகரித்து தனது பலவீனங்களை விடுத்து தம்மைத் தாமே கணிப்பீடு செய்து தமது முகாமைத்துவ ஆற்றல்களை வளர்க்கும் போது நிறுவனமும் தர மேம்பாடடையும். இங்கு தரம் என்பது மேன்மைத் தன்மை அல்லது உயர்வான தன்மை எனக் கருதப்படுகின்றது. குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக குறிப்பிட்ட சேவை கொண்டிருக்கும் முழுமையான உயர்வான பயன்பாட்டுத் தன்மையே தரமாகும். இது வாடிக்கையாளர்களின் திருப்தியுடன் தொடர்புடையது.

கல்வித்துறையில் தர விருத்தி, தர உறுதிப்பாடு, மொத்தத் தர முகாமைத்துவம் ஆகிய எண்ணக்கருக்களைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. பாடசாலை தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இதற்குத் தடையான காரணிகளைக் கண்டுபிடிப்பதிலும் பார்க்க முற்கூட்டியே அவற்றைத் தடுக்கும் செயன்முறைகளைப் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தல். புரிந்துணர்வுடன் அதிபர் - ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் - நலன் விரும்பிகள் இணைந்து பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகப் பாடசாலையில் பிரயோகிக்க வேண்டும். இதற்குப் பாடசாலை மட்டத்தில் தரக் கொள்கை ஒவ்வொரு பாடசாலைக்கும் ஏற்றாற் போல் உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

தர முகாமைத்துவக் கொள்கைப் பிரயோகத்தில் பல செயற்பாடுகள் தொடர்புறுகின்றன. பாடசாலைகளில் ஒரு பகுதியில் ஏற்படும் தவறு வேறு ஒரு பகுதியில் பிரச்சினைகளைத் தோற்றுவித்துவிடும். அத்துடன் திருத்தப்படாத தவறுகள் மேலும் மேலும் தவறுகளை ஏற்படுத்தும். இதனால் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் தமது நேரத்தின் பெரும்பகுதியை தவறுகளைக் கண்டறிய, அவற்றை நீக்க செலவு செய்கின்றார்கள். இதனால் பாடசாலையின் அபிவிருத்தி, சாதனைகள் பின்தள்ளப்படுகின்றன.

இதனைத் தடுப்பதற்கு மொத்தத் தர முகாமைத்துவம் (Total Quality Management) என்ற செயன்முறைகள் தற்போது முன்வைக்கப்படுகின்றன. பாடசாலையின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஒவ்வொரு

நபரிலும் சரியான ஒழுங்கமைத்தலை மேற்கொள்வதுடன் மொத்தத் தர முகாமைத்துவம் தொடர்புடையது. வகுப்பறையிலிருந்து பாடசாலையின் ஒவ்வொரு சிறிய பகுதியும் ஒன்றுடனொன்று சேர்ந்து வினைத்திறனுடன் இயங்க வைக்கப்படும். 5S செயன்முறை பாடசாலையில் பிரயோகிக்கப்படும். இவ்வாறாக நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் தரமாகவும் வினைத்திறனுடனும் இயங்கவைக்கும் போது அங்கு பயிலும் எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்கள் மிகச் சிறந்த ஆளுமையுடைய தேச நிர்மாணிகளாக உருவாகு வார்கள்.

இவ்வாறு கல்வி மூலமாகத் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய இன்றைய காலத்தில் ஒரு புதிய சிந்தனைப் போக்கையும் நேர்மையுடனும், கண்ணியத்துடனும், விசுவாசத்துடனும், அர்ப்பணிப்புடனும், பணிபுரியும் அதிபர், ஆசிரியர்களை உருவாக்க பரந்தளவிலான கல்வி முகாமைத்துவத் தேர்ச்சிகளைப் பிரயோகிக்க வேண்டும். இதற்குக் கல்வியியல் துறையில் மனிதத்துவம் பொதிந்த நீண்டகாலப் போக்குக் கொண்ட செயன்முறைகள், ஆய்வுகள், அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அவசியமாகவுள்ளன.

இவ் வகையில் ஒரு பாடசாலையின் முதற்தர முகாமையாளர் அப் பாடசாலையின் அதிபரேயாவார். ஒரு சிறந்த இலட்சிய அதிபர் இயல்பாகவே மேற்குறிப்பிட்ட முகாமைத்துவத் தேர்ச்சிகளைப் பிரயோகிப்பவராகக் காணப்படுவார். இதற்கு உதாரணமாக அதிபர் திரு.ஸ்ரீகாந்தன் அவர்களைக் கூறமுடியும். எந்த நேரத்தில் எவ்வாறான முடிவுகளை, தீர்மானங்களை எடுத்து பாடசாலையில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரையும் உயர் வாழ்க்கை அபிவிருத்தியில் ஈடுபடுத்த பல செயற்றிட்டங்களை மேற்கொண்டார். பாடசாலை ஆசிரியர்களை முகாமைத்துவம் செய்வதில் வெற்றி கண்டார். ஒரு சிறந்த முன்மாதிரி அதிபராக யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் குறுகிய காலத்தில் பல அபிவிருத்தி மாற்றங்களை நிகழ்த்திக் காட்டிய ஆளுமையுடைய செயல்வீரன் என்ற உயர் பெயர் பெற்றார். அவரது கல்விச் சேவை மிக உயர்வானது. மணிவிழா நாளில் அவர் தொடர்ந்தும் கல்விச் சேவையை எம் மண்ணுக்குச் சிறப்பாக ஆற்ற வாழ்த்துகின்றேன்.



# இந்நாள் ஒரு பொன் நாள்



**திருமதி. ஞா. மகேஸ்வரன்**
ஆசிரியர்,
யா/ விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

எமது கல்லூரி அன்னையின் புகழ்பூத்த மைந்தர்களில் ஒருவராக நின்று இன்று கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்கள் மணிவிழாக்காணும்இந்நாள் ஒரு பொன்னாளாகும்.

**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் எமது அதிபர்.

அதிபர் அவர்கள் கல்வி கற்ற கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமை யாற்றியவர். தமது சேவையின் இறுதிக்காலப்பகுதியில் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். இப்பேறு எல்லோருக்கும் கிடைத்தற்கரியதொன்று. "இக்கல்லூரி எனக்கு என்ன செய்தது என்று கேட்பதை விடுத்து இக்கல்லூரிக்கு நான் என்ன செய்தேன்" என்பதே முக்கியமானது. இவ்வகையில் "பெற்ற தாயும் கற்ற கல்லூரியும் போற்றற்குரியது" என்றுஅவர் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கின்றேன்.

அவருடன் இக்கல்லூரியில் ஒன்றாகக்கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்தமையால் சிறுவயதிலிருந்தே அவரது கல்விப்புலமை பற்றி நன்குஅறிவேன். அவர் கணக்கியல் பாடத்தைக் கற்பிப்பதில் தனக்கெனத் தனியான ஒரு இடத்தைப் பெற்று புகழ்பூத்து விளங்கியவர். சிலர் பதவியினால் சிறப்படைவர். சிலரினால் பதவி சிறப்படைகிறது. அந்த வகையில் இவரினால் (அதிபர்) பதவி சிறப்படைந்தது.

ஒரு பாடசாலைக்குப் பெற்றோர்கள், மாணவர்கள் விரும்பி வரவேண்டுமாயின் அங்கு நடைபெறுகின்ற சகல செயற்பாடுகளும் தரமானவையாக விளங்க வேண்டும். தரமான கல்வியை வழங்கி தரமான சமூகமொன்றைத் தனது கிராமத்தில் உருவாக்க எமது கல்லூரியில் அர்ப்பணிப்புடன் சிறப்பாகச் செயலாற்றிய செயல் வீரர். கற்றல், கற்பித்தல் சிறப்படைய வேண்டுமாயின் சிறந்த கவின்நிலை இருத்தல் வேண்டும். பாடசாலையில் நாட்டப்பட்டு வளர்ந்து சோலைகளாகக் காட்சியளிக்கின்ற பூக்கன்றுகள், குறோட்டன்கள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அதிபர் அவர்கள் சிறந்த ஒரு முகாமையாளர். நேரமுகாமைத்துவத்தைச் சிறப்பாகக் கடைப்பிடிப்பவர். பாடசாலையில் ஒரு நிகழ்வு குறித்த நேரத்தில்

ஆரம்பிக்க வேண்டும் என்பதில் உறுதியாயிருப்பவர். தனது இல்லத்தைவிட கல்லூரியில் அவர் கழித்த நேரமே மிகுதியானது. நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பேச்சும் கொண்ட அவர் போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் என்று தனது கருத்தை எங்கும் எவர் முன்னிலையிலும் ஆணித்தரமாக எடுத்துரைப்பார். இவரது தொடர்பாடற்றிறனினால் வெளிநாடுகளில் வதியும் பழைய மாணவர் பல வகைகளில் கல்லூரிக்கு உதவி வழங்கி பௌதிகத்தேவைகள் பல நிறைவேற்றப் பட்டுள்ளன. உள்ளக வீதிகள் பல அமைக்கப்பட்டு ஒரு பல்கலைக்கழகம் என்று பார்ப்பவர் போற்றுமளவுக்கு கல்லூரியின் நிலையை உயர்த்தியவர்.

பழைய மாணவர்கள் இலண்டன், அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளிலிருந்து வருகைதருமிடத்து அவர்களை மாணவர்களுக்கு முன்னிலைப்படுத்தி முன்னுதாரணமாகக் காட்டியவர். பொதுப்பரீட்சை அடைவுகளின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். இணைபாடவிதானச் செயற்பாடுகளில் குறிப்பாக விளையாட்டுத்துறையில் விக்ரோறியா தொடர்ந்து வீறுநடைபோட்டு தேசியமட்டம் வரை பங்குகொள்ள வழி சமைத்தவர். அப்போட்டிகள் இலங்கையில் எந்தப்பகுதிகளில் இடம்பெற்றாலும் அங்கெல்லாம் பிரசன்னமாகி மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகம் கொடுக்க அவர் ஒருபோதும் தவறியதில்லை. இதனால் இவர் மாணவர்கள் மத்தியில் நீங்காத இடத்தினைப் பெற்றுள்ளார். போட்டியில் கலந்து வீடு திரும்பும்மாணவர்களைத் தம் இல்லத்திற்கு அழைத்துத் தாகசாந்தி அளித்து அனுப்பி வைக்கும் வழக்கமும் உடையவர். இவருடைய இச்செயல்களுக்கெல்லாம் "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்" இவரது குடும்பத்தினர் ஒத்துழைப்பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அதிபர் அவர்களின் குடும்பமும் இனிமையானதொரு குடும்பம்.

**"இல்லது என் இல்லவள் மாண்பானால்**
**உள்ளது என் இல்லவள் மாணாக்கடை"**

என்பதற்கிணங்க இவர்தம் துணைவியார் அமைந்துள்ளார். நன்கலம் நன்மக்கட் பேறு என்பதற்கு அமைய இவருடைய பிள்ளைச் செல்வங்கள் விளங்குகின்றனர்.

எமது கல்லூரித் தாய்க்கு குறுகிய காலப்பகுதியில் நிறைந்த சேவையாற்றி மணிவிழாக்காணும் எம் அதிபர் ஓய்வுக் காலத்தில் தம் குடும்பத்தினருடன் மகிழ்வாக வாழ எல்லாம்வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டி மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுத வாய்ப்புக்கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

# எங்கள் அதிபர்



**திருமதி. வ. கனகேந்திரன்**
பகுதித்தலைவர்,
யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

**"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே
யவரோடிணங்கியிருப்பதுவும் நன்று"**

என்பது ஔவையார் எமக்காகக் கூறியுள்ள அறிவுரையாகும்.

நல்லவரைச் சந்திப்பது அவரின் கருத்துக்களைக் கேட்பது அந்த நல்லவரின் குணங்களைப் பற்றி மகிழ்வுடன் பேசுவது, அவர்களின் அன்புக்குப் பாத்திரமாகி இருப்பது என்பது நமது வாழ்வைச் சீர்மைப்படுத்திக் கொள்வதற்கான வழி என்பது மூதுரையின் கருத்தாகும். இந்த வழியிலே அன்பிற்கும் மதிப்பிற்குமுரியவர்கள் வரிசையில் எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களைக் காண்கின்றேன்.

பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வந்தார். அவர் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை அனைத்திற்கும் களமமைத்துக் கொடுத்தவர். அவர் கல்லூரிக்குச் செய்த தொண்டுகளாலும் கல்லூரியின் வளங்களைச் சரிவரப் பயன்படுத்தியதாலுமே கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் எமது பாடசாலை சுடர்விட்டுப் பிரகாசித்தது.

க.பொ.த. உயர்தரம் 2012 வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் மூன்று பாடங்களிலும் "A" (3A) சித்தி பெற்று அதிபர் காலத்தில் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார்கள். அதிபர் அவர்கள் தன் இல்லத்துக்கு யார் சென்றாலும் அவர்களை இன்முகத்தோடு வரவேற்று விருந்தளித்து மகிழ்பவர்கள்.

"நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்"


என்று ஔவையார் குறிப்பிட்டமை போன்று இவர்களுக்குப் பிறப்பிலிருந்து குலஞ்சுரக்கும் ஒழுக்கங்களாக இவை வந்துள்ளன. எப்படியும் வாழலாம் என்று வாழுகின்ற சமூகத்துக்கு இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து கொண்டிருப்பவர்.

மேலும் இக்கல்லூரியானது எமது பிரதேச மாணவச் செல்வங்களின் அறிவையும் ஆளுமையையும் வளர்க்கும் உயர் அறிவாலயமாக என்றும் மிளிர தனது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்குவதற்கு உடல், உள ஆரோக்கியத்துடன் எங்கள் அதிபர் நீண்டகாலம் வாழ சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

# செயற்திறன் வாய்ந்தவர்



**ஆ. பிரபாகரன்**
**வி. மதிதரன்**
அதிபர் அவர்களுடன் சேர்ந்து
கடமையாற்றிய ஆசிரியர்கள்



இன்று பெரும்பாலான பாடசாலைகள் கல்வி, விளையாட்டு, கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் ஏதாவது ஒன்றில்தான் தமது சாதனைகளைப் பதிவு செய்கின்றன. ஆனால் விக்ரோறியாக் கல்லூரி சகல துறைகளிலும் சமாந்தரமாக சாதனைகள் படைத்து வருகின்றது. இவ்வெற்றிகளை அடைவதற்கு வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் பங்குபற்றிய மாணவர்களுக்கும் சிறந்த முறையில் ஆலோசனைகளையும் ஊக்குவிப்புக்களையும், வழிகாட்டல்களையும் வழங்கியவர் எமது ஓய்வுபெற்ற அதிபராவார். மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடும்போதும், போட்டிகளில் பங்குபற்றும்போதும்மாணவர்களுடனேயே சேர்ந்திருப்பது இவரின் சிறப்பம்சமாகும்.

பாடசாலையில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவர்களதும் குடும்ப, சமூக, பொருளாதார நிலைகளைத் தெரிந்து உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு, உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்களது தொடர்புகளின் மூலம் பலவிதமான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தவர். இச் செயற்பாடு பொருளாதார ரீதியில் பின்னிலையிலிருந்த மாணவர்களும் இவ் வெற்றிகளில் தமது பங்களிப்பினை வழங்குவதற்குப் பெரிதும் துணை நின்றன.

உயர்தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர் களுக்கு மடிக்கணனிகளை பழைய மாணவர்களது உதவியுடன் பெற்றுக்கொடுத்து கீழ் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கும் இத்தகைய சாதனைகளைத் தாமும் நிகழ்த்த வேண்டுமென்ற ஊக்கத்தினை வழங்கியவர். மேலும் உயர்தர வகுப்பு மாணவர்களில் பொருளாதார உதவி தேவைப்படுவோர்களை இனங்கண்டு அவர்களுக்கு மாதாந்தம் கணிசமான ஒரு தொகையை பழைய மாணவர்களது உதவியுடன் வழங்கியுள்ளார்.

தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தொகையினை நிலையான வைப்பிலிட்டு அவர்களது எதிர்காலம் சிறக்க வழிவகுத்தவர்.

பாடசாலையின் அகச்சூழல் சுத்தமாகவும், அழகாகவும் காணப்படல் வேண்டும் எனும் விருப்பம் கொண்டவர். அதற்கமைய எமது பாடசாலையின் அகச்சூழலைத் தென்னிலங்கையிலுள்ள பிரபல்யமான பாடசாலைகளுக்கு ஒப்பாகப் பேணி வந்தவர்.

சில அதிபர்கள் தமது பாடசாலையின் விருத்திக்காக அயல் பாடசாலைகளின் விருத்தியில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதாகப் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. ஆனால் எமது அதிபர் தனது பாடசாலையின் விருத்தியில் மட்டுமல்லாது அயல் பாடசாலைகளின் விருத்தியிலும் அக்கறை கொண்டு பழைய மாணவர்கள் மூலமாக அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் வழங்கியவர்.

இன்று பாடசாலைகளில் காணப்படும் மிகப்பெரிய பிரச்சினை மாணவர்களது ஒழுக்கம்சார் பிரச்சினையாகும். ஆனால் விக்ரோறியாக் கல்லூரியில் மாணவர்களது ஒழுக்கத்தினைச் சிறந்த முறையில் பேணி இப்பாடசாலையை ஒரு முன்மாதிரியான பாடசாலையாக சமூகத்திற்கு இனங்காட்டியவர்.

மாணவர்களதும், ஆசிரியர்களதும் நலன்கருதி அதிபர் கூட்டங்களில் தமது கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்து ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் நலன்களைப் பேணுவதற்குத் துணைநின்றவர்.


இன்று சகல பாடசாலைகளிலும் அரசாங்கத்தால் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (PSI) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலங்களில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பல செயலமர்வுகளைக் கல்வித் திணைக்களம் நடாத்தியது. இச் செயலமர்வுகளில் வளவாளராக யாழ். மாவட்டத்திலுள்ள சகல வலயங்களிலும் பங்குகொண்டு PSI பற்றித் தெளிவினை ஏற்படுத்தியவர்.

ஆசிரியராக இருந்த காலத்தில் மிகச் சிறந்த கணக்கியல் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இன்று எமது வலயத்தில் ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரிகளாகக் கடமைபுரிகின்ற பலர் எமது அதிபரின் மாணவர்களாவர். மேலும் வெளிநாடுகளிலிருந்து வருகை தருகின்ற இவரது மாணவர்கள் எம்மிடம் இவரது கற்பித்தற் சிறப்பினை மிகவும் பாராட்டிக் கூறுகின்றனர்.

இந்தியாவின் தற்போதைய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் தமது சுதந்திர தின உரையில் "நீங்கள் வேலை செய்யும் நேரத்தைவிட கூடிய நேரம் நான் தேசத்திற்காக வேலை செய்வேன்" எனக் கூறியுள்ளார். ஆனால் எமது அதிபர் இதனை நடைமுறையில் செயற்படுத்தி கூடுதலான நேரம் எமது பாடசாலைக்காகக் கடமைபுரிந்து பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றவர்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" எனும் வாக்குக்கிணங்க அதிபர் அவர்களது பிள்ளைகள் கல்வியில் சிறந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவரது ஓய்வுக்காலம் சிறப்புற எல்லாம்வல்ல சிவகாமி சமேத நடேசப்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

# பன்முக ஆளுமைப் பண்பு கொண்டவர்



**திரு.கு. ஜேம்ஸ் பஸ்ரியன்**
ஆசிரியர்,
யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

2010-09-14இலிருந்து 2014-03-10 வரையான மூன்றரை ஆண்டு காலப்பகுதியில் இவ்வதிபர் சாதித்த சாதனைகளை நினைத்துப் பார்க்க மலைப்பாக உள்ளது. இருந்த பௌதிக வளங்களையும் ஆசிரிய வளத்தையும், மாணவ வளத்தையும் ஒன்றிணைத்துப் பல வெற்றிகளை நிலைநாட்டினார். இதனால் மேன் மேலும் வளங்கள் குவிந்தன. அவை நான் சொல்லித் தெரியவேண்டியன அல்ல.

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண்விடல்"**

என்ற குறளின் கருத்தாகவும், கற்றவராகவும், கற்பித்தவராகவும் மிளிர்ந்தவர்.

இந்த விக்ரோறியாவை இவர் தான் இப்படி உயர்த்துவார் என்று கருதியே அவரிடம் கையளித்தனர். இது கடவுளின் நியதி. இதுவே கருத்தாகும்.

அது போன்றே அதிபர் ஸ்ரீகாந்தன் அவர்களும் ஒன்றைச் செய்யவேண்டும் என்று கருதினால் அதை யாரிடம் கொடுத்தால் தான் நினைத்தது போல முடியும் என்பதை நன்கு தெரிந்து செயற்படுவார். அதனால் இக்குறளைக் கற்றவராகின்றார். தன்னோடு சேவையாற்றும் ஆசிரியர்களானாலும் சரி, மாணவராயினு ம் சரி இவ்வழியில் திட்டமிடக் கற்றுத் தந்தவர்.

இத்தகைய அதிபரின்கீழ் பணிசெய்தோம் என்பது எமக்குப் பெருமையாகும். அவர் எமது பாடசாலையிலிருந்து இளைப்பாறிச் சென்றாலும், கல்லூரிக்கு வெளியே இருந்து தோன்றாத் துணையாக உள்ளார். அதுகூட எமக்கெல்லாம் படிப்பினையே ஆகும். இத்தகைய பண்புடையார் வாழ்வே இன்னும் இவ்வுலகம் நிலைத்திருப்பதற்குக் காரணமாகும்.

"பண்புடையார் பட்டுண்டுலகம்"

# வியத்தகு சிற்பரன்



திருமதி. சவுந்தரராணி சிவகுமார்
சிரேஷ்ட ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.
( அதிபர் அவர்களுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், வவுனியா விபுலானந்தக் கல்லூரியிலும் ஒன்றாகக் கற்பித்தவர் )

நித்திலத்தின் சுந்தரமாம் சுழிபுரத்துத் தோன்றல்
நித்தியமான வரதராஜ சர்மாவின் நற்புத்திரர்
நியமங்கள் காத்தொழுகும் ஆசாளன் இவர்
சிந்தனைகள் தந்து நிற்கும் பண்பாளன்

வியனுறு கலைவளர்க்கும் விக்ரோறியாவும்
மாண்புறு கலைக்கூடம் மானி இந்துவும்
காணுறு சோலைகளாம் - இவர் கல்விக் கூடங்கள்
தாவுறு கனியெனவே "கவ்வி" எடுத்துக்கொண்டார்
எண்ணோடு எழுத்தையும் அள்ளி
கண்ணோக்கி கணக்கியலை அலசி
மண்ணோடு விளையாடும் மழலைகளுக்கு
கண்ணோடு விளங்கவென கணக்கியலை புகுத்தியவர்
தாயென நினைவுகூர தாய்மனை வந்து
மாணவர்க்கு விகடமாய் கணக்கு வைத்து
சாதனைகளை செயற்றிறனில் காட்டி விட்டு
கண்ணியமாய் கடமை காத்த கர்ம வீரன்

தாடலை போல் சேர்ந்திருப்பார் மாணவருடன்
வாடகை இல்லாமல் கற்றுக் கொடுப்பார்
வணிகம் என்ற பிரிவு தன்னில்
பல்கலை சென்று பட்டம் பெற வைத்த பண்பாளன்
எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
எழுத்தோடு ஒழுக்கத்தை புகட்டிப் பார்ப்பார்
சத்தியத்தை நித்தியமாய் பேணிக் கொண்டார்
ஆற்றலுக்கு இவரிடம் அர்த்தம் கேட்கலாம்
ஊக்கலுக்கு இவரைவிட ஊக்கியில்லை
கற்பித்தலுக்கு இவரையே சான்று காட்டலாம்
கணக்கியலில் மாமன்னர் இவரே தான்

உயர்தரப் பகுதிக்கு பாதுகாவலன்
உயர்தர மன்றத்தின் போஷகர்
உயர்ந்த எண்ணங்களின் சொல்விளம்பி
உயர்வின் ஊன்றுகோலான கலையருவி
நிமிர்ந்த நன்னடை இவர் நடை நடையழகு
நேரான சிந்தனையே இவர் சொல்லழகு
பாராட்டும் பண்பே இவர் செயலழகு
நகையென்ற சிதறல்களே இவர் கவியழகு
மாணவர் என்ற சிற்பங்களை உருவாக்கிய சிற்பி

தன் தனம் தழைத்திட முத்துக்களை ஈன்று
பக்குவமாய் பல்கலைக்கழகம் அனுப்பி
பார் போற்றும் நற்பணி சார்ந்தோராக்கி
சமூகத்திற்குக் கொடுத்த சந்திர ஒளியோன்
பண்படுத்திய பக்குவமான விளைநிலம்
வன்னி மண்ணின் பண்டாரிகுளம் வித்தகராம்
விபுலாநந்தர் பெயரான பள்ளியிலே
இவரின் நற்பணியைச் செப்பிட முடியுமா?

போர்க்காலச் சூழலால் போக்கிடமின்றிவந்த
மாணவர் மனங்களிலே கல்விதனை விதைத்தும்
காலம் கண்டு உழைத்தும் கருமமே கண்ணாயினார்
அர்ச்சுனனுக்குத் தேரோட்டிய கண்ணன்போல
பேரம்பலத்தின் வலக்கரமாய் தேரோட்டிக் கடமை புரிந்து
பேர் பெற்ற வள்ளலார் இவர் ஞானச்சுடர்

இல்லறத்தை தலைநகரில் இருத்திவிட்டு
நல்லறமாம் மழலைகளைத் தனித்துவிட்டு
தொல்லறமென்ற தன் சேவைக்காக
பகலென்றும் இரவென்றும் விடுமுறையென்றும் பாராது
பல்கலை என்ற முகவரி தேடிய முகங்களுக்கு
பக்குவமாய் ஒழுக்கமோடு விழுப்பத்தையும்
வணிகமோடு கணக்கியலையும் நளினமாய் புகட்டி
பண்டாரிகுளத்தின் முத்துக்கள் உயர்கல்வியென்ற
ஆழ்கடலில் சுழியோடி பட்டங்கள் பெற்று வர
பக்குவமாய் உழைத்த இவர் பட்டை தீட்டிய வைரம்
விபுலாநந்தாவின் விந்தைமிகு வணிகப் பிரிவின்
வியத்தகு ஸ்தாபகர் எமக்கெல்லாம் என்றும்
நல்லாசான் எங்களை சேர் என்று எவரவர் சொன்னால்
நம்புங்கள் அது "ஸ்ரீ" தான் எங்கள் சொத்தும் இவர்

பார்க்குமிடமிமெல்லாம் நீக்கமற நிறைந்து
யார்க்கும் மனங்கோணாமல் நற்சேவை புரிந்து
சோர்வு என்ற சொல்லே சோர்ந்து போக உழைத்து
கர்வமின்றி கடமைகள் புரிந்த சிற்பரசன்
தலைநகரிலிருந்து தவிப்பாய் திங்கள் வருவார்
தாவியே படி தாண்டி ஓடியும் வருவார் உபஅதிபர் இவர்
மாடி ஏறி வந்து பாடக்குறிப்பில் ஒப்பமிட்டு வந்தனை கூறி
மகிழ்வுடன் அகலும் எம்பகுதிக் காப்பாளர்

உயர்தர ஒன்றியத்தின் ஒன்றுகூடல் என்றால்
ஒரு நேரமும் ஓய்வின்றி நிகழ்ச்சி நிரலுடன்
நேரமுகாமைத்துவம் பேணி அறுசுவை உணவினை
பிரியமாய் படைத்து குளிர்களியும் கொடுத்து
புகைப்படமும் எடுத்து என்ன வேணும் சொல்லுங்கோ என
பெண் பிள்ளைகளை பக்கத்திலிருத்தி இன்று உங்களுக்கு
பசிக்காதென்று உவப்பாய் கூறி விழாவை முடித்து
மண்டபச் சுத்தம் சட்டி பானை பக்குவம் என
தன் கடமையைக் காத்த காருண்ணிய வாளன்

பேரம்பலம் அதிபரின் பிரதிநிதி பெயருக்கேற்ற தொண்டன்
சிறகு வைத்துப் பறக்காத காராம் பசு
பிறகு என்ற சொல் தெரியா பேராளன்
பிரதியும் பகுதியுமாய் எமக்கெல்லாம்
அன்றும், இன்றும், என்றும் நல்வழிகாட்டியவர்

பரீட்சை மையக் கல்வி என்பதனால்
பக்குவமாய் அதை நடத்தும் பொறுப்பாளராகவும்
மாணவர் நலனில் அக்கறை கொண்டவராய்
மாசில்லாது சோதனை நடத்த வேண்டுவார்
நேரம் பார்த்து காலம் பார்த்து சிற்றுண்டி பானங்கள்
சிறப்புடன் அனுப்பி பங்கமில்லாது பரீட்சை நடாத்தும்
கிரீடமில்லா மாமுடிமன்னர் இவர்

ஆசிரியர் தின விழாவை அழகுபடுத்தி கொண்டாடும்
ஆற்றல் மிக்கோன் முத்தமிழில் வித்தகர்
நற்றமிழை நயம்பட சுவைப்போன்
தீந்தமிழில் தேனாகக் கவிவடிப்போன்
செந்தமிழில் பாங்காக நாடகம் நடிப்போன்
விபுலானந்த அரங்கதனைக் களமாக்கி வெல்வோன்
விடியல் தேடி வரும் வெண்புறாக்களின் வளம் கண்டு
விந்தையின் சுவைதனை விதைத்து விளைநிலமாக்கி

வியந்து ஆற்றல்களைப் பாராட்டி வாழ்த்தி
வெற்றிகளை மலையெனக் குவித்து நின்று
தந்தையாய் தாயாய் நண்பனாய் தண்ணொளி
உவந்து தந்த தலைவன்

தமிழ்மொழிப்போட்டி என்றால்
எள்ளோடு எலிப்பிழுக்கை காய்வது போல்
எம்மோடு இரவு எட்டு மணி வரை
தோளோடு தோள் கொடுத்து எம்மழலைகள் ஏற்றம் பெற
தட்டிக்கொடுத்து தேசியம் என்ற கொடி பிடிக்க
கை கொடுக்கும் தவப்புதல்வன்

மாணவர் தலைவர்களுக்கு மதிப்பான போஷகர்
சின்னம் சூட்டி சிறந்த ஒழுக்கம் தானுரைத்த
ஆளுமைமிக்கோன் அறிவுடை நம்பி என
தானே மாணவரை புகழ்ந்துரைத்து அன்போடு பக்குவமாய்
அரவணைத்தே செல்வார் பள்ளி வரா மாணவரை
பக்கத்தில் தான் அழைத்து பரிவுடன் விசாரிப்பார்
விகடமாய் கேட்டிடுவார் உனக்கென்ன "மூன்றா" "நாலா"
ஆண்மக்கள் அவர்கள் ஆசானின் நகைச்சுவையில்
நனைந்து நிற்கும்போது கன்னத்தை கை தடவும்
கண்டிப்பு மிகுந்து வரும் "நல்ல குருநாதன்
நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல
பொல்லா வினையறுக்க" பக்குவமில்லாமாணவர் மனதில்
தத்துவமாய் கூறி மழலைகள் நெஞ்சில் நிறைந்திடுவார்
ஆழமாய் பதிய வைத்த ஞாலம் போற்றும் ஆசான்
ஆலமரமாய் விரிந்து நிற்கும் விபுலாநந்தாக் கல்லூரியின்
விருப்பத்துக்குரிய விண்ணன் கருத்துக்கினிய கண்ணன்

விபுலாநந்தாவில் விதைத்த வித்துக்கள் இன்று
எண்ண முடியாத வெள்ளிகளாய் கண்களைப் பறிக்கும் முத்துக்களாய்
விண்ணுயர்ந்த கோபுரங்களாய் வன்னி மாநகரின் உயர்வான
விந்தைமிகு மானிடராய் அறிவு புகட்டும் ஆசான்கள்
வங்கி முகாமையாளர்கள் தரமிக்க தனியார் நிறுவனங்கள் என
இவர் காலடியில் பல்லாயிரம் பொற்பூண்டுகள்
அகவை அறுபது என்றால் சேவையில் ஓய்வு
படரும் கொடிக்கு விழுதாய் தாங்கும்
வித்தக தற்பரனுக்கு ஓய்வு சிரமமானது
என்றும் இன்று போல் பேரும் புகழுமாய்
பார் போற்ற தொடர்பணி செய்து வாழ்க நீடூழி!

# கல்லூரியின் உயர்வையே அழநாதமாகக் கொண்டவர்



**திரு. து. இரவீந்திரன்**
உறுப்பினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
உப பத்திராதிபர்,
மணிவிழாக்குழு.

பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் ஐயா அவர்கள் ஓர் ஆசானாக, அதிபராக கல்விப்புலத்தில் தனது உத்தியோகபூர்வ சேவையினைப் பூர்த்தி செய்துள்ள தருணத்தில் அவரின் வாழ்வுடனும் அதனோடிணைந்த பிற்புல கல்விப்புல சமூகப்புல தகவல்களுடன் "ஸ்ரீகாந்தம்" மணிவிழா மலர் வெளிவருவதனையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவனாகவோ அதிபர் அவர்களின் மாணவனாகவோ நான் இல்லாதிருந்த போதிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக கல்விசாரா பணிகளில் பங்குபற்ற வாய்ப்புக் கிட்டியபோது, அதிபரின் தலைமைத்துவமும் - செயற்திறனும் - விடாமுயற்சியும் - ஆளுமைப் பண்புகளும் எனக்கு மெமேலும் புத்தூக்கத்தினையும் செயற்திறனையும் தந்ததுடன் விக்ரோறியா அன்னையின் நற்கருணையினால் புதிய பல விடயங்களை கற்றுக்கொண்டு கல்லூரிக்கு என்னால் ஆற்றப்படக்கூடிய பணிகள் தொடர்பில் பரந்த பார்வையையும் ஏற்படுத்தியது.

அதிபர் அவர்களின் தீர்க்கதரிசனமான முன்னோக்கிய சிந்தனைகளின் வெளிப்பாடாக பதவிக் காலத்தின் போது பல்வேறுபட்ட காலங்களிலும் பல்வேறு வழிமுறைகளினூடாகவும் பாடசாலை பல துறைகளிலும் அனுகூலங்களைப் பெறக்கூடியதாக இருந்ததுடன் ஊட்டற் பாடசாலைகளையும் சுழிபுரம் பிரதேசத்தினையும் மையப்படுத்தி ஐக்கிய இராச்சியத்தினைச் சேர்ந்த திரு.சி. இரவிசங்கர் அவர்களின் அனுசரணையுடன் ஸ்தாபிக்கப்பட்ட கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவராக அதிபர் பணியாற்றியபோது கல்வி மேம்பாட்டிற்கும் உறுதுணையாக விளங்கினார்.

அதிபரோடு இணைந்து பணியாற்றிய காலத்தின் பதிவுகள் பசுமையானவை. தான் சொல்லவந்த கருத்தினை அனைவரையும் ஈர்க்கும் வண்ணமும் மனதில் பதியும் வண்ணமும் எளிய நடையில் அழகாகக் கூறும் வகை நெஞ்சைவிட்டு இலகுவில் அகலக்கூடியதல்ல. அப்படிச் சொல்லப்பட்ட கருத்துக்களில் கண்டிப்பான பார்வையினால் வீசப்படும் அலைகள் ஓர் செய்தியைச் சொல்லிச் சொல்லும். ஆதனை ஆத்மார்த்தமாக உணர்ந்து கொண்டால் செய்தியை செயல்வடிவம் ஆக்குவதில் எமது கவனமும் குவிந்திருக்கும். அந்தச் செயலும் வெற்றிபெறும்.


மிகக் கடினமான சூழ்நிலைகளை அதிபர் கடந்து வந்த தன்மை அப்படியான வேளைகளில் மனம் தளராது கல்லூரியின் உயர்வையே அடிநாதமாகக் கொண்டமை போன்ற தன்மைகள் அவர் மீது மட்டற்ற மரியாதையையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது எனலாம். இத்தகைய பெருந்தகையின் வரலாற்றுப் பதிவுகள் இது போன்ற மலர்களில் ஆவணப்படுத்தப்படும்போது எதிர்கால சந்ததியினருக்கும் சமகாலத்தவர்க்கும் இம்மலர் காத்திரமான பொக்கிஷமாக அமையும் என்பது திண்ணம்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு**

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க தனது சிந்தனைகளையும் துணிச்சலான செயல்களையும் கொண்டிருந்த அதிபர் என்ன வகையாக சுய மன நிறைவுடனும் சமூகத்தினரின் நன்மதிப்புடனும் உத்தியோகபூர்வ பணியை நிறைவு செய்தாரோ அதே வகையுடன் எமது கல்விச் சமூகத்தினர்க்கு தொடர்ந்து வழிகாட்டவும் பணி ஓய்வுநிலை வாழ்வு அனைத்து வளங்களும் நிறைந்ததாக அமையவும் எல்லாம்வல்ல ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானை பிரார்த்திப்போமாக.



# கண்டித்து கடிந்து கட்டியணைத்த அதிபர்



**செல்வன் வி. சூரியப்பிரகாஷ்**
உதவி சிரேஷ்ட மாணவ முதல்வன் - 2012
விக்ரோறியாக் கல்லூரி.
(கொமர்ஷல் வங்கி)

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் நெஞ்சில் உரமும் தன்னிகரில்லாத் தற்றுணிவும் ஒருமித்தே கொண்டவர் எங்கள் கல்லூரி முதல்வர் ஸ்ரீமான் வ.ஸ்ரீகாந்தன் என்றால் சகலரும் ஏற்றுக்கொள்வார்கள்.

இவர் இக்கல்லூரியில் ஆசானாகவும், அதிபராகவும் சிறந்த ஒரு நிர்வாகியாகவும் இருந்துள்ளார் என்பதனை அவரது செயற்பாடுகளாலும், நறுக்கான உரைகளாலும் கண்டிப்பும் காரமும் நிறைந்த வார்த்தைகளாலும் நான் உணர்ந்து கொண்டேன். இவ்வாறான ஒருவரது வழிநடத்தலில் எமது கல்லூரித்தாய் முத்தான மூன்று வருடங்களில் முகிழ்விட்டு மணம் பரப்பியதை நாம் அறிவோம்.

இவரது சேவை தொடராதா? தொடர்ந்தும் என் பின்னவர்களை வழிப்படுத்த மாட்டாதா என்று எண்ணியிருக்கும் போது அகவை அறுபதை அரச பணி நிறைவென்று கூறியது. எனது கல்லூரி நாட்களில் எனது மதிப்பிற்குரிய அதிபர் கையில் பிரம்புடன் கம்பீரமாக நடந்தால் போதும் நாம் ஒழுங்காக நடப்போம். மாணவர்கள் நாம் எல்லோரும் ஸ்ரீகாந்தத்தின் காந்தவிசைக் கோட்டினுள் கவரப்பட்ட இரும்புத்துண்டுகள். இடையிடையே நாம் உராய்வு மூலம் மின்னேற்றப்படுவதும் உண்டு. இது கசப்பாக இருந்தது. ஆனால் "நல்ல குருநாதர் நம்மை வருத்துவது கொல்லவல்ல, கொல்லவல்ல நம் தம் பொல்லாப் பிணியறுக்கவே" என்று உணர்ந்து கொண்டோம்.

இவ்வாறான ஒரு நல்ல குருவின் நற்பண்புகளை ஆவணமாக்க ஒரு அரிய மணிவிழா மலர் வெளிவருவதையிட்டு மிகுந்த மனமகிழ்வடைகின்றேன். நல்லவர்களாகவும், நல்லவாறாக வாழ்ந்தவர்களதும் ஆசியினைப் பெறுவதற்கும் அவர்களைப் போற்றுவதற்கும் வளர்ந்துவரும் என்னைப் போன்றவர்கள் தவறக்கூடாது. நாம் சிறியவர்கள், மூத்தோரை குறிப்பாக மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களைப் பணிவோம், வாழ்வில் உயர்வோம்.

மணிவிழாக்காணும் மதிப்பான குருவுக்கு மகிழ்வான வாழ்வை எல்லாம் வல்ல எனது குலதெய்வமாகிய தொல்புரம் துரையன் வளவுப் பிள்ளையார் அருள வேண்டும் என்று அவன் பாதம் பணிகின்றேன்.

# அதிரடி ஆட்ட நாயகன்



**திரு. இராசன் சதீஸ்கரன்**
( மகாவித்துவான் Dr. க. நாகேஸ்வரனது
மணிவிழாக் குழுச் செயலாளர் )

ஐயங்கார் வீட்டு உதித்த
அறிவுச் சூரியனே – எங்கள்
ஸ்ரீமான் ஸ்ரீகாந்தன் ஐயா!

சூரியனது வெளிச்சத்தை நாட
விக்ரோறியாவில்
மரங்களாக நிமிர்ந்து நின்ற
மாணவர்களும் – அவர்தம்
திறமைகளும் சொல்லில் அடங்காது

கல்விப் புலத்தினரே
வியக்கும் – உமது
நிர்வாகத் திறமை கண்டு....

சமூகத்தின் பங்களிப்பை
உள்வாங்கும் சக்தியும் – நீர்
செயல் வீரன் என்பதை
விக்ரோறியாவின்
இன்றைய தோற்றம்
என்றும் சொல்லி நிற்கும்...

அறுபது அகவை கண்டு
ஓய்வுற்ற போதும்....
விக்ரோறியா பற்றியே உம்
எண்ணமும் சிந்தனையும்...
ஆனாலும்

விக்ரோறியா எனும் அணங்கு
உம் வரவு கண்டு
பூரிப்படைந்தாள்
என்பதே உண்மை...

பொன்னாலை...
வரதராஜப் பெருமாளுக்கு
வரதராஜ சர்மாவாகி...
விக்ரோறியாவின் வகுப்பறையில்
நல் ஆசானாகி அதிபர்
எனும் மேன்மை பெற்றீர்...

மகா வித்துவான் நாகேஸ்வரனது
மணிவிழா முழுமையடைய – உம்
பணி சொல்லியடங்காது
பார்வையிலே ஒரு தெளிவு
நடையிலே ஒரு நிமிர்வு
உதடுகள் அதிகம் விரியாத சிரிப்பும்
உம் தனிச் சிறப்புக்கள் ஐயா!

மகா லட்சுமியை கவர்ந்திழுப்பவன்
எனும் பெயர் கொண்ட
ஸ்ரீகாந்தன் ஐயா நீர்
லட்சுமி கடாட்சத்துடன்
சகல நிறைவும் பெற்று வாழ
வாழ்த்தும்...

# சூட்சுமத்தைச் சொல்லித் தாருங்கள்



**திரு.த. நித்தியானந்தன்**
ஆசிரியர்
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

உயர்திரு. வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்கள் யா/சண்டிலிப்பாய இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் 04 வருடங்கள் உங்கள் நிர்வாகத்தின் கீழ் சேவையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

நீங்கள் காலமாற்றத்தை அறிந்தவர், சமூகத் தேவைகளைப் புரிந்தவர், நன்மை, தீமை இரண்டின் தன்மை அறிந்து "ஆட்டின் உயிரும் போகாதபடி, ஓநாயின் பசியையும் தீர்க்கும்" வகையில் முடிவெடுக்கும் சூட்சுமத்தை எங்களுக்கும் சொல்லித் தாருங்கள். 1200இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் 55இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்ட எமது பள்ளி நிர்வாகத்தில் எந்தவித முரண்பாடுகளும் இன்றிப் பலதரப்பட்ட மனங்களையும் வென்றவர் நீங்கள்.

நான் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மாற்றம் பெற்று வந்தபோது எந்தவித அறிமுகமும் இல்லாது உங்களைச் சந்தித்தேன். எனது பாடத்துறையில் இடம் இல்லாதபோதும் எனது நலன் கருதி 6 மாத காலத்திற்குள் படிப்படியாக எனது பாடத்துறையை ஒதுக்கித் தருவதாகக் கூறி, அவ்வாறே செய்தமை உங்களுக்குரிய தலைமைத்துவப் பாணி என்பதை அறிந்து கொண்டேன்.

என்னைப் போலவே உங்களால் பயன்பெற்ற இன்னும் சிலருடன் கதைத்தபோது அவர்களின் அனுபவமும் எனது அனுபவத்துடன் ஒத்துப்போனதை இட்டுப் புளகாங்கிதம் அடைந்தேன்.

கல்வி, இணைப்பாடவிதானம், பௌதீகவளம் என்ற மூன்றையும் ஒரே நேரத்தில் கட்டி வளர்க்கும் பாங்கு உங்களுக்கே உரியது.

எமது கல்லூரியில் 5 வருடகால சேவையை முடித்து 2010இல் யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபராக மாற்றலாகிச் சென்று 2014ம் ஆண்டில் சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும், இன்னும் எமது கல்லூரிக்கு உங்களின் பல்வேறு உதவிகள் கிடைப்பது ஒரு வரமாகும்.

கல்லூரிச் சமூகத்திற்குக் கொடுத்ததை நீங்கள் மறந்தாலும் வாங்கியதை அவர்கள் மறவாது மணிவிழா எடுக்கும் இந்நாளில் பல சிறப்புக்களும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறேன்.

# கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றியவர்



**திருமதி. பங்கயச்செல்வி முகுந்தன்**
விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் இசை ஆசிரியை.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராய் இருந்து கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றிய அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தன் அவர்கள் மணிவிழா காண்பதைக் கண்டு மகிழ்ந்து அவரை மனமார வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துகின்றேன் நான் வாழ்த்துகின்றேன் - எங்கள்
வாழ்வினில் ஒளிபரவ ஆளுமைமிக்கதொரு
அதிபராய் அமர்ந்திருந்து அரும்பணி ஆற்றிநின்ற
அதிபராம் ஸ்ரீகாந்தன் அவர்களை வாழ்கவென்று
வாழ்த்துகின்றேன் நான் வாழ்த்துகின்றேன்

ஏழு ஸ்வரங்களுக்குள் எமக்கொரு வாழ்வு தந்து
வாழும் வகை புகட்டி வழித்துணையாக வந்து
நாளும் நமக்கெல்லாம் நற்குருவாகி நின்ற
அதிபராம் ஸ்ரீகாந்தன் அவர்களை வாழ்கவென்று
வாழ்த்துகின்றேன் நான் வாழ்த்துகின்றேன்

தந்தைக்குத் தந்தையாகி தரமான நண்பராகி
சிந்தையைத் தெளியவைக்கும் சிறப்புறு மாந்தராகி
முந்தை வினைப்பயனால் மூஷிகன் தந்து நின்ற
அதிபராம் ஸ்ரீகாந்தன் அவர்களை வாழ்கவென்று
வாழ்த்துகின்றேன் நான் வாழ்த்துகின்றேன்

நன்மையும் தீமைதானும் நமைநாடி வந்தபோது
அன்போடு அனைத்திலுமே அங்கமாய்ப் பங்கெடுத்து
துன்பமெலாம் களைந்தெறிந்து தூயநல் மகிழ்வளித்த
அதிபராம் ஸ்ரீகாந்தன் அவர்களை வாழ்கவென்று
வாழ்த்துகின்றேன் நான் வாழ்த்துகின்றேன்

துணிவுடன் பணிகளாற்றி துல்லிய கருமமாற்றி
மணிவிழாத் தானும் காணும் மாபெரும் சக்தியாகி
அணிகலன் பலதினையும் விக்ரோறியாக்களித்த ஐயா
அதிபராம் ஸ்ரீகாந்தன் அவர்களை வாழ்கவென்று
வாழ்த்துகின்றேன் நான் வாழ்த்துகின்றேன்

# கலைத்துறையின் கனவுகள் நனவான காலம்



**திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்**
நடன ஆசிரியை,
யா / பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

எமது ஓய்வுநிலை அதிபர் திரு வ. ஸ்ரீகாந்தன் அவர்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராக இருந்த கடந்த மூன்று வருடகாலத்தில் பாடசாலையில் நடன ஆசிரியையாகக் கடமையாற்றிய பொழுது நான் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் என்னைச் செதுக்கிக்கொள்ள மிகவும் உந்துசக்தியாக விளங்கின.

கடந்த முன்று வருடங்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பொற்காலம் மாணவர்களும் ஆசிரியர்களும் சமுகமும் பெருமிதம் கொள்ளும் வகையில் அமைந்த நற்காலம் பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் திறன்களை மேல்நோக்கிக் கொண்டு வந்த காலம் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய காலமென்றே சொல்லலாம்.

இவற்றுக்கெல்லாம் தூண்டுகோலாகவும் உந்துசக்தியாகவும் விளங்கியவர் தான் எமது முதல்வர் ஸ்ரீகாந்தன் அவர்கள். அவரின் வழிநடத்தலில் எத்தனையோ வெற்றிகள் எத்தனையோ கோலாகலமான விழாக்கள். எத்தனையோ சந்தர்ப்பங்கள் மாணவர்கள் ஆசிரியர்களின் மனங்களில் புத்துணர்ச்சியுடனான திறன் வெளிப்பாடுகள் காணப்பட்டன. பாடசாலை முதல் பாராளுமன்றம் வரை நடன நிகழ்வுகளை ஆற்றுகை செய்த பெருமை எமது விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களையே சாரும்.

மாணவர்களின் கல்வி விருத்திக்கு அப்பால் அவர்களது ஆளுமை விருத்திக்கான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளான விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் மற்றும் மாணவ மன்றச் செயற்பாடுகள் என்பவற்றை நன்கு ஊக்குவித்தவர்.

அந்தவகையில், நடன நிகழ்வுகளினூடாக மாணவர்களின் ஆளுமை விருத்தியை ஊக்குவித்ததோடு மட்டுமல்லாது ஆசிரியர்களாகிய எம்மிடம் உள்ள திறமைகளை இனங்கண்டு எம்மைத் தூண்டிவிட்டவர். உதாரணமாக, விளையாட்டுப் போட்டி இடைவேளை நிகழ்வுகளின் போதான காட்சியும் கானமும் என்ற நிகழ்வைக் குறிப்பிடலாம். நான் சற்றுமே சிந்தித்திராத எனது திறமையை இனங்கண்டு, மூன்றுவருடங்களும் முறையே, 100, 200, 300 மாணவர்களை களத்திலிறக்க ஊக்குவித்து எல்லோருக்கும் பாராட்டைப் பெற்றுத்தந்தவர்.

மேலும், மாணவர்களது சமூக சமய ஈடுபாட்டை, நடன நிகழ்வுகளைப் பல்வேறு கோயில்கள், நிறுவனங்களில் நடாத்த எம்மை ஊக்குவித்ததன் மூலம், வளர்க்க உதவியவர்.

பாராளுமன்றத்தில் நவராத்திரி விழாவிற்கு நடனநிகழ்வொன்று தரும்படி கேட்டபோது நாங்கள் தயங்கினோம். ஆனால், ஸ்ரீகாந்தன் அதிபர் அவர்களோ "இது மாணவர்களுக்கு பாராளுமன்றத்தைப் பார்க்கக் கிடைத்த ஒரு சந்தர்ப்பம். அத்துடன் உங்கள் திறமையில் நம்பிக்கை வைத்தே கேட்டுள்ளனர். எனவே, தவறாது செய்யுங்கள்" என ஊக்கப்படுத்தியவர்.

அத்துடன், இலங்கைப் பாடசாலைகளின் வரலாற்றிலேயே எமது நிகழ்வுகளுக்குத் தேவையான பணத்தின் பெரும் பகுதிகளை எமது நிகழ்வுகளின் மூலமும் அவற்றிலே தைத்த உடைகளை வாடகைக்கு விட்டும் இவரது காலத்தில் ரூபா 331,291.00 பெற்றுக்கொண்டு, எமது நிகழ்வுகளுக்குத் தேவையான (உடைகள், ஒப்பனை, பக்கவாத்தியம் மற்றும் போக்குவரத்து) செலவுகளின் பெரும் பகுதியினை நாமே ஈடுசெய்ய வழிகாட்டியதை பெருமையுடன் நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளேன். அந்தவகையிலே, அவரது காலத்தில் மாணவர்களால் அளிக்கை செய்யப்பட்ட நடன நிகழ்வுகளும் போட்டிகளில் ஈட்டிய வெற்றிகளும் பின்வருமாறு.

| மணிவிழா நாயகன் காலத்தில் மேடையேறிய நடன அளிக்கைகள் | | | |
|---|---|---|---|
| 1 | வாணி விழா 2011 2012 2013 | 19 | சித்தன்கேணி சிவன் ஆலய குருக்கள் ஞாபகார்த்த விழா 2012 |
| 2 | பரிசளிப்பு விழா 2011 2012 2013 | 20 | இளங்கலைஞர் மன்ற நவராத்திரி விழா 2012 |
| 3 | விளையாட்டுப்போட்டி - காட்சியும் கானமும் 2012 2013 2014 | 21 | பாராளுமன்ற நவராத்திரி விழா 2012 |
| 4 | முத்தமிழ் விழா 2012 2013 | 22 | வலி மேற்கு பிரதேச செயலக சிறுவர் முதியோர் தின விழா 2012 |
| 5 | மூளாய் இந்து இளைஞர் மன்ற வாணிவிழா 2011 | 23 | அகில இலங்கை ஆளுநர் மாநாடு 2012 |
| 6 | "கிறான்" நிறுவன எழுத்தறிவு தினவிழா 2011 | 24 | யாழ் செயலக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கண்காட்சி ஆரம்பவிழா 2012 |
| 7 | 135ஆவது ஆண்டு மலர்வெளியீட்டு விழா 2011 | 25 | பிரார்த்தனை மண்டப புனரமைப்புத் திறப்பு விழா 2012 |
| 8 | வடக்கு மாகாண உள்ளூராட்சிவிழா 2011 2012 2013 | 26 | வடக்கு மாகாணக் கலை இலக்கியப் பெருவிழா 2012 |
| 9 | சுழிபுரம் பிரதேச சபை நூலக வாரம் 2011 2012 2013 | 27 | வடக்கு மாகாண கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை நட்சத்திர இரவு 2012 |
| 10 | வடக்கு மாகாண கல்வித்திணைக்கள பௌர்ணமி விழா 2012 | 28 | மானிப்பாய் மகளிர் கல்லூரி பொன்விழா 2013 |
| 11 | ஹற்றன் நஷனல் வங்கி பொங்கல் விழா 2012 | 29 | டாக்டர் க. நாகேஸ்வரன் மணிவிழா 2013 |
| 12 | வடக்கு மாகாண கலாசாரத்திணைக்கள பௌர்ணமி விழா 2012 | 30 | மூளாய் வதிரன்புலோ ஆலய மஹோற்சவம் 2013 |
| 13 | பழையமாணவர் சங்க மாபெரும் கலைவிழா 2012 | 31 | பறாளாய் முருகன் ஆலய மஹோற்சவம் 2013 |
| 14 | வலயக் கல்வித்திணைக்கள தமிழ் மொழித்தின விழா 2012 | 32 | அகில இலங்கை பெருவிளையாட்டுக்களின் சகோதர ஆட்டப் பெருவிழா 2013 |
| 15 | மூளாய் வதிரன்புலோ ஆலய சங்காபிஷேகம் 2012 | 33 | மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையான விளையாட்டுப்போட்டி 2013 |
| 16 | இசுறு புதிய கட்டடத் திறப்பு விழா 2012 | 34 | வடக்கு மாகாண பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டி 2013 |
| 17 | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி பட்டமளிப்பு விழா 2012 | 35 | பாரதி கலைமன்றமுன்பள்ளி கட்டடத் திறப்பு விழா 2013 |
| 18 | வலயக் கல்வித்திணைக்கள ஆசிரியர்தின விழா 2012 2013 | | |

| மணிவிழா நாயகன் காலத்தில் பெற்றுக்கொண்ட வெற்றிகள் | | | |
|---|---|---|---|
| 1 | அரச நடன விழா 2012 | புஸ்பாஞ்சலி | தேசியமட்டம் 2ஆம் இடம் |
| 2 | மாற்று ஆற்றல் தினப்போட்டி 2012 | கோலாட்டம் | வலயமட்டம் 1ஆம் இடம் |
| | | ஒயிலாட்டம் | வலயமட்டம் 3ஆம் இடம் |
| 3 | தமிழ் மொழித்தினம் 2012 | பிரிவு 2- தனி நடனம் | மாவட்டமட்டம் 2ஆம் இடம் |
| | | பிரிவு 3- தனி நடனம் | மாவட்டமட்டம் 2ஆம் இடம் |
| | | பிரிவு 4- தனி நடனம் | வலயமட்டம் 2ஆம் இடம் |
| | | பிரிவு 5- தனி நடனம் | வலயமட்டம் 3ஆம் இடம் |
| | | நடனம் குழு | வலயமட்டம் 3ஆம் இடம் |
| | | நாட்டிய நாடகம் | மாகாணமட்டம் 2ஆம் இடம் |
| | | நாட்டுக் கூத்து | மாகாணமட்டம் 1ஆம் இடம் |
| 4 | "சமஸ்தலங்கா" நடனப்போட்டி 2013 | தனிநடனம் | தேசியமட்டம் 2ஆம் இடம் |
| | | தாள நடனம் | தேசியமட்டம் 1ஆம் இடம் |
| | | ஜதீஸ்வரம் | தேசியமட்டம் 2ஆம் இடம் |
| 5 | தமிழ் மொழித்தினம் 2013 | பிரிவு 2- தனி நடனம் | கோட்டமட்டம் 3ஆம் இடம் |
| | | பிரிவு 3- தனி நடனம் | வலயமட்டம் 2ஆம் இடம் |
| | | பிரிவு 4- தனி நடனம் | வலயமட்டம் 3ஆம் இடம் |
| | | பிரிவு 5- தனி நடனம் | வலயமட்டம் 2ஆம் இடம் |
| | | நடனம் குழு | மாவட்டமட்டம் 3ஆம் இடம் |
| | | நாட்டிய நாடகம் | மாகாணமட்டம் 2ஆம் இடம் |
| | | விசேட நாட்டுக் கூத்து | மாவட்டமட்டம் 2ஆம் இடம் |
| | | சிந்துநடைக் கூத்து | வலயமட்டம் 2ஆம் இடம் |

இத்தகைய சாதனைகள் சாத்தியமாவதற்கு, முதல்வரின் வழிகாட்டல் மற்றும் ஆக்கமும் ஊக்கத்தோடு, தமிழ், இசை ஆசிரியர்களினதும் ஏனைய ஆசிரியர்களதும் ஒத்துழைப்பு, பங்குபற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களது ஒத்துழைப்பு, பாடசாலை சமூகத்தினது ஒத்துழைப்பு, பழையமாணவர் சங்கங்களது பங்களிப்பு என்பவை நன்றியுடன் நினைவு கூரத்தக்கவை.



கல்லூரியில் ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆளுமை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்த மணிவிழா நாயகனது ஓய்வு காலம் சிறப்பாக அமைய, எமது கல்லூரியிலிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

# வரலாற்றின் பொற்காலம்



**செல்வி. த. நிதுஜா**
சிரேஷ்ட மாணவத் தலைவி,
2014 உயிரியல் பிரிவு.

அன்பும், பண்பும், அளவான கனிவான பேச்சும், இன்முக வரவேற்பும் நிறைந்த எமது அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் தனது அதிபர் சேவையில் ஓய்வுபெற்ற நிலையில் அவரைப்பற்றி சிறியேனாகிய நானும் சில விடயங்கள் பகிர்ந்து கொள்வதில் பேருவகை அடைகின்றேன். 2010ஆம் ஆண்டு விக்ரோறியா அன்னை தனது மைந்தனை உயர்பீடத்தில் அமர்த்தினாள். அன்று தொடக்கம் விக்ரோறியா அன்னையின் வாழ்வில் பொற்காலம் எனலாம். அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் நானும் ஒரு மாணவியாகக் கல்வி கற்றதோடு, சிரேஷ்ட மாணவத் தலைவியாக கடமையாற்றியதையுமிட்டுப் பெருமகிழ்வு அடைகின்றேன்.

கடமை கண்ணியம் - கட்டுப்பாடு மூன்றையும் தனக்கத்தே கொண்டவர். செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கிணங்க ஒரு நல்லதிபராகத் திகழ்ந்தவர். ஆசிரியர் குழாத்தையும், மாணவர்களையும், பெற்றோர்களையும் அன்பாகவும், ஒற்றுமையாகவும் வழிநடாத்தும் திறமை அவரிடம் காணப்பட்டது. எக்காரியத்தையும் சவாலாகச் செய்து முடிக்கும் ஆற்றல் அவரிடம் காணப்படும் தனித்துவமான பண்பு என நான் கருதுகிறேன். இவரின் தலைசிறந்த ஆளுமை, நேரமுகாமைத்துவம், அர்ப்பணிப்பு என்பன இன்று இப்பாடசாலையில் பல புதிய மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. இவர் தனது பதவிக்காலத்தில் கல்விச் சமூகம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளது அனுசரணையைப் பெற்றுப் பாடசாலையில் பௌதீகவள மேம்பாட்டை ஏற்படுத்தியுள்ளார்.


தன்னைப்பற்றி நினைக்காமல் பாடசாலை மாணவர்களைப் பற்றியே தினமும் நினைக்கும் ஒரு பெருந்தகை எங்கள் பாடசாலைக்கு அதிபராகக் கிடைத்தமை இறைவனின் கொடைஎன்பதில் ஐயமில்லை. மாணவர்களை அன்புடன்வழிகாட்டி கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் எனப்பல படிகளில் காலடி எடுத்துவைக்க ஊன்றுகோலாக இருந்தவர். காற்று இதமாகக் குளிர்ந்து வீச இதயமும் குளிரும். அதேபோல எங்கள் அதிபரின் இன்மொழி யினைக் கேட்டால் மாணவர்களாகிய எமது இதயங்கள் குளிரும் என்பது திண்ணம். எங்கள்அதிபரின் ஆசி இருந்தால் மாணவர்கள், விக்ரோறியா அன்னையின் பெயரை இந்த நாடு மட்டுமல்ல, இந்த உலகமே அறியச் செய்வார்கள் என்பது உறுதி. எங்கள் அதிபரின் பணி நிகரில்லாதது. அவர் மட்டுமல்ல, அவரின் குடும்பத்தவரும் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

சூரியன் உதிப்பது தான் உலகிற்கு விடியல். ஆனால் எங்கள் அதிபர் பாடசாலை வாசலில் காலடி எடுத்துவைத்தாலே மாணவர்களாகிய எமக்கு விடியல். கல்வியிலும் சரி, விளையாட்டுத் துறையிலும் சரி, ஏனைய கலைத் துறையிலும் சரி எமது விக்ரோறியா அன்னைக்கெனத் தனியான ஒரு இடம் இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் எங்கள் அதிபரே. வானவில்லின் வண்ணம் ஒரு போதும் சாயம் போகாது, அது போலவே எங்கள் அதிபர் எங்கள் பாடசாலைக்குச் செய்த பணிகள் என்றுமே மங்காது, மறையாது. அவர் என்றும் எமது இதய விளக்குகளில் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டே இருப்பார்.

எங்கு பார்த்தாலும் பசுமையாகக் காட்சியளிக்கின்ற பாடசாலை, வளாகமும், வளாகத்தின் மையத்தில் 400மீற்றர் ஓடு பாதை கொண்ட மைதானமும், வானுயர்ந்த ஒரு அழகான மாடிக்கட்டடம், அம்மாடிக்கட்டடத்தின் கீழே வசதியான நடன, சங்கீத அறைகளும், மாணவரின் பசியைப் போக்க மதிய உணவு சமைப்பதற்கான சமையலறையும், பெரிய சிற்றுண்டிச்சாலையும் சகல இடங்களிலும் குடிநீர்வசதி என்பவை அவரின் காலத்தில் எமக்கும், பாடசாலைக்கும் கிடைக்கப்பெற்ற அரிய கொடைகள். இவரின் நினைவுச்சின்னமாக விட்டுச்செல்பவை பல. அவற்றுள் மிகச் சிறப்பானது பாடசாலை மைதானம். இனிவரும் சந்ததியினருக்கு இதைப் பாதுகாப்பது ஒரு முக்கிய கைங்கரியமாகும்.

இப்படியான ஒரு துடிப்பான செயல் வீரரே எமது அதிபர். அவர் மணிவிழாக் காணும் இந்நாளில் எனக்கு வாழ்த்துவதற்கு வயது போதாதெனினும், தொடர்ந்தும் தங்களது ஓய்வுக்காலத்தில் எங்கள் பாடசாலைக்கு உங்கள் ஆலோசனையும், வழிகாட்டலும் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு சுக தேகத்துடன் நீண்ட ஆயுள் வழங்க இருகரம் கூப்பி நடராஜப்பெருமானின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் சேவையில் இருந்த காலம் விக்ரோறியாவிற்கு அது ஒரு அழகிய நிலாக்காலம். எங்கள் மனங்களில் அது ஒரு பொற்காலம்.



# அதிபரின் காலத்தில் அரிதான அனுபவங்கள்...



**செல்வி. காயத்திரி தேவசுதன்**
யா/ விக்ரோறியாக் கல்லூரி,
உதவிச் சிரேஷ்ட மாணவ முதல்வி,
தரம் 13 உயிரியல் பிரிவு.

"துள்ளித் திரிந்ததொரு காலம் பள்ளிப் பயின்றதொரு காலம்..." என்ற பாடல் வரிகளில் வருவது போல பள்ளிப் பருவம் மனித வாழ்க்கையில் அற்புதமானது. சின்னச் சின்ன சண்டைகள், குறும்புத்தனங்கள், அதற்கேற்றாற்போல் சின்னச் சின்னத் தண்டிப்புக்கள், இன்பங்கள், துன்பங்கள், திகிலூட்டும் அனுபவங்கள், மறக்கமுடியாதவை, மறக்கவேண்டியவை, நல்லதெது? தீயதெது? என்ற தெளிவு, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, தலைமைத்துவம்... அப்பப்பா! எத்தனை? எத்தனை அனுபவங்கள்? இவை அனைத்திற்கும் எமக்குக் கிடைக்கக்கூடிய ஒரே இடம் கல்லூரி என்றால் அனைவருமே ஏற்றுக்கொள்வர்.

ஆம், கல்லூரிக் காலம் பசுமை மிகுந்தது. கல்லூரியை அலங்கரித்த அதிபர்கள், கசடறக் கற்பித்த ஆசான்கள், தோள் கொடுத்து நின்ற சிறந்த நட்புக்கள். இவை அனைத்துமே என்றும் எம் மனதிலிருந்து நீங்காத பொக்கிஷங்கள். எனது கல்லூரி வாழ்க்கையில் நான் சந்தித்த அதிபர்களில் விக்ரோறியாக் கல்லூரியில் சந்தித்த இரண்டாவது அதிபரும், மணிவிழா மகுடம் சூட்டும் மன்னருமான, பெருமதிப்பிற்குரிய வ.ஸ்ரீகாந்தன் ஐயா அவர்களது காலத்தில் எமக்குக் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிபர் அவர்களது காலத்தில் எமது கல்லூரியில் எமக்குக் கிடைத்த வாய்ப்புக்களோ பலவாகும். கல்லூரிச் செயற்பாடுகளிலும், பௌதீக வளங்களிலும் சிறந்த பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுள் சிலவற்றை இம் மலரினூடாக விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் சார்பில் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை களப்பறவையியல் குரு "Dilmah Conservation" இன் அனுசரணையுடன் கொழும்பு பல்கலைக்கழகம், மற்றும் சிறுவர் மகிழ்வகம் தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினூடாக "யாவர்க்கும் விஞ்ஞானம்" எனும் தொனிப்பொருளில் "இயற்கையின் வலிமையூடான ஒருமைப்பாடு" என்ற செயற்றிட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளில் முதற்தர பாடசாலையாக எமது கல்லூரி "இலங்கை களப்பறவையியல் செயற்பாட்டுக் குழுவினரால்" தெரிவு செய்யப்பட்டு முதன் முறையாக இலங்கையின் அரிய சொத்தாகக் கருதப்படும் "சிங்கராஜ" வனத்திற்குச் செல்லும் ஓர் அரிய வாய்ப்பை இவ் அதிபரது சேவைக் காலத்தில் பெற்றுக்கொண்டமை மறக்கமுடியாதது.

எமது கல்லூரியின் "இயற்கை நேசிப்புக் கழக" மாணவர்கள் 20 பேரும், 2 ஆசிரியர்களும், எமது கல்லூரிப் பழைய மாணவனும் "சிறுவர் மகிழ்வக உறுப்பினருமான ஸ்ரீ. கஜேந்திரன் அவர்களதும், கொழும்பு பல்கலைக்கழக விலங்கியற்றுறைத் தலைவரும் பேராசிரியருமான சரத் கொட்டகமவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொண்டதுடன், இலங்கைக்கே உரித்தான அரிய பல பட்சிகளை நேரடியாகப் பார்த்து ரசிக்கக்கூடிய வாய்ப்பையும் பெற்றோம். நாம் மேற்கொண்ட ஆய்வுகளையும், பார்த்து ரசித்த அனுபவங்களையும் இறுவட்டாக வெளியிட்டு ஏனையவரும் பார்க்கக்கூடிய வாய்ப்பை அளிப்பதற்கு எமது மதிப்பார்ந்த அதிபர் அவர்கள் பாரிய ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார்.

மற்றும் அனுராதபுரத்திலே தலாவ எனுமிடத்தில் 'Children summer peace camp' எனும் பாசறையில் ஐந்து நாட்கள் சிங்கள மாணவர்களுக்கு மத்தியில் ஒரே ஒரு தமிழ்ப் பாடசாலையாக, தமிழ் மாணவர்களாக எமது கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவர்கள் பங்குபற்றி இன, மத, மொழி வேறுபாடின்றி சகோதரத்துவம், சமாதானம், நல்லுறவு, புரிந்துணர்வு போன்ற நற்பண்புகளையும், பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தமை அரியதொரு வாய்ப்பே ஆகும்.

சிவகாமி சமேத நடராஜரும், கலைகளின் அதிபதியாம் சரஸ்வதியும் அருள்பாலிக்க சிறந்ததொரு அதிபரின் வழிகாட்டலிலும், ஊக்குவிப்பிலும் எமது கல்லூரி குறித்த மூன்று வருடங்களில் கல்வியிலும், கலைத்துறையிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனை படைத்துப், புகழ் பெற்று விளங்கியது. அகில இலங்கை ரீதியில் எத்தனையோ தமிழ்ப் பாடசாலைகள் இருந்த போதிலும் யாழ். மாவட்டத்திலிருந்து தனியொரு பாடசாலையாக எமது கல்லூரி மாணவிகள் இலங்கைப் பாராளுமன்ற விஜயதசமி விழாவில் தமிழ், சிங்கள, முஸ்லீம் அமைச்சர்களுக்கும், ஏனைய பிரமுகர்களுக்கும் மத்தியில் தமது பரதநாட்டியத் திறனை வெளிக்காட்டும் வகையில் நடன நிகழ்வினைச் சிறப்பாக நிகழ்த்தி அனைவரதும் பாராட்டைப் பெற்றதுடன், பாராளுமன்றத்தை நேரில் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பினையும் பெற்றனர். எல்லோர்க்கும் கிடைக்கமுடியாத இவ் அரிய வாய்ப்பு எம் அதிபரது காலத்திலேயே கிடைத்தது என்பது யாராலும் மறக்கமுடியாதது.

இந்தியாவின் புகழ்பூத்த விஞ்ஞானி அப்துல் கலாம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தவேளையில் அவரது உரையினைக் கேட்பதற்கு ஒரு சில பாடசாலைகளுக்கே அனுமதி கிடைத்தது. அவ்வேளையில் அனுமதி பெற்ற நாம் எமது அதிபருடன் அப்துல் கலாமின் உரையைக் கேட்கவும், நேரிற் காணவும் வாய்ப்பைப் பெற்றமை இன்றும் எம் மனக்கண் முன் நிழலாடுகின்றது.

மாணவர் நலனில் மிகுந்த அக்கறையும், அவர்களைக் கல்வி, இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஊக்குவிக்கும் சிந்தையும் கொண்டவராய் விளங்கிய எம் அதிபர் கல்லூரி மாணவர்களின் சாதனைகளை யாவர்க்கும் தெரியப்படுத்தும் வண்ணம் மாணவர்களது புகைப்படத்துடன், அவர்களது சாதனைகளையும் பொறித்து கல்லூரி அலுவலக மேற்பாக முன்புறத்தில் அவற்றைக் காட்சிப்படுத்தியுள்ளார். இச் செயற்பாடானது ஏனைய மாணவர்களையும் சாதனை புரியத்தூண்டியதுடன், சாதனை புரிந்தோரை மேலும் பல புதிய

சாதனைகளைப் புரியத் தூண்டியதென்றால் அது உண்மையே. முதலாண்டைவிட அடுத்தடுத்த ஆண்டுகளில் சாதனையாளர் பட்டியல் நீண்டுகொண்டே சென்றமை இங்கு பெருமையுடனும், மகிழ்வுடனும், நன்றியுடனும் கூறப்படவேண்டிய விடயமாகும்.


புதிய சிற்றுண்டிச்சாலை, நவீன வசதிகள் பொருந்திய கணனி ஆய்வுகூடம், ஆங்கில அறை, மாபிள் பதிக்கப்பட்ட "றிஜ்வே" மண்டபம், நவீன மயப்படுத்தப்பட்ட சிவபாதசுந்தரனார் கேட்போர் கூடம் எனப் பல்வேறுபட்ட கட்டடங்களும், கல்லூரி வளாகத்தினுள் சீரமைக்கப்பட்ட போக்குவரத்துப் பாதைகள், 400 மீற்றர் ஓடு பாதை கொண்ட மைதானம், புதிதாக நடப்பட்ட பூங்கன்றுகள், குறோட்டன்கள் எனக் கல்லூரியை அழகூட்டும் அனைத்து அம்சங்களும் அதிபர் அவர்களின் அயராத சேவைக்கும், அழகுணர்ச்சிக்கும் சான்றுகள் என்றால் அது மிகையாகாது.

நாம் எந்தவொரு போட்டிக்கோ, நிகழ்வுக்கோ எந்நேரத்தில் சென்றாலும் எம்மை வாழ்த்தி வழியனுப்புவதிலும், போட்டியோ, நிகழ்வோ நடைபெறுமிடத்திற்கு தான் நேரில் வந்து உற்சாகப்படுத்துவதிலும், தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் தொலைபேசியில் தொடர்பு கொள்வதிலும், போட்டியோ, நிகழ்வோ முடிவடைந்து வரும்போது வாழ்த்துக் கூறி வரவேற்பதிலும், தன் இல்லத்திற்கு எம்மை அழைத்துக் குடும்பமாக உபசரிப்பதிலும் எம் அதிபருக்கு நிகர் எவருமில்லை எனத் துணிந்து கூறலாம்.

மாணவர் காலுறையில் கல்லூரியை அடையாளப்படுத்தியதும், 135ஆவது ஆண்டு நிறைவின் நினைவாக (T) ரீசேட் அறிமுகப்படுத்தியதும், நிறைவு விழாவினை நூல் வெளியிட்டு, வெகு விமர்சையாகக் கொண்டாடியதும், சொக்கட்டான் பந்தலிட்டு பரிசளிப்பு விழா நடாத்தியதும், தைத் திருநாளன்று நடராஜர் முன்னிலையில் கல்லூரிக் குடும்பத்தினர் பொங்கலிட்டுப் படைத்து மகிழ்ந்ததும், இல்ல மெய்வன்மைப் போட்டியின் முன்னோடியாய் மரதனோட்டம் தொடங்கியதும், பெற்றோரை வரவழைத்து முன்னேற்ற அறிக்கை வழங்கியதும், முதல் மூன்று இடங்களைப் பெற்ற முதன்மை மாணவர்க்கு மேடையிலே முன்னேற்ற அறிக்கை வழங்கி உற்சாகப்படுத்தியதும், மாகாண மட்டத்தில் எமது கல்லூரி நூலகம் இரண்டாமிடம் பெற்று பெருமைப்பட வைத்ததும், 400 மீற்றர் விளையாட்டு மைதானம் மாணவரிடம் கையளிக்கப்பட்டதும், அந்த மைதானத்தில் ஓட்டப்போட்டியிலே நானும் சளைத்தவனல்லன் என நம் அதிபர் ஓடிப் பரிசு பெற்றதும்... என எமது அதிபரின் சேவைக்காலத்துப் பசுமையான பதிவுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆம்! எமது அதிபர் காலத்தில் மாணவர்களாகிய எமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்கள் எத்தனை? எத்தனை? அருமையான அனுபவங்கள் எத்தனை? எத்தனை? அடைந்த வெற்றிகளும் , ஈட்டிய சாதனைகளும் எத்தனை? எத்தனை? அத்தனைக்கும் அடித்தளமாய், வழிகாட்டியாய் அமைந்தது எமது அதிபர் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையே. நாம் எல்லோரும் "விக்ரோறியன்" என்ற விழிப்புணர்வை ஏற்படுத்திய, பற்றுணர்வோடு அளப்பரிய சேவை செய்த, சாதனை வீரன் நம் அதிபர் என்றால் அது மிகையாகாது. அறிவும், ஆற்றலும், செயற்றிறனும் மிக்க நம் அதிபர் அவர்கள் "விக்ரோறியன்" ஆகத் தொடர்ந்தும் எமக்கு வழிகாட்ட சிவகாமி சமேத நடராஜப் பெருமான் அதிபர் அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் பல்லாண்டு காலம் நலமே வாழ அருள்புரிய வேண்டுமென வேண்டி நிறைவு செய்கின்றேன்.

# அன்பான அதிபரே!



**செல்வி. சி. அனோஜிதா**
மாணவ முதல்வர்,
2014 கலைப்பிரிவு,
யா/ விக்ரோறியாக் கல்லூரி.

விண்ணிலே மை எடுத்து கண்ணிலே நீர் சொரிய விக்ரோறியா மண்ணிலே நீர் புரிந்த கண்ணியமான பணிகளை எழுத்திலே விதைத்திட முயல்கிறேன். இனிய என் அதிபரே, நான் நலம். அதுபோல நீவிரும் உம் உற்றாரும் சுற்றத்தவரும் இனிதே நலமுடன் பல்லாண்டு காலம் மகிழ்வாய் வாழ சிவகாமி சமேத நடராஜர் பாதம் பணிகிறேன்.

மேலும், வரதராஜனின் மகனாக, பொன்னாலை வரதராஜனின் பக்தனாக மூன்று வருடங்கள் விக்ரோறியாவின் முதல்வராய் நீர் ஆற்றிய சேவைகள் ஏராளம்! ஏராளம்! பாரதத்தில் சோழர் எனில் இந்தப் பாடசாலையில் உம் காலமதை பொற்காலமாய் பள்ளி வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறித்திட்டீர்.

பெயரிலேயே எமை இழுக்கும் ஸ்ரீ "காந்த" ஐயாவே, தரம் 10இல் அறிமுகமாகி என் தந்தைபோல் உறவாடினீர். விளையாட்டு வீரர்க்கு விருந்தளித்தீர். ஆசிரியரை அரவணைத்தீர், மாணவர் சாதனைக்கு மதிப்பளித்தீர். அரிதிலும் அரிதானவராய் பூஞ்செடிகளையே நேசித்தீரே.....!

விக்ரோறியாவின் மாணவராய், ஆசிரியராய், அதிபராய் உயர்ந்திட்ட சிகரமே! மைதானத்தில் ஓட்ட வீரனாய், வெள்ளிக்கிழமையில் பக்தனாய், பள்ளி விழாக்களில் நாயகனாய், ப்றீ (Free) பாடவேளைகளில் ஆசிரியனாய் எத்தனையோ வடிவங்களில் உங்களை எம் பாடசாலைச் சமூகம் கண்டிருக்கிறது.

உம் அறிவுரைகளால் கல்வியே எம் முதற்கண் என உணரச் செய்தவரே! யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்து இருந்த வேளையில் பழைய மாணவரை ஒருங்கிணைத்து வாய்ப்புக்கள், வசதிகளை உருவாக்கி எம் பாடசாலையை உயரச் செய்த பெருமை உம்மையே சாரும். பள்ளி மைதானம் நானூறு மீற்றராய் விரிந்ததும், சிற்றுண்டிச்சாலை புதிதாய் உருவானதும், பிரதான மண்டபம் பளபளப்பாய் ஆனதும் கணனிக்காய் ஓர் அறை உருவானதும் உம் ஸ்ரீ "காந்தத்தின்" மகிமையால்....!

ஆண் மாணவர் கன்னம் தடவும் உம் கரங்கள், சிறுமுறுவல் உதிர்க்கும் உம் உதடுகள், உற்று நோக்கும் உம் விழிகள், பள்ளி முழுக்க உலாவரும் உம் கால்கள். மொத்தத்தில் ஆளுமையின் வடிவமாய் உம் உருவம் இன்னும் என் கண்களுள் நிற்கின்றன. படிப்பு, படிப்பு என பகரும் உம் வார்த்தைகள் என் காதுகளில் எந்நேரமும் ஒலிக்கத்தான் செய்கிறது.

நிறைவாக, கண்டனங்களுக்கும் அவதூறுகளுக்கும் அஞ்சாத நெஞ்சமே. கால விதிக்கேற்ப இன்று உம் சேவையை எம் பள்ளி இழந்தாலும், நாளை உம் பேர் சொல்லும் மாணவராய் தரணியிலே மிளிர்வோம் நாம் என்ற உறுதியுடன் மடலை நிறைவு செய்கின்றேன்.

## ஓய்வு பெற்றபோது விக்ரோறியா சமூகம் வழங்கிய சேவைநலன் பாராட்டு விழாவின்போது...







# கல்லூரியின் செம்மல்



**செல்வி. துஷாந்தி நவரத்தினராசா**
பழைய மாணவி,
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

எங்கள் சமூகத்தின் பெருநிதியம் கல்வி. எங்கள் பண்பாட்டுப் புலன்களின் பெருமையெல்லாம் கல்விகலை ஞானத்தின் வழியானது. நீண்ட பிரகாசமான கல்விப் பாரம்பரியமுடைய சண்டிலிப்பாய் இந்துவின் கல்விப் பயணத்தில் நான் 2004ஆம் ஆண்டு பயணியாக இணைந்தேன். 2005இல் திரு.ச.சிவநேஸ்வரன் அதிபர் அவர்களின் இடமாற்றத்தைத் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராக இருந்த வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்கள் எமது கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்று ஐந்து ஆண்டுகளாகக் கல்லூரியைக் கையில் ஏந்தி வைத்திருந்தார். அந்த ஐந்து ஆண்டுகளும் எனது கல்விப் பயணத்தின் பொற்காலமாகும். இக்கல்லூரியில் நான் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்று இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புவியியலைச் சிறப்புப் பாடமாகக் கற்கின்றேன். வேறு பாடசாலையில் கற்றிருந்தால் நான் இவ்வாறான ஒரு நிலையைப் பெற்றிருக்க மாட்டேன் என்றே கூறவேண்டும். ஏனெனில் எனக்குள் இருந்த திறமைகளைத் தட்டிக்கொடுத்து பக்கபலமாக இருந்து வெளிக்கொணர்ந்தவர்கள் என் கல்லூரி அதிபர் மற்றும் ஆசான்களே.

“எழுத்தறிவித்தவன் இறைவன்” என்ற பொன்மொழிக்கிணங்க அன்று தொட்டு இன்றுவரை ஆயிரமாயிரம் மாணவச் செல்வங்களை வளர்த்தெடுத்து எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்த அகல் விளக்கு எங்கள் அதிபர். நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த நிறுவுநர் சிலையைக் கல்லூரியில் அழகுற அமைத்தார். பவளவிழா மண்டபம் விஸ்தரிக்கப்பட்டது. ஆசிரியர், மாணவர் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டது. கட்புல செவிப்புல சாதன அறை உருவாக்கப்பட்டு நவீன கற்பித்தல் உபகரணப் பயன்பாடு அறிமுகம் செய்யப்பட்டது. இன்னும் பல பௌதீக வளத்தேவைகளைப் பூர்த்தி செய்தார். இதுமட்டுமல்லாது சகலதுறைச் சாதனைகளை நோக்குமிடத்து இலங்கை. சுற்றாடல் அதிகாரசபையினால் வருடந்தோறும் நடாத்தப்படும் ஆரோக்கியமான சிறந்த சுற்றாடலைக் கொண்ட பாடசாலைத் தெரிவில் 2008ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் 1ஆம் இடத்தை எமது கல்லூரி பெற்றது. கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்ற பெரு விளையாட்டுக்களிலும் எமது பாடசாலை தேசியரீதியில் தடம் பதித்தது. தமிழ்த்தினப் போட்டிகளில் எமது கல்லூரியின் சிந்துநடைக் கூத்து தொடர்ச்சியாக மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுவந்தது.

இவர் சிறந்த கடமையுணர் வீரர். சகல ஆசிரியர்களின் உளநிலையை எளிதிற் புரிந்துகொண்டு அவர்களின் நலன்களைப் பேணுவதில் கரிசனையுடையவர். இச்செம்மலினை அறியாதவர்கள் யாருமில்லை. இவருடைய பல்திறப்பட்ட வித்துவ ஆற்றல்களில் என்னைக் கவர்ந்த சிலதுளிகள்............

உள்ளத்தின் பாங்குகளை உய்த்தறிந்து மாணவரை உறுதிபெறு நெறியுடைய நற்சமுதாய உறுப்பினராய் கொள்கையிலும் தன்மையிலும் குணத்திலும் சிறந்த கருணை உள்ளம் படைத்த மகான்களாய் உருவாக்க உழைத்தவர் இவர். மாணவர்களின் உள்ளக்கிடக்கைகளை அறிந்து அதற்கேற்ப செயற்படும் உள்ளமுடையவர். ஒவ்வொரு மாணவனையும் அறிந்துகொள்ளும் ஆற்றல் கொண்டவர். மாணவர்களினது கல்வி ஊக்கத்திலும் ஒழுக்கத்திலும் கண்டிப்பானவர். வெளிப்படையானவர். மாணவர்களினது குடும்பச்சூழலை அறிந்து பொருளாதார நெருக்கடியில் வாழும் மாணவர்கள் பலருக்கு ஒளியேற்றிவைத்த பெருமை இவரைச்சாரும். மற்றவரின் மகிழ்வில் தான் மகிழ்தல் இவரது வாழ்வில் நான் கண்ட உயர் பண்பாகும்.

நான் இக்கல்லூரியில் 2010ஆம் ஆண்டு சிரேஷ்ட மாணவத் தலைவியாகத் தெரிவுசெய்யப்பட்டது இவரது காலத்திலே என எண்ணிப் பெரும் மகிழ்வடைகிறேன். கல்விப் பயணத்திலே பல இடர்களைச் சந்தித்த நான் எனது உள்ளக்கிடக்கைகளை என் தந்தைக்கு நிகரான அதிபரிடம் எடுத்துக் கூறுவேன். அப்போது தலையை வருடிக்கொண்டு “யோசிக்காதையம்மா படி” என்பார். நான் தலைவியாக இருந்த காலப்பகுதியில் பாடசாலை பரிசளிப்பு விழா ஏற்பாடுகள் நடைபெறும்போது என்னிடத்தே மாணவர்களதுசெயற்பாடுகள் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒருமாணவன் பூந்தோட்டத்தில் பூவினைக் கொய்வதைக் கண்டார். உடனே என்னை அம்மாணவனை அழைத்துவரும்படி கூற நான் அழைத்துவந்தேன். அம்மாணவனை அன்பாகதன்னருகே அழைத்து “இயற்கையை ரசிக்கவேண்டும். அழிக்கக் கூடாது” என்று கூறியது களங்கமில்லா வெள்ளையுள்ளம் இவருடையது என்பதை உணர்த்தியது.

எங்கள் அதிபர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட “முகிழ்“ இதழானது மாணவர்களின் ஆக்கங்களை வெளிக்கொணர்வதையும் பாடசாலை பற்றிய தகவல்களை ஆவணப்படுத்துவதையும் முக்கியநோக்கமாகக் கொண்டு வெளிவருகின்றது. இவ்விதழ்கள் மூலம் என் எழுத்தாற்றலையும் வெளிப்படுத்த அதிபர் ஊக்குவித்தார்.

தேசிய ரீதியில் புற்றளை மகாவித்தியாலய பழையமாணவர் சங்கம் நடாத்தியகட்டுரைப் போட்டியில் 2010, 2011 ஆகிய 2வருடங்களில் முதலாம் இடம், மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டுவிழா கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடம், கொக்குவில் இந்துக்கல்லூரி நூற்றாண்டுவிழா கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடம், மானிப்பாய் இந்துக்கல்லூரி நூற்றாண்டுவிழா கட்டுரைப் போட்டியில் 1ஆம்இடம். அத்துடன் 2011ஆம் ஆண்டுக.பொ.தஉயர்தரப் பரீட்சையில் A, 2B பெறுபேற்றை பெற்று யாழ். மாவட்டத்திலே 64ஆவது இடத்தைப் பெற்றுபாடசாலைக்கு

பெருமையைப் பெற்றுக் கொடுக்க அதிபரது பங்களிப்பு எனக்கு உறுதுணையாக இருந்தது. எமது உயர்தரவகுப்பில் புவியியற் பாடத்தை அறிமுகம் செய்துதருமாறு நானும் எனது நண்பர்களும் சேர்ந்து கேட்டபோது எதுவித மறுப்புமின்றி அப்பாடத்தை முதன்முதலாக அறிமுகம் செய்து கற்பிப்பதற்கு உரிய ஆசிரியரையும் ஏற்பாடு செய்து கொடுத்தவள்ளல் இவர். இசைத்திறமையை வளர்க்கும் நோக்கில் சுருதிப் பெட்டியை அன்பளிப்பாக வழங்கிய உத்தமர்.

காலைப் பிரார்த்தனையின் போது மாணவர்களுக்கு இவர் கூறும் சிறந்த அறிவுரைகள் இன்றும் எனது காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற கூற்று இவருடைய வாழ்க்கைக்குச் சாலப் பொருந்தும். அன்புடன் பண்பையும் அறிவுடன் பரிவையும் தருகின்ற மகான். எமது பாடசாலை வளர்ச்சிக்காகவே துடித்துக் கொண்டிருந்தார். யுத்த காலத்தில் இரண்டு மணித்தியாலம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளையில் நாம் எமக்கு வேண்டியவற்றைப் பெறக் கடைக்கு ஓடினோம். ஆனால் எங்கள் அதிபர் ஓடோடிவந்து பூக்கன்றுகளுக்கு உயிரைக் கொடுப்பதற்காக நீர் பாய்ச்சினார். பாடசாலை ஆரம்பிக்கும் பொழுதிலிருந்து மாலை ஐந்து மணிவரை பாடசாலையின் வளர்ச்சிப் படியில் **365** நாட்களும் தம்மை அர்ப்பணித்தவர். தன் நலம் கருதாது பிறர் நலம் கருத்தில் கொண்டவர். பாடசாலையில் இயற்கையை வளப்படுத்திய பெருந்தகை. வாழ்க்கைப் பயணத்தில் நிறைய மனிதர்களைச் சந்திக்கின்றோம். ஆனால் அவர்களிலே சிலரே எமது உள்ளத்திலே ஆழப்பதிந்து விடுகின்றனர். அத்தகைய பெருமக்களில் முதன்மையானவர் எங்கள் அதிபர். மிடுக்கான நடையுடன் தினமும் காலை வேளையிலே பாடசாலையை வட்டமிட்டு அன்புவார்த்தையால் மாணவர்களைக் கண்டித்து மாணவர்களின் முன்னேற்றத்திற்குக் கலங்கரை விளக்காய் விளங்கிய எங்கள் அதிபர் ஆற்றிய சேவைதனை இந்துக் கல்லூரி சமூகம் எக்காலமும் மறக்காது. இம்மகானின் ஓய்வுகாலம் வளம் பெறஎல்லாம் வல்ல இறைவனை அகமாரப்பிரார்த்திக்கிறேன்.



# எமது அன்பான அதிபர்



**செல்வி. இ. கார்த்திகாயினி**
2016 விஞ்ஞானப்பிரிவு

நிமிர்ந்த கம்பீரமான தோற்றமும் மலர்ச்சியான முகத்தோற்றமும் கொண்டவர் எமது அதிபர். எமது பாடசாலைக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. எமது பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் நிற்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர். தமிழ்த்தினப் போட்டிகள் எங்கு நடந்தாலும் தனது பிள்ளைகளின் திறமைகளைப் பார்ப்பதற்காக வந்துவிடுவார். குறிப்பாக 2012ம் ஆண்டு மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் வவுனியாவிலும், 2013ம் ஆண்டு கிளிநொச்சியிலும் இடம்பெற்றது. வவுனியாவிற்கு பேரூந்திலும், கிளிநொச்சிக்கு மோட்டார் சைக்கிளிலும் வந்து எமது போட்டிகளைப் பார்வையிட்டு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். தமிழ்த்தினப் போட்டிகளுக்கு மட்டுமன்றி, வேறு எவ்வகைப் போட்டிகளாயிருந்தாலும் சென்று பார்வையிடும் வழமையைக் கொண்டவர்.

ஒவ்வொரு தவணைப்பரீட்சையும் ஒழுங்காக நடக்கவேண்டும் என்று விரும்புவார். உயர்புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி மாணவர்களின் கல்வி மேம்பாட்டை உயர்த்த நடவடிக்கையெடுத்தார். எமது அதிபர் கண்டிப்பானவர். நாம் என்ன தவறு செய்தாலும் எம்மைக் கண்டித்துத் திருத்துவார். எமது அதிபர் மிகவும் நல்லவர். ஆனால் ஒரு சின்னத்தவறு கூட அவருக்குப் பிடிக்காது. அவர் மாணவர்களைப் பேசினாலும் மாணவர்களுக்கு அவரைப் பார்த்தால் மதிப்பும் மரியாதையும் தான் ஏற்படும். "கல்வி தான் நிலையானது" "படியுங்கள்", "படியுங்கள்" என்று அடிக்கடி எங்களுக்குக் கூறுவார். தினமும் ஒழுங்காக பத்திரிகை படிக்கும் வழக்கம் கொண்டவர். பத்திரிகை படிப்பதோடு மட்டுமல்ல, அதில் உள்ள கருத்துக்களை எமக்கும் வந்து கூறுவார்.

அதிபர் என்ற நிலையில் இருந்து இறங்கி ஒரு தந்தை எவ்வாறு தன் பிள்ளைகளுக்கு அறிவுவரை வழங்குவாரோ, அதைப்போல எமக்கு அறிவுரை வழங்குவார். பல உண்மைச் சம்பவங்களை எமக்கு அறிவுரையாக வழங்கியிருக்கிறார். அவர் எம்மை ஏசினாலும் அதைக்கேட்க ஆசையாகத்தான் இருக்கும். எவ்வளவு நேரமும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். பெற்றோருக்கான கலந்துரையாடலின்போது பெற்றோருக்கு அருகில் அவர்களுடைய பிள்ளைகளையும் இருத்தி கலந்துரையாடலை

மேற்கொள்வார். சில சந்தர்ப்பங்களில் மாணவர்களை பெயரிட்டுக்கூட அறிவுரைகளை வழங்குவார். எல்லாப் பெற்றோருக்கும் அவருடைய கருத்துக்களைக் கேட்க விருப்பம்.

இத்தகைய அதிபர் எமது பாடசாலையில் மூன்று வருட காலங்கள் மாத்திரம் இருந்ததுதான் கவலைக்குரிய விடயமாகும். இருப்பினும் இம்மூன்று வருடங்களில் அவர் விக்ரோறியா அன்னைக்குச் செய்த பணி மகத்தானது.

போற்றுவோம் போற்றுவோம் - என்றும்
எம் அதிபரைப் போற்றுவோம்
மகிழ்வாய் அவர் உருவை என்றும்
ஏற்றுவோம்.



# சித்தம் அழகனார்



**திரு.ந.குகபரன்**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**

உள்ளத்திலும் உயரத்திலும் உயர்ந்துநிற்கும் மதிப்பார்ந்த ஸ்ரீகாந்தன் அவர்களுக்கு அகவை அறுபது. பிறர் உள்ளங்களை வென்று அவர்தம் உள்ளங்களில் வாழ்தல் என்பதில் வெற்றிபெற்றவர் அவர். வாழ்க்கை எனும் நெடுவெளியில் தனித்துத் தெரியும் ஆளுமைகளில் முக்கியமானவர். அதிசயங்கள் நிகழவேண்டுமெனக் கனவு காண்பவர்களுக்கு மத்தியில் தன் கனவுகளுக்கு உயிர்கொடுத்தவர். அதனாலேயே எம் மனங்களில் உயர்ந்து நிற்கிறார்.

கல்வி உலகில் கடமையைத் தெய்வமாகக் கருதிய செயல் வீரர். பட்டங்களின் பாதுகாப்பில் அதிகாரம் செலுத்துவோருக்கிடையில் ஆற்றலால் நிமிர்ந்தவர் உயர்மிகு ஸ்ரீகாந்தன். விளையாட்டு மைதானத்தில் இவர் களவீரன். அரங்க நிகழ்வில் ஒரு சுவைஞன். எழுத்துலகிலும் தடம்பதித்த பெரியன். எப்பொழுதும் தன்னைச் சார்ந்தவர்களின் நலன்பொருட்டு ஏங்கும் இதயம் அவருடையது.

யாழ்ப்பாணம் ஊரடங்கின் பிடியில் உறைந்திருந்த காலம். "அடக்கி" வைத்திருந்த தேவைகளைக் கிடைக்கும் சிறுதளர்வில் நிவர்த்தி செய்ய மக்கள் ஓடுகிற பொழுதுகள். அப்பொழுது ஸ்ரீகாந்தன் அவர்களது வண்டி சண்டிலிப்பாய் நோக்கி விரையும். உயிர் காக்கும் பணியில் அவர். ஸ்ரீகாந்தன் அவர்களை யார் மறந்தாலும் அன்று அவர் நீர் பாய்ச்சி உயிர்காத்தமையால் இன்றும் சிரித்தபடியே இருக்கும் அந்தப் பூங்கன்றுகள் என்றும் அவரை மறவா.

ஊரடங்கைத் தொடர்ந்து வந்தது நிஷாப்புயலின் தாக்குதல். நிஷாவின் நீசத்தால் வெள்ளம் வயலை மட்டுமன்றித் தெருக்களையும், வீடுகளையும் விழுங்கியவேளை. நிலமட்டத்தில் தாழ்ந்திருந்த சண்டிலிப்பாய் பகுதி வெள்ளத்தில் ஆழ்ந்தபொழுது. அந்த வேளையிலும் ஸ்ரீகாந்தன் அவர்களுடைய கைகள் புயல் எறிந்த தகரங்களையும், மரங்களையும் தூக்கி அடுக்கிக்கொண்டுதானிருந்தன.

சண்டிலிப்பாய் இந்துவில் ஸ்ரீகாந்தன் பெயரில் நினைவுப் பொறிப்புகள் எதுவுமில்லை. ஆனால் அவர் காலத்தில் தான் நிறுவுநர் சிலை எழுந்தது. பவளவிழா மண்டபம் நீண்டது. கிணறு ஆழமானது. வாகனங்களுக்கு நிழல் கிடைத்தது. இவ்வாறு பல. அனைத்தும் மின்னாமல் முழங்காமல் நிகழ்ந்தன. "சொல்லாமலே செய்வர் பெரியர்" என்பதற்கு அடையாளம் இது. தன்னை

முன்னிலைப்படுத்தாத முதல்வர். சிறந்த அதிபராக, ஆசிரியராக, சிற்றூழியராக என அனைத்து நிலைகளிலும் இயங்கியவர்.

யார் இவரை எதிரியாக எண்ணியிருக்க முடியும்??? இப்படி எண்ணினாலும் அதற்கு விடை உண்டு. ஏனெனில் ஸ்ரீகாந்தன் அவர்கள் நல்ல "களை பிடுங்கியும் கூட". இதனால் சண்டிலிப்பாய் இந்து மைதானத்தில் வேர்விட்டுப் படர்ந்த வேண்டாத களைப்புற்கள் அவரைச் சிலவேளை தம் எதிரியாகக் கருதியிருக்கக்கூடும். சண்டிலிப்பாய் ஸ்ரீகாந்தனை இதயத்தில் போற்றி மதித்தது.

அதிபர் ச.சிவநேஸ்வரன் அவர்கள் சண்டிலிப்பாய் இந்துவுக்குத் தனித்த முகவரியைத் தேடிக் கொடுத்தார். ஸ்ரீகாந்தன் அவர்கள் மெருகேற்றினார். கல்வி, இணைபாடவிதானம் என யாவற்றுக்கும் முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டார். சண்டிலிப்பாய் இந்துவில் தொடர்ந்து அதிபராக இருக்கவேண்டுமென நிகழ்ந்த "ஒரு பெருங் கயிறிழுப்பு" அவர் மீது கல்லூரிச் சமூகம் வைத்திருந்த பற்றுக்குச் சான்று.

தன்னம்பிக்கை, கொள்கைப்பற்று, நீதியின்பால் நிற்கும் நேய நெஞ்சு அவருடையது. அவரவர் நிலையறிந்து எல்லோரையும் ஏதோவொரு வகையில் இயக்குவிக்கும் "மொழி" தெரிந்தவர் திருவாளர் ஸ்ரீகாந்தன். வார்த்தைகளில் இழையோடும் நளினமான நகைச்சுவையும், மெல்லிய தலையசைப்பும் இவரது வசீகரம். பிறரை மதிப்பிடுதல், துன்பப்படுவோரைத் தூக்கிவிடுதல், ஒழுக்கத்தை உயிராகப் பேணி நிற்றல் என நேரிய வழியில் நடந்தவர். சுயவிளம்பரங்களில் உரு ஏறும் மனிதர்களிலிருந்து இவர் வித்தியாசமானவர். செயற்படுபவர்களுக்கு எப்பொழுதுமே ஊக்கியாக இருந்தார். இடர்ப்படுபவர்களுக்கு வழிகாட்டினார். உறங்கியவர்களைத் தட்டி எழுப்பினார். தான் சார்ந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரலைச் செவ்வையாக வகுப்பதில் வல்லவர். திட்டமிடல், முன்னகர்தல் என அனைத்திலும் "களமுனைத் தளபதியாக" நின்றார்.

காலையில் பாடசாலையிலும், மதியம் வவுனியாவின் மைதானத்திலும் நிற்கும் வகையில் இவரது வாகனம் "பறக்கும்". எதிலும் எச்சரிக்கை உணர்வு கொண்டவர். பாடசாலை நிறைவடைந்ததும் "ஒரு சுற்றுச்சுற்றி" வருவது இவரது பா/பணி. "நடந்து களைத்தால் தான் வந்து இருப்பாரோ" என எண்ணுமளவிற்கு கல்லூரி வேளையில் "கதிரையை அலங்கரிப்பதைக்" காட்டிலும் கல்லூரியைச் சுற்றி குறுக்கும் நெடுக்குமாகப் பல தடவை நடப்பதில் விருப்பமுள்ளவர்.

சமூகப் பொறுப்பைச் சுமந்ததற்கும் "துணிந்து நின்றதற்கும்" நல்ல வாழ்க்கைத் துணை வாய்த்தமை ஸ்ரீகாந்தன் அவர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு எனக் கூறுவது பொருத்தம். நேயமிகு இல்லாளுக்கும், சால்புமிகு பிள்ளைகளுக்கும் இவரின் வெற்றியில் பெரும் பங்கு உண்டு. உறவுகளை அணைப்பதிலும், உபசரணை புரிவதிலும், எவன் இன்பத்திலும் துன்பத்திலும் கலந்துகொள்ளும் இயல்பும் இவரது உயர் பெருமை.

ஸ்ரீகாந்தன் அவர்கள் உணர்ச்சிகளை ஆளத் தெரிந்தவர். ஒரு தடவை கடிந்துகொண்டாலும் உடனேயே அரவணைக்கும் உள்ளம் இவர்க்கு இருந்தது. சித்தம் அழகராய் உண்மையை நேரே சொல்பவராய், துணிச்சலுடன் செயற்பட்டார். அதிகாரிகள் கூட இவருடன் பக்குவமாகவே நடந்து கொண்டனர். இவரது பணிக் காலத்தில் நானும் ஓர் ஆசிரியராக இருந்தேன் என்பதற்கு அப்பாலும் எனக்கு இவர்மீது அதிக மதிப்பு உண்டு.நான் கலாசார உத்தியோகத்தராகக் கடமையைப் பொறுப்பேற்று மூன்று நாட்கள் தான். வந்தது ஆசிரிய நியமனம். மனதில் போராட்டம். கடிதத்தை எடுத்துக்கொண்டு சண்டிலிப்பாய் இந்துவில் நான். அன்பானதும், நம்பிக்கை தருவதுமான அந்தச்சிரிப்பு இப்பொழுதும் அப்படியே இருக்கிறது; தொடர்கிறது.

தமிழர்கள், தரிசனம் உள்ள தலைவர்களைத் தேடுகிற காலம் இது. தலைவர்கள் அரசியலில் மட்டுமன்றி சமூக நிறுவனங்களிலும் அருந்தலாகவே உள்ளனர். அப்படி இருக்கக்கூடிய தலைவர்களில் ஸ்ரீகாந்தன் அவர்களும் ஒருவர். விக்ரோறியாக் கல்லூரியில் இவரது ஆட்சிக்காலம் வெறும் மூன்று ஆண்டுகள் தான். அதற்குள் அவர் சாதித்தது அதிகம் என்பதை அழுத்திக்கூற முடியும்.

வாழ்க்கைச் சக்கரம் வேகமாகச் சுழல்கிறது. அதில் வரும் பணிக்காலம் ஓர் அஞ்சலோட்டம் போன்றது. ஸ்ரீகாந்தன் அவர்கள் அவ் அஞ்சலோட்டத்தில் தன்னுடைய சுற்றை நன்றாக ஓடியுள்ளார். இப்பொழுது ஓய்வுகாலம் என்கிறார்கள். அரச பணியில்தான் அவருக்கு ஓய்வு. ஆனால் தொடர்ந்தும் தனது வீட்டிற்காகவும், சமூகப் பொதுவெளியில் புதிய பணிக்களங்களிலும் அவர் பணி தொடர்ந்து கொண்டுதானிருக்கும். தான் ஒன்றித்திருந்த சமூகத்தின் உயர்விற்காகவும், அன்பான உள்ளங்களின் நிமிர்விற்காகவும் ஸ்ரீகாந்தன் அவர்கள் என்றும் தூண்டியாக, வழிகாட்டியாக உடனிருப்பார் என்பது திண்ணம். எல்லாம் வல்ல இறைவன், அவர் என்றும் சகல பேறுகளுடனும் வாழ்வைச் சுவைக்க வரம் அருளவேண்டுமென உளமார வேண்டுகிறேன்.



எங்களால் தீர்மானிக்கப்பெற்ற மணிவிழா மலரானது பல நல்மனங்களைக் கண்டு எதிர்கால வாழ்வியலுக்கு வழிகாட்டக்கூடியதாக அமைய வேண்டும் என்ற பேரவாவினால் விழாநாயகனின் வாழ்க்கைத் தசாப்தங்களையும் பதிவு செய்ய வேண்டுமென்ற உந்துதலோடு அவரைச் சந்திக்கின்றோம்.

- மணிவிழா மலர்க்குழு -

# திரும்பிப் பார்க்கையிலே...

## – மணிவிழா நாயகன் –

**ஆரம்பம்**

சுழிபுரம், குடியிருப்பு பகுதியில் அமரர் வரதராஜக்குருக்கள் அவர்களுக்கும் அமரர் ஞானாம்பிகை அம்மா அவர்களுக்கும் இரண்டாவது மகன். பிறந்த திகதி 11.03.1954. ஒரு அண்ணா, தம்பியர் அறுவர், தங்கையர் இருவர். அம்மாவின் சொந்த இடம் களபூமி, காரைநகர். நல்ல தாய் தந்தையர். அன்பான சகோதரர்கள். இவர்களுடன் அப்பாவின் அப்பா, அம்மா (தாத்தா, பாட்டி) வீடு நிறைந்த குடும்பம். பொருளாதாரத்தில் வலுக்குன்றியிருந்தாலும் அம்மாவின் தாராள மனமும் அப்பாவின் நிதானமான போக்கும் வீட்டைக் கலகலப்பாக்கிக் கொண்டிருக்கும். வாழ்ந்த சூழலிலே தந்தையாரின் சமயக் கிரியைகளும், ஆன்மிக சிந்தனைகளும், சமஸ்கிருத பண்டிதர் என்ற கல்வி அந்தஸ்தும் சமுகத்தில் அவரை உயரிய இடத்தில் வைத்திருந்ததால் நாமும் சிறுவயதிலேயே எல்லோராலும் உயர்வாகப் பார்க்கப்பட்டோம். அவர் தனது நாளாந்தக் கருமங்களுக்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்திலும், பண்டிதர் படிப்புகளிலும், சைவசித்தாந்தக் கல்வியிலும் உள்ள மாணவர்களுக்கு "திண்ணை வகுப்பாக" வீட்டில் வேதம், ஆகமம், சமஸ்கிருதம் போன்றவற்றை கற்பிக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தார். மூத்தோரும் இளையோருமாக பலர் வந்து படித்துச் செல்வார்கள். மகிழ்வுடன் சிறுபருவம் கழிந்து கொண்டிருந்தது. தரம் 1ல் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய காலம் வந்தது. அப்பொழுது எமது குடும்பம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் குடியிருந்தது.

**மாணவனாக...**


1960 ஜனவரியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் இணைக்கப்பட்டேன். அண்ணா ஏற்கனவே 2ஆம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தார். மிகவும் சந்தோசமாக நானும் அண்ணாவும் பாடசாலை சென்று வந்த ஞாபகம் உண்டு. இரண்டு தவணைகளின் நிறைவில், ஆவணி மாதம் பொன்னாலைக் கோயில் வருடாந்த மகோற்சவத்தைத் தொடர்ந்து எமது குடும்பம் சுழிபுரம் வீட்டில் குடியேறியது. அக்காலத்திலே மேற்படி தேவஸ்தானத்தில் எட்டு அர்ச்சகர்கள் வருடத்திற்கு ஒரு முறை சுழற்சி முறையில் பூஜை, கிரியைகளை மேற்கொள்ளும் நடைமுறை தொன்றுதொட்டு இருந்தது. இவ்வர்ச்சகர்கள் அனைவரும் சுழிபுரம், குடியிருப்புப் பகுதியை வதிவிடமாகக் கொண்டவர்கள். இந்த ஒழுங்கில் எமது தந்தையாரும், தாத்தாவும் தமக்குரிய ஒரு வருட காலத்தை நிறைவு செய்து, சுழிபுரம் மீண்டனர். இதனால் முதலாம் வகுப்பின் இறுதித் தவணை ஆரம்பிக்கும் போது பாடசாலை மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. மூன்றாம் தவணைக் கல்வியை சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலையில் தொடர்ந்து பின், 2ஆம் வகுப்புக்காக விக்ரோறியாக் கல்லூரியில் இணைக்கப்பட்டேன். அப்போது விக்ரோறியாக் கல்லூரியில் ஆரம்பப்பிரிவும் இயங்கியது. சேர்ந்து ஒரு வாரம் கழித்து

எனது வகுப்பாசிரியை திருமதி.சரஸ்வதி அவர்கள் என்னிடம் அம்மாவைக் கூட்டி வருமாறு கூறினார். எனது பாட்டி தான் பாடசாலைக்கு தேவைகளின் போது வருவார். நான் வீட்டில் சொன்னதும் அடுத்த நாள் பாட்டி வந்து சரஸ்வதி teacher உடன் கதைத்த போது என்னை மீண்டும் முதலாம் வகுப்பிலிருந்து படிக்கவேண்டுமெனவும் இரண்டாம் தரத்தில் கற்கும் தகுதியில் நான் இல்லை என்றும் கூற, பாட்டி என்னை தரம் ஒன்று ஆசிரியை திருமதி.வேலுப்பிள்ளை அவர்களிடம் அழைத்துச் சென்று அந்த வகுப்பில் விட்டு விட்டார். விபரமறியாத அந்தப்பருவத்தில் நானும் தரம் 1இல் இருந்து மீண்டும் கற்றேன். ஆரம்பப்பிரிவிலே திருமதி.வேலுப்பிள்ளை (சித்தன்கேணி), திருமதி.சரஸ்வதி (வட்டுக்கோட்டை), செல்வி.ஆறுமுகம் (காரைநகர்), திரு.செல்லப்பா (காரைநகர்), திரு.பொன்னம்பலம் (பண்ணாகம்), திருமதி.செல்லம்மா (சுழிபுரம்) ஆகிய ஆசிரியர்களிடம் தரம் 5 வரை கற்றேன். தற்போதும் உள்ள பாலர் பிரிவு மண்டபத்திலும், றிஜ்வே மண்டபத்தின் மேல் மாடியிலும் எமது வகுப்பறைகள் அமைந்திருந்தன. என்னுடன் கற்றவர்கள் பலரின் நினைவுகள் இன்றும் இருந்த போதும் சுருக்கம் கருதி அவற்றைத் தவிர்க்க வேண்டியுள்ளது.



இடைநிலைக் கல்வியின் போது தரம் 6 முதல் 9 வரை மிக உச்சமான மகிழ்ச்சிக் காலம். காலை 7 மணிக்கே பாடசாலைக்கு வந்து மைதானத்தில் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் விளையாடி பின் மாலையிலும் பாடசாலை நிறைவடைந்ததும் நின்று விளையாடி வீடு செல்ல 5.30க்கு மேல் ஆகும். சில நாட்களில் வீட்டிலிருந்து யாராவது தேடி வரும் சூழ்நிலையும் ஏற்படும். அக்காலத்தில் பாடசாலை இரு நேரமாக இயங்கியது. காலை 8.30க்கு ஆரம்பமாகி தேநீர் இடைவேளை, மதிய உணவு இடைவேளை விடப்பட்டு பின் மாலை 3.30க்கு நிறைவடையும். தனியார் கல்வி நிறுவனங்கள் இல்லாத காலம் அது. இக்காலப் பகுதிகளில் திரு.கந்தையா (அப்பாப்பிள்ளை மாஸ்டர், சுழிபுரம்), திரு.விஜயரத்தினம் (நவாலி), திரு.சிவராஜரத்தினம் (இளவாலை), திரு.ஆறுமுகம் (இளவாலை) போன்றவர்கள் வருடாந்தம் வகுப்பாசிரியர்களாக இருந்தார்கள். கண்டிப்பு, அன்பு, கடமை தவறாமை, இன்னும் ஆசிரியர்களுக்கான சகல பண்புகளும் இவர்களிடமிருந்ததை பிற்காலத்தில் நான் உணர்ந்து மகிழ்ந்திருக்கின்றேன். கற்ற காலத்தில் அவற்றை உணரும் பக்குவமான நிலை இருக்கவில்லை. எனினும் மாணவர்கள் சுமையின்றி இலகுவாகக் கற்கும் நிலை இருந்தது. போட்டி, பொறாமை, அழுத்தம், சுமை, மனஉளைச்சல்கள் எதுவுமிருக்கவில்லை. இலவச சீருடை, இலவசப் புத்தகம், இலவச மதிய உணவு எதுவுமில்லை. பணம் கொடுத்து வாங்கும் புத்தகங்களை அடுத்த வகுப்புக்கு ஏற்றம் பெற்றுச் செல்லும் போது வேறு மாணவர்கள் போட்டி போட்டு விலை கொடுத்து வாங்கிப் படிப்பார்கள். காலத்திற்குக் காலம் பால், பணிஸ், பிஸ்கட் என மாணவர்களுக்கு இடைவேளை நேரத்தில் வழங்கப்பட்டன.

இந்நாட்களில் எமக்கு தமிழ் கற்பித்தவர் அப்பாப்பிள்ளை மாஸ்ரர் அவர்கள். இவருக்கு தினசரி 4ம் பாடவேளை எமக்குத் தமிழ்ப்பாடம். 3ம் பாடம் முடிய தேநீர் இடைவேளை. அந்நாட்களில் ஆசிரியர் ஓய்வு அறை, தற்போதைய sports room உள்ள அறையிலும் அதன் வடக்கு விறாந்தையிலுமாய் இருந்தது. எமது வகுப்பு தரம்7 சேகரம் கட்டடத்தில் அமைந்திருந்தது. அப்பாப்பிள்ளை Sir இடைவேளை நேரம் சுருட்டு பற்றவைத்துக் கொள்வார். இடைவேளை முடிந்ததும் தமிழ் கற்பிக்க அந்த சுருட்டுடன் எமது வகுப்புக்கு வருவார். நான் ஆசிரியர் கதிரையை எடுத்து வகுப்புக்கு முன் உள்ள வெளி விறாந்தையில் வைக்க வேண்டும். அவர் அதிலிருந்து சுருட்டைப் பற்றி முடித்து விட்டு எறிந்த பின் வகுப்புக்குள் நுழைவார். நான் கதிரையை மீண்டும் உரிய இடத்தில் எடுத்து வைக்க வேண்டும். வகுப்பு முதல்வனாக இருந்ததால் நாளாந்தம் எனக்கு இந்த வேலை. இதனைச் செய்தமைக்காக விஜயதசமி விழாவின் போது மணிவாசகர் நாடகத்தில் நடிக்க சந்தர்ப்பம் தந்தார். அன்று என்னை மேடையில் ஏற்றியமை என்னுள் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.



அக்காலத்தில் 9ஆம் வகுப்பு முடிந்து 10ஆம் வகுப்புக்கு வரும் போது விஞ்ஞானம், கணிதம், கலை, வர்த்தகம் என பிரிக்கப்படும். நான் கணித வகுப்பில் இணைந்து கொண்டேன். தூய, பிரயோக கணித பாடங்களை திரு.செல்லத்துரை (சித்தன் கேணி), இரசாயனவியல் பாடத்தை திரு.திகம்பரலிங்கம் (மூளாய்), பௌதிக வியல் பாடத்தை திரு.வேதநாயகம் (யாழ்ப்பாணம்) ஆகியோர் கற்பித்தார்கள். இது தவிர ஏனைய தமிழ், ஆங்கிலம், கணிதம், சுகாதாரம், சமயம் போன்ற பாடங்களும் இருந்தன. தூய, பிரயோக கணித பாடங்கள் எனக்கு மிகுந்த சிரமத்தை தந்தன. ஏனோ தெரியவில்லை என்னால் கற்க முடியவில்லை. அப்போதைய அதிபர் திரு.சிவஞானம் (சித்தன்கேணி) மற்றும் உபஅதிபர் திரு.ஸ்பென்ஸர் (உடுவில்) ஆகியோரின் வழிப்படுத்தலில் அடுத்தாண்டு வணிகப்பிரிவுக்கு மாறினேன். திரு.சிவசுப்பிரமணியசர்மா (சுன்னாகம்) அவர்கள் கணக்கியல், திரு.குலசேகரம் (அராலி) வணிகமும் நிதியும், திரு.நடராஜா (சுழிபுரம்) ஆகியோர் பொருளியல் கற்பித்தனர். சிறந்த ஆசிரியர்கள், ஆரோக்கியமான கற்றல், கற்பித்தல் என்பவற்றால் இலகுவாக க.பொ.த. சாதாரணதரம் சித்தியடைந்தேன். மேலே குறிப்பிடப்பட்ட சகல ஆசிரியர்களுடன் திரு.பத்மநாதன் (யாழ்ப்பாணம்), திரு.நடராஜா (கட்டுடை), செல்வி. கணபதிப்பிள்ளை (மாதகல்), திரு.செல்வரத்தினம் (தொல்புரம்), திரு.சங்கரப்பிள்ளை (காரைநகர்) போன்ற ஆசிரியர்கள் மற்றும் திரு.தம்பு (மாதகல்), திரு.சிவஞானம் (சித்தன்கேணி),

போன்ற அதிபர்கள் கல்லூரியை தமது உள்ளங்கையில் ஏந்தி வைத்திருந்தார்கள். திரு.தம்பு அவர்களின் காலத்தில் (1968) எமது கல்லூரியில் சிவகாமி சமேத நடேசப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டார். கண்டிப்பு, அன்பு, கடமையுணர்வு போன்ற அவர்களின் பல்வேறு குணாதிசயங்கள் எம் போன்ற மாணவர்களை உயர்த்தியது. உதைப்பந்தாட்டம் மற்றும் உயரம் பாய்தல், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் போன்ற மெய்வன்மை நிகழ்ச்சிகளிலும் திறமைகளை வெளிப்படுத்தி மாவட்ட நிலை வரை வெற்றி பெற்றேன்.

அந்நாட்களில் எமது கல்லூரியில் வணிகப்பிரிவில் உயர்தர வகுப்புக்கள் இல்லை. இதனால் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இணைந்து உயர்தரக் கல்வி கற்றேன். மானிப்பாய் இந்துக் கல்லூரியும் பல வாய்ப்புக்களை, பல துறைகளிலும் தந்து என்னை வளர்த்தது. கணக்கியல் திரு.நவரத்தினம் (உரும்பிராய்), வர்த்தகமும் நிதியும் திரு.அமிர்தலிங்கம் (கட்டுடை), பொருளியல் திரு.பொன்னம்பலம் (கொக்குவில்) ஆகியோர் கல்லூரி ஆசிரியர்கள். தனியார் வகுப்பில் திரு.கந்தசாமி (யாழ்ப்பாணம்) கணக்கியலும், திரு.மா.சின்னத்தம்பி (கொக்குவில்) பொருளியல் மற்றும் வர்த்தகமும் நிதியும் பாடங்களை படிப்பித்தனர். கல்லூரியின் உபஅதிபரும் பின்னர் தனது மகளை எனக்கு மணமுடித்துத் தந்தவருமான பிரம்மஸ்ரீ வைத்தியநாதஐயர் (சுன்னாகம்) வகுப்பாசிரியரும், ஆங்கிலம் கற்பிப்பவருமாய் இருந்தார். பேச்சு, கருத்தரங்குகள், பட்டிமன்றம், நாடகம் என நிறைய மேடை வாய்ப்புகளும் கிடைத்தன. அந்நாட்களில் மானிப்பாய் இந்துவில் அதிபராயிருந்தவர் திரு.பேராயிரவர் (உரும்பிராய்) ஆவார். விடுதி வசதிகள் இருந்தன. உயர்தர வகுப்புகளில் மாத்திரம் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றார்கள். நாடு முழுவதிலிருந்தும் மாணவர்கள் கல்வி தேடி வந்தார்கள். சகல துறையிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி சிறந்து விளங்கியது. வருடாந்தம் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகினர்.



க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினேன். பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. ஆனால் எமது கல்லூரிப் பெறுபேறுகள் வரவில்லை. தினசரி எம்மாணவர்கள் மானிப்பாய் தபால் நிலையத்திற்கு படையெடுப்போம். ஒரு கிழமைக்குப் பின்பே எமது பெறுபேறுகள் மானிப்பாய் தபால்நிலையத்துக்கு வந்தன. தாமதத்திற்கான காரணம் மானிப்பாய் என்பதற்குப் பதிலாக “மினிபே“ (Minipay) என முகவரி மாறி அந்த இடத்திற்கு சென்றே திரும்பி எம் கல்லூரிக்கு வந்தது. தபால் சேவகரை வரவேற்று பெறுபேற்று அட்டவணையுடன் அவரை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்ற அந்த நினைவுகள் இன்றும் பசுமையாய் உள்ளன. பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருந்த போது ஆசிரியர் நியமனமும் கிடைத்தது.

**ஆசிரியராக...**

பல்கலைக்கழகம் செல்வதா அன்றி ஆசிரியர் ஆவதா என்ற நிலையில் அப்பாவினதும் எனது கணக்கியல் ஆசான் திரு.நவரத்தினம் அவர்களினதும் வழிப்படுத்தலில் ஆசிரியராக *01-02-1977*ல் காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் கடமையேற்றேன். அம்மா பிறந்த மண்ணில் பணி செய்யக் கிடைத்தது எனக்கும் அம்மாவுக்கும் மிகுந்த மகிழ்ச்சி. ஆயினும் *18-02-1977*ம் திகதி, சரியாக 18 நாட்களில் விக்ரோறியாக் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. காரைநகரிலிருந்து திரு.செல்வராஜா ஆசிரியர் விக்ரோறியாக் கல்லூரியிலும்,சுழிபுரத்தில் இருந்து நான் யாழ்ரன் கல்லூரியிலும் வணிகத்துறை ஆசிரியராக கடமையாற்றியதால் அப்போதைய யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.மன்சூர் அவர்கள் இருவரையும் சொந்த ஊரில் பணி செய்யுமாறு இவ்விடமாற்றத்தைச் செய்தார். இது அந்தக் காலம்.



அப்போது விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராயிருந்தவர் கல்லூரியின் பழைய மாணவன் திரு.இராஜசுந்தரம் அவர்கள். *19-02-1977*ல் விக்ரோறியாவில் கடமையேற்ற போது எனக்குக் கற்பித்த பல ஆசிரியர்கள் அங்கு இருந்தனர். இளவயதினனாக நான் இருந்ததாலும் ஏற்கனவே உள்ள அறிமுகத்தினாலும் எல்லோரும் என்னில் மிகவும் அன்பு செலுத்தினார்கள். செல்வராஜா ஆசிரியருடைய நேரசூசி உடனடியாகவே எனக்கு வழங்கப்பட்டது. இதற்கு முந்திய வருடங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்காக வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியின் ஒரு பகுதி சுவீகரிக்கப்பட்டது. அதனால் அங்கு கற்ற உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு எமது கல்லூரியில் அனுமதி வழங்கப்பட்டது. அங்கு கற்பித்த பல தலை சிறந்த ஆசிரியர்களும் எமது கல்லூரிக்கு நியமிக்கப்பட்டனர்.

பழக்கப்பட்ட சூழல் என்பதால் பணிசெய்வதில் திருப்தி இருந்தது. 1977ம் ஆண்டு நடுப்பகுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திரு.இராஜசுந்தரம் அவர்கள் இளைப்பாறினார். தொடர்ந்து திரு.ஸ்பென்ஸர் அவர்கள் பதிலதிபராக சிலகாலம் கடமையாற்றினார். பலரின் வற்புறுத்தலின் பேரில் திரு.க.அருணாசலம் (சித்தன்கேணி) அவர்கள் வட்டு இந்துக் கல்லூரியிலிருந்து எமது கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். கல்லூரியின் கட்டமைப்பு, கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் எனச் சகல துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. கல்லூரிசிறப்பான வளர்ச்சியை நோக்கிச் சென்றது.

*01-07-1979*ல் பலாலி ஆசிரியர் கலாசாலையில் வர்த்தகத்துறையில் விசேட

பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக வணிகமாணி கல்வியையும் தொடர்ந்தேன். மீண்டும் *01-01-1980*இல் விக்ரோறியாக் கல்லூரியில் பணியைத் தொடங்கி *01-01-1981* அடுத்த கட்டப்பயிற்சிக்காக ஆசிரியர் கலாசாலை சென்றேன். *01-01-1982*இல் புத்தளம் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டேன். வணிகமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதால் வார இறுதி வகுப்புகளுக்கு செல்வதில் தடங்கல் ஏற்பட்டது. இதனால் எனது தந்தையார் தன் சக பாடசாலை மாணவனும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களிடம் என் நிலையை எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு *26-05-1982*ல் மீளவும் இடமாற்றலாகி வந்த போது எமது அதிபர் திரு.அருணாசலம் என்னை விக்ரோறியாக் கல்லூரிக்கு மீண்டும் எடுத்துக் கொண்டார்.



இதற்கிடையில் *31-03-1982*ல் மணவாழ்வும் ஆரம்பமானது. எனது ஆசானும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபருமாயிருந்த சுன்னாகம் வைத்தியநாதஐயர் மகள் பாமினி எனது மனைவியானாள். விக்ரோறியாக் கல்லூரிக்குத் திரும்ப வந்தபோது பழைய என் சக ஆசிரியர்களும் எனது மாணவர்களும் மிகவும் மகிழ்ந்தார்கள், என்னைப் போல. சிறப்பான ஆசிரியர் குழாம். அருணாசலம் Sirன் மெச்சத்தக்க நிர்வாகக் கட்டமைப்பு. நாங்கள் இளம் ஆசிரியர்கள். இரசாயனவியல் ஆய்வுகூடத்தின் அறையை ஓய்வுநேரத்தில் பயன்படுத்தினோம். திரு.சின்னத்தம்பி (பொருளியல்), திரு.சௌந்தரராஜன் (பௌதிகவியல்), திரு.தனபாலசிங்கம் (விலங்கியல்), திரு.கேசவன் (அளவையியல்), திரு.நடேசபிள்ளை (கணிதம்), திரு.செல்வரத்தினம் (இரசாயன வியல்), திரு.இராஜேந்திரன் (தமிழ்) எனப் பலர் கூடியிருந்து பல்வேறு சுவாரசியமான கதைகள் பேசுவோம். அன்பும் விசுவாசமும் கொண்ட மாணவர்களுக்கு கற்பிப்பதில் ஆர்வமாயிருந்தோம். மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களில் சிலர் தனியார் கல்வி நிறுவனங்களிலும் பிரபல்யமாகியிருந்தோம். திரு.சின்னத்தம்பி, திரு.கேசவன், நான் ஒன்றாக தனியார் கல்வி நிறுவனத்தில் கற்பிக்கும் நிலையுமிருந்தது. திரு.சின்னத்தம்பியிடம் கற்றவன் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். திரு.கேசவனும் நானும் விக்ரோறியாவிலும் மானி இந்துவிலும் ஒன்றாகப் பயின்றவர்கள்.

இந்நிலையில் எனது மாமனார் சண்டிலிப்பாய் ஐயனார் வீதியில் வாங்கிய காணியில் வீடு கட்டி அங்கு குடியேற வேண்டியேற்பட்டது. மூத்த மகளை பாடசாலையில் இணைக்கவேண்டியிருந்தது. எமது பாடசாலையில் ஆரம்பப் பிரிவு நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே *01-01-1988* முதல் இடமாற்றம் பெற்று மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் என இரு பாடசாலைகளில்

போதிக்கும் ஆசிரியராகச் சென்றேன். மகளும் மானிப்பாய் சென் ஆன்ஸ் பாடசாலையில் இணைக்கப்பட்டாள். மானிப்பாய் இந்து ஏற்கனவே பரீட்சயமான பாடசாலையாக இருந்தமையினால் பணியும் இலகுவாயிருந்தது. அங்கும் சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பு இருந்ததால் கற்பித்தலிலும் ஏனைய செயற்பாடுகளிலும் மனவிருப்புடன் ஈடுபடமுடிந்தது. இரண்டு வருட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முழுநேர ஆசிரியரானேன். உயர்தர மாணவ மன்றத்தின் பொறுப்பாசிரியராக அம்மன்றத்தை மிகச்சிறந்த முறையில் முன்னெடுத்தேன். அதிபர் மகேசவேலு, பின் அவரைத் தொடர்ந்து திரு.கேசவராஜன் இவர்களின் வழிப்படுத்தலில் கற்பித்தலிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் உற்சாகமாக ஈடுபட்டேன். 1991ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவைப் போட்டிப்பரீட்சையில் எமது கல்லூரியில் நானுட்பட எட்டு ஆசிரியர்கள் சித்தியடைந்து அதிபர் சேவைக்குள் வாங்கப்பட்டோம். எல்லோரும் அதிபர்களாக ஒவ்வொரு பாடசாலைகளை பொறுப்பேற்றுச் செல்ல நான் மட்டும் தொடர்ந்து ஆசிரியராகக் கடமையாற்றினேன். கல்லூரி அதிபர் கேசவராஜன் எனக்கு பகுதித்தலைவராக நியமனம் பெற்றுத் தந்தார். யுத்தசூழல் மிகக் கடுமையாக நிலவியகாலம். கரையோரப்பிரதேசங்களிலிருந்து மக்களும் பாடசாலைகளும் ஏனைய நிறுவனங்களும் இடப்பெயர்வுக்குட்பட்ட நிலையில் கல்லூரியில் மாணவர்தொகையும் அதிகரித்தது.



1995ம் ஆண்டு ஏற்பட்ட இடப் பெயர்வினால் தென்மராட்சி சென்று பின் எனது குடும்பம் கொழும்பில் குடியேறியது. நான் வவுனியாவில் தற்காலிக இணைப்பு பெற்று 01.01.1996 முதல் கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலத்தில் கடமையேற்றேன். 1997 நடுப்பகுதியில் பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கு அதிபர் பேரம்பலம் அவர் களுடன் உபஅதிபராக 30.05.2003 வரை கடமையாற்றினேன். விபுலானந்தாக் கல்லூரியில் இருந்தபோதே அதிபர் தரம் 2-Iக்கு பதவியுயர்வு கிடைத்திருந்தது. அங்கும் திருப்தியான சேவையை வழங்க முடிந்தது. 2500க்கு மேற்பட்ட மாணவர்கள் 100க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இடநெருக்கடிக்கு மத்தியில் செயற்பட்டு சிறந்த கல்விப்பெறுபேறுகளை அக்கல்லூரி பெற்றுக் கொண்டிருந்தது. மூத்தமகளின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதியைத் தொடர்ந்து 01.06.2003இல் மீண்டும் வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றலாகி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உப அதிபராக பணியாற்றிய போது கல்லூரி அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டார். இதனால் அப்போதிருந்த வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி.இருதயநாதன், அதிபர் பொறுப்பை ஏற்குமாறு வலியுறுத்திய போது அந்நேரத்திலிருந்த தனிப்பட்ட

காரணமாக சண்டிலிப்பாயிலுள்ள எனது வீடு சேதமடைந்திருந்தது. இடம்பெயர்வாழ்வு முடியவில்லை. பிள்ளைகள் யாவரும் பாடசாலை செல்லும் நிலையிலுள்ளவர்கள். பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பாகச் செயற்படும் நிலையில்லை. சில காலம் திரு.ஜெகநாதன் பதிலதிபராய் இருந்தார். 2005 தொடக்கத்தில் திரு.சிவநேஸ்வரன் மானிப்பாய் இந்து அதிபராக, நான் உபஅதிபராக இருந்தேன்.

**அதிபராக...**



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு என்னை அப்போதைய வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.விக்கினேஸ்வரன் அவர்கள் நியமனம் செய்தார். அதிபர் சிவநேஸ்வரன் அவர்களால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்ட அப்பாடசாலையில் கடமை செய்யக் கிடைத்தது. எனக்கான அருமையான சந்தர்ப்பம் என்றே கூறவேண்டும். ஆசிரியர், மாணவர், பெற்றோர், அதிகாரிகள் அனைவரதும் ஆதரவுடன் மிக உச்சமாக அங்கு பணிசெய்து கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் எல்லோராலும் பேசப்படும் வளர்ச்சியைப் பெறமுடிந்தது. அப்பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்பு அபரிமிதமானது. இதனால் எனக்கும் பாடசாலைக்கும் வலயக் கல்விப்பணிப்பாளரதும் ஏனைய அதிகாரிகள், அலுவலர்களினதும் ஒத்துழைப்பு மிகச் சிறப்பாகக் கிடைத்தது. சிறந்த அதிபராகப் பார்க்கப்பட்டேன். "பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்" (Programme for School Improvement - PSI) அறிமுகப்படுத்தப்பட்டபோது வலிகாமம் வலயத்திற்கான வளவாளராக பயிற்றுவிக்கப்படுவதற்காக நானும் பிரதிக்கல்வி பணிப்பாளர் திரு.சுந்தரசிவம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டோம். யாழ் மாவட்டம் முழுவதற்குமான அணியில் பத்துப் பேர் உள்ளடக்கப்பட்டு அத் திட்டத்திற்கான அறிமுகச் செயலமர்வுகளை திருகோணமலையில் மேற்கொண்டோம். மாகாண, வலயக் கல்வி அதிகாரிகளும் நாமும் இணைந்து மேற்கொண்ட செயலமர்வுகள் அதிபர்கள், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது.



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் புலமைப் பரிசில் பரீட்சையின் தொடர்ச்சியான சித்தி வீத அதிகரிப்பு, க.பொ.த. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளில் மாவட்ட மட்டத்தில் 1C பாடசாலைகளில் முன்னிலைப் பெறுபேறுகள், அதிகரித்துச் செல்லும் பல்கலைக்கழக அனுமதி, வலைப்பந்தாட்டம்,

கரப்பந்தாட்டம் போன்ற போட்டிகளில் மாகாண மட்ட உயர் வெற்றிகளும் தேசிய மட்டப் பங்குபற்றுதல்களும், தமிழ்த் தின சிந்துநடைக் கூத்துப் போட்டியில் தொடர்ச்சியாகக் கிடைத்த மாகாண மட்ட முதலிடம் போன்றவை கல்லூரியை உயர்வாகப் பார்க்கும் நிலையைத் தோற்றுவித்தது. 2005ஆம் ஆண்டில் அதிபர் தரம்-I பதவியுயர்வும் கிடைத்தது.



விக்ரோறியாக் கல்லூரியில் நான் கற்பித்த காலத்தில் சக ஆசிரியையாக 1986ஆம் ஆண்டில் இணைந்து பணியாற்றிய திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்கள், திரு.கா.சந்திரபாலன் அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் சென்ற பின் 1998 இறுதியில் கல்லூரி அதிபரானார். 2010ஆம் ஆண்டு தனது சொந்த விருப்பில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். புதிய அதிபர் நியமனத் திற்காக விண்ணப்பம் கோரப்பட்ட போது எவருமே விண்ணப்பிக்காததால் அதிபர் வெற்றிடம் நிரப்பப்படாதிருந்தது. மாகாணக் கல்வித்திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம் மற்றும் விக்ரோறியாக் கல்லூரிச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பார்வை என்மீது விழுந்தது. 2010ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவின் போது பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்கினேஸ்வரன் விக்ரோறியாக் கல்லூரிக்கு நான் அதிபராகச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டார். வலயக்கல்விப் பணிப்பாளருக்கு நான் சாதகமான பதில் கொடுக்காததால், யோசித்து நல்ல பதில் தாருங்கள் என்றார். பல தரப்பிலிருந்தும் அழுத்தம் கூடியது. மிக நல்ல நிலையிலிருந்த சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியை விட்டுச்செல்ல எனக்கு மனமில்லை. அத்துடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட சண்டிலிப்பாய் இந்துவைச் சேர்ந்த அனைத்துத் தரப்பினரும் என்னை



உடன்படவேண்டாம் எனத் தடுத் தனர். எனது முன்னாள் அதிபர் திரு.க.அருணாசலம் அவுஸ்ரேலியா விலிருந்து ஒவ்வொரு நாளும் காலையில் தொலைபேசியூடாக எனக்கு அன்புக் கட்டளையிடத் தொடங்கினார். வெளிநாட்டிலுள்ள பழைய மாணவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு வலியுறுத்திய தோடு, அந்நேரத்தில் மாகாண ஆளுநரின் செயலாளராயிருந்த

விக்ரோறியாவின் பழைய மாணவர் திரு.சி.ரங்கராஜன் அவர்களுக்கும் தொலைநகல்களை அனுப்பினார். முன்னாள் பிரதி அதிபர் திரு.சி.க.இந்திரராஜா கொழும்பிலிருந்து கடுமையாக முயற்சி செய்தார். பழையமாணவர் சங்கத்தின் அன்றைய தலைவர் திரு.உதயசூரியன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராயிருந்த திரு.விஜயகுமாரன் உள்ளிட்ட பலர் எனது வீட்டுக்கு வந்து என் அனுமதியைக் கேட்டு நின்றனர். இதற்கிடையில் திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுவிட்டார். அவர் விக்ரோறியாக் கல்லூரிக்கு இடமாற்றக் கடிதம் எனக்கு அனுப்பிவிட்டார். பலமான கயிறிழுவை நடைபெற்றது. ஆயினும் நான் விக்ரோறியாவுக்குச் செல்ல வேண்டும் என்ற நிலை வலுப்பெற்றது. மாகாணக் கல்விப்பணிப்பாளரிடம் சென்று சண்டிலிப்பாய் இந்துவுக்கு நல்ல அதிபர் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், இணுவில் மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருக்கும் விக்ரோறியாக் கல்லூரியில் முன்பு கற்பித்தவர், என் சக மாணவன் திரு.செ.சிவகுமாரன் அவர்களை என்னுடன் இடமாற்றம் செய்து தர வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்ததுடன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு திரு.விமலன் அவர்களை – அவர் அதிபர் சேவையைச் சேர்ந்தவர் – நியமிக்குமாறும் கோரினேன். உடனடியாகவே திரு.விமலன் அவர்களை சண்டிலிப்பாய் இந்துவிற்கு அதிபராக்கியதுடன் திரு.சிவகுமாரன் அவர்களை விக்ரோறியாவுக்கு இடமாற்றம் செய்யும்படியும் பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சுந்தரசிவம் அவர்களைக் கேட்டுக் கொண்டார். பாடசாலைக்காக பலமாக தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் அதிபர்களை இனம் கண்டு அவர்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கும் தன்மை அந்நேர அதிகாரிகளிடம் காணப்பட்டது. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சார்ந்தோரின் அன்புப் பிடியிலிருந்து விடுபட்டு 14.09.2010ஆம் திகதி என் விக்ரோறியா அன்னையிடம் வந்தேன். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மிகவும் குளிர்மையான சூழலைக் கொண்டது. விக்ரோறியாவில் சண்டிலிப்பாய் இந்துவின் கவின்நிலை காணப்படவில்லை. இதை நான் குறையாகக் குறிப்பிடவில்லை. உள்ளதை உள்ளபடி குறிப்பிட்டேன். என் மனம் திருப்திப்படவில்லை. ஆசிரியர்களில் அநேகமாக எல்லோரும் என்னைத் தெரிந்தவர்களாகவும், எனது பழைய மாணவர்களாகவும் இருந்தார்கள். மாணவர்களில் பெருமளவானவர்கள் என்னுடன் கற்றவர்களதும், என்னிடம் கற்றவர்களதும் பிள்ளைகளாயிருந்தார்கள். வெளிநாட்டிலிருந்து பழைய மாணவர்கள் தொடர்பு கொண்டார்கள். ஒரு வாரத்திலே என்னுள் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. என் மீதும் விக்ரோறியா அன்னை மீதும் மதிப்புக் கொண்ட பழைய மாணவர்கள் தேவைப்பட்ட



வளம் பெருகியது. உயர்ந்த பெறுபேறுகள், சிறந்த அடைவு மட்டங்கள், நல்லொழுக்கமுள்ள மாணவர்கள், கௌரவமான பெற்றோர்கள், மதிப்பார்ந்த பழைய மாணவர்கள் என சகல சிறப்பும் பெருக கல்லூரியின் அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்ந்தது. குறுகிய காலத்தில் "விசேட திறன் அதிபர்" (Special Skilled Principal) என்ற விருதை வலயக் கல்விப் பணிப்பாளர், 2012 ஆசிரியர் தினத்தில் எனக்கு வழங்கி விக்ரோறியாக் கல்லூரிக்கு மதிப்பளித்தார். இசுறு திட்டம், ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் என்பவற்றால் அரசாங்கம் பல வளங்களை வழங்கியது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் வெளிநாட்டிலுள்ள பழைய மாணவர் சங்கங்கள் வழங்கிய உதவிகளினூடாக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தனர். வறுமைக்கோட்டின் கீழுள்ள மாணவர்கள் பல்வேறு வகையான உதவிகளைப் பெற வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராயிருந்த திரு.ஆ.பிரபாகரன், அவரைத் தொடர்ந்து திரு.செ.சிவகுமாரன் ஆகியோரும் செயலாளராயிருந்த திரு.பா.விஜயகுமார், உதவிச் செயலாளராயிருந்த திரு.து.இரவீந்திரன், தற்போதைய செயலாளர் Dr.கண்ணதாசன் போன்றோரும் தேவைகளறிந்து அவற்றை நிறைவு செய்வதில் உறுதியுடன் செயற்பட்டனர். அவுஸ்ரேலியா திரு.க.செந்தில்நாதன், கனடா திரு.மு.சுதர்சன், லண்டன் திரு.சி. ரவிசங்கர் போன்றவர்கள் தத்தம் நாட்டு பழைய மாணவர் சங்கங்களின் தொடர்பாளர்களாக கேட்ட பொழுதெல்லாம் உதவினர். பரிசளிப்பு விழா, மெய்வன்மைப் போட்டிகள், போட்டிகளுக்கான போக்குவரத்துச் செலவுகள், சத்துணவுச் செலவுகள் இன்னும் தேவையானவற்றிற்கு நிதி தந்தார்கள். மாணவர்கள் சகல தரத்திலும் உயர்ந்தனர். ஆசிரியர்கள் மகிழ்ந்தனர். அதிபர் மதிக்கப்பட்டார். "அடி மத்தளத்துக்கு, பெயர் வித்துவானுக்கு" என்பதற்கிணங்க ஆசிரியர்களும் மாணவர்களும் கஷ்டப்பட்டு பெறும் பெறுபேறுகளும் சாதனைகளும் அதிபருக்குப் பாராட்டை ஈட்டிக் கொடுத்தன.




எது எப்படி இருந்தபோதும் எனது மனதில் தரம் 6 வகுப்பில் சேரும் மாணவர்களின் அடைவுமட்டம் தொடர்பாக வேதனை இருந்து வந்தது. அதிபராக வந்தவுடன் உரிய அடைவுமட்டமுள்ள பிள்ளைகளை அனுமதிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 50 புள்ளிகள் பெற்றிருக்க வேண்டுமென்ற சிந்தனையை ஊட்டற் பாடசாலை அதிபர்களுக்குத் தெரியப்படுத்தினோம். கோட்டக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதேச செயலர் ஆகியோருக்கும் இது குறித்துத் தெரியப்படுத்தினோம். பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி 2011ஆம் ஆண்டு

அனுமதியிலும் பின்பு 2012, 2013 அனுமதியில் 70 புள்ளிகள் என்ற நிலையையும் கடைப்பிடித்தோம். ஊட்டற் பாடசாலைகள் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது. தமது பிள்ளைகளுக்கு விக்ரோறியாவில் அனுமதி கிடைக்க வேண்டுமென்பதற்காக பெற்றோர்கள் விழித்தெழுந்தார்கள்.

ஊட்டற் பாடசாலைகளுக்கு நானும்எமது கல்லூரியின் கல்வியில் அக்கறை கொண்ட ஆசிரியர், பெற்றோர், பழையமாணவர்களும் சென்று அவர்களின் தேவை அறிந்து பொருளாகவும், பணமாகவும், ஊக்குவிப்பாகவும் பலஉதவிகளை வழங்கினோம். இவற்றின் எதிரொலியாக தரம் 6 அனுமதிக்கு வரும் மாணவர்களின் அடைவுமட்டம் அதிகரித்தது. எமது ஆசிரியர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஐக்கியராச்சியத்தைச் சேர்ந்த திரு.தா.கமலநாதன், திரு.சி.ரவிசங்கர், திருமதி.தேன்மொழி சாம்பசிவம் போன்ற விக்ரோறியன்கள் இதற்கான நிதியுதவிகளை வழங்கினார்கள்.இந்த நடைமுறையின் மூலம் கல்லூரிபெற்ற கல்வி வளர்ச்சி எதிர்வரும் ஆண்டுகளின் சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளில் நன்கு புலனாகும்.



ஆயினும் இவ்வாண்டு தரம்6 அனுமதியின் போது சில கசப்பான அனுபவங்களைப் பெற்றுக்கொண்டேன். அனுமதி தொடர்பான விடயத்தை அரசியலாக மாற்ற சிலர் முற்பட்டனர். ஆயினும் வலயக்கல்விப் பணிப்பாளரின் சாணக்கியத்தால் அதனை எதிர் கொண்டு அடைவு மட்டம் குறைந்த மாணவர்களுக்கு தனியான பிரிவை உருவாக்கி அவர்களுக்கு ஆரம்பப் பாடசாலையில் இழந்த கல்வியை வழங்கும் செயற்றிட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கு ஐக்கிய இராச்சியத்தில் உள்ள விக்ரோறியன் கு.வினோதன் மூலமாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கல்லூரி நிறைவடைந்தபின் இவர்களுக்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப் படுகின்றது.

கல்லூரி 138 வருடங்களை நிறைவு செய்யும் இவ் வேளையில் எல்லோருடைய அபிமானத்துடனும் ஒத்துழைப்புடனும் செயற்பட்ட போதும் ஓரிருவர் புறம் சொல்வதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். தாம் நினைப்பதை நான் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பவர்கள் அது நிறைவேறாத போதும் மற்றும் தாம் முன்னின்று செய்து பயனடைய வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் அது நிறைவேறாத போதும் முரண்பட்டுக் கொண்டார்கள். மாணவர்களின் சாதனைகள், ஆசிரியர்களின் வினைத்திறனான செயற்பாடுகள், பெற்றோரின் மகிழ்ச்சி இவற்றை இலக்காகக் கொண்டு செயற்பட்டதால் விக்ரோறியா அன்னை உயர்ந்தாள்.

**நிறைவாக**

முப்பத்தி ஏழு வருட கால ஆசிரியர், அதிபர் கடமைகள் கடந்த 10.03.2014ஆம் திகதி ஓய்வுநிலைக்கு வந்த போது விக்ரோறியாவின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து உயர்வான பாராட்டினையும் கௌரவத்தினையும் தந்து மதிப்பளித்திருந்தார்கள். ஆயினும் மலர் ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்ற உந்துதலோடு என் ஆசிரியர்களும், என் மாணவர்களும், பெற்றோரும் செயற்பட்டார்கள். எனது கல்விப் பணியின் பயணத்தின் போது ஒத்தாசையாயிருந்த சகல அதிகாரிகள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா அலுவலர்கள், பெற்றோர்கள், மாணவர்கள அனைவருக்கும் மிகுந்த மனநிறைவுடன் நன்றி கூறி விடைபெறுகின்றேன். குறிப்பாக நான் நடந்துவந்த பாதையை மீட்டுப் பார்ப்பதற்கு வாய்ப்பைத் தந்த மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் என் அன்பான நன்றிகள்!





# நன்றிகள்

- ஆசிச் செய்தி வழங்கிய குருமார்
- வாழ்த்துரை வழங்கிய கல்விப்புலம் சார்ந்தோர், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள்.
- மலர் வெளிவர உதவிய அன்புள்ளங்கள்.
- மதிப்பார்ந்த திரு. கா. சந்திரபாலன் தலைமையிலான மணிவழாக் குழுவினர்.
- அழகுற அச்சேற்றிய Andra பதிப்பகத்தினர்.
- அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

**- செயலாளர் -**
மணிவிழா மலர் வெளியீட்டுக்குழு



AnDRA Printers, Jaffna - 021-221 7279